டாக்டர் ஹானிமனின்

ஆர்கனுன் ஆஃப் மெடிஸின்

OFFICE OF THE REGISTRAR OF BOO[KS]
15 FEB 1961
MADRAS

தமிழாக்கம்:
டாக்டர் V. S. ஸுப்ரமண்யம்
கவர்னிங் டைரெக்டர், தி ஹோமியோபதி ஹௌஸ்,
மதருஸ்-28.

©

பிரசுரம்:
தி ஹோமியோபதி ஹௌஸ்
"பால நிலையம்"
77, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மதருஸ்-28.

முதல் பதிப்பு: ஜனவரி 1961 விலை ரூ. 3-

எங்களிடம் கிடைக்கும் மற்ற புத்தகங்கள்

டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்

அவர்களால் எழுதப்பட்டவை

தமிழில்

	விலை ரூ.	ந.பை
மாஸ்டர்-கீ டு ஹோமியோபதிக் மெட்டீரியா மெடிக்கா (1144 பக்கங்கள் உள்ளது)	20	00
பன்னிரண்டு உயிர் உப்புக்கள் (பயோகெமிஸ்டிரி)	6	50
மெடிகல் டிக்ஷனரி-ஆங்கிலச் சொற்களின் உச்சரிப்பும் பொருளும்	6	50
நோய்களும் சிகிச்சையும் ...	5	50
இருதயமும் சுவாசகோசங்களும் அவ்வுறுப்புகளைப் பரீக்ஷித்து வியாதியை நிர்ணயிக்கும் வழிகளும்	2	00
ஹோமியோபதிக் குடும்ப சிகிச்சைக் குறிப்பு	2	00
தாய்த்திரவங்களின் மெட்டீரியா மெடிகா	1	50
இரத்தசோகை; வியாதி விவரமும் சிகிச்சையும்	0	25
மூலம் ,, ,, ...	0	25
நீரழிவு, மதுமேகம் ,, ...	0	25
வயிற்றுக் கடுப்பு or இரத்தபேதி	0	25
மேகவெட்டை ,, ,, ...	0	25
பெரியம்மை ,, ,, ...	0	25
காலரா ,, ,, ...	0	25
மலச்சிக்கல் ,, ,, ...	0	25
கேசு ஷீட்டு ,, ,, ...	0	13
ஹோமிக்ஸ் ரெமிடீசின் உபயோக விவரம்	0	13
ஹோமியோபதியும் இஞ்சக்ஷனும் ...	0	13

தி ஹோமியோபதி ஹௌஸ்,

" பால நிலையம் "

77, ராம கிருஷ்ண மடம் ரோடு,

மதுரை-28.

101594

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை		திருத்தம்
11	28	வியக்கத்நக்க	—	வியக்கத்தக்க
29	24	எடுந்துக்	—	எடுத்துக்
32	29	செலுத்தாதாலும்	—	செலுத்தாததாலும்
39	29	நாட்மட்ட	—	நாட்பட்ட
41	24	தாங்கமுடியத	—	தாங்கமுடியாத
43	5	கட்டுப்படுந்தி	—	கட்டுப்படுத்தி
45	19	உயிர்ப்புக்குச் சக்தி	—	உயிர்ப்புச் சக்தி
57	25	ஏற்படுத்துவதன் மூலம்	—	ஏற்படுத்துவதன் மூலமும்
,,	27	விடித்தன்மைகளை	—	விஷத் தன்மைகளை
58	22	தோற்றும்	—	தொற்றும்
60	16	துன்பங்களைப்	—	துன்பங்களைப்
,,	27	எல்லலா	—	எல்லா
61	2	இருக்கும்போது	—	இருக்கும் வண்ணம்
61	32	சமங்களிலும்	—	சமயங்களிலும்
62	23	நோக்குறி	—	நோய்க் குறி
,,	30	இரூக்கின்றன	—	இருக்கின்றன
,,	31	மிகவிரும்பகிறூர்?	—	மிக விரும்புகிறூர்?
63	14	விசேஷமாக	—	விசேஷமான
,,	19	அடி வயறு	—	அடி வயிறு
,,	21	உதாரணமா,	—	உதாரணமாக
69	3	ஏநோ	—	ஏதோ

69	19	நோக்கந்துடன்	—	நோக்கத்துடன்
,,	22	உண்ணையான	—	உண்மையான
,,	,,	உருவங்ள்க	—	உருவங்கள்
75	18	ஏன்ன	—	என்ன
76	30	Primay	—	Primary
80	8	மளதிலும்	—	மனதிலும்
,,	21	சோதளே	—	சோதனே
86	4	பொருள்களுக்	—	பொருள்களும்
,,	5	கும், விசேஷமாய்	—	விசேஷமாய்
,,	,,	மருந்துகளுக்கும்	—	மருந்துகளும்
98	19	ஏனெனில	—	ஏனெனில்
101	1	கவனாய்ப்ம	—	கவனமாய்ப்
109	13	அரை குறைவான	—	அரை குறையான
113	4	நாட்கழிததோ	—	நாட் கழித்தோ
,,	24	விஷநோய் கூறைக்	—	விஷநோய்க் கூறை
132	11	காலகங்ளில்	—	காலங்களில்

முகவுரை

எல்லாம் வல்ல இறைவனின் எண்ணற்ற படைப்புக்களில் ஈடு இணையற்றது மனிதப் பிறவியே. "அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என்று நம் தமிழ் மூதாட்டி அவ்வையாரே இதற்குச் சாட்சியம் சொல்லும்போது வேறு என்ன வேண்டும்?

ஆறறிவு படைத்த மனிதன் தன்னைப் பீடிக்கும் நோய்களை நீக்க சுற்றியுள்ள மரஞ்செடி கொடிகளையும், மற்றவைகளையும் பயன் படுத்தலாம் என்ற அறிவை எப்படி, எப்பொழுது பெற்றான்? யாராலும் இக் கேள்விக்கு விடை அளிக்க முடியாது.

உலகின் எல்லாப் பகுதிகளிலும், நாகரிகத்தின் வாசனை எட்டாத இடங்களில்கூட, நோய் வந்தால் மருந்துண்ணும் பழக்கம் எல்லாக் காலங்களிலும் இருந்து வந்துள்ளது. ஆயினும் சமீப காலம் வரை ஊகம், அபிப்பிராயம், அரைகுறை அனுபவம் ஆகியவைகளையே துணையாய்க்கொண்டு மருந்துகள் உபயோகிக் கப்பட்டு வந்திருப்பது உலகறிந்த விஷயம்.

உயிர்களைக் காப்பாற்றும் பெரியதோர் பொறுப்பைத் தாங்கும் வைத்திய சாஸ்திரம் வெறும் ஊகத்தையும் அபிப்பிராயத்தையும் அரைகுறை அனுபவத்தையும் ஆதாரமாய்க் கொள்வது சரியல்ல; உண்மையான அனுபவத்தையே அடிப்படையாய்க் கொண்டிருக்க வேண்டுமென்ற நோக்குடன் ஜர்மனி தேசத்தில் சுமார் 150 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்து வந்த புகழ்பெற்ற அலோபதி வைத்தியரும் சிறந்த அறிவாளியுமான டாக்டர் சாமுவேல் ஹானிமன் என்பவர் பல்லாண்டுகள் பாடுபட்டு ஹோமியோபதி வைத்திய முறையைக் கண்டு பிடித்தார்.

கற்றுக் கொள்ளவும் நோய்க்கு ஏற்ற மருந்தைத் தேர்ந்து எடுக்கவும் எளிதாய், விரைவிலே நோய்களைக் குணம் செய்யும்

பேராற்றல் பெற்றதாய் விளங்கும் காரணங்களால் ஹோமியோபதி வைத்திய முறை அரசாங்கத்தின் ஆதரவு இல்லாதிருந்த போதும் மக்களின் மதிப்பின் மூலமே உலகெங்கும் வெற்றிக் கொடி நாட்டி விட்டது.

நம் பாரத நாட்டில், அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டில் சென்ற இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஹோமியோபதி வைத்திய முறையில் நேரிலும் தபால் பாடங்கள் மூலமும் ஆயிரக் கணக்கான மக்களுக்குப் பயிற்சி அளிக்கும் பணியில் நான் ஈடு பட்டு இருக்கிறேன். அவர்களில் பெரும்பாலோர் இன்று நாட்டு மக்களுக்கு நல்ல தோர் தொண்டு செய்து வருவதைக் காண என் மனம் பூரிப்பை அடைகிறது.

ஹோமியோபதி வைத்திய முறையின் அடிப்படைத் தத்து வங்களை "ஆர்கனன் ஆஃப் மெடிஸின்" என்ற பெயருள்ள நூலிலே டாக்டர் ஹானிமன் விளக்கியுள்ளார். இதுவரை அந் நூலின் சாராம்சமே போதிக்கப் பட்டு வந்திருக்கிறது. சென்ற சில ஆண்டுகளாக அந்நூலை முழுவதும் தமிழாக்கித் தரவேண்டு மென்ற வேண்டுகோள்கள் ஏராளமாய் விட்டன. ஆகவே மகிழ்ச்சியுடன் இத்தமிழாக்கத்தை வெளியிடுகிறேன்.

சுமார் நூருண்டுகளுக்கு முன் அச்சாகிய விக்ரமாதித்தன் கதை போன்ற நூல்களில் கையாளப் பட்ட தமிழ் நடையைப் போலவே அக்கால ஆங்கில மொழியின் நடையும் அனுவசியமான, மிக மிக நீண்ட சொற்றொடர்களுடன் இருந்து வந்தது. ஆகவே ஆர்கனன் ஆஃப் மெடிஸினிலும் அத்தகைய ஆங்கில நடையே காணப்படுகிறது. இதனால் அப்படியே தமிழ் ஆக்கம் செய்வதில் பயன் இல்லை என்று கண்டு, கூடிய வரை குறுகிய, எளிதிலே புரியக்கூடிய, சொற்றொடர்களையே கையாண்டிருக்கிறேன்.

வைத்தியத் தத்துவங்களும் கோட்பாடுகளும் நிரம்பியுள்ள இம்மா பெரும் நூலை மூல ஆசிரியரின் கருத்தை மாற்றுமல் என்னுல் இயன்ற வரை பாடுபட்டுத் தமிழ் ஆக்கியுள்ளேன். என்னையும் மீறிக் குற்றங்கள் நேர்ந்திருக்கலாம். அறிஞர்கள் பிழை பொறுத்து ஊக்கமளிப் பார்களாக.

டாக்டர் வி. எஸ். ஸுப்ரமண்யம்

டாக்டர் ஹானிமனின் வரலாறு

ஹானிமன் 1755-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பத்தாம் தேதி ஜர்மனி தேசத்தில் மீஸ்ஸென் என்ற ஊரில் தோன்றினர். ஆரம்பப் படிப்பு முடிந்தவுடன் ஹானிமனுக்கு உயர்தரப் படிப்பு படிக்க வேண்டுமென்ற ஆவல் இருந்தும் தகப்பனரின் எளிய நிலைமையில் ஏதும் செய்ய இடம் இல்லை. ஆயினும் எவ்விதமோ பாடுபட்டு ஹானிமன் உயர்தரப் படிப்பு பெற்றூர் பிறகு லீப்ஸிக் என்ற பட்டணத்திற்கு வந்து அவ்விடத்திலிருந்த வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து டாக்டர் பட்டம் பெற்றூர்.

பற்பல ஊர்களில் தொழில் நடத்தி முடிவாகத் தான் வைத்தியம் கற்றுக்கொண்ட லீப்ஸிக் பட்டணத்திலேயே நிரந்தர மாகக் குடியேறினர். நாளுக்கு நாள் ஹானிமனின் புகழும் தொழிலும் விருத்தி அடைந்து வந்தன. எல்லா வைத்தியர்களா லும் அடி வணங்கப்பட்டார். சகல கலா வல்லபன் என்று அழைக்கக் கூடிய தகுதியும் இப்பொழுது ஹானிமனுக்கு இருந் தது. அதாவது ஐரோப்பிய நாடுகளில் அக்காலத்திலும் முன் காலத்திலும் வழங்கிவந்த எல்லா மொழிகளிலும் வைத்தியம், ரசாயனம், தாவர சாஸ்திரம், கனிப் பொருள்கள் ஆகிய எல்லா வகை சாஸ்திரங்களிலும் ஹானிமனுக்கு அபாரமான அறிவு இருந்தது.

பொதுச்சுகாதாரம் என்று சொல்லப்படும் வியாதி வராமல் தடுக்கும் முறையிலும் ஹானிமனுக்கு நல்ல அனுபவம் இருந்தது. ஆயினும் தன்னிடம் சிகிச்சைக்கு வரும் வியாதி யஸ்தர்களில் பெரும்பாலோருக்கு மருந்துகளினல் கால் பங்கும் சுகாதார முறைகளை அனுஷ்டிப்பதினல் முக்கால் பங்கும் வியாதி தீருவதை அவர் கவனித்தார். ஆகவே நாளடைவில் தான் கற்ற வைத்திய முறையில் நம்பிக்கை குறைந்து கடைசியில் வைத்தியம் செய்வதை நிறுத்தியும் விட்டார். ரசாயன ஆராய்ச்சி மூலமும் அச்சாஸ்திரத்திலும் வைத்தியத்திலுமுள்ள நூல்களை வேறு மொழிகளில் மொழி பெயர்ப்பதினலும் கிடைக்கும் ஊதியத்

லைக் கொண்டு வாழ்க்கையை நடத்திவந்தார். ஒரு சமயம் அதாவது 1790-ல் கல்லென் என்பவரால் ஆக்கப்பட்ட மெட்டீரியா மெடிகா என்னும் நூலை மொழிபெயர்க்கும்போது அதில் குளிருடன் வரும் முறைச் சுரத்திற்கு கொயினா நல்ல மருந்து என்று எழுதப்பட்டிருந்தது. ஹானிமனும் அவர் தொழில் நடத்திய காலத்தில் பலருக்குக் கொயினா கொடுத்துச் சுரத்தைச் சுகம் செய்திருக்கிறார்; கொயினா எப்படி சுரத்தைப் போக்கு கிறது என்பதை ஆராய்ந்தார். அக்காலத்திய வைத்தியர் கள் அவ் விஷயமாகக் கொண்டிருந்த கருத்துக்கள் அவருக்குச் சரியாகத் தோன்றவில்லை. ஆகவே ஒரு நாள் கொயினாவைச் சாப்பிட்டுப் பார்ப்போம் என்று எண்ணி அவ் விதமே செய்தார். ஒன்றிரண்டு நாட்களில் அவருக்கு குளிர் நடுக்கலுடன் சுரம் ஏற்பட்டது. அச்சுரம் கொயினா சாப்பிட்டதினால்தான் ஏற்பட்டதா அல்லது சாதாரணமாகத் தோன்றியதா என்ற சந்தேகத்தினால் அவர் தன் நண்பர்கள் சிலருக்கும் இதேபோல் கொயினாவைக்கொடுத்து அவர்களுக்கும் சுரம் ஏற்பட்டபிறகே கொயினாவை நிறைய உட்கொண்டால் குளிர் முறைச்சுரம் ஏற்படுமென்பதை நம்பினார். இவ்விதமாகப் பல மருந்துகளைக் கொண்டு ஆறு வருடங்கள் ஆராய்ச்சி செய்தபின்னர் தான் கண்டுபிடித்த உண்மையை ஒரு வைத்தியப் பத்திரிகையில் வெளி யிட்டார். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டதே ஹோமியோபதி வைத்தியம். அதாவது.

ஒவ்வொரு மருந்தும் மனித உடலில் ஒவ்வொரு விதமான நோய்க் குறிகளை உண்டாக்குகிறது; மருந்தின் பலம் அதிகமாய் இருந்தால் அதனால் உண்டாக்கப்படும் நோய்க் குறிகளும் கடுமையாய் இருக்கின்றன; நாட்பட்ட நோய்கள் திடீரென்று தோன்றும் மற்றொரு நோயினால் குணம் செய்யப்படுகிறது என்பது சில சமயங்களில் இயற்கையாய் ஏற்படுகிறது; இவ் விஷயத்தில் இயற்கை செய்வதைப் பின்பற்றவேண்டும். அதாவது ஒரு நோயில் தென்படும் குறிகளைப் போன்ற குறிகளை உண்டாக்கும் வல்லமையுள்ள மருந்தை உபயோகிக்க வேண்டும்; அதனால் நோய் நீங்கும், விஷம் விஷத்தைப் போக்குவதுபோல் என்பதே. இவ் விஷயம் அக்காலத்திய வைத்தியக கோட்பாடுகளுக்கு முற்றிலும்

விரோதமாகவும் புரட்சிகர மாகவும் இருந்ததால் அதிக எதிர்ப்பு இருந்தது. இந்த எதிர்ப்பை லட்சியம் செய்யாமல் 1810-ம் ஆண்டில் ''ஆர்கனுன்'' என்ற பெயருடன் தான் கண்டுபிடித்த உண்மையை அடிப்படையாகக் கொண்ட புதிய வைத்தியமுறை யைப்பற்றி விரிவான ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அப் புத்தகத்தைத் தழுவியே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

அக்காலத்தில் அட்டையை உறிஞ்ச விடுதல், சூடு போடுதல் முதலிய பல முறட்டுத்தனமான சிகிச்சைகள் பெரிதும் வழக்கத் திலிருந்தன. இப்பழக்கத்தை ஹானிமன் தம் புத்தகத்தில் வன்மை யாகக் கண்டித்தார். ஒரே வியாதிக்குப் பல மருந்துகளைக் கலந்து கொடுப்பதும் அதிக அளவில் மருந்து கொடுப்பதும் கூடாது என்று போதனை செய்தார். இதனால் மற்ற வைத்தியர் களும் மருந்துகளைக் கலந்து கொடுக்கும் தொழிலில் ஈடு பட்ட வர்களும் ஹானிமனுக்கு எதிராகக் கடுமையான பிரசாரம் செய்தார்கள்.

ஆர்கனுனை வெளியிட்ட பிறகு லீப்ஸிக் நகரத்திலிருந்த சர்வ கலாசாலையின் அனுமதிபெற்று ஆர்கனுனில் வெளியிட்டுள்ள தன் கருத்துக்களை ஆதாரமாக வைத்து 8 வருஷங்கள் பலருக்கு ஹோமியோபதி வைத்தியத்தைப் போதித்தார். இக்காலத்தில் மெட்டீரியா மெடிகா பூரா என்னும் பிரம்மாண்ட நூலையும் எழுதி வெளியிட்டார். ஹானிமனின் புகழ் இப்போது நாடெங்கும் பரவி விட்டது. அவருக்குப் பல சிஷ்யர்கள் ஏற்பட்டு ஹோமியோ பதியின் பெருமை எங்கும் வீச ஆரம்பித்தது. இருந்தாலும் அவரைத் தூற்றுவோரும் பலர் இருந்தார்கள். ஜர்மனிக்குப் பக்கத்திலுள்ள ஆஸ்திரியா தேசத்து அரசரின் மகனொருவர் சிகிச்சை பெற்றுக்கொள்ள ஹானிமனிடம் வந்தார். துரதிர்ஷ்ட வசமாக ஆறு மாதங்களில் வியாதியஸ்தர் மரணமடைந்தார். வெறும் வாயை மெல்லுகிறவனுக்கு அவல் கிடைத்தது போல் ஹானிமனைத் தூற்றுகிறவர் ஒன்றுகச் சேர்ந்து கோள் பல சொல்லி ஹானிமன் வைத்தியம் செய்யமுடியாதபடி செய்து விட்டனர். அதாவது ஒரு வேளை மருந்து கொடுத்தால் பல ரூபாய்கள் அபராதம் செலுத்த வேண்டும் என்று சர்க்கார் உத்திரவிட்டது

இதனால் மனம் இடிந்த ஹானிமன் லீப்ஸிக் நகரத்தைத் துறந்து பல இடங்கள் சுற்றி கடைசியில் கோதென் என்ற இடத்திலிருந்த அரசர் ஒருவரால் அவ்விடத்தில் தங்கி வைத்தியம் செய்ய உரிமை கிடைத்தது. இச்சமயத்தில் ஹோமியோபதியின் பெருமை விளங்க ஓர் சந்தர்ப்பம் வாய்த்தது. அதாவது காலரா என்னும் விஷபேதி எங்கும் தாண்டவமாடியது. காலராவை முறியடிப்பதில் ஹோமியோபதி மருந்துகளுக்கு இருந்த அபார சக்தியினால் ஹோமியோபதி வைத்தியத்தில் பலருக்கு மதிப்பும் ஆர்வமும் ஏற்பட்டது. கோதெனில் 14 வருஷங்கள் தங்கி அதன் பிறகு பிரான்சு தேசத்திலுள்ள பாரிஸ் மாநகரம் சேர்ந்து அத்தேசத்து அரசரால் ஹோமியோபதி வைத்தியத் தொழில் நடத்த விசேஷ அனுமதி பெற்றார். ஆங்குள்ள பத்திரிகைகள் ஹானிமனை ஆதரித்து எழுதின. செல்வந்தர்களும் அபிமானித்தார்கள். பாரிஸில் 8 வருஷம் இருந்தார். இந்த எட்டு வருஷங்களில் ஹோமியோபதி வைத்தியத்தின் புகழ் குன்றின் மீதிட்ட விளக்குப் போல் உலகெங்கும் பரவி ஹானிமனுக்குப் பெருமையையும் மனத்திருப்தியையும் அளித்தது. 1843-ல் அதாவது தமது 88-வது வயதில் காலமானார்.

ஹானிமனின் பூத உடல் அழிந்து விட்டது. ஆனால் புகழ் உடல் அழியவில்லை. மனிதன் இவ்வுலகில் உள்ளளவும் அவர் புகழும் நிலைத்தே இருக்குமென்பதில் சந்தேகம் உண்டா?

ஹோமியோபதித் — —
— — தத்துவங்கள்

நோய் நொடி நீக்கலே வைத்தியர் கடமை (1) :

தன்னிடம் சிகிச்சை பெற வருகிறவர்களின் நோய்களை வேருடன் களைந்தெறிந்து மீண்டும் அவர்கள் நோயற்ற வாழ்வு வாழ வழி செய்வது ஒன்றே வைத்தியரின் உயர்ந்த பணி ; கடமையுமாகும்.

உண்மைச் சிகிச்சையின் சிறப்புத் தன்மை (2) :

நோயற்ற நிலை விரைவில் ஏற்படவேண்டும். நோயாளிக்கு எவ்வகையான துன்பமும் நேரக்கூடாது. நோய் மீண்டும் திரும்பி வராமல் வேருடன் வீழ்த்தப் படவேண்டும். முற்றிலும் நம்பத் தகுந்த, எள்ளளவு தீங்கையும் உண்டாக்காத, எளிதிலே புரிந்து கொள்ளக்கூடிய வழி முறைகளுக்கு உட்பட்டதாய் இருக்கவேண்டும்.

முற்றும் அறிந்தவர் உண்மை வைத்தியர் (3) :

ஒவ்வொரு நோயிலும் என்னென்ன கோளாறுகளுக்குச் சிகிச்சை செய்யவேண்டும்? ஒவ்வொரு மருந்திலும் என்னென்ன கோளாறுகளை நீக்கும் சக்தி இருக்கிறது? நோயாளியின் உடலிலுள்ள, சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் கண்டுபிடிக்கப்பட்ட, கோளாறுகளைப் போக்கி நோயற்ற நிலையை மீண்டும் ஏற்படுத்தக் கூடிய மருந்துகளைத் தெளிவான கோட்பாடுகளை ஆதாரமாய் வைத்துத் தேர்ந்தெடுப்பது எவ்விதம்? அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்துகளில் சிகிச்சைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நோயைப் போக்க எது மிகச் சரியானது? அம்மருந்தை எப்படித் தயாரிப்பது? எந்த அளவில், எவ்வளவு வேளைகள், எந்தெந்த நேரங்களில் கொடுப்பது? ஒவ்வொரு நோயிலும் குணம் ஏற்படுவதைத் தடை செய்யக்கூடியவை எவை? அத்தடைகளை நீக்கி நிரந்தர குணம் ஏற்படும்படிச் செய்வது எப்படி? ஆகிய எல்லா விஷயங்களையும் அறிந்தவரே உண்மையான வைத்தியராவார்.

வருமுன் காப்பதும் வைத்தியர்க் கழகே (4) :

ஆரோக்கியத்தைக் குலைத்து நோயை உண்டாக்கும் காரணங்களையும் அக்காரணங்களை நீக்கும் வகையையும் வைத்தியர் அறிந்திருக்க வேண்டும்.

தூண்டும் காரணம் : அடிப்படைக் காரணம் (5) :

திடீர் நோயில் (Acute Diseases) அதைத் தூண்டியதாகக் கருதக்கூடிய காரணத்தின் விவரங்களும் நீடித்திருக்கும் (Chronic Diseases) நோயில் அதன் அடிப்படைக் காரணத்தைத் தெள்ளென எடுத்துக் காட்டும் முக்கியமான குறிகளும் (அடிப் படைக்காரணம் பெரும்பாலும் மூவகைத் தோஷங்களில் ஒன்ருய் இருக்கலாம்) நோய் தீர்க்கும் பணியில் வைத்தியருக்கு உதவியளிக்கின்றன. இவ் வாராய்ச்சிகளை நடத்தும் போது வியாதியஸ்தரின் உடல் அமைப்பு, நடத்தை, அறிவு, தொழில், வாழும் விதம், பழக்க வழக்கங்கள், சொந்த மனிதர்களுடனும் அயல் மனிதர்களுடனும் பழகும் விதம், வயது, ஆண் பெண் உறவு ஆகிய விவரங்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படவேண்டும்.

நோயின் உருவை உணரும் வழியிது (6) :

ஒவ்வொரு நோயிலும் நோயாளியின் உடலிலும் மனதிலும் மாறுதல்கள் தோன்றுகின்றன. ஐம்புலன்களின் துணை கொண்டு வெளிப்படையாக அறியக்கூடிய இம்மாறுதல்களைத் தவிர வேறு எதையும் வைத்தியர் கவனிக்க வேண்டியதில்லை. முன்பிருந்த நோயற்ற நிலைக்கும் இப்பொழுது உள்ள நோயுற்ற நிலைக்கும் உள்ள மாறுதல்களைத்தான் வைத்தியர் கவனிக்க வேண்டும். இம்மாறுதல்களின் விவரங்களை நோயாளி, அவர் அருகில் இருப்போர் ஆகியோரின் வாக்கு மூலமும் வைத்தியரின் கண்ணோட்டத்தின் மூலமும் அறியலாம். வெளிப் படையாகத் தெரியும் இக் குறிகள் எல்லாம் நோயின் முழு வடிவத்தை அதாவது உண்மையான உருவத்தைச் சமைக்கின்றன.

உயிர்ப்புச் சக்தியும் மொத்தக் குறிகளும் (7, 8):

ஒரு வியாதி இருக்கிறது. அதைத் தூண்டிய காரணம் எதுவும் இல்லை. நீடிக்கச் செய்யும் காரணமும் இல்லை. நோய்க் குறிகளைத் தவிர வேறு எதுவுமே புலப்படவில்லை. மூவகைத் தோஷங்களில் ஏதாவது இருக்கிறதோ என்று பார்த்தால் அதுவும் இல்லை. நோய் உண்டாக வேறு சில்லரைச் சந்தர்ப்பங்கள் ஏதாவது இருக்குமோ என்று தேடியதில் அவைகளும் இல்லை.

இந் நிலைமையில் நோயை நீக்கத்தக்க மருந்தைச் சுட்டிக் காட்டுவது நோயின் மொத்தக் குறிகளேயாகும். அக்குறிகளின் மூலமே ஏற்ற மருந்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உள்ளே உள்ள நோயின் சாராம்சத்தை, அதாவது உயிர்ப்புச் சக்தியின் நோயை, வெளிப் படையாகக் காண்பிக்கும் குறிகள் தான் நோய் தீர்க்கும் மருந்தைத் தேர்ந்தெடுக்க உதவுகின்றன. ஒவ்வொரு நோயிலும் இம் மொத்தக் குறிகளை அனுசரித்தே நோய் நீக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

ஒவ்வொரு நோயிலும் வெளியிலே தென்பட்ட எல்லா நோய்க் குறிகளும் நீங்கியபின் உடலினுள்ளே நோய் தங்கி இருக்கிறது என்றோ அல்லது நோயற்ற நிலையைத் தவிர வேறு ஏதோ புகுந்து கொண்டிருக்கிறது என்றோ நினைக்கவும் முடியாது; ருசுப்படுத்தவும் முடியாது.

சூட்சுமமான உயிர்ப்புச் சக்தி (9, 10):

நோயற்ற நிலைமையில் உடலுக்கு உயிர்தரும் பொருள், அதாவது சூட்சுமமான உயிர்ப்புச் சக்தி, உடலெங்கும் தங்கு தடையின்றி ஆட்சி நடத்துகிறது. உடலின் உறுப்புகள் யாவும் அதனதன் உணர்ச்சிகளையும் வேலைகளையும் வியக்கத்தக்க, ஒற்றுமையான முறையில் நடத்த வழி செய்கிறது. இச் செய்கையினால் தான் மனிதனின் பகுத்தறியும் மனம் உடலின் துணைகொண்டு வாழ்வின் உயர் நோக்கங்களை அடையப் பாடு படுகிறது.

உயிர்ப்புச் சக்தி இல்லாத உடலுக்கு உணர்ச்சி இல்லை; அதன் வேலைகள் நடைபெறவில்லை. தன்னைக் காப்

பாற்றிக் கொள்ளவும் முடியாது. ஆகவே நோய் அற்ற நிலைமையிலும் நோய் உற்ற நிலைமையிலும் உடலின் உணர்ச்சிகளுக்கும் வேலைகளுக்கும் ஆதாரமாய் இருப்பது இச்சூட்சுமமான உயிர்ப்புச் சக்தியேயாகும்.

முதலடி படுவது உயிர்ப்புச் சக்தியே (11) :

ஒருவர் நோய் வாய்ப்பட்டால் முதலில் தாக்கப்படுவது உடலெங்கும் பரவியுள்ள உயிர்ப்புச் சக்தியே. உயிரைக் குடிக்கும் வல்லமையுள்ள ஏதோ ஒரு நோய்ப் பொருளால் சூட்சுமமான முறையில் உயிர்ப்புச் சக்தியின் தன்மை கோளாருகிறது. இவ்வாறு கோளாருகிவிட்ட உயிர்ப்புச் சக்தியே, தான் அனுபவிக்கும் வேதனையை உடலிலே தோன்றச் செய்து உடலின் வேலைகளைத் தாறுமாருக்கி விடுகிறது. இந் நிலைமையைத் தான் "நோய்" என்று நாம் அழைக்கிருேம். உயிர்ப்புச் சக்தியே இந் நிலைமைக்குக் காரணம் என்று எப்படிச் சொல்ல முடியும் என்ற கேள்விக்கு விடை இதோ தருகிருேம். உயிர்ப்புச் சக்தி கண்களுக்குப் புலப்படாத பொருள் ; தன் சக்தியை உடலின் மூலமே காட்ட முடியும். ஆதலால் தன் நோயை எடுத்துக்காட்ட வைத்தியருக்கும் பார்ப்போருக்கும் புலனுகக் கூடிய உடல் உறுப்புகளைத் தாக்கி அவ் வுறுப்புகளின் உணர்ச்சிகளிலும் வேலைகளிலும் மாறுதல்களை உண்டாக்குவது ஒன்றே உயிர்ப்புச் சக்திக்கு உள்ள வழி. வேறு எவ்வழியும் அதற்கு இல்லை.

நோயின் தந்தை உயிர்ப்புச் சக்தியே (12)

விஷப் பொருளால் பீடிக்கப்பட்ட உயிர்ப்புச் சக்தியே நோய்களை உண்டாக்குகிறது. அதனுல் நோயாளியிடம் நம் புலன்களுக்குத் தென்படும் நோய்க் குறிகள், உடலின் உட்புறத்தில் ஏற்பட்டுள்ள மாறுதலை, அதாவது உயிர்ப்புச் சக்தியின் கோளாறு முழுவதையும், எடுத்துக் காட்டுகின்றன. குறிகளின் மூலம் நோயின் முழு உருவத்தை அறியலாமென்று ஒரே வார்த்தையில் சொல்லலாம். ஆதலால் நாம் செய்யும் சிகிச்சையினுல் நோய்க் குறிகளும் உடல் வேலைகளில் ஏற்பட்ட ஒழுங்கீனங்களும்

மறைந்து விட்டன என்றால் உயிர்ப்புச் சக்தி ஒழுங்கு நிலைமையை அடைந்து விட்டது என்றும் உடல் முழுவதிலும் ஆரோக்கிய நிலைமை ஏற்பட்டு விட்டது என்றும் நிச்சயிக்கலாம்.

அலோபதியர்களின் அறியாத்தன்மை (13) :

ஆயுத சிகிச்சை தேவைப்படுப்வை, தேவைப்படாதவை என்று நோய்களை இரு வகையாய்ப் பிரிக்கலாம். முதல் வகையைச் சேர்ந்த நோய்களுக்கே உடலுடன் தொடர்பு இருக்கிறது ; இரண்டாம் வகையைச் சேர்ந்த நோய்க்கு உயிர், உடல், உடலை உயிர்ப்பிக்கும் சக்தி ஆகிய எதனுடனும் தொடர்பு கிடையாது ; அது உடலுக்குள்ளே ஒளிந்து கொண்டிருக்கிறது என்று அலோபதி வைத்தியர்கள் நினைக்கின்றனர். இது மிக மிகத் தவறானது. கண்ணால் கண்டதே மெய், மற்றதெல்லாம் பொய் என்று கருதும் உள்ளப் பாங்கு உள்ளவர்களாலேயே அவ்விதம் நினைக்க முடியும். அத்தகையவர்களால் தான் அலோபதி வைத்திய முறை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பாழடிக்கப்பட்டு இன்று விஷ(ம)ம் நிறைந்த வைத்திய முறையாகிவிட்டது.

இறைவன் கருணைக்கில்லை எல்லை (14) :

குறிகளின் மூலம் தன்னைக் காண்பித்துக் கொள்ளாத நோயோ, கோளாறோ, மனித உடலில் இல்லை. அதாவது குணமாக்கப்படக் கூடிய எல்லா நோய்களும் கோளாறுகளும் குறிகளின் மூலம் கூர்ந்து கவனிக்கும் வைத்தியருக்குத் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன. எல்லாம் வல்ல இறைவனின் எல்லையில்லாப் பெருங்கருணையே இதற்குக் காரணம்.

உயிரும் உடலும் ஒன்றே ஆகும் (15) :

உடலினுள்ளே குடியிருந்து கொண்டு அதற்கு உயிரூட்டும் சூட்சுமமான உயிர்ப்புச் சக்தியைப் பீடித்துள்ள நோயும் அச்சக்தியினால் உடலின் வெளிப்புறத்திலே புலப்படும் படியாகத் தோற்றுவிக்கப்படும் நோய்க் குறிகளும் ஒன்

றேயாகும். வெவ்வேருனவை அல்ல. உடல் உயிருக்கு உருவத்தை அளிக்கிறது ; உயிர்ப்புச் சக்தி உடலுக்கு உயிரை அளிக்கிறது ; ஆகவே இரண்டும் தனித்தனியே பிரிக்கமுடியாத ஒரே பொருள். குழப்பம் இல்லாமல் எளிதில் புரிந்து கொள்வதற்காகவே இவ்வொரு பொருளை இரண்டாய்ப் பிரிக்கிறோம்.

சூட்சுமமாகவே நடைபெறும் வேலை (16) :

நம் உயிர்ப்புச் சக்தி சூட்சுமமான ஒரு பொருள் ; ஆதலால் உயிருக்குத் தீங்கிழைக்கும் நோய்ப் பொருள்கள் சூட்சுமமான வழியில்தான் அதைத் தாக்கவோ பீடிக்கவோ முடியும். இதைப் போலவே நோய்க்கு ஏற்றதான ஔஷதங்களிலுள்ள சூட்சுமமான சக்தியினுல்தான் நோய்ப் பொருள்களை நீக்கவும் முடியும். நோயாளியின் ஆரோக்கிய நிலைமையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கவனமாய் ஆராய்ந்து, அதற்கேற்பக் கொடுக்கப்படும் மருந்துகளிலுள்ள சூட்சுமச் சக்தியை, உடலெங்கும் பரவி நிற்கும் உணர்ச்சி மிக்க நரம்புகளின் மூலம் உயிர்ப்புச் சக்தி கிரகித்துக் கொள்கிறது ; அவ்வாறு கிரகிக்கப்படும் மருந்துச் சக்தியினுலேயே ஆரோக்கிய நிலைமை திரும்ப ஏற்படக்கூடும் ; ஏற்படவும் செய்கிறது.

சிகிச்சையின் இலக்கு நோய்க்குறி நீக்கலே (17) :

ஐம்புலன்களாலும் அறியப்பட்ட எல்லா நோய்க் குறிகளும் நீங்கிக் குணம் ஏற்படும் போது அக்குறிகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த உயிர்ப்புச் சக்தியின் நோயும் அதே சமயத்தில் நீக்கப்படுகிறது. உள்ளே உள்ள நோயை (உயிர்ப்புச் சக்தியின் நோயை)ப் போக்க, உடலின் வெளிப்புறத்தே தென்படும் நோய்க் குறிகளை நீக்கினுல் போதும் என்பது இப்பொழுது விளங்கும். தன்னுடைய உண்மையான, உயர்ந்த கடமை நோய் உள்ளவர்களை ஆரோக்கிய நிலைக்குத் திரும்பக் கொண்டு வருவதேயன்றி எல்லாம் அறிந்தவன் போல நடித்துப் பிதற்றுவதல்ல என்பதை வைத்தியர் அறிய வேண்டும்.

நோயின் குறிகளே குறிக்கும் மருந்தை (18):

நோய்களில் அவைகளின் மொத்தக் குறிகளைத் தவிர வேறு எதையும் எவ்வழியினாலும் கண்டு பிடிக்க முடியாது என்பதை மேலுள்ள, சந்தேகத்துக்கு இடமில்லாத, உண்மை நமக்குப் போதிக்கிறது. ஆகவே ஒவ்வொரு நோய்க்கும் ஏற்ற மருந்தைத் தேர்ந்து எடுக்க நமக்கு வழிகாட்டியாய் ஆதாரமாய் இருக்க வேண்டியது அதன் மொத்தக் குறிகளே என்பது மறுக்க முடியாத விஷயமாகிறது.

மருந்தில் உள்ள சூட்சுமச் சக்தி (19, 20):

ஒருவரின் ஆரோக்கிய நிலைமையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களே நோய் என்று அழைக்கப்படுகின்றன; அம்மாறுதல்கள் நோய்க் குறிகளாகத் தோற்றமளிக்கின்றன. நோய்க் குறிகள் நீங்கி, ஆரோக்கிய நிலைமை மீண்டும் திரும்பினால்தான் நோய் குணமடைவது சாத்தியமாகும். ஆகவே மருந்துகளுக்கு மனித உடலின் ஆரோக்கிய நிலைமையை மாற்றும் சக்தி இல்லாவிட்டால் அவைகளால் நோய்களை நீக்க முடியாது என்பது இதிலிருந்து தெளிவாகும். ஆரோக்கிய நிலைமையை மாற்றும் சக்தியைப் பெற்றிருக்கும் ஒரே காரணத்தினால்தான் மருந்துகளுக்கு நோய் தீர்க்கும் சக்தி இருக்கிறதென்றும் கூறலாம்.

மனிதனின் ஆரோக்கிய நிலைமையை மாற்றவும் அதே சமயத்தில் நோய்களைத் தீர்க்கவும் வல்லமையுள்ள சக்தி மருந்துகளினுள்ளே மறைந்து இருக்கிறது. பகுத்தறிவின் துணை கொண்டு அதைக் கண்டு பிடிக்க எக்காலத்திலும் முடியாது. மனிதனின் ஆரோக்கிய நிலைமையில் அது ஏற்படுத்தும் மாறுதல்களை அனுபவ வாயிலாகப் பார்த்தே தெளிவாய் அறிய முடியும்.

மருந்துச் சக்தியை மதிப்பிடும் வழி இது (21):

மருந்துகளிலுள்ள நோய் நீக்கும் சக்தி வெளிப் படையாய்த் தெரியவில்லை. மருந்துகளைச் சோதனை செய்யும் காலத்தில் அவைகளால் மனித உடலின் ஆரோக்கிய நிலைமையில் ஏற்படுத்தப்படும் மாறுதல்களையும் பற்பல வகைப்

பட்ட நோய்க் குறிகளையும் தவிர அவை நோய்களைத் தீர்க்கப் பயன்படும் என்பதற்கான அடையாளங்கள் ஒன்றுகூட, எவ்வளவு முயற்சி செய்தாலும், தென்பட வில்லை. மருந்துகள் நோய்களைத் தீர்க்க உபயோகமா கின்றன என்ருல். ஆரோக்கிய நிலைமையில் மாற்றம் செய்து நோய்க்குறிகளை உண்டாக்கும் சக்தியை அவை பெற்றிருப்பதே காரணம் என்று இதிலிருந்து புலனு கிறது. ஆகவே மருந்துகளிலுள்ள நோய் தீர்க்கும் சக்தியை அவைகளால் ஆரோக்கிய நிலைமையில் தோற்று விக்கப்படும் நோய்க் குறிகளைக் கொண்டே நாம் முடிவு செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு மருந் தும் எந்தெந்த நோய்களை உண்டாக்கும், அதே சமயத் தில் தீர்க்கும், சக்தியைப் பெற்றிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒற்றுமையும் வேற்றுமையும் (22):

நோய்களில் நோய்க் குறிகளைத் தவிர நீக்கப் படவேண்டிய பொருள் வேருென்றும் தென்படவில்லை. அதே போல ஆரோக்கியமாயுள்ள உடலில் செயற்கை நோய்க் குறி களை ஏற்படுத்தவும் நோயுற்ருேரின் நோய்க் குறிகளை நீக்கவும் ஆன இரு வகைச் சக்திகளைத் தவிர வேறு எது வும் மருந்துகளில் காணப்படவில்லை. இதிலிருந்து நமக்கு இரண்டு விஷயங்கள் தெரிய வருகின்றன.

முதலாவது :—ஒருவிதமான செயற்கை நோயை உண்டாக் கவும் ஏற்கனவே இருந்த நோய்க் குறிகளை (குணம் செய்ய வேண்டும் என்று நாம் நினைத்த நோயை) நீக்க வும் மருந்துகளுக்குச் சக்தி இருப்பதால்தான் அவை நோய்களை நீக்குகின்றன.

இரண்டாவது :—குணம் செய்யப்பட வேண்டிய நோயின் மொத்தக் குறிகளை நீக்க அக்குறிகளுடன் ஒற்றுமையோ அல்லது வேற்றுமையோ உள்ள செயற்கை நோய்க் குறி களை உண்டாக்கும் சக்தியுள்ள மருந்தைத் தேட வேண்டும்.

வேற்றுமை மருந்து வேதனை யூட்டும் (23)

வேற்றுமை மருந்துகளைக் கொடுத்தால் பிடிவாத குணமுள்ள இயற்கை நோய் குணமாகிவிட்டது போலச் சிறிது நேரத்துக்குத் தோற்ற மளித்துப் பிறகு முன்னை விடக் கடுமையான அளவில் திரும்பி வந்துவிடுகிறது. சரியான முறையில் நடத்தப்பட்ட ஒவ்வொரு ஆராய்ச்சியும் தூய்மையான அனுபவமும் இது உண்மைதான் என்று உறுதி செய்கின்றன.

ஒற்றுமை மருந்தே ஒழிக்கும் வேதனை (24, 25)

வேற்றுமை மருந்துகளால் வேண்டிய பலன் விளையாது என்பது இப்பொழுது விளங்கிவிட்டது. ஆகவே நோயை நீக்க ஒற்றுமையுள்ள ஹோமியோபதி மருந்துகளைத் தவிர வேறு வழி எதுவுமே இல்லை. மருந்துப் பரீக்ஷை நடத்தப்பட்டபோது நோயற்ற உடலில் ஒவ்வொரு மருந்தும் ஒவ்வொரு விதமான செயற்கை நோய்க் குறிகளை உண்டாக்கியிருக்கிறது. அம்மருந்துகளில் சிகிச்சைக்கு வந்துள்ள நோயாளியின் மொத்தக்குறிகளுடன் மிக நெருங்கிய ஒற்றுமையுள்ள செயற்கை நோய்க் குறிகளை உண்டாக்கியது எது என்று ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொடுப்பது தான் நோயைத் தீர்க்க நமக்குள்ள ஒரே வழியாகும். அம்மருந்து தகுந்த வீரியத்திலும் கொடுக்கப்பட்டால் நோயின் மொத்தக் குறிகளும் விரைவினில், ஒழுங்காய், வேரோடு வீழ்த்தப்படுகின்றன; அதாவது நோய் முழுவதும் நீங்கி நோயற்ற நிலைக்கு உடல் மீட்கப்படுகிறது. இதைப் போலவே செயற்கை நோய்க்குறிகளை நோயற்ற உடலில் உண்டாக்கும் மருந்துகள் யாவும் ஒற்றுமையுள்ள இயற்கை நோய்களை மிச்சம் மீதி வைக்காமல் முழுவதும் போக்கிவிடுகின்றன. இதில் விதிவிலக்கு எதுவுமே இல்லை இயற்கையோடு ஒட்டிய ஹோமியோபதிச் சட்டமே இதற்குக் காரணம். அக்கார

ணத்தை முற்றும் உணர்ந்தவர் இதுவரை ஒருவரும் இல்லை.

இருளில் இருந்த இயற்கைச் சட்டம் (26,27,28)

உயிருள்ள உடலில், சூட்சும உருவிலுள்ள ஒரு இயற்கை நோய்ப் பொருள், அதனினும் வலிமை மிகுந்த, இனத்தால் மாறுபட்டாலும் செயலிலே ஒற்றுமையுள்ள, மற்றொரு சூட்சுமப் பொருளால் நிரந்தரமாய் அழிக்கப் படுகிறது.

இயற்கை நோய்க்குறிகளுடன் ஒற்றுமையாக இருப்பதுடன் அவைகளைவிட அதிகமான வலிமையும் பெற்றிருப்பதாலேயே மருந்துகளுக்கு நோய் தீர்க்கும் சக்தி ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் இயற்கை நோய்க்குறிகளுடன் மிக நெருங்கிய ஒற்றுமையுள்ள செயற்கை நோய்க்குறிகளை (நோயற்ற மனித உடலில்) உண்டாக்கும் இயல்பும் அவ்வியற்கை நோய்களைவிட அதிக வலிமை பெற்றும் இருப்பதாலேயே ஒவ்வொரு மருந்தும் ஒவ்வொரு இயற்கை நோயை நிச்சயமாகவும் ஒழுங்காகவும் விரைவிலும் வேரோடும் வீழ்த்துகிறது.

உலகில் உண்மையாக நடத்தப்படும் எல்லாச் சோதனைகளிலும் ஆராய்ச்சிகளிலும் இவ்வியற்கையான நோய் தீர்க்கும் சட்டம் வெளிப்படுவதால் அதன் உண்மை ஊர்ஜிதமாகிறது. எவ்விதம் நோய் தீர்க்கப்படுகிறது என்பதைப் பற்றி விஞ்ஞான விளக்கம் எதுவாய் இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. ஆயினும் கீழுள்ள விளக்கம் அனேகமாகச் சரியானதாய் இருக்கலாம் என்று தெரிகிறது. ஏனெனில் அது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது.

உயிர்ப்புச் சக்தியின் ஊக்கமே காரணம் (29).

நம் உயிர்ப்புச் சக்தியின் உணர்ச்சிகளிலும் வேலைகளிலும் ஏற்படும் மாறுதல்களே நோயின் அடிப்படையாகின்றன. இயற்கை நோய் ஒன்றால் உயிர்ப்புச் சக்தி பீடிக்

கப்பட்டிருக்கும் போது, அந்நோய்க் குறிகளுடன் மிக நெருங்கிய ஒற்றுமையுள்ள ஒரு மருந்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறோம். அச்சமயத்தில் நடப்பது என்ன? முதலில் இருந்த பலவீனமான இயற்கை நோயைத் துரத்திவிட்டு அதற்குப் பதிலாக அதைவிட வலிமையுள்ள செயற்கை நோய்ப் பொருள் (மருந்திலுள்ள சூட்சுமச் சக்தி) உயிர்ப்புச் சக்தியைப் பீடிக்க ஆரம்பிக்கிறது. அதனால் உயிர்ப்புச் சக்தி துள்ளியெழுந்து தன் முழு வலிமையையும் உபயோகிக்க வேண்டிய அவசியம் நேருகிறது. அதனாலும் மருந்தின் சூட்சுமச் சக்தி உடலில் சிறிது நேரமே தங்கியிருக்க முடியுமாதலாலும் முதலில் இயற்கை நோயின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட உயிர்ப்புச் சக்தி அடுத்த படியாகச் செயற்கை நோயிலிருந்தும் விடுபட்டு உடலின் வேலைகளை முன் போல் செவ்வனே நடத்த ஆரம்பிக்கிறது. இதைவிடச் சரியானது வேறில்லை என்று கூறத்தக்க இவ்விளக்கம் கீழுள்ள உண்மைகளை ஆதாரமாய்க் கொண்டிருக்கிறது.

நோய்கள் யாவும் மருந்துக்கு இளையவை (30)

இயற்கை நோய்களைவிட மருந்துகளே மனித உடலின் ஆரோக்கியத்தைக் கடுமையாய்க் குலைக்கின்றன என்று தெரிகிறது. ஏனெனில் இயற்கை நோய்கள் யாவும் மருந்துகளால் குணம் செய்யப்படுகின்றன. மருந்துகளின் அளவை வேண்டியபடி குறைப்பதும் கூட்டுவதும் நம் கையில் இருப்பதும் இதற்கு ஓரளவு காரணம்.

நோயின் தாக்குதல் சூழ்நிலை பொறுத்ததே (31)

மனதையும் உடலையும் தாக்கக்கூடிய, நோய்ப் பொருள்கள் என்று அழைக்கப்படும் தீயச் சக்திகள், எப்பொழுதும் நம்மைச் சூழ்ந்து கொண்டே இருக்கின்றன. ஆயினும் தகுந்த சூழ்நிலை அதாவது காரணங்கள் இல்லாமல் அவை உடலின் ஆரோக்கியத்தைக் கெடுப்பதில்லை. நமது உடலின் வலிமை குறைந்து பலவீனம் ஏற்படும்

போதும் தீயச் சக்திகளை ஏற்றுக்கொள்ளும் உடல்வாகு உள்ள போதும் தான் நோய்ப் பொருள்கள் உடலை அடைந்து ஆரோக்கியத்தைக் கெடுக்கின்றன.

வரையறையில்லா மருந்தின் தாக்குதல் (32,33)

மருந்துகள் என்று நாம் அழைக்கும் செயற்கை நோய்களை உண்டாக்கும் பொருள்களின் தன்மை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. உண்மையான மருந்துகள் ஒவ்வொன்றும் எல்லாச் சமயங்களிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் உயிருள்ள எல்லா மனிதர்களிடமும் தவருமல் வேலை செய்து மனித உடலில் தனக்கே உரியதான செயற்கை நோய்க் குறிகளைத் தோற்றுவிக்கிறது. மருந்தின் அளவு அதிகமாய் இருந்தால் நோய்க் குறிகளும் அதற்கேற்றபடிஅதிகத் தெளிவாய் இருக்கும். இயற்கை நோய்களுக்கு இத்தகைய இயல்பு இல்லை.

மேலுள்ள உண்மைக்கு இணங்க, உயிருள்ள மனித உடல், இயற்கை நோய்ப் பொருள்களை விட மருந்துப் பொருள்களால் அதிகமான அளவிலும் மிக எளிதிலும் தாக்கப் படுகிறது என்பதை எல்லா அனுபவங்களும் மறுக்க முடியாத முறையில் மெய்ப்பிக்கின்றன. வேறு விதமாகச் சொல்லவேண்டுமானுல் இயற்கை நோய்ப் பொருள்கள் ஏதோ ஒரு விதக் கட்டுப்பாட்டுக்கு அடங்கியே உடலின் ஆரோக்கியத்தைக் கெடுக்கின்றன. மருந்துப் பொருள்களோ எவ்விதமான கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல் எல்லாச் சமயங்களிலும் சூழ்நிலைகளிலும் உடலின் ஆரோக்கியத்தைக் கெடுக்கக்கூடிய அளவிட முடியாத வல்லமையுள்ளவையாய் இருக்கின்றன.

ஒற்றுமை இல்லையேல் ஒன்றும் பயனில்லை (34)

அதிகப் பலம் வாய்ந்த செயற்கை நோய்களை உண்டாக்கும் வல்லமை பெற்றிருக்கின்றன என்ற ஒரே காரணத்தினுல் தான் மருந்துகள் இயற்கை நோய்களை நீக்குகின்றன என்று எண்ணக் கூடாது. அத்துடன் இயற்கை நோய்க் குறிகளுடன் மிக நெருங்கிய ஒற்றுமையுள்ள

செயற்கை நோய்க் குறிகளை உண்டாக்கும் வல்லமையும் மருந்துகளுக்கு இருக்கவேண்டும். அப்பொழுது தான் இயற்கை நோயினால் உயிர்ப்புச் சக்தியில் ஏற்படுத்தப் படும் எல்லாப் பிடிப்புகளையும் தொடர்புகளையும் அறுத் தெறிந்து குணம் செய்ய அவைகளால் முடியும். முதலில் தோன்றிய ஒரு இயற்கை நோயை அதற்கடுத்ததாக வரும் மற்றொரு இயற்கை நோயினால், இரண்டாவது நோய் முதல் நோயை விட எவ்வளவு பலம் வாய்ந்ததாக இருந்தாலும் ஒற்றுமை இல்லாத போனால், நீக்க முடி யாது என்பதை நாம் காண்கிறோம். அதைப் போலவே இயற்கை நோய்க் குறிகளுடன் ஒற்றுமை யுள்ள செயற் கை நோய்க் குறிகளை உண்டாக்க முடியாத மருந்து எவ்வளவு பலம் பொருந்தியதாக இருந்தாலும் இயற்கை நோயை நீக்குவதில்லை என்பதும் உண்மையே.

மேலுள்ள உண்மையை நிரூபிக்க, மூவகைப்பட்ட உதா ரணங்களைக் கீழே தருகிறோம்.

முதலாவதாக **வேற்றுமைக் குறிகளுள்ள** இரு இயற்கை நோய்கள் ஒருவர் உடலில் சந்திக்கும் போதும் இயற்கை நோய்க் குறிகளுடன் ஒற்றுமை இல்லாத மருந்துகளைக் கொடுத்துச் சிகிச்சை செய்யும் போதும் என்ன நேரு கிறது என்பதைக் கவனிப்போம்.

சந்திக்கும் நோய்கள் இரண்டும் **சம பலம்** உள்ள வைகளாய் அல்லது புதிய நோயை விடப் பழைய **நோய் அதிக வலிமை வாய்ந்ததாய் இருந்தால்,** பழைய நோய் புதிய நோயை உடலிலே தங்க இடம் கொடுக்காமல் விரட்டி விடுகிறது. கடுமையான, நீடிக்கும் நோயுள்ள ஒருவருக்கு இலையுதிர் காலங்களில் தோன்றும் வயிற்றுக் கடுப்போ அல்லது பெருவாரியாகத் தோன்றும் இயல்புள்ள மற்ற நோய் களோ ஏற்படுவது கிடையாது. ஸ்கர்வி* (Scurvy) உள்ள

★ அளவிலும் தரத்திலும் குறைவாக உள்ள உணவை உட்கொள்வ தால் உடலின் மேற்புறத்தில் திட்டு திட்டாக இரத்தம் குழம்பி நிற்கும் நிலைமை.

வர்களைப் பிளேக்கு (Plague) தாக்குவதில்லையென்று லாரி (Larry) என்பவர் கூறுகிறார். அதே போல கரப்பான் படை உள்ளவர்களையும் பிளேக்கு பீடிப்பது கிடையாது. ராகிடிஸ்* (Rachitis) உள்ளவரின் உடலில் பெரியம்மைத் தடுப்பு மருந்தைக் குத்திச் செலுத்தினால் அம்மருந்து வேலை செய்வதில்லை யென்று ஜென்னர் (Jenner) கண்டு பிடித்திருக்கிறார். சுவாச கோச க்ஷய ரோக முள்ளவர் களைப் பெருவாரிச் சுரங்கள் (அவை அதிகக் கடுமை யானதாக இல்லா விட்டால்) தாக்குவதில்லை யென்று வான் ஹில்டன்ப்ராண்ட் (Von Hildenbrand) எழுதி யுள்ளார்.

பிடிவாத குணமும் பல வருஷங்களாய் நீடித்துமுள்ள ஒரு இயற்கை நோய்க்கு அலோபதியில் வழக்கிலுள்ளபடி சிகிச்சை செய்தால், அதாவது அந்நோயுடன் ஒற்றுமை இல்லாத மருந்துகளைக் கொடுத்தால் எவ்வளவு ஆண்டு களானாலும் நோய் நீங்காது. இவ்விஷயத்தை ஒவ் வொரு நாளும் நம் தொழிலில் கண் கூடாகக் காண்கிறோ மாதலால் வேறு உதாரணங்கள் கூறத் தேவையில்லை,

இரண்டாவதாக பழய இயற்கை நோயை விட புதியதாக வரும் ஒற்றுமை இல்லாத இயற்கை நோய் அதிகப் பலம் பொருந்தியதாய் இருந்தால் என்ன நேரும் என்பதைப் பார்ப்போம்.

பழய நோய் பலவீனமாய் இருப்பதால், பலமுள்ள புதிய நோய் ஏற்பட்டவுடன் அது பின்னுக்குத் தள்ளப்பட்டுச் செயலற்றதாகி விடுகிறது. புதிய நோய் குணமடைந்த வுடன் அல்லது அதன் ஆட்டம் அடங்கியவுடன் பழய நோய் தன் தலையைத் தூக்குகிறது. இதை விளக்கப் பல உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

★ குழந்தைப் பருவத்தில் தோன்றும் கோளாறான எலும்பு வளர்ச்சியும் கல்லீரல், மண்ணீரல் ஆகிய உறுப்புகள் சரிவர வேலை செய்யாமல் இருப்பதுமான நோய். உயிருட்டி டி (Vitamin D) குறைவினால் தோன்றுவதாகக் கருதப்படுகிறது. ரிக்கெட்ஸ் (Rickets) என்று மறு பெயருமுண்டு.

காக்கை வலிப்புள்ள இரு குழந்தைகளுக்குத் தலையில் கரப்பான் படை தோன்றியவுடன் வலிப்பு வருவது நின்று விட்டது. ஆனால் கரப்பான் படை குணமானவுடன் பழயபடி வலிப்புகள் வர ஆரம்பித்து விட்டன.

சொறி சிரங்குகள் ஸ்கர்வி ஆரம்பித்தவுடன் மறைந்து போய் அது குணமானவுடன் மீண்டும் தோன்றின.

சுவாச கோச க்ஷய ரோக மிருந்த ஒருவருக்குக் கடுமையான பெருவாரிச் சுரம் தோன்றியது. அச்சுரம் இருந்த வரையில் க்ஷய ரோகம் கட்டிப் போடப்பட்டது போல் அடங்கி இருந்து பிறகு வளர ஆரம்பித்தது. க்ஷய ரோக முள்ளவருக்குப் பைத்தியம் பிடித்தால் பைத்தியம் உள்ளவரையில் க்ஷய ரோகம் மறைந்திருந்து அது குணமானவுடன் மறுபடியும் தோன்றி மிகக் கடுமையாய் மாறி மரணத்தில் முடியும்.

சின்னம்மையும் பெரியம்மையும் சேர்ந்தாற் போல் தோன்றும் காலங்களில், ஒரு குழந்தைக்கு முதலில் சின்னம்மையும் பிறகு பெரியம்மையும் கண்டால் சின்னம்மை அடங்கிப் போய் பெரியம்மை குணமான பிறகே வெளி வருகிறது; பெரியம்மைத் தடுப்பு மருந்தை உடலில் குத்திய பிறகு ஒருவருக்குச் சின்னம்மை தோன்றினல் மருந்து குத்தப் பட்ட இடத்தில் வீக்கம், வேக்காடு ஆகிய குறிகள் ஏற்பட்டிருந்தாலும் அவை அப்படியே அமுக்கப் படுகின்றன; அல்லது முன்னேருமல் அப்படியே நிற்கின்றன. சின்னம்மை முற்றிலும் குணமடைந்து தோலுறிய ஆரம்பித்த பிறகே மருந்து குத்தப்பட்ட இடத்தில் பூரிப்பு ஏற்படும்.

தாடை வீக்கம் (தாளம்மை—Mumps) இருந்த ஒருவருக்குப் பெரியம்மைத் தடுப்பு மருந்தை உடலில் குத்தி அது பூரிக்க ஆரம்பித்தவுடன் தாடை வீக்கம் மறைந்து விட்டது. அம்மை குத்தப்பட்ட இடம் தழும்பிட்டு ஆறிய

பிறகே தாடை வீக்கம் மீண்டும் தோன்றி அதன் கெடுவுக் காலமாகிய ஏழு நாட்களுக்கு நீடித்திருந்து குணமடைந்தது.

வேற்றுமைக் குறிகளுள்ள நோய்கள் அனைத்திலும் நடப்பது இதுவே; அதாவது பலமுள்ள நோய் பலமற்ற நோயை அடக்கத்தான் செய்கிறது; குணம் செய்வது கிடையாது. திடீர்க் குணமுள்ள இரு நோய்கள் சந்திக்கும் போது பல சமயங்களில் அவை ஒன்றோடொன்று கலந்து கொண்டு சிக்கலான நிலைமையை ஏற்படுத்துவதுமுண்டு.

இவ்விஷயங்கள் அனைத்தையும் அலோபதியர்கள் அனேக நூற்றாண்டுகளாகப் பார்த்து இருக்கின்றனர்; ஏற்கனவே உடலிலுள்ள ஒரு இயற்கை நோயை ஒற்றுமை இல்லாத மற்றொரு இயற்கை நோயினால், புதிய நோய் எவ்வளவு பலம் பொருந்தியதாய் இருந்தாலும், நீக்கமுடியாது என்பதையும் அவர்கள் பார்த்திருக்கின்றனர். இருந்த போதிலும் அவர்கள் நீடித்த நோய்களுக்கு அலோபதி மருந்துகளைக் கொண்டே சிகிச்சை செய்து வந்தனர். அம் மருந்துகள் எவ்விதச் செயற்கை நோயை உண்டாக்கும் என்பது ஆண்டவனுக்கே தெரியும். ஆயினும் ஒன்று மட்டும் நிச்சயம்; அதாவது அம்மருந்துகள் இயற்கை நோயுடன் முற்றிலும் வேற்றுமையாகவே இருக்கும். இயற்கையாக நடைபெறும் காரியங்களைக் கூர்ந்து கவனிக்க முடியாமல் போனாலும் செய்த சிகிச்சையால் நேரிட்ட கேடுகளைப் பார்த்த பிறகாவது தாம் சென்ற வழி தவறானது என்று வைத்தியர்கள் பாடம் கற்றுக் கொண்டிருக்கவேண்டும். நீடித்த நோய் ஒன்றைக் கொடூரமான மருந்தைக் கொண்டு சிகிச்சை செய்தால் அவ்வியற்கை நோயுடன் வேற்றுமையுள்ள செயற்கை நோயொன்று உற்பத்தி செய்யப்படுகிறது என்பதையும் அம் மருந்து கொடுக்கப்பட்டு வரும் காலங்களில் இயற்கை நோய் அடக்கப்பட்டே இருக்கிறது என்பதையும் மருந்

தின் கொடுமையினுல் நோயாளியின் உடல் வலிமை குறைந்து இனி கொடுக்கமுடியாது என்ற நிலைமை ஏற்பட்டு அதை நிறுத்தியவுடன் அடக்கப்பட்டிருந்த இயற்கை நோய் திரும்பி வருகிறது என்பதையும் அலோபதி வைத்தியர்களால் அறிய முடியவில்லையா?

அறிப்புடன் கூடிய சரும நோய்கள் கடுமையான பேதி மருந்துகளை அடிக்கடி கொடுத்து வந்தால் மிக விரைவில் மறைந்து விடுகின்றன; ஆனுல் செயற்கையான (நோயுடன் ஒற்றுமை இல்லாத) குடல்களின் நோயை (கடுமையான பேதியை)இனித் தாங்கமுடியாது; ஆகையால் பேதி மருந்துகளை மேலும் உட்கொள்ளமுடியாது என்ற நிலைமை நோயாளியிடம் தோன்றியவுடன் சரும நோய் முன்போல் ஏற்படும் அல்லது உள்ளே உள்ள ஸோரா விஷம் ஏதோ ஒரு கெடுதலான குறியைத் தோற்றுவிக்கும். அதனுல் தலைவலியுடன் திருகுவலியும் சேர்ந்தது போல கடுகளவும் குறையாத பழய நோயுடன் சீரணக் கோளாறும் உடல் வலிமைக்குறைவும் சேர்ந்து கொள்ளும்.

நீடித்த நோயை நீக்கும் நோக்கத்துடன் அலோபதி வைத்தியர்கள் நோயாளி உடலின் வெளிப்புறத்தில் (சருமத்தில்) செயற்கைப் புண்களை உண்டாக்கி அப்புண்களை ஆறவொட்டாமல் செய்து வருகின்றனர். அதனுல் நீடித்த நோயை நீக்க ஒருக்காலும் முடியாது; ஏனெனில் அப்புண் உள்ளே உள்ள நோயுடன் வேற்றுமை கொண்டது; மாருனதுங்கூட. ஆனுல் புண்களின் எண்ணிக்கை அதிகமாகும் போது அவைகளால் ஏற்படுத்தப்படும் வேதனை அதிகரித்து விடுகிறது. வேதனை இயற்கை நோயை விட வலிமை பொருந்தியதாகவும் வேற்றுமையாகவும் இருப்பதால் இயற்கை நோய் ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு அடக்கப்பட்டுவிடுகிறது.

4

அவ்வாறு நோய் அடக்கப்பட்டிருக்கும் போது நோயாளியின் உடல் வலிமை படிப் படியாகக் குறைந்து விடுகிறது. சருமத்தில் செயற்கையாகப் புண்களை உண்டாக்கி ஆற விடாமல் செய்து வந்தால் காக்கை வலிப்பு வருஷக் கணக்கில் அடங்கி இருக்கும். ஆனால் புண்களை ஆறும் படி விட்டவுடன் காக்கை வலிப்பு தவறாமல் வெளியே வருவதுடன் முன்னைவிடக் கடுமையாகவும் இருக்கும்.

சொறி, சிரங்குகளை அடக்கப் பேதி மருந்துகளை உபயோகிப்பது, காக்கை வலிப்பை அடக்கச் சருமத்தில் செயற்கைப் புண்களை உண்டாக்கி ஆறவிடாமல் செய்து வருவது ஆகிய காரியங்கள் இயற்கைக்கு மாறு பட்டவை; நோயாளியின் உடல் வலிமையை உறிஞ்சிக் குடிப்பவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அலோபதி முறையில் பற் பல வகைப்பட்ட நோய்களை நீக்குவதற்காகக் கண்ட கண்ட மருந்துகளைக் கலந்து கொடுக்கும் வழக்கம் மேலுள்ள இரண்டையும்விட மிக மிகக் கொடியது. நோயாளியின் உடல் வலிமையை ஒட்ட உறிஞ்சி ஒரு சில நாட்களுக்கு இயற்கை நோயை அடக்கி வைப்பதைத் தவிர அவைகளால் எச்சமயத்திலும் நோய் தீர்க்கப் படுவதில்லை. அது தவிர அம் மருந்துகளை நீடித்துக் கொடுப்பதால் பழய இயற்கை நோயுடன் புதிய செயற்கை நோயும் சேர்ந்துவிடுகிறது.

மூன்றாவதாகப் பல காலமாய் உடலில் வேலை செய்த பிறகு புதிய நோய் வேற்றுமைக் குணமுள்ள பழய நோயுடன் சேர்ந்து கலப்பு நோய் ஒன்றை ஏற்படுத்துகிறது. அதன் விளைவாகப் பழய, புதிய நோய்கள் இரண்டும் நோயாளியின் உடலில் தத்தம் தகுதிக்கேற்ற உறுப்புகளை அடைந்து தனித் தனியே இருந்து வருகின்றன. ஸிபிலிஸ் (மேகக் கிரந்தி) நோயுள்ளவரை ஸோரா விஷம் தாக்குவதையும் அதே போல ஸோரா விஷமுள்ளவரை ஸிபிலிஸ் நோய் தாக்குவதையும் இதற்கு உதாரணங்களாய்க் கூறலாம்.

அவ்விரண்டும் ஒன்றுக்கொன்று வேற்றுமை யுள்ளவை; ஆதலால் ஒன்றை மற்றொன்று நீக்காது; குணமும் செய்யாது. இதைச் சற்று விளக்கமாய்க் கீழே எழுதுவோம்.

மேகக் கிரந்தி உள்ள ஒருவர் உடலில், ஸோரா விஷம் அதிகரித்தவுடன், மேகக் கிரந்தியின் குறிகள் அடக்கப்பட்டு ஸோரா விஷத்தின் குறிகளாகிய சருமக் கோளாறுகள் வெளிப்படும். ஆனால் சிறிது காலம் கழிந்தவுடன், இரு விஷங்களும் ஏறக் குறைய சம பலம் உள்ளவை யாதலால், கலப்பு நோயாய் மாறிவிடும். அதாவது ஒவ்வொன்றும் உடலில் தனக்கு வசதியான இடத்தைத் தேடிப் பிடித்துக் கொண்டு தனித் தனியே இருந்து வருகின்றது. அதனால் நோயின் அளவு அதிகமாகிக் குணம் செய்வதும் சிரமமாகி விடுகிறது.

வேற்றுமையுள்ள இரு திடீர்த் தொற்று நோய்கள், உதாரணமாகப் பெரியம்மையும் சின்னம்மையும், ஒருவர் உடலில் சந்திக்கும்போது, ஒன்று மற்றொன்றை அடக்கிச் செயலற்றதாய்ச் செய்து விடுவதை முன்பே சொல்லியிருக்கிறோம். ஆயினும் அவை கடுமையாகவும் பெருவாரியாகவும் தோன்றும் காலங்களில் ஒன்றை மற்றொன்று அடக்குவது போய் இரண்டும் ஒரே சமயத்தில் ஒரே உடலில் கலப்பு நோயாய்க் காக்ஷி யளிக்கின்றன. இந் நிகழ்ச்சிகள் மிக அபூர்வமாகவே ஏற்படுவது வழக்கம்.

அலோபதி முறையில் வழக்கிலுள்ளபடி மருந்துகளைக் கொடுத்துச் சிகிச்சை செய்வதினால் ஏற்படும் கலப்பு நோய்களைக் கணக்கிட முடியாது. இடைவிடாமல் தகுதியற்ற மருந்துகளைக் கொடுப்பதால் அம் மருந்துகளின் தன்மைகளுக்கு இணங்க, பழய இயற்கை நோயுடன் மிகக் கொடிய, புதிய செயற்கை நோய் ஒன்று சேர்க்கப்படுகிறது. அவ்வியற்கைச் செயற்கை நோய்கள் இரண்டும் படிப் படியாய் ஒன்று கூடிக் கலப்பு நோயாய் மாறுகின்றன. ஒன்றுக்கு இரண்டாகவும் முன்னைவிடச் சிக்க

லாகியும் விட்ட நோயின் இந் நிலைமையில் குண மேற்படுவது மிக மிகக் கடினம்.

பறங்கிப்புண் உள்ள மேகக்கிரந்தி நோயுடன், ஸோரா விஷ ஆதிக்கமோ அல்லது கெட்ட சதை வளரும் தன்மையுள்ள மேக வெட்டையோ சேரும்போது அந் நிலைமைக்குத் தகுதியற்ற பாதரஸம் கலந்த மருந்துகளை அதிக அளவிலும் பல நாட்களுக்கு நீடித்தும் கொடுத்துச் சிகிச்சை செய்தால் நோய் குணமாவதில்லை என்பது ஒரு புறம் இருக்க, பாதரஸ விஷத்தினால் தோன்றும் புதிய செயற்கை நோயும் பறங்கிப் புண்ணுக்குப் பதிலாக வேறு ஏதோ ஒரு பயங்கர நோயும் ஒன்று சேர்ந்து உடலைப் பாழ் செய்து விடுகின்றன. பகீரதப் பிரயத்தனம் செய்தால் தான் ஆரோக்கிய நிலைமையை மீட்க முடியும்.

சிற் சில சமயங்களில் ஒருவர் உடலில் இரண்டு அல்லது மூன்று இயற்கை நோய்கள் ஒரே நேரத்தில் தோன்ற இயற்கையே அனுமதிப்பதை மேலே பார்த்தோம். ஆனால் வேற்றுமைக் குணமுள்ள நோய்கள் தான் அவ்வாறு தோன்றுகின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆதலால் அவை ஒன்றை யொன்று நீக்கவோ, குணம் செய்யவோ முடியாமல் ஒவ்வொன்றும் தத்தம் தன்மைக் கேற்ற உடலுறுப்புகளைப் பிடித்துக் கொண்டு உயிருக்கு உலை வைக்கின்றன.

இயற்கை கற்பிக்கும் இணையற்ற கல்வி (43-49):

ஒற்றுமைக் குணமுள்ள இரு நோய்கள் ஒருவர் உடலில் சந்திக்கும்போது, அதாவது பழய நோயைவிட வலிமை வாய்ந்த புதிய நோயொன்று தோன்றும்போது, ஏற்படும் விளைவு முற்றிலும் மாறானது. அத்தகைய சந்தர்ப்பங்களில் இயற்கை எவ்வாறு நோயைக் குணம் செய்கிறது என்பதைப் பார்ப்பதுடன் நோய் எவ்வழியில் நீக்கப் பட வேண்டும் என்ற பாடத்தையும் கற்றுக் கொள்ளலாம்.

ஒற்றுமைக் குணமுள்ள இரு இயற்கை நோய்கள் ஓர் உடலில் சந்திக்கும்போது ஒன்றை யொன்று விரட்டுவது

இல்லை. புதிய நோயின் ஆட்டம் அடங்கியவுடன் பழய நோய் தலை தூக்கும் நிகழ்ச்சிக்குக் காரணமான அடக்கு முறையும் ஏற்படுவதில்லை. தத்தம் தேவைக் கேற்றபடி வெவ்வேறு உடலுறுப்புகளைப் பீடித்து தனித் தனியாய் இயங்குவதோ அல்லது ஒன்று சேர்ந்து கலப்பு நோயாய்க் காக்ஷி யளிப்பதோ கிடையாது.

சந்திக்கும் நோய்கள் இரண்டும் தன்மையிலே மாறு பட்டிருந்தாலும், தனித் தனியே உடலில் தோற்றுவிக்கும் நோய்க் குறிகளில் ஒற்றுமையுள்ள வைகளாயின், தவருமல் ஒன்றை மற்ருென்று அழித்து விடுகிறது. அதாவது அவ்விரண்டில் அதிக வலிமையுள்ள புதிய நோய் வலிமை குறைவாய் உள்ள பழய நோயை அழித்து விடுகிறது. இதற்குக் காரணம் கூறுவது மிக எளிது. வலிமை குறைந்த பழய நோயுடன் ஒற்றுமை இருக்கும் காரணத்தால், அந் நோய் உடலில் எந்தெந்த உறுப்புகளிலும் பகுதிகளிலும் புகுந்து வேலை செய்து வருகிறதோ, அந்தந்த உறுப்புகளிலும் பகுதிகளிலும் புதிய நோயும் புகுந்து விடுகிறது. அதனுல் பழய நோய் ஒண்டுவதற்கு இடமில்லாமல் உடலை விட்டுப்போய் விடுகிறது.

ஒற்றுமை இருந்த காரணத்தினுல், ஏற்கனவே உடலில் இருந்த நோய்களைப் புதியதாகத் தோன்றிய நோய்கள் ஹோமியோபதி முறைப்படி குணம் செய்திருக்கும் விஷயமாகப் பல உதாரணங்கள் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் எடுந்துக் கூறுவது இங்கு அவசியமில்லை. ஏனெனில் மற்றவர்களால் மறுக்கவோ சந்தேகப்படவோ முடியாத விஷயங்களை மட்டுமே நாம் கவனிக்கப் போகிருேம். அதாவது விஷக் காற்றின் மூலம் பரவும் அம்மை நோய்களை மட்டும் குறிப்பிடப் போகிருேம்.

அம்மை நோய்களில் பெரியம்மை அதன் பெயருக் கேற்றபடி முதன்மையாய் இருக்கிறது. அந் நோயில் ஏராளமான அபாயக் குறிகள் தோன்றுவதால் பெரியம்மையைக் கண்டு மக்கள் நடு நடுங்குகின்றனர். அதற்கு முன்ன

தாக உடலிலிருந்த பல நோய்களை, அவை ஒற்றுமைக் குறிகளைக் கொண்டிருந்ததால், பெரியம்மை குணம் செய்திருக்கிறது.

கண்களில் கடுமையான வேக்காட்டை உண்டாக்கிப் பல சமயங்களில் குருடாக்கவும் செய்யும் பெரியம்மை என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் நீடித்த கண் வேக்காடு இருந்த ஒருவரின் உடலில் பெரியம்மை விஷத்தைக் குத்திச் செலுத்தியவுடன் அந்நோய் இருந்த இடம் தெரியாமல் குணமடைந்தது.

தலையில் இருந்த பொறுக்குகளைப் போக்குவதற்காக ஏதோ ஒரு மருந்தைத் தடவிக் கொண்டதால் ஒருவருக்குக் கண் பார்வை மறைந்து விட்டது. இரண்டு வருஷம் கழித்து அவருக்குப் பெரியம்மை விஷத்தை உடலில் குத்திச் செலுத்தியவுடன் மறைந்திருந்த பார்வை திரும்பி வந்து விட்டது.

பெரியம்மையில் காது செவிடாவதும் மூச்சுத் திணறலும் அடிக்கடி காணப்படும் கோளாறுகளாகும். நீடித்த செவிட்டுத் தன்மையோ மூச்சுத்திணறலோ இருந்தவர்களுக்குப் பெரியம்மை தோன்றி அதன் உச்ச நிலைமையில் இருக்கும்போது அந் நோய்கள் நீங்கிவிட்டன.

விரை வீக்கம் பெரியம்மையில் பல சமயங்களில் உண்டாகும் கோளாறுகளில் ஒன்று. மிகக் கடுமையாகவும் ஏற்படக் கூடும். அடிபட்டு இடது விரையில் கல்போன்ற கடினமான வீக்கம் இருந்த ஒருவருக்குப் பெரியம்மை ஏற்பட்டவுடன் குணம் தோன்றியது.

பெரியம்மையில் நோயாளிக்குத் துன்பம் தரும் கோளாறுகளில் வயிற்றுக் கடுப்பும் ஒன்று. வயிற்றுக் கடுப்பு நோய் இருந்த ஒருவருக்குப் பெரியம்மை கண்டவுடன் வயிற்றுக் கடுப்பு நீங்கியது.

பெரியம்மையும் பெரியம்மைத் தடுப்பு மருந்தும் ஒற்றுமைக் குறி உள்ளவை; ஆனால் பெரியம்மைத் தடுப்பு மருந்தை

விட பெரியம்மை வலிமை வாய்ந்தது. ஆதலால் பெரியம்மைத் தடுப்பு மருந்தைக் குத்தியவுடன் ஒருவருக்குப் பெரியம்மை தோன்றினுல் தடுப்பு மருந்தை அது பயனற்றதாகச் செய்து விடும். மருந்து குத்தப்பட்ட இடத்தில் பூரிப்பு ஏற்படும் சமயத்தில் பெரியம்மை தோன்றுமாணுல் அதன் கடுமையைத் தடுப்பு மருந்து பெருமளவு குறைத்து விடும்.

பெரியம்மைத் தடுப்பு மருந்தில் பெரியம்மையைத் தடை செய்யும் வல்லமையுடன் வேருெரு வகையான சரும நோயை உண்டாக்கும் தன்மையும் இருக்கிறது. தடுப்பு மருந்து குத்தப்பட்ட இடத்தில் பூரிப்பு ஏற்படும் காலத்தில் உடம்பு முழுவதும் கடுமையான அறிப்புடன் வட்டமான, சிவந்த சிறு புள்ளிகள் தோன்றும். இவ்விதமான சரும நோய், பெரியம்மைத் தடுப்பு மருந்து உடலில் குத்தப்பட்டவுடன் குணமடைந்து விடுகிறது.

பெரியம்மைத் தடுப்பு மருந்து குத்தப்பட்ட இடத்தில் பூரிப்பு ஏற்படும் சமயத்தில் சுரம் ஏற்படுகிறது. முறைச் சுரம் இருந்த இரண்டு பேர்களுக்குப் பெரியம்மைத் தடுப்பு மருந்தைக் குத்தியவுடன் சுரம் குணமடைந்து விட்டது. சுரங்கள் ஒற்றுமையுள்ள நோய்களாதலால் ஒரே உடலில் இரு சுரங்கள் சேர்ந்திருக்க முடியாது.

கக்குவான் இருமலில் காணப்படும் சுரமும் இருமலும் சின்னம்மையிலும் காணப்படுவதால் அவ்விரு நோய்களும் ஓரளவு ஒற்றுமையுள்ளவை. அதனுல் ஒரே சமயத்தில் இரு நோய்களும் பெரு வாரியாகப் பரவியிருந்தபோது சின்னம்மையினுல் தாக்கப்பட்டிருந்த குழந்தைகளைக் கக்குவான் இருமல் அச்சமயம் தாக்கவில்லை. கக்குவான் இருமல் சின்னம்மையுடன் முழுவதும் ஒற்றுமையுள்ளதல்ல. அதாவது சின்னம்மையில் காணப்படும் சருமக் கோளாறுகள் கக்குவான் இருமலில் ஏற்படுவதில்லை. கக்குவான் இருமலுக்கும் சின்னம்மை போன்ற சருமக் கோளாறுகளை உண்டாக்கும் சக்தி இருந்தால் சின்னம்

மையினல் தாக்கப்பட்டவர்களுக்கு என்றென்றும் கக்குவான் இருமல் ஏற்படாது.

சின்னம்மையின் சருமக் கோளாறைப் போன்றதொரு சருமக் கோளாறு இருந்த ஒருவருக்குச் சின்னம்மை தோன்றியவுடன் அச் சருமக் கோளாறு குணமாகி விட்டது.

நோயை விரைவிலும் நிரந்தரமாகவும் நிச்சயமாகவும் நீக்க, எத்தகைய செயற்கை நோய்ப் பொருளை (மருந்தை)த் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதைத் தெளிவாகவும் சந்தேகத்துக்கு இடமில்லாமலும் வைத்தியருக்குக் கற்றுக் கொடுக்க மேலே காட்டிய இயற்கையின் வழியைவிடச் சிறந்தது வேறென்றுமே இல்லை.

உடலிலுள்ள நோயை வைத்தியரின் திறமையாலோ அல்லது அதனுடன் வேற்றுமை கொண்ட மற்றொரு நோய்ப் பொருளாலோ (அது எவ்வளவு பலம் வாய்ந்ததாக இருந்தாலும் சரி) ஒரு சமயத்திலும் நீக்க முடியாது; ஒற்றுமையும் சிறிது அதிக வலிமையும் உள்ள நோய்ப் பொருளால் தான் நீக்க முடியும் என்பதை மேலுள்ள இயற்கையில் ஏற்படும் உதாரணங்களிலிருந்து தெரிந்து கொண்டோம். அழிவற்ற, மாற்ற முடியாத இதுவரை கண்டு பிடிக்கப்படாத இயற்கைச் சட்டப்படியே இவை நிகழுகின்றன.

ஒற்றுமையுள்ள இயற்கை நோய்ப் பொருள் இல்லை அதிகம்; தொல்லையும் தந்திடும் (50):

ஒற்றுமைக் குணமுள்ள இயற்கை நோய்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அதனாலும், ஒற்றுமைக் குணத்தினல் ஹோமியோபதிச் சட்டப்படி நோய்கள் இயற்கையாய்க் குணமாகும் விஷயமாய் வைத்தியர்கள் அதிகக் கவனம் செலுத்தாதாலும் மேலே உள்ளதைவிட அதிகமான உதாரணங்களை நாம் காண முடியவில்லை: ஆயினும் என்ன?

ஹோமியோபதிச் சட்டத்துக்கு இணங்க, நோய்களைக் குணம் செய்யும் வல்லமையுள்ள இயற்கை நோய்கள், பெரியம்மை, சின்னம்மை, சொறி சிரங்கு ஆகிய இம் மூன்றே மூன்று தான். இந் நோய்ப் பொருள்களை மருந்துகளாக உபயோகிக்க முடியாது. ஏனெனில் அவை உயிருக்கு அபாயத்தை விளைவிக்கக் கூடியவை. குணமாக்கப்பட வேண்டிய நோயை விடப் பயங்கரமானவை. அப் பொருள்களை உபயோகித்தால் முதலிலிருந்த நோய் நீங்குமென்றாலும், அவைகளால் ஏற்படும் புதிய நோய்க்கு மறுபடி சிகிச்சை செய்ய நேரும். மேலும் அம் மூன்று நோய்களுடன் ஒற்றுமையுள்ள நோய்களும் அதிகமாக இல்லை. மருந்துகளின் அளவை நம் தேவைக்குத் தகுந்தபடி குறைக்கவும் அதிகமாக்கவும் செய்யலாம். நோய்ப் பொருள்களின் அளவை அவ்வாறு செய்ய முடியாது. ஆகவே அபாயத்தை விளைவிக்கக் கூடிய நோய்ப் பொருள்களைக் கொண்டு சிகிச்சை செய்வது மிகவும் ஆபத்தானது; நீடித்த நோயொன்றைக்குணம் செய்வதற்காக, நோயாளிகளைப் பெரியம்மை போன்ற அபாயமான, துன்பங்கள் நிறைந்த நோய்களுக்கு உட்படுத்துவது முறையல்ல. ஆயினும் இயற்கையில் நடைபெறும் இவ்விஷயத்தை, அதாவது ஒற்றுமைக் குணமுள்ள இரு இயற்கை நோய்கள் ஒருவர் உடலில் சந்திக்கும்போது, பழைய நோய் குணமாவதை நாம் காண்கிறோம். மறுக்க முடியாத இவ்வுதாரணங்கள் "**ஒற்றுமையான குறிகளால் நோயை நீக்க முடியும்**" என்ற மாபெரும் உண்மையான மாற்று இல்லாத இயற்கையான நோய் தீர்க்கும் சட்டத்தை உறுதி செய்கின்றன.

ஒற்றுமையுள்ள செயற்கை நோய்ப் பொருள் * நற்றுணையாயுள ஆயிரமாயிரம் (51):

உலகமெங்கும் பலவிதச் செயற்கை நோய்களை உண்டாக்க வல்ல மருந்துப் பொருள்கள் ஆயிர மாயிரமாகப் பரவிக் கிடக்கின்றன. இயற்கையில் ஏற்படும் ஒவ்வொரு

★ நற்றுணை—நல்ல துணை.

நோயையும் நீக்கும் வல்லமையுள்ள (அதிக அளவில் உட்கொண்டால் ஒற்றுமைக் குறிகளை உடைய செயற்கை நோயை உண்டாக்கக் கூடிய) மருந்துச் சரக்குகளின் துணை கொண்டு, ஹோமியோபதி முறைப்படிச் சிகிச்சை செய்யலாம். நோய் குணமானவுடன் இம் மருந்துகளி லுள்ள சக்தி உயிர்ப்புச் சக்தியினால் அடக்கப்பட்டு அக் கணமே மறைந்து விடுகிறது. அதனால் மருந்தின் சக்தியை நீக்குவதற்காக இரண்டாவது சிகிச்சை செய்யவேண்டிய அவசியமில்லை. செயற்கை நோய்களை உண்டாக்கும் இப் பொருள்களின் சக்தியை (மருந்துகளின் அளவை) தன் விருப்பப்படி கூட்டவோ குறைக்கவோ வைத்தியரால் முடியும். நீக்கப்பட வேண்டிய ஒற்றுமைக் குணமுள்ள இயற்கை நோயைக் காட்டிலும் சற்றே கூடுதலான சக்தி இருக்கும் அளவுக்கு மருந்தின் சக்தியைக் குறைக்கலாம். ஒப்புவமை அற்ற இச் சிகிச்சை முறையினால் உடலுக்குத் தீங்கு ஏற்படாமல் நாட்பட்ட தீராத நோய்களையும் தீர்க்கலாம். மிருதுவாகவும் அடக்கமாகவும் ஆனால் மிக விரைவில் நோய் நிரந்தரமாய் நீக்கப்படுகிறது.

வேற்றுமையுள்ள இயற்கை நோய் போல்
வேற்றுமையுள்ள மருந்துகள் யாவும்
சற்றும் பயனிலை ; நிச்சயமாக
முற்றும் பாழே, கூற்றமும்* ஆகும் (52):

குன்றின் மீதுள்ள விளக்குப் போல், எளிதிலே புலனாகும் இவ் வுதாரணங்களைக் கண்ட பிறகு, அறிவுள்ள எந்த வைத்தியரும், தான் அதுவரை கையாண்டு வந்த, பழய வைத்திய முறையைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார். ஏனெனில் அலோபதி மருந்துகளும் செயற்கைப் புண் களை உண்டாக்குவது போன்ற முறைகளும், நீக்கப்பட வேண்டிய இயற்கை நோயுடன் நேரிடையான தொடர்பு இல்லாதவை ; அதனால் அவை நோய் இல்லாத உடல் பகுதிகளையே தாக்குகின்றன. இயற்கை நோயுடன் ஒற்று மையற்ற செயற்கை நோயொன்று தோன்ற ஊக்கமளித்து நோயாளியின் உடல் வலிமையைச் குறைக்கின்றன.

★ கூற்றம்—எமன்.

உடலிலுள்ள பழைய நோயுடன், அதனுடன் ஒற்றுமை இல்லாத புதிய நோய் ஒன்று சேரும்போது, நோயின் அளவு அதிகரிப்பதைத் தவிர வேறு நன்மை எதுவும் விளைவதில்லை. அதைப் போலவே, விவரம் தெரியாத மருந்துகளை ஏராளமான அளவில் கொடுத்து வந்தால் நோயாளியின் உடல் பாழ்படுத்தப்படுகிறது.

வேற்றுமையுள்ள புதிய நோய் பழய நோயை விட வலிமை குறைந்ததாய் இருந்தால், பழய நோய் புதிய நோயை விரட்டி விடுவதைப் போல, கடுமை யில்லாத அலோபதி மருந்துகளை எவ்வளவு நீண்ட காலம் கொடுத்து வந்தாலும், நோய் குணமாகாமல் அப்படியே இருந்து வருகிறது. ஆயினும் நோயாளியின் உடல் வலிமை குறைகிறது.

வேற்றுமையுள்ள புதிய நோய் பழய நோயைவிடப் பலம் வாய்ந்ததாக இருந்தால், புதிய நோய் குணமாகும் வரை அல்லது அதன் ஆட்டபாட்டங்கள் குறையும் வரை, பழய நோய் உள்ளே பதுங்கி இருந்து பிறகு வெளியே வருகிறது. அதைப்போலவே கொடுமைக் குணம் நிறைந்த அலோபதி மருந்துகளைக் கொடுத்தால், நோய் சிறிது காலத்துக்கு அடங்கி இருந்து பிறகு முன் போலவே வெளியே வரும்.

சம பலமுள்ள இரு வேற்றுமை நோய்கள் ஒருவர் உடலில் பல காலமாய் நீடித்து இருந்தால், ஒவ்வொன்றும் தனக்கேற்ற உடலுறுப்புகளை மட்டும் தனித் தனியே பிடித்துக் கொண்டு கலப்பு நோயாய்க் காட்சி அளிக்கின்றன. அதைப்போலவே இயற்கை நோயுடன் ஒற்றுமையற்ற அலோபதி மருந்துகளை ஏராளமான அளவிலும் நீண்ட காலமாகவும் கொடுத்து வந்தால், இயற்கை நோய் குணமாகாமல் இருப்பதுடன் புதிய செயற்கை நோய்களும் உண்டாகின்றன. அதனால் நோயைக் குணம் செய்யும் வேலை முன்னைவிடக் கடுமையாகிறது.

ஹோமியோபதி முறைப்படியே நோய்கள் நிச்சயமாகவும் மிருதுவாகவும் நீங்குவதை நாம் பார்க்கிறோம்; அனுப

வம், ஊகம் ஆகியவைகளின் துணைகொண்டு, மறைமுக மாய் முன் பக்கங்களில் நாம் எடுத்துக்காட்டியபடி, நோய் களை நிச்சயமாகவும், விரைவிலும் நிரந்தரமாகவும் அழிக்கக் கூடிய ஒரே வழி ஹோமியோபதியே.

ஏனெனில் அச் சிகிச்சை முறை அழிவற்றதும் குற்றமற்றது மான இயற்கைச் சட்டத்தை ஆதாரமாய்க் கொண்டிருக் கிறது.

மூவகையான சிகிச்சை முறைகளில் முதன்மையானது ஹோமியோபதியே (53, 54, 55, 56):

நோய்களில் மருந்துகளை ஹோமியோபதி, அலோபதி, ஆண்ட்டிபதி என்று வழங்கப்படும் மூன்று வகையான வழிகளில் உபயோகிக்க இடம் இருக்கிறது. இம் மூன்றி னுள் நோயாளிக்கு எவ்விதத்திலும் தீங்கு செய்யாமல், அவர் உடல் வலிமையைக் குறைக்காமல், நோயை மிருது வாகவும் நிச்சயமாகவும் நிரந்தரமாகவும் குணம் செய் வதற்கு ஏற்ற ஒரே வழி ஹோமியோபதி தான். அம் முறை ஒன்றே ஏற்றது; நேரானது; மனிதனின் வல்லமையினால் அடையக் கூடியது. ஆகவே அதை முதல் வழி என்று வைப்போம்.

இரண்டாவது வழியாகிய அலோபதியில், உடலிலுள்ள நோயுடன் எவ்விதத்திலும் தொடர்பு இல்லாத, நோய் இல்லாத உடல் பகுதிகளையே தாக்கும் இயல் புள்ள மருந்துகளைக் கொண்டு சிகிச்சை செய்யப்படு கிறது. நோயற்ற அப் பகுதிகளின் வழியாய் நோயை இழுத்து வெளியேற்றி விடலாம் என்று மனப்பால் குடிக் கின்றனர் அலோபதியர்கள். இம்முறை உபயோக மற்றது; கேடுகள் நிறைந்தது என்பதை முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறேன். ஆதலால் அதைப்பற்றி மீண்டும் எழுத விரும்பவில்லை.

மூன்றாவதும் கடைசியுமான வழி ஆண்ட்டிபதி. இம் முறை யில் நோயினால் உண்டாகும் வேதனைகளைச் சிறிது

காலம் மறைத்து வைக்கும் குணமுள்ள மருந்துகளைக் கொடுத்துச் சிகிச்சை செய்யப்படுகிறது. வேதனை மறைந்தவுடன் தன் நோய் குணமடைந்து விட்டதாக எண்ணி வைத்தியரின்மேல் நோயாளிக்கு நம்பிக்கை ஏற்படவே இம்முறை கையாளப்படுகிறது. மிக வேகமாய் வளரும் குணமில்லாத நோய்களில் இம்முறையினால் எள்ளளவும் பயன் இல்லை; மிக மிகக் கெடுதலானது. அலோபதியர்கள் நோய்களைச் சிகிச்சை செய்யப் பல் வேறு வழிகளைக் கடைப்பிடிக்கின்றனர். அவைகளில் இயற்கை நோய்க் குறிகளுடன் ஓரளவு உறவு ஆண்ட்டி பதி முறைக்கே இருக்கிறது என்பதில் ஐயம் இல்லை. ஆனால் அது எத்தகைய உறவு தெரியுமா? உண்மைக்கு நேர் எதிரான, கூடாது என்று கட்டாயமாய் விலக்கப்பட வேண்டிய உறவு.

மொத்தக் குறிகளை மதியாமல்
ஒற்றைக் குறியை அடக்குவதால்
பதுங்கிப் பாயும் புலியது போல்
கூடுதலாகும் நோயும் காண் (57, 58, 59, 60, 61, 62)

ஆண்ட்டிபதி முறை அலோபதியர்களால் எப்படிக் கையாளப் படுகிறது என்று பார்ப்போம். ஒவ்வொரு நோயிலும் பற்பல நோய்க்குறிகள் இருக்கின்றன. அவைகளில் மற்ற எல்லாவற்றையும் அலட்சியம் செய்து, அதிக வேதனையை அளிக்கும் ஒரே ஒரு குறியை மட்டும் இலக்காக வைத்து, அதற்கு நேர் எதிரான செயற்கை நோய்க் குறியை உண்டாக்கும் குணமுள்ள மருந்தைக் கொடுக்கின்றனர். பதினைந்து நூற்றாண்டுகளாக வாழையடி வாழையென வந்துவிட்ட இப்பழங்கால அலோபதி சிகிச்சையினால் வேதனைக்குறி விரைவினில் நீங்குமென்று அவர் எதிர்பார்க்கலாம்.

உடல் உணர்ச்சிகளைச் சீக்கிரமாய் மழுங்கச் செய்யும் சக்தி ஓபியத்துக்கு இருப்பதைக்கொண்டு அவர் எல்லா வித வலிகளுக்கும் அம் மருந்தை அதிக அளவுகளில் கொடுக்கிறார். அம் மருந்தையே பேதிகளுக்கும் கொடுக்கிறார்.

குடலின் இயற்கையான முன்னேக்கித் தள்ளும் சக்தியை மிக விரைவிலே போக்கடித்து அதன் உணர்ச்சியை அடக்கும் குணம் அம் மருந்துக்கு இருப்பது காரணம். தூக்கமில்லாதவர்களுக்கும் ஓபியம் கொடுக்கப்படுகிறது; ஏனெனில் அம்மருந்தைக் கொடுத்த சிறிது நேரத்திற் கெல்லாம் நோயாளிக்கு மயக்கம் கலந்த தூக்கம் உண்டா கிறது; பல நாட்களாக மலச்சிக்கலினல் அவதியுறுவோ ருக்குப் பேதி மருந்துகளை உபயோகிக்கிருர்; நெருப்புச் சூடுபட்ட கையைக் குளிர்ந்த தண்ணீரில் வைக்கச் சொல் கிருர். தண்ணீரின் சூடு குறைவாய் இருப்பதால் கையை அதில் வைத்த உடனே மாயாஜாலம்போல் எரிச்சல் நீங்குகிறது. உடலில் சிலு சிலு வென்ற குளிரும் உணர்ச்சி யுள்ளவர்களைச் சூடான தண்ணீரில் குளிக்கச் செய்கிருர்: அதனல் நோயாளிகளுக்கு உடனேயே உடலில் சூடு உண்டாகின்றது; நீண்ட நாட்களாய் உடல் பலவீனமாய் இருந்துவரும் நோயாளியை ஒயினை (ஒரு வகைச் சாராயம்) உட்கொள்ளச் செய்கிருர்; ஒயினைக் குடித்த வுடனே நோயாளிக்கு புத்துயிரும் புத்துணர்ச்சி யும் ஏற்படுகின்றன; இன்னும் இவைகளைப் போன்ற இயற்கை நோய்க் குறிக்கு நேர் எதிரான செயற்கை நோய்க் குறியை உண்டாக்கும் மருந்துகளை உபயோகிக் கிருர். ஆனல் அவ்வாறு உபயோகிக்கக்கூடிய மருந்து கள் மிகச் சிலவே.

நோயின் குறிகளில் ஒன்றை மட்டும், அதாவது ஒரு சிறு பகுதியை மட்டும், கவனிப்பதினல், நோயாளியின் விருப் பம் போல், முழு நோயும் நீங்குமென்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே இம் முறை மிக மிகத் தவருனது. போனல் போகட்டுமென்று இத்தவறை பொருட்படுத் தாமல் விட்டுவிடுவோம். ஆயினும் நாட்பட்ட அல்லது பிடிவாத குணமுள்ள நோய்களில், ஆண்ட்டிபதி முறைப் படி மருந்தை உபயோகித்ததினல் சிறிது காலம் மறைந்து பிறகு முன்னிருந்ததைவிடக் கடுமையாகாமல் இருந்த நோய் ஒன்ருவது உண்டா என்று கேட்காமல் இருக்க

முடியாது. ஆண்ட்டிபதிச் சிகிச்சையினுல், எல்லாச் சமயங்களிலும், விதிவிலக்கு என்ற சொல்லுக்கு இடமில்லாமலும், நோய்கள் யாவும் சிறிது காலம் மறைந்திருந்து பிறகு அதிகரிக்கவே செய்கின்றன என்பதைக் கூர்ந்து கவனிப்போர் யாவரும் ஒப்புக்கொள்வர். தன் நோய் அதிகரித்துவிடக் காரணமென்னவென்று கேட்கும் நோயாளியிடம் அலோபதி வைத்தியர் வழக்கமாகச் சொல்லும் சமாதானம், " முன்பு இருந்த நோய் மிகவும் விஷத்தன்மை பொருந்தியது ; இப்பொழுது தான் அது தன் சுய உருவத்தைக் காட்டுகிறது அல்லது இது முற்றிலும் புதியதோர் நோய் " என்பவையே.

தற்கால சாந்தியை அளிக்கும், விரோதமான மருந்துகளைக் கொண்டு சிகிச்சை செய்யும் சமயங்களில், பிடிவாத குணமுள்ள நோய்களின் முக்கிய குறிகள் திரும்பி வராமல் இருப்பது கிடையவே கிடையாது ; அது மட்டுமல்ல. சில மணி நேரம் கழித்து வெளிப்படையாகத் தெரியுமளவுக்கு நோய் அதிகரிக்கவும் செய்கிறது.

நீண்ட காலமாய்ப் பகலில் தூக்கக் கலக்கமாய் இருந்து வந்த ஒருவருக்கு வைத்தியர் காப்பியை உபயோகித்தார். காப்பியின் முதல் வேலை சுறுசுறுப்பை உண்டாக்குவது. ஆகவே அதன் முதல் வேலை முடிந்தவுடன் பகல் தூக்கம் முன்பிருந்ததைவிட அதிகமாகி விட்டது.

இரவில் அடிக்கடி விழிப்பு ஏற்பட்டு நல்ல தூக்கம் இல்லாதிருந்த ஒருவருக்கு, நோயின் மற்ற குறிகளைக் கவனியாமல், மாலை வேளையில் ஓபியத்தைக் கொடுத்தார். அன்றிரவு மயக்கம் கலந்த தூக்கம் வந்தது ; ஆனல் அதற்கு மறு நாளிலிருந்து இரவு நேரங்களில் முன்பு வந்த அளவு கூடத் தூக்கம் வரவில்லை.

நாட்பட்ட வயிற்றுப் போக்குக்கு, நோயின் மற்றக் குறிகளைக் கவனியாமல் ஓபியத்தைக் கொடுத்தார். குடல்களை இறுக்குவது அம்மருந்தின் முதல் வேலைகளில் ஒன்று

அதனுல் வயிற்றுப்போக்கு சிறிது நேரம் அடங்கியிருந்து பிறகு முன்னைவிட அதிகரித்தது.

கடுமையாகவும் அடிக்கடி வந்துகொண்டும் இருக்கிற எல்லா வித வலிகளையும் ஓபியத்தின் துணைகொண்டு சில காலம் அடக்கி வைக்கலாம்; ஆனுல் அவை தவருமலும் பல சமயங்களில் முன்னை விடக் கடுமையாகவும் திரும்பி வரத்தான் செய்யும்; அல்லது அவ்வலிகளைவிட மோசமான புதியதோர் கோளாறு தோன்றுவதுமுண்டு.

பல காலமாய் இரவு நேரங்களில் ஏற்படும் இருமலுக்கு ஓபியத்தைத் தவிர வேறு மருந்து கொடுக்க அலோபதி வைத்தியருக்குத் தெரியாது. ஓபியத்தின் முதல் வேலை எல்லா வகை வேதனைகளையும் அடக்குவதே யாகும்; ஆதலால் முதல் இரவில் இருமல் நின்றுவிட்டுப் பிறகு மறு நாளிலிருந்து இரவு நேரங்களில் முன்னை விடக் கடுமையாய் ஏற்படலாம். இச் சமயத்தில் ஓபியத்தை மேன்மேலும் அதிக அளவுகளில் கொடுத்து இருமலை அடக்கிவந்தால், சுரம், இரவில் வியர்வை உண்டாகுதல் ஆகிய குறிகளும் சேர்ந்துகொள்ளும்.

மூத்திரப்பையின் பலவீனம் காரணமாக மூத்திரம் அடக்கப் பட்டிருந்தால் கந்தாரிஸ் எனப்படும் மருந்தின் உதவி கொண்டு அக்கோளாறை நீக்க அலோபதி வைத்தியர் முற்படுகிருர். அதனுல் அடங்கியிருந்த மூத்திரம் வெளியாகத்தான் செய்கிறது; ஆனுல் பிறகு மூத்திரப்பையின் இயற்கையான சுருங்கும் சக்தி மேலும் குறைந்து பாரிச வாத நிலையை நெருங்குகிறது.

பல நாட்களாய் நீடித்திருக்கும் மலச்சிக்கலை நீக்க, குடல்களைத்தூண்டி அடிக்கடி மலத்தை வெளியேற்றும் சக்தியுள்ள பேதி மருந்துகளையும், மலமிளக்கி உப்புகளையும் உபயோகிக்கிருர். அவைகளின் முதல் வேலை காரணமாக மலச்சிக்கல் அச்சமயம் நீங்குகின்றது. ஆயினும் இரண்டாம் வேலை ஆரம்பித்தவுடன் மலச்சிக்கல் முன்னைவிடக் கடுமையாகிறது.

பல காலமாய் உடல் பலவீனம் இருந்த ஒரு நோயாளிக்கு ஒயின் (Wine) எனப்படும் பானத்தைக் கொடுக்கிறார். ஒயினின் முதல் வேலை சிறிது நேரம் உடலுக்கு ஊக்கம் தருவதாகும். ஆனால் அதன் இரண்டாம் வேலை ஆரம் பித்தவுடன் பலவீனம் மேலும் அதிகமாகிறது.

நீண்ட காலமாய்ச் சீரண சக்தியை இழந்து வயிற்றில் சில்லிப்பு உணர்ச்சி இருந்த ஒருவருக்குக் கசப்புப் பொருள்களையும் சூட்டை உண்டாக்கும் (மிளகு போன்ற) காரப் பொருள்களையும் கொடுத்து வயிற்றைப் பலப் படுத்தவும் சூடு ஏற்படவும் செய்கிறார். அப் பொருள் களின் முதல் வேலை நடைபெறும்வரை விரும்பிய பலன் ஏற்படுகிறது; ஆனால் இரண்டாம் வேலை துவங்கிய வுடன் வயிற்றின் சீரணச் சக்தி மேலும் குறைந்து விடு கிறது.

உடலில் இயற்கையாய் இருக்கவேண்டிய சூட்டின் அளவு குறைந்து பல காலமாய் உடம்பில் சில்லிப்பு உணர்ச்சி யுள்ளவருக்குச் சுடு தண்ணீரில் குளிக்கச் செய்தால் சில்லிப்பு உணர்ச்சி மறைந்து விடுவது உண்மைதான். ஆனால் சிறிது நேரமானவுடன் நோயாளிக்கு முன்னை விடப் பலவீனமும் உடலில் அதிகமான குளிரும் ஏற்படும்.

கடுமையாக நெருப்புச் சுட்டுவிட்ட உடல் பகுதிகளில் குளிர்ந்த தண்ணீரை ஊற்றிக்கொண்டால் எரிச்சல் அக் கணமே மறைந்துவிடுகிறது. ஆனால் சிறிது நேரம் சென்றவுடன் எரிச்சலும் வலியும் தாங்கமுடியத அளவு அதிகமாகி,அதேபோல் வேக்காடும் கடுமையாய் ஏற்படும்.

ஜலதோஷத்தினல் பல நாட்களாக இருந்துவரும் மூக்கடைப்பைத் தும்மலை உண்டாக்கும் குணமுள்ள மருந்துகளைக் கொடுத்துச் சளியை உண்டாக்கிக் குணம் செய்து விடலாம் என்று அலோபதி வைத்தியர் எண்ணு கிறார். இவ்விதமான எதிர்க் குணமுள்ள மருந்துகளால் அவைகளின் இரண்டாம் வேலையில் நோய் அதிகரிப்

பதை அவர் கவனிக்காமல் விட்டு விடுகிறார். முதல் வேலையில் மூக்கடைப்பு நீங்கினாலும் இரண்டாம் வேலை யில் அடைப்பு முன்னைவிட அதிகமாகவே செய்கிறது.

மின்சாரத்தின் முதல் வேலை தசைகளுக்கு ஊக்கம் அளிப்ப தாகும். நீண்ட காலமாய்ப் பலவீனத்தாலும் பாரிச வாதத்தாலும் தாக்கப்பட்டு கை கால் முடங்கிவிட்டவர் களுக்கு மின்சாரச் சிகிச்சை செய்த வுடனே முடங்கி யிருந்த கை கால்களை மடக்கவும் நீட்டவும் முடிகிறது. ஆனால் இரண்டாம் வேலையில் கை கால்கள் முன்னைவிட அதிகமாய் முடங்கிச் செயலற்றுப் போய் விடுகின்றன.

அடிக்கடி தலையில் அதிக அளவு இரத்தம் சேருவதை நீக்க அங்குள்ள அசுத்த இரத்தக் குழாயை ஊசியால் குத்தி இரத்தம் வெளியேற்றப் படுகிறது. அதனால் அங்கு சேரும் இரத்தத்தின் அளவு மேன்மேலும் அதிகமாகத் தான் செய்யும்.

பல வகையான பெருவாரிச் சுரங்களில் உடலிலும் மனதி லும் ஏற்படும் கடுமையான வேதனைகளை அடக்க **வலேரியானா** என்ற மருந்தை ஏராளமான அளவில் கொடுப்பது ஒன்றைத் தவிர வேறு எதுவும் அலோபதி வைத்தியருக்குத் தெரியாது. உடலுக்கு ஊக்கம் தரும் மிகச் சக்தி வாய்ந்த மருந்துகளில் வலேரியானாவும் ஒன்று. உடலுக்கு ஊக்கம் தருவது வலேரியானாவின் முதல் வேலைதான் என்பது அவர்களுக்குத் தெரியாது. முதல் வேலை முடிந்து இரண்டாம் வேலை துவங்கியவுடன் உடல் மன வேதனைகள் முன்னைவிட அதிகமாகி உடல் உறுப்புகளும் மூளையும் செயலற்றுப்போய் மரணமும் நேரலாம்.

வலேரியானா அந் நோய்களுடன் ஒற்றுமை யுள்ளதல்ல; எதிராகவே வேலை செய்கிறது; ஏராளமான அளவில் கொடுத்ததன் விளைவாய் வலேரியானாவிலுள்ள விஷமே நோயாக மாறி மரணத்தை ஏற்படுத்துகிறது ஆகிய விஷ யங்களை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை.

நோய் காரணமாக உடல் இளைத்து மெலிந்து விட்டவர்களுக்கு நாடித் துடிப்பின் எண்ணிக்கை அதிகமாய் இருக்கும். டிஜிடாலிஸ் என்னும் மருந்தைக் கொடுத்து முதல் வேளை மருந்திலேயே நாடித்துடிப்பின் வேகத்தைச் சில மணி நேரங்களுக்குக் கட்டுப்படுந்தி வைக்கத் தன்னால் முடிந்ததைப் பற்றி அலோபதியர் ஆனந்தமடைவார். (அம் மருந்தின் முதல் வேலை நாடித்துடிப்பின் வேகத்தைக் குறைப்பதாகும்). ஆனால் மிகச் சீக்கிரத்தில் நாடித் துடிப்பின் வேகம் பழயபடி அதிகமாகும்; அதனால் முதல் தடவையை விட இரண்டாவது தடவையில் மருந்தின் அளவை அதிகரிக்க நேரும். இவ்விதம் படிப்படியாக மருந்தின் அளவை அதிகரித்துக் கொண்டே போய் முடிவில் எவ்வளவு மருந்தைக் கொடுத்தாலும் பலன் ஏற்படாத நிலைமை தோன்றும். பிறகு மருந்தின் இரண்டாம் வேலை துவங்கும். அச்சமயத்தில் கணக்கிடவே முடியாமல் நாடி மிக வேகமாய்த் துடிக்கும்; தூக்கம், பசி, உடல் வலிமை ஆகிய யாவும் பறந்தோடிப் போகும். தவறாமல் மிக விரைவில் மரணம் ஏற்படுவது நிச்சயமாகும், அல்லது நோயாளிக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. வேற்றுமைக் குணமுள்ள மருந்துகளால் நோய்கள் அதிகரிக்கின்றன அல்லது மிகக் கடுமையான புதிய நோய்கள் தோன்றுகின்றன என்று ஒரே வார்த்தையில் சொல்லி விடலாம். ஆயினும் பொய்யான கோட்பாடுகளைக் கற்றுள்ள அலோபதி வைத்தியர்கள் இவ் வுண்மையை உணர வில்லை.

வேற்றுமைக் குணமுள்ள மருந்துகளால் இத்தகைய கேடுகள் விளைவது இயற்கை. நோய் அதிகரிக்கும் போது மருந்தின் அளவை அதிகரிப்பதின் மூலம் நிலைமையைச் சமாளித்து வெற்றி பெறலாமென்று அலோபதியர் நினைக்கிறார். அப்படி அதிக அளவில் மருந்தைக் கொடுப்பதால் நோய் சிறிது நேரத்துக்கு அடக்கப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு தடவையும் மருந்தின் அளவு அதிகமாக்கப்படுவதால் முடிவில் முதல் நோயை விடப் பயங்கர

மான புதியதோர் நோய் தோன்றும் அல்லது உயிருக்கே ஆபத்து வரலாம்; மரணமும் நேரலாம்; ஆனால் ஒருக்கா லும் நோய்கள் நீங்குவதில்லை.

வேற்றுமைக் குண முள்ள மருந்துகளை உபயோகிப்பதால் உண்டாகும் வருந்தத்தக்க விளைவுகளைப் பற்றிச் சிந் தித்துப் பார்க்கும் திறமை அலோபதியருக்கு இல்லை. அத்திறமை மட்டும் இருந்திருந்தால் கீழுள்ள மாபெரும் உண்மையைப் பல காலத்துக்கு முன்பாகவே அவர்கள் கண்டு பிடித்திருப்பார்கள். அதாவது உண்மையான சிகிச்சை முறை அவர்கள் செய்து வரும் முறைக்கு நேர் எதி ரானது என்பதை. அது மட்டுமல்ல. நோய்க் குறிகளுடன் வேற்றுமையுள்ள மருந்துகளை உபயோகிப்பதால் நோய் சிறிது நேரமே அடங்கியிருக்கும்; மருந்தின் முதல் வேலை முடிந்தவுடனே நோய் அதிகரிக்கவே செய்யும்; ஆதலால் ஹோமியோபதி முறைப்படி, நோய்க் குறிகளு டன் ஒற்றுமையுள்ள மருந்துகள், மிகக் குறைவான அளவுகளில் கொடுக்கப்பட்டால், நோயை நிரந்தரமாக வும் முற்றிலும் நீக்கும் என்ற உண்மை அவர்களுக்குப் புலப்பட்டிருக்கும். வேற்றுமை மருந்துகளைக் கொடுத்துச் சிகிச்சை செய்ததினால் நோய்கள் அதிகரிப்பதைக் காண் கின்றனர். நாட்பட்ட வியாதிகள் ஒன்றாவது அச்சிகிச்சை யால் குணமடையவில்லை என்பதையும் அறிந்துள்ளனர். பழய நோய்கள் ஒற்றுமைக் குண முள்ள புதிய நோய் களால் குணமாக்கப்பட்ட இயற்கை நிகழ்ச்சியையும் பார்த்துள்ளனர். ஆயினும் அவர்கள் உண்மையை அறி யத் தவறி விட்டனர்.

ஒரு நோயில் அதிகமான துன்பத்தைத் தரும் ஒரே ஒரு குறியை மட்டும் அடக்கும் நோக்கத்துடன் மருந்தை உப யோகித்தால் தீமை விளைகிறது. அதற்கு மாறாக ஹோமி யோபதி முறைப்படி மருந்தை உபயோகித்தால் நன்மை விளைகிறது. இதன் காரணங்களைப் பற்பல ஆராய்ச்சி களின் மூலம் நான் கண்டு பிடித்துக் கீழே தருகிறேன்.

இவ் விஷயம் எல்லோருக்கும் எளிதில் விளங்கக் கூடியது; நோய் தீர்க்கும் பணிக்கு இன்றியமையாதது; ஆயினும் எனக்கு முன் ஒருவரும் இதைக் கவனிக்கவில்லை.

உயிர்ப்புச்சக்தியைத் தாக்கியபின் உடலின் நலனை உருக்குலைத்து நோய்க் குறிகளைத் தோற்றுவிக்கும் மருந்தின் வேலை முதலாம் வேலை. அம்முதல் வேலையை அழித்துவிட உயிர்ப்புச்சக்தி குதித்தெழுந்து தோற்றுவிக்கும் மாற்றுக் குறிகள் இரண்டாம் வேலை எனப்படுமாம்.
(63, 64, 65, 66, 67, 68, 69)

ஒவ்வொரு மருந்தும் உடலிலுள்ள உயிர்ப்புச் சக்தியைக் கூடுதலாகவோ குறைவாகவோ தாக்கி, உடலின் ஆரோக்கிய நிலைமையில் சில நாட்களுக்கோ, பல நாட்களுக்கோ மாறுதலை உண்டாக்குகிறது. இது **முதல் வேலை (Primary Action—ப்ரைமரி ஆக்ஷன்)** எனப்படும். மருந்து, உயிர்ப்புச் சக்தி ஆகிய இரண்டிலுமுள்ள இருவகைச் சக்திகளும் ஒன்று கலந்ததாலேயே இம் முதல் வேலை தோன்றியுள்ள போதிலும் முக்கிய காரணம் மருந்தின் சக்தியேயாகும். இம் முதல் வேலையை உயிர்ப்புச் சக்தி எதிர்த்துப் போராடுகிறது. அவ்வாறு எதிர்க்கும் குணம் உயிர்ப்புக்குச் சக்திக்கு இயற்கையாய் அமைந்துள்ள ஓர் சாதனம். இதை **இரண்டாம் வேலை** என்று அழைக்கிறோம்.

நோயற்ற உடலில் செயற்கை நோயை உண்டாக்கும் விஷச் சக்தியின் (அதாவது மருந்தின்) முதல் வேலை நடைபெறும் போது ஆரம்பத்தில் உயிர்ப்புச் சக்தி அதற்குப் பணிந்து போவது போல (நோயைத் தடை இல்லாமல் உடலிலே ஏற்றுக் கொள்ளும் பாவனை) காணப்படுகிறது. இருந்தாலும் சிறிது நேரத்துக்கெல்லாம் உயிர்ப்புச் சக்தி நிமிர்ந்தெழுந்து தன்னைத் தாக்கியுள்ள செயற்கை நோய்ச் சக்தி (மருந்து)யின் முதல் வேலைக்கு எதிரான வேலையைச் சற்று அதிகமான அளவிலும் செய்யத் துவங்குகிறது; அல்லது மருந்தினால் ஏற்பட்ட மாறுதல்களை நீக்கக் கூடிய அதிகச் சக்தியை உண்டாக்கி உடலிலே புகுத்துகிறது.

மேற் கண்ட விஷயமாக எல்லோருக்கும் தெரிந்த சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கொதிக்கும் தண்ணீரில் ஒரு கையை வைத்திருந்தால் அது மற்ற கையை விடச் சூடாக ஆகிறது. (முதல் வேலை) ஆனால் தண்ணீரிலிருந்து எடுத்து நன்ருகத் துடைத்தவுடன் சிறிது நேரத்திற்கெல்லாம் மற்ற கையை விடச் சில்லென்று குளிர்ந்து விடுகிறது. (இரண்டாம் வேலை).

கடுமையான உடல் உழைப்பினல் முதலில் உடம்பில் சூடு உண்டாகிறது. (முதல் வேலை); பிறகு சில்லிப்பும், நடுக்கலும் தோன்றுகின்றன (இரண்டாம் வேலை).

மிகவும் சில்லிப்பாக இருக்கும் குளிர்ந்த தண்ணீரில் நெடு நேரம் கையை வைத்திருந்தால் அது முதலில் மற்ற கையை விட வெளுத்தும் சில்லென்றும் இருக்கும். (முதல் வேலை); தண்ணீரிலிருந்து எடுத்துத் துடைத்த பிறகு சூடு உண்டாகிச் சிவந்து வேக்காடும் ஏற்படலாம். (இரண்டாம் வேலை).

முதல் நாள் அதிகச் சாராயம் குடித்து உடம்பில் சூடு உண்டானவர்களுக்கு (முதல் வேலை) மறு நாள் மூச்சுக் காற்று கூடச் சில்லென்று ஆகும். (இரண்டாம் வேலை).

தண்ணீர்க் கலப்பு அதிகமாய் இல்லாமல் கெட்டியாகவுள்ள காப்பிக் கஷாயத்தைக் குடித்தால் முதலில் மன உற்சாகமும் (முதல் வேலை) பிறகு வெகு நேரத்திற்கு சோம்பேறித்தனமும் (இரண்டாம் வேலை) ஏற்படுகின்றன.

அபினியை உட்கொண்டால் முதலில் மயக்கமும் (முதல் வேலை) பிறகு அதிகத் தூக்கமின்மையும் (இரண்டாம் வேலை) ஏற்படுகின்றன. அபினியினல் முதலில் மலச் சிக்கலும் (முதல் வேலை) பிறகு வயிற்றுப் போக்கும் (இரண்டாம் வேலை) உண்டாகும்.

குடலில் அருவருப்பை உண்டு பண்ணி வயிற்றுப் போக்கை ஏற்படுத்தும் (முதல் வேலை) மருந்தை உபயோகித்த

பிறகு பல நாட்களுக்கு மலச்சிக்கல் தோன்றுகிறது. (இரண்டாம் வேலை). இதே போல் அதிக அளவிலே உட்கொள்ளப்பட்டதால் ஆரோக்கிய உடலிலே மருந்துகளால் ஏற்படுத்தப்படும் மாறுதல்களுக்கு (முதல் வேலை) நேர் எதிரான ஓர் மாறுதலை (இரண்டாம் வேலை) உண்டாக்க நம் உயிர்ப்புச்சக்திக்கு சக்தி இருக்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும்.

ஹோமியோபதி வைத்திய முறைப்படி நுண்ணிய அளவிலே மருந்தை உட்கொள்ளும் போது மேலே கூறிய முதல் வேலை ஏற்படத்தான் செய்கிறது. அதில் சந்தேகமே இல்லை. ஆனால் அது மிகவும் கொஞ்சமாய் ஏற்படுவதால் கூர்ந்து கவனித்தால் தான் கண்டு பிடிக்க முடியும். இது போலவே உயிர்ப்புச் சக்தியின் இரண்டாம் வேலையும் அல்பமாய் இருப்பதால் எளிதில் அறிய முடியாது.

ஹோமியோபதி வைத்திய முறைப்படி சிகிச்சை செய்வதால் ஏற்படும் நன்மைகளை மேலே காட்டிய மறுக்க முடியாத உண்மைகள் நமக்கு எடுத்துக் காட்டுவதுடன் மற்ற முறைகளின்படிச் செய்யப்படும் சிகிச்சைகள் பயன் அற்றவை என்பதையும் வெளிப்படுத்துகின்றன.

ஹோமியோபதி வைத்திய முறைப்படி இயற்கை நோய்களை நீக்க அவைகளை ஒத்த குறிகளை உண்டாக்கும் வல்லமையுள்ள மருந்துகள் மிகக் குறைந்த அளவில் கொடுக்கப்படுகின்றன. இதனால் இயற்கை நோய் நீங்கி மருந்தின் செயற்கை நோய்ச் சக்தி உடலில் தங்குவது உண்மையேயாயினு அச்சக்தி மிகவும் அல்பமே யாதலால் தானகவே உடலை விட்டுப்போய் விடுகிறது.

ஆண்டிபதிச் சிகிச்சை முறையில் மேலுள்ளதற்கு நேர் எதிரான காரியம் நடைபெறுகிறது. நோய்க் குறியை எதிர்ப்பதற்காக வைத்தியர் உபயோகிக்கும் மருந்தின் குறி (உதாரணமாக ஓபியத்தின் முதல் வேலையில் தோன்றும் உணர்ச்சி யிழத்தல், மயக்கம் ஆகிய குறிகளைக்

கொண்டு கடுமையான வலியை எதிர்ப்பது) நோய்க் குறிக்கு அன்னியமானதல்ல. இரண்டுக்கும் தெளிவான தொடர்பு இருக்கிறது. ஆனால் அத்தொடர்பு நியாயமாய் இருக்கவேண்டியதற்கு எதிரானது; எதிர்க் குணமுள்ள மருந்துக் குறியை உபயோகித்து நோய்க் குறியை நீக்க லாமென்று கருதப்படுகிறது; ஆனால் அது சாத்தியமான தல்ல. இயற்கை நோய்க் குறிகளை ஒத்த செயற்கை நோய்க் குறிகளை உண்டாக்கும் வல்லமை பொருந்தியது என்ற காரணத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு ஹோமி யோபதி மருந்து, உடலில் எந்தெந்தப் பகுதிகளைத் தொடு கிறதோ, அந்தந்தப் பகுதிகளையே ஆண்டிபதி முறைப் படித் தேர்ந்தெடுக்கப்படும் மருந்தும் தொடுகிறது என் பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அது (ஆண்டிபதி மருந்து) நோய்க்குறிக்கு எதிராக வேலை செய்து அதை (நோய்க் குறியை) சிறிது நேரம் மறைத்து வைக்கிறது. மருந்தின் முதல் வேலை நடைபெறும் காலத்தில் நோய்க் குறியும் மருந்தின் குறியும் ஒன்றையொன்று அடக்கி விட்டதுபோல் தோன்றுவதால் உயிர்ப்புச் சக்தி விடுதலை பெற்றுவிட்டதுபோல் காணப்படுகிறது. ஓபியத்திலுள்ள மயக்கச் சக்தி நோயில் ஏற்படும் வலியை அடக்குவதை இதற்கு உதாரணமாய்க் கூறலாம். முதல் சில நிமிஷங் களுக்கு உயிர்ப்புச் சக்தி ஆரோக்கிய நிலைக்குத் திரும்பி வந்துவிட்டதுபோல் தோன்றும்; ஓபியத்தின் மயக்கச் சக்தியையோ நோயினால் ஏற்படும் வலியையோ அது உணருவதில்லை. ஆனால் எதிர்க் குணமுள்ள மருந்துக்கு ஹோமியோபதி மருந்தைப்போல இயற்கை நோயுடன் ஒற்றுமையும் அதிக வலிமையும் கிடை யாது; ஆதலால் ஹோமியோபதி மருந்தைப்போல உடலிலுள்ள இயற்கை நோயை விரட்டிவிட்டு உயிர்ப்புச் சக்தியைத் தாக்கும் குணம் அதற்கு இல்லை. முதலில் நோய்க் குறியை அடக்குவதுபோல் வேலை செய்து முடிவில் அதை நீக்க முடியாமல் ஆண்டிபதி மருந்து உடலை விட்டு வெளியேற்றப் படுகிறது.

நீக்க வேண்டிய நோய் தன்னை நீக்கும் மருந்தை நிச்சயமாய்
காட்டுது மொத்தக் குறிகளினால் மற்ற விளக்கம் கனவேயாம்.
அன்னியமான அலோபதி மருந்தை அளவில் அதிகம் கொடுத்தாலும்
அன்னியமான நோயைப் போல் முன்னுள நோயை நீக்காது.
மொத்தக் குறிகளை நினையாமல் ஒற்றைக் குறியை நீக்கவென்று
வேற்றுமைக் குறியுள மருந்திட்டால் சற்றே மறைந்து திரும்பிடுமே.
மொத்தக் குறிகளை மதிப்பிட்டு ஒற்றுமைக் குறியுள்ள மருந்திட்டால்
சற்றும் மிச்சம் இல்லாமல் முற்றும் நீங்கும் நோயது பார்.

(70–லிருந்து 104 வரை)

நோய்களிலே வைத்தியர் கண்டு பிடிக்கக் கூடிய, உண்மையானதும் நீக்கப்பட வேண்டியதுமான ஒவ்வொரு நோய்க் கூறும், நோயாளி படும் துன்பங்கள், அவனுடைய ஆரோக்கிய நிலைமையில் ஏற்படும் தெளிவான மாறுதல்கள் ஆகிய இரண்டிலும் (சுருக்கமாக நோயின் மொத்தக் குறிகளில்) தான் அடங்கியிருக்கிறது. இம் மொத்தக் குறிகளின் மூலமே ஒவ்வொரு நோயும் தன்னை நீக்கக் கூடிய மருந்தைச் சுட்டிக் காட்டுகிறது. ஆதலால் நோயின் காரணம் என்று கற்பனை செய்யப் படும் மற்ற எல்லா விஷயங்களும் முற்றிலும் பயனற்றவைகளேயாகும்.

ஆரோக்கிய நிலைமையில் ஏற்பட்டுள்ள இம்மாற்றங்களையே நாம் நோய் என்று பெயரிட்டு அழைக்கிறோம். அம்மாற்றங்கள் மறைந்து, ஆரோக்கிய நிலைமை மீண்டும் தோன்ற வேண்டுமானால், மருந்துகளின் துணை கொண்டு உடல் நிலைமையில் மற்றோர் மாறுதலை ஏற்படுத்த வேண்டும். நமக்குள்ள ஒரே வழி அது தான். மனிதனின் ஆரோக்கிய நிலைமையை மாற்றக் கூடிய அதாவது அவன் உடலில் நோய்க் குறிகளைத் தோற்றுவிக்கும் வல்லமை மருந்துகளுக்கு இருப்பதாலேயே அவை நோய் தீர்க்கும் சக்தியைப் பெற்றிருக்கவேண்டும். மருந்துகளை நோயற்ற உடலில் கொடுத்துச் சோதனை

செய்து இவ்விஷயத்தை நாம் மிகத் தெளிவாகவும் அப் பழுக்கற்ற முறையிலும் தெரிந்து கொள்ளலாம்.

நோயற்ற ஒருவர் உடலில், நீக்கப்படவேண்டிய (இயற்கை) நோயின் குறிகளுக்கு மாருன (செயற்கை) நோய்க் குறிகளை உண்டாக்கும் வல்லமையுள்ள (அலோபதி முறை) மருந்துகளால், அவ்வியற்கை நோயைக் குணம் செய்ய முடியாது. இரண்டாவதாகத் தோன்றும் நோய், எவ்வளவு பலம் பொருந்தியதாய் இருந்தாலும், முதலாவதாகத் தோன்றிய நோயுடன் (குறிகளில்) ஒற்றுமையுள்ளதாக இல்லாவிட்டால், அதனுல் முதல் நோயை நீக்கவோ, அழிக்கவோ, குணம் செய்யவோ முடியாது என்பதை இயற்கையில் நாம் காண்கிருேம்.

நீக்கப்பட வேண்டிய நோயின் குறிகளில் ஏதோ ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு, அக்குறிக்கு நேர் எதிரானதோர் செயற்கை நோய்க் குறியை நோயற்ற உடலிலே தோற்றுவிக்கும் மருந்துகளை ஆண்டிபதி முறைப்படி உபயோகித்து, நீடித்துள்ளதோர் நோயைக் குணம் செய்ய முடியவே முடியாது. நோய் சிறிது காலம் தான் அடங்கி இருக்கும். பிறகு தவருமல் கடுமையான அளவில் திரும்பி வரவே செய்யும். நீடித்துள்ள, கடுமையான நோய்களிலே, தற்கால சாந்தியை அளிக்கும் சிகிச்சைகளால் பயன் விளையாது.

அலோபதி, ஆண்டிபதி ஆகிய இரு முறைகளாலும் விரும்பிய பயன் விளையாதென்பதைப் பார்த்தோம். இப்பொழுது மூன்ருவதும் கடைசியுமான ஹோமியோபதி முறை தான் இருக்கிறது. இம் முறையில் இயற்கை நோயில் காணப்படும் மொத்தக் குறிகளை அனுசரித்து மருந்து கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்படும் மருந்து, நோயற்ற உடலிலே இயற்கை நோயின் மொத்தக் குறிகளுடன் பெரும்பாலும் ஒற்றுமையுள்ள செயற்கை நோய்க் குறிகளை உண்டாக்கும் வல்லமை உள்ளதாய்

இருக்கிறது. அம் மருந்தைத் தகுந்த அளவில் கொடுப்பதே மிகச் சிறந்த வழி. உயிர்ப்புச் சக்தியை நோய்கள் சூட்சுமமான முறையில் தான் தாக்குகின்றன. அதனுல் நோய்ப் பொருள் மருந்தினுல் வீழ்த்தப்பட்டு எளிதிலும், முற்றிலும், நிரந்தரமாகவும் நீக்கப்படுகிறது. முதலில் தோன்றிய ஒரு நோயுடன் ஒற்றுமையான குறிகளை உடைய மற்ருெரு நோய் இரண்டாவதாகத் தோன்றியவுடன், முதல் நோய் விரைவிலும் நிரந்தரமாகவும் நீக்கப்படுவது இயற்கையாய்க் காணப்படுகிறது. இவ்வியற்கை நிகழ்ச்சியைவிடச் சிறந்த உதாரணம் தேவை இல்லை.

மனித சமூகத்தைப் பீடிக்கும் நோய்கள் ஒவ்வொன்றும் ஒரு சில குறிகளின் சேர்க்கை தான் என்பதும் மருந்துப் பொருள்களால் நோய்களை அழிக்கவும் நோயற்ற நிலைமையை மீட்கவும் முடியும் என்பதும் இனி சந்தேகத்துக்கு இடமில்லாத விஷயங்கள். ஆனுல் மருந்துகளுக்குச் செயற்கை நோய்க் குறிகளை ஏற்படுத்தும் வல்லமை இருக்கவேண்டும். ஆதலால் நோய் தீர்க்கும் வேலை விஷயமாகக் கீழுள்ள மூன்று தகவல்களை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். அவையாவன:

1. நோயை நீக்குவதற்காக என்னென்ன விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதை வைத்தியர் தீர்மானிப்பது எப்படி?
2. இயற்கை நோய்களை நீக்க ஏற்றதான பொருள்கள், மருந்துகளிலுள்ள நோயுண்டாக்கும் சக்தி, ஆகியவைகளைப் பற்றிய அறிவைப் பெறுவது எவ்விதம்?
3. செயற்கை நோய்களை உண்டாக்கும் இப்பொருள்களை (மருந்துகள்) இயற்கை நோயை நீக்குவதற்காகக் கொடுப்பதற்கு மிகச் சிறந்த வழி எது?

இனி இம் மூன்று விஞக்களுக்கும் விடைகளைக் காண்போம்.

முதல் வினவுக்கு விடை.

மனிதனுக்கு ஏற்படக் கூடிய நோய்களைத் திடீர் வகை, **நீடிக்கும் வகை** என இரு வகைகளாய்ப் பிரிக்கலாம். திடீர் வகையைச் சேர்ந்த நோய்களில் உயிர்ப்புச் சக்தி மிகக் கடுமையாகத் தாக்கப்படுவதால் நோய்க் குறிகள் மிக வேகமாய்த் தோன்றி ஒரு சில நாட்களில் மறைந்து விடுகின்றன. நீடிக்கும் வகையைச் சேர்ந்த நோய்களின் ஆரம்பம் அல்பமாகவும் பல சமயங்களில் சிறிது கூட வெளியில் தெரியாமலும் இருக்கும். அவை ஒவ்வொன் றும் ஒவ்வொரு விதமாக உயிர்ப்புச் சக்தியைச் சூட்சும முறையில் தாக்கி, அதன் ஆரோக்கிய நிலைமையில் படிப் படியாய் மாறுதல்கள் தோன்றும்படிச் செய்கிறது. அதனால், உடலின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ள உயிர்ப்புச் சக்தி நோயின் ஆரம்பம், அது முன்னேறும் காலம், ஆகிய இருசமயங்களி லும் நோயை ஒழுங்காகவோ, தகுந்த அளவிலோ எதிர்க் காமல் இருந்து விடுகிறது. ஆகவே நோயைப் போக்கச் சக்தியற்று, மேலும் மேலும் நோயின் பிடியில் சிக்கி, முடிவிலே உடல் அழிந்து விடுகிறது. நீடிக்கும் வகை நோய்கள் மூவகையான விஷ நோய்க் கூறுகளாலேயே உண்டாக்கப்படுகின்றன.

திடீர் வகை நோய்கள் பல வகைப்படும். ஒரு வகையில், அளவு மீறிய உணவை உட் கொள்ளுதல், போதிய அளவு உணவு உட் கொள்ளாமை, கடுமையான உடல் வேதனைகள், குளிரில் அடிபடுதல், அதிகச் சூடுள்ள இடங்களில் அல்லது வெய்யலில் வேலை செய்தல், அளவு மீறிய கள் குடி, சிற்றின்பத்தில் ஈடுபாடு, கடுமை யான உடல் உழைப்பு, வருத்தம், கவலை, பயம், கோபம் முதலிய மன உணர்ச்சிகளின் அதிகரிப்பு முதலிய **நோயைத் தூண்டும்** பல காரணங்களால் திடீர் வகைச் சுர நோய்கள் அக் காரணங்களுக்கு இலக்கானவர்

களுக்கு மட்டும் தோன்றும். மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் நோயைத் தூண்டிய காரணம் மேலுள்ளவை களில் ஏதோ ஒன்ருகத் தெரிந்தாலும் உண்மையில் உடலின் உட்புறத்தே உறங்கிக் கிடக்கும் ஸோரா எனப் படும் விஷ நோய்க் கூறு விழித்துக் கொண்டதுதான் மூல காரணமாகும். திடீர் வகை நோய் மிகக் கடுமை யானதாய் இல்லா விட்டால் அல்லது விரைவிலே அடக் கப் பட்டால் ஸோரா விஷ நோய்க்கூறு பழயபடி உறங்க ஆரம்பித்து விடும்.

மற்ருெரு வகையில் வெப்பதட்ப நிலைமைகளில் ஏற்படும் மாறுதல்கள், உடலுக்குத் தீங்கிழைக்கும் கிருமிகள் ஆகியவைகளால் அங்கும் இங்குமாகப் பல இடங்களி லுள்ள பல மனிதர்கள் ஒரே சமயத்தில் நோய்களால் தாக்கப்படுதல். அந்த நோய்களை ஏற்றுக் கொள்ளும் உடல் வாகு உள்ளவர்கள் மிகச் சிலராகவே இருப்பார் கள். ஒரே சமயத்தில் பலரைத் தாக்கி எல்லோரிடமும் ஒரே விதமான நோய்க் குறிகளை உண்டாக்கும் குண முள்ள பெருவாரி நோய்களும் இவ்வினத்தைச் சேர்ந்த வைகளே. இப் பெருவாரி நோய்கள் மக்கள் நெருக்க மாய் வாழும் பகுதிகளிலே தோன்றிஞல் அனேகமாகத் தொற்றும் குணமுள்ளவைகளாக ஆகின்றன. பிறகு சுரங்கள் தோன்றுகின்றன. ஒவ்வொரு சுரமும் தனிப் பட்டதோர் குணமுள்ளதாக இருப்பதால் அச்சுரத்தால் தாக்கப்படும் எல்லோருக்கும் ஒரே விதமான நோய்க் குறிகள் உண்டாகின்றன. அச்சுரத்துக்கு மருந்து கொடுத்துச் சிகிச்சை செய்யாமல் அதன் போக்கிலேயே செல்லும்படி விட்டு விட்டால் கூடிய விரைவில் அது தாஞகவே மறைந்து போகும் அல்லது நோயாளியை மாய்க்கும். யுத்தங்களாலும், வெள்ளப் பெருக்கு, பஞ்சம் முதலிய இயற்கையின் பயங்கரச் செயல்களாலும் ஏற் படும் குழப்பங்கள் பல சமயங்களில் பெருவாரி நோய் களுக்குக் காரணங்களாகின்றன. சில சமயங்களில்

அவை திடீர் வகையைச் சேர்ந்த விஷங்களால் தோன்று வது உண்டு. பெரியம்மை, சின்னம்மை, கக்குவாய் இருமல், தாடையம்மை, காலரா, கடற்கரைப் பிரதேசங் களில் உண்டாகும் மஞ்சள் சுரம், முதலிய நோய்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. முதலில் கூறப்பட்ட நான்கு நோய்கள் ஒருவருக்கு அவர் வாழ் நாளில் ஒரு தடவைக்கு மேல் ஏற்படுவதில்லை. மற்ற இரண்டும் எத்தனை தடவைகள் வேண்டுமாயினும் ஏற்படும். ஆனால் ஒவ்வொரு தடவையிலும் நோய்க் குறிகள் ஒன்று போலவே இருக்கும்.

இயற்கையில் உண்டாகும் நீடிக்கும் வகை நோய்களுடன் அலோபதிச் சிகிச்சையினால் செயற்கையாகத் தோன்றும் நீடிக்கும் வகை நோய்களையும் சேர்த்துக் கணக்கிட வேண்டி இருக்கிறது. தீங்கு விளைக்கும் பல மருந்துகளை ஏராளமான அளவில் கொடுப்பது, மேல்பூச்சுக் களிம்பு களைத் தடவுதல், பேதியுண்டாக்கும் மருந்துகளை உப யோகித்தல், அசுத்த இரத்தக் குழாயைக் கிழித்து இரத் தத்தை வெளியே எடுத்தல், அட்டைப்புழுக்களை உடலின் மீது விட்டு நீரை உறிஞ்சச் செய்தல், செயற்கைப் புண் களைச் சருமத்தின் மேல் உண்டாக்குதல், முதலிய முறட்டுத்தனமான சிகிச்சை முறைகளால் சில சமயங் களில் உயிர்ப்புச் சக்தியின் வலிமை அடியோடு அழிந்து மரணமும் நேரலாம். மரணம் நேரா விட்டாலும் கூட, நோயின் கொடிய தாக்குதல்களிலிருந்து உயிரைக் காப் பாற்றுவதற்காக உடலில் மற்றோர் மாறுதலை ஏற்படுத்தும் பொறுப்பு உயிர்ப்புச் சக்தியின் மேல் விழுகிறது. அப் பொறுப்பை நிறைவேற்ற அது தன்னுடைய தன்மையை படிப்படியாக மாற்றிக் கொள்கிறது. எவ்விதம் மாற்றிக் கொள்ளும் என்பது நோயின் தன்மையைப் பொறுத்தது. அதாவது உடலின் ஏதோ ஒரு பகுதியில் உள்ள வேதனை யையும் உணர்ச்சியையும் அழித்து விடலாம் அல்லது கடுமையாய் அதிகரிக்கச் செய்யலாம். ஒரு உறுப்பைத் தளரச் செய்யலாம். மற்றோர் உறுப்பைச் சுருங்க வைக்க

லாம். அல்லது உடலின் ஏதோ ஒரு பகுதியை முற்றி லும் அழிக்கவும் செய்யலாம். உடலின் உட்புறத்திலோ, அல்லது வெளிப்புறத்திலோ உள்ள ஏதோ ஒரு உறுப் பை அதன் வேலையைச் செய்ய வொட்டாமல் தடுக்கலாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் அழிவை ஏற்படுத் தும் குணமுள்ள நோய்களின் தாக்குதல்களால், உடல் முழுவதும் ஒரே சமயத்தில் அழிந்து விடாதபடி ஏதோ சில உறுப்புகளை மட்டும் அவ்வப்போது நோய்களுக்கு இரையாக்கி உயிரைக் காப்பாற்றுகிறது உயிர்ப்புச்சக்தி.

நீடிக்கும் வகை நோய்களிலே, பயனற்ற அலோபதிச் சிகிச்சையினால் ஏற்படும் நோய்கள் மிகவும் கொடியவை; அனேகமாக நீக்க முடியாதவை. ஒரு அளவுக்கு மேல் முற்றி விட்டால் அந் நோய்களை நீக்கக் கூடிய மருந்து களைக் கண்டு பிடிப்பது துர்லபம் என்பதையும் வருத்தத் துடன் குறிப்பிடவேண்டி இருக்கிறது.

நோய்களிலிருந்து விடுதலை பெறுவதற்காகக் கருணையே உருவான கடவுள் நமக்கு அருளியுள்ள மருந்துகள் இயற்கையில் ஏற்படும் நோய்களையே நீக்க முடியும். அலோபதி மருந்துகளாலும் சிகிச்சையினாலும் உடலின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் பல ஆண்டுகளாய் ஏற்படும் அழிவுகளும் ஊனங்களும் உயிர்ப்புச் சக்தியி னால் தான் நீக்கப்பட வேண்டும். அவ் வழிவுகளுடனும் ஊனங்களுடனும் நீடிக்கும் குணமுள்ள விஷ நோய்க் கூறுகள் பின்னணியில் காணப்படுமானால் அவ் விஷ நோய்க் கூறுகளை அடக்குவதற்காகத் தகுந்த உதவிகளை நாம் செய்யலாம். உயிர்ப்புச் சக்தியின் வலிமை ஷெ அலோபதிச் சிகிச்சையினால் மிகவும் குறைந்து போய் இருந்தால் எதுவும் பயன் இல்லை. அவ்வித நிலைமையை நீக்கத்தக்க மருந்துகள் மனிதர்களால் கண்டு பிடிக்கப் பட்ட எந்த வைத்திய முறையிலும் இல்லை. இருக்கவும் முடியாது.

கெடுதலை உண்டாக்கும் மது பானங்களை உட்கொள்ளும் பழக்கம், அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபடுதல், உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத பொருள்களை நீண்ட நாட்களுக்கு உட் கொள்ளாமல் இருத்தல், ஆரோக்கியக் குறைவான பிரதேசங்களிலும் (முக்கியமாகச் சதுப்பு நிலங்களில்) காற்றோட்டமில்லாத வீடுகளிலும் குடி இருத்தல், போதிய அளவு உடல் பயிற்சி இல்லாமை, நல்ல காற்றைச் சுவாசிக்காமை, அளவு மீறிய உடல் உழைப்பாலும் மன உளைச்சலாலும் தேகாரோக்கியம் பாழாகுதல், ஓயாத கவலை முதலிய காரணங்களால் தோன்றும் நோய்களை நீடிக்கும் வகையைச் சேர்ந்தவை என்று அழைப்பது பொருத்தமற்றதாகும். மனிதர்களால் தாமாகவே தேடிக் கொள்ளப்படும் இத்தகைய நோய்கள், அந் நோயாளிகள் ஒழுங்கான முறையில் வாழத் தொடங்கினால், உடலின் உட்புறத்தில் நீடிக்கும் குண முள்ள விஷ நோய்க்கூறும் இல்லா விட்டால், தாமாகவே நீங்கி விடுகின்றன. ஆகவே இத்தகைய நோய்களை நீடிக்கும் நோய்கள் என்று சொல்லக் கூடாது.

நீடிக்கும் குணமுள்ள விஷ நோய்க் கூறுகளில் ஏதோ ஒன்றினால் தான் உண்மையான, இயற்கையான, நீடிக்கும் வகை நோய்கள் தோன்றுகின்றன. அவ் விஷ நோய்க் கூறுகளை முறியடிக்கத்தக்க மருந்துகளை உபயோகியாமல் அவைகளின் போக்குப்படி போக அனுமதித்தால் நாளுக்கு நாள் அவை கடுமையாகவும் அதிகமாகவும் செய்யும். உடலையும் உள்ளத்தையும் எவ்வளவு நல்ல முறையில் வைத்திருந்தாலும் நோயாளியின் ஆயுள் முடியும் வரை அந் நோய்கள் ஒவ்வொரு நாளும் அதிகமாகிக் கொண்டு அவரைத் துன்புறுத்தவே செய்யும். இவ்வித நோய்களே உலகில் அதிக அளவிலும் மனித இனத்தின் மாபெரும் வைரிகளாயும் இருந்து வருகின்றன.

கட்டு விடாத உடல் அமைப்பு, தூய வாழ்க்கை, உயிர்ப்புச் சக்தியின் முழுவலிமை ஆகிய எதனுலும் மேலே கூறப் பட்ட விஷநோய்க் கூறுகளால் தோற்றுவிக்கப்பட்ட நோய்களை நீக்க முடியாது.

ஸிபிலிஸ் (மேகக்கிரந்தி நோய்) ஒன்றுதான் நீடிக்கும் குண முள்ள விஷப்பொருளால் உண்டாகும் நோய் என்று ஒரு சிலர் அறிந்துள்ளனர். தக்கப்படி மருந்துகளைக் கொடுத்துச் சிகிச்சை செய்யாவிட்டால் இந்நோய் சாகும் வரை உடலைவிட்டு நீங்காது. தகுந்த மருந்துகளின் துணையில்லாமல் உயிர்ப்புச் சக்தியினுல் தன்னந் தனியாக நீக்கமுடியாத நோய்களில் ஸைக்கோஸிஸ் (கெட்ட சதை வளரும் தன்மையுள்ள மேகவெட்டை) என்பதும் ஒன்று. நீடிக்கும் குணமுள்ள விஷப்பொருள் களில் இதுவும் ஒன்றென்பதில் சந்தேகத்திற்கு இட மில்லை. ஆனுல் இதுவரை அவ்வாறு கருதப்படவில்லை. ஏனென்றுல் உடலின் வெளிப்புறத்தில் தோன்றும் கெட்ட சதைகளை வெட்டி யெறிந்துவிட்டால் நோயைக் குணம்செய்து விட்டதாக அவர்கள் நினைத்தனர். மீண்டும் மீண்டும் கெட்டசதை தோன்றுவதை அவர்கள் கவனிக்கவில்லை.

மேலே குறிப்பிட்ட ஸிபிலிஸ், ஸைகோஸிஸ் ஆகிய இரு விஷப் பொருள்களைவிட எல்லாவகையிலும் பெரியது ஸோரா என்று அழைக்கப்படும் விஷப்பொருளாம். ஸிபிலிஸ் விஷம் யோனியில் அல்லது மானியில் புண்ணை ஏற்படுத்துவதன்மூலம் ஸைக்கோஸிஸ் விஷம் கெட்ட சதை வளர்ச்சிகளின் மூலமும் உடலினுட்புறத்திலுள்ள தங்களுடைய விடித்தன்மைகளை வெளிப்படுத்துகின்றன. இவைகளைப்போலவே ஸோரா விஷமும் உடலின் உட் புறம் முழுவதிலும் தன்விஷத்தைப் பரப்பிய பிறகு உடலின் வெளிப்புறத்திலே அதாவது சருமத்தின்மேல் சொறிசிறங்குகளை உண்டாக்கி தான் உள்ளே இருப் பதை அறிவிக்கிறது. சில சமயங்களில் ஒரு சில சிரங்குக்

கொப்பளங்கள் மட்டும் இருக்கும். தாங்கமுடியாத அரிப்பை உண்டாக்கும். இந்நோய் ஒன்றுதான் ஸோராவினுல் ஏற்படுவதாக நினைக்க வேண்டாம். கணக்கிட்டுச் சொல்லமுடியாத பலப்பல நோய்களுக்கு மூல காரணம் ஸோராதான். நரம்புதளர்ச்சி, சங்கா தோஷம், காரணமில்லாத மன ஏக்கம், பைத்தியம், அறிவு மங்குதல், காக்கை வலிப்பு, மற்ற பல வலிப்புகள், எலும்புகள் உறுதி குறைதல், புற்று, சதைக்கட்டி, வாத ரோகம், மூலம், மஞ்சட்காமாலே, உடல் நீல நிறமடைதல், நீர்ச்சுரப்பு, மாத விடாய் வெளியாகாமை, வயிறு, மூக்கு, சுவாசகோசங்கள், மூத்திரப்பை, கருப்பை ஆகிய உறுப்புகளிலிருந்து இரத்தம் பெறுக்கெடுத்து வெளியேறுதல், காசம், சுவாசகோசங்களில் வேக்காடு, ஆண் தன்மைக் குறைவு, பெண்களின் மலட்டுத்தன்மை, ஒற்றைத்தலேவலி, காது கேளாமை, கண்களில் சதை வளருதல், கண்பார்வை மங்குதல், குருடாகுதல், மூத்திரக் கற்கள், பாரிசவாயு, புலன் உணர்ச்சிகளில் கோளாறு, பல வகைப்பட்ட வலிகள் என்று தனித்தனி நோய்களாய் வைத்திய நூல்களிலே பிரித்துக்கூறப்படும் எல்லாக் கோளாறுகளேயும் உண்டாக்குவது ஸோரா விஷ நோய்க்கூறே ஆகும்.

மிகப்பழமையான, தோற்றும் குணமுள்ள இவ்விஷ நோய்க் கூறு நூற்றுக்கணக்கான தலே முறைகளில் கோடிக் கணக்கான மனித உடல்களில் தோன்றி நம்ப முடியாத அளவுக்கு வளர்ந்து விட்டது. மாபெரும் மனித சமுதாயத்தில் கணக்கிடமுடியாத நோய்களாக உருவங் கொள்ள இவ்விஷ நோய்க்கூற்றுக்கு எவ்விதம் சாத்திய மாகியிருக்கிறது என்பதைக் கீழ்உள்ள காரணங்களால் நாம் ஓரளவு ஊகிக்கலாம். பல்வேறு சந்தர்ப்பங்கள் பலவகையான இந்நீடிக்கும் வகைநோய்களே (ஸோரா வின் இரண்டாவது வகைக்குறிகள்) தோன்றச் செய்ய உதவிபுரிந்துள்ளன. அதைத்தவிர மனிதர்களின் உடல் அமைப்பும் விவரிக்கமுடியாத அளவுக்கு வித்தியாசமாய்

இருக்கிறது. ஆகவே உள்ளிருந்தும் வெளியே இருந்தும் சில சமயங்களில் தொடர்ந்தும் தாக்கும் பல வகைப்பட்ட விஷநோய்ப் பொருள்கள் எண்ணமுடியாத பலவகைக் கோளாறுகளேயும் கஷ்டங்களேயும் உண்டாக்கி யிருப்பதில் ஆச்சர்யம் எதுவும் இல்லே. பண்டைகால வைத்திய நூல்களிலே ஒவ்வொரு கோளாறையும் தனித் தனியாய்ப் பெயரிட்டு தனிப்பட்ட நோயாக விளக்கப் பட்டிருப்பதற்கு அறியாமையே காரணம்.

நீடிக்கும்வகை நோய்களின் பிறப்பிடம் (ஸோரா விஷ நோய்க் கூறு) கண்டுபிடிக்கப்பட்டது; ஸோரா விஷ நோய்க் கூறை நீக்கவல்ல மருந்துகள் கண்டு பிடிக்கப் பட்டது. ஆகிய இரண்டினுலும் பெரும்பாலான நோய் களின் தன்மையை அறியும் விஷயமாக வைத்திய சாஸ்திரம் சிறிது முன்னேற்றமடைந்து விட்டது. ஆயினும் அக்கண்டுபிடிப்புகளுக்கு முன், நோயின் குறி களேயும் விசேஷக் குணங்களேயும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாக இருந்ததுபோல் இப்பொழுதும் ஹோமியோபதி வைத்தியர் தன்னிடம் சிகிச்சை பெறவரும் நீடிக்கும்வகை (ஸோரா தொடர்புள்ளது) நோய்கள் ஒவ்வொன்றுக்கும் ஏற்ற மருந்தைத் தேர்ந் தெடுக்க நோயின் குறிகளேயும் விசேஷகுணங்களேயும் கவனிக்க வேண்டியது அவசியம்தான். ஒவ்வொரு நோய்க்கும் ஏற்றபடிச் சிகிச்சை செய்தால் ஒழிய உண்மையான குணம் ஏற்படுவதில்லே என்பதே அதற்கு காரணம். நோயின் விவரங்களே ஆராய்வதில் திடீர் வகையில் சேர்ந்த, மிகவேகமாக வளரும் குணமுள்ள நோய்கள், நீடிக்கும் வகையைச் சேர்ந்த நோய்கள் ஆகிய இரண்டுக்கும் சிறிது வேற்றுமை உண்டு. திடீர் வகை நோய்களின் முக்கிய குறிகள் தெளிவாய்த் தெரிகின்றன; எளிதில் நம் புலன்களுக்குத் தென் படுகின்றன. நோயின் பெரும்பான்மையான விவரங்கள் வெளிப்படையாய் இருப்பதால் அதிகக் கேள்விகள் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லே. பல

ஆண்டுகள் படிப்படியாய் வளர்ச்சியடைந்த நீடிக்கும் வகை நோய்களில் அவைகளின் விவரங்களைத் தெரிந்து கொள்வது மிகவும் கஷ்டமாய் இருக்கிறது.

ஒவ்வொரு நோயையும் தனிப்பட்ட முறையில் பரிசோதனை செய்யும் விஷயமாக நான் இங்கு பொதுவான வழி முறைகளை தருகின்றேன். ஆதலால் தன்னிடம் வரும் பல கேசுகளில் ஒவ்வொன்றுக்கும் ஏற்ற வழி முறைகளை வைத்தியர் வகுத்துக் கொள்ள வேண்டும். நோயைப் பற்றி முன்கூட்டியே ஒரு அபிப்பிராயம் கொள்வதை விலக்கி, பகுத்தறிவைத் தீட்டிக் கூர்மையாக்கி நோயின் விவரங்களை அறிவதில் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே செலுத்தி அதன் உருவை அமைப்பதில் ஆழ்ந்த பற்றுக் கொள்ள வேண்டியது அவர் கடமை.

நோயினால் தான் படும் துன்பங்களின் வரலாற்றை நோயாளி விவரிக்கிறார்; அவர் அருகே இருப்பவர்கள், நோயாளி தன் துன் பங்களைப் பற்றிக் கூறியது, அவன் நடந்து கொண்ட விதம், அவனிடம் கண்ட விஷயங்கள் ஆகியவைகளை உரைக்கின்றனர் ; வைத்தியர் நோயாளியைப் பார்க்கிறார்; எல்லோரும் உரைத்த விவரங்களைக் கேட்கிறார்; நோயாளியிடம் என்னென்ன மாறுதல்களும் வழக்கத்துக்கு மாறான விஷயங்களும் காணப்படுகின்றன என்பதைத் தன் மற்ற புலன்களால் மதிப்பிடுகிறார். நோயாளியும் அவருடைய நண்பர்களும் அவரிடம் கூறிய எல்லா விஷயங்களையும் அவர்கள் கூறியவண்ணமே ஒரு *எழுத்தைக்கூட மாற்றாமல் சரியாக எழுதிக்கொள்கிறார். தான் மௌனமாய் இருந்து கொண்டு அவர்கள் சொல்லக் கூடிய எல்லலா விஷயங்களையும் சொல்ல அனுமதிக்கிறார். சம்பந்தமில்லாத விஷயங்களுக்குத் தாவினாலொழிய அவர்கள் பேச்சில் குறுக்கிடமாட்டார்.*

*இடைமறித்துக் குறுக்குக் கேள்விகளைக் கேட்டால் அவர்கள் சொல்ல வந்த விஷயங்களை மறந்து விடுவார்கள். அவ்வாறு மறந்துபோன விஷயங்களைப் பிறகு எவ்வளவு முயற்சித்தாலும் ஞாபகத்துக்குக் கொண்டு வர முடியாமல் போகலாம்.

அவர்கள் சொல்லும் விவரங்களில் முக்கியப் பகுதிகளைக் குறித்துக்கொள்ள வசதியாய் இருக்கும்போது சோதனை யின் துவக்கத்திலேயே மெதுவாய்ப் பேசும்படி அவர் களிடம் தெரிவிக்க வேண்டும்.

நோயாளி அல்லது அவருடைய நண்பர்கள் குறிப்பிடும் ஒவ்வொரு புதிய சந்தர்ப்பத்தையும் (நோய்க்குறி) தனித் தனி வரிகளில் ஒன்றன் கீழ் ஒன்றுகப் பிரித்து இடையில் தாராளமாய் இடம் விட்டு எழுதி வரவேண்டும். அவ்வாறு செய்தால் முதலில் தெளிவற்ற முறையில் கூறப்பட்ட ஒரு விஷயம் பிறகு தெளிவாகச் சொல்லப்பட்டால் அதை உடனே ஏற்ற இடத்தில் குறித்துக் கொள்ள வசதியாய் இருக்கும்.

தாமாகவே சொல்லக்கூடிய (நோயின்) எல்லா விவரங் களையும் நோயாளியும் அவருடைய நண்பர்களும் கூறி முடிந்த பின் வைத்தியர் அவர்கள் கூற்றிலிருந்து வெளிப்பட்ட முக்கியமான குறிகள் ஒவ்வொன்றையும் எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றையும் பற்றிய திட்ட மான விவரங்களைத் தெரிந்துகொள்ளப் பின் வரும் முறையைக் கையாள்கிருர். தன்னிடம் கூறப்பட்ட எல்லாக் குறிகளையும் ஒன்றன்பின்ஞென்ருக எடுத்துக் கொண்டு அவைகளைப் பற்றி மேலும் சில தகவல்களை விசாரிக்கிருர். உதாரணமாக, எந்தச் சமயத்தில் இந்தக் குறி தோன்றியது? இதுவரை அவர் உட்கொண்டு வந்துள்ள மருந்தைச் சாப்பிட ஆரம்பிப்பதற்கு முன்ன தாகவே தோன்றியதா? அல்லது மருந்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது தான் தோன்றியதா? அல்லது மருந்து சாப்பிடுவதை நிறுத்திய சில நாட்களுக்குப் பிறகுதான் ஏற்பட்டதா? இந்த இடத்தில் ஏற்பட்ட வலியின் தன்மை என்ன? எவ்விதமான உணர்ச்சி? வலி அல்லது வலி உணர்ச்சி திட்டமாய் எந்த இடத்தில் இருந்தது? வலி விட்டு விட்டும் தானுகவும் பல்வேறு சமயங்களிலும் தோன்றியதா? அல்லது இடை விடாமல்

தொடர்ச்சியாய் நீடித்திருந்ததா? எவ்வளவு காலம் அது நீடித்திருந்தது? இரவிலோ, பகலிலோ, எந்நேரத்தில் உடலை எவ்விதம் வைத்துக் கொண்டிருந்தால் வலி மிகக் கடுமையாய் இருந்தது அல்லது முற்றிலும் மறைந் திருந்தது ? ஒவ்வொரு குறியையும் அதன் திட்டமான தன்மையைக் குறித்து தெள்ளத் தெளிவாய்த் தெரிந்து கொள்ளவேண்டும்.

இவ்விதம் நோயின் ஒவ்வொரு குறியையும் பற்றிய திட்ட மான விவரங்களை வைத்தியர் சேகரிக்கிருர். ஆனல் நோயாளி உண்டு அல்லது இல்லை என்று ஒரே வார்த் தையில் விடை தரக்கூடிய கேள்விகளை எச்சமயத்திலும் உபயோகிப்பது கூடாது?‡ இல்லாவிட்டால் சோம்பல் காரணமாகவோ அல்லது வைத்தியரைத் திருப்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தாலோ உண்மைக்குச் சற்று மாருன அல்லது உண்மைக் கலப்பே இல்லாதவண்ணம் உண்டு அல்லது இல்லை என்று பதில் அளித்துவிடுவார். அதிலிருந்து நோயின் உண்மை உருவை உணர முடியாமலும் ஏற்ற சிகிச்சை முறையைக் கடைப் பிடிக்க முடியாமலும் போய்விடும்.

நோயாளியும் அவருடைய நண்பர்களும் சுயமாகவே கூறும் இவ்விவரங்களை உடலின் பலபகுதிகள் வேலைகள், மனக் குறிகள்$ ஆகியவைகளைப்பற்றி யாதொன்றும் குறிப்

---

‡ உதாரணமாக "இந்த அல்லது அந்த நோக்குறி இருந்ததா" என்று வைத்தியர் கேட்பது கூடாது. நோயாளி உண்மைக்குமாருன விடையையும் தன் குறிகளைப்பற்றிய பொய்யான விளக்கத்தையும் தருவதற்கு இடம்அளித் தார் வைத்தியர் என்ற பழிச்சொல்லுக்கு ஒருபொழுதும் ஆளாகக்கூடாது.

$ உதாரணமாக, மலத்தின் தன்மை என்ன? எப்படி அவர் மூத்தி ரத்தைக் கழிக்கிருர்? பகலிலும் இரவிலும் தூக்கம் எப்படி இருக்கிறது. அவருடைய சுபாவம், கலகலவென்று பேசுதல், ஞாபகசக்தி ஆகியவை எப் படி இருக்கின்றன? தாகம் இருக்கிறதா? வாயின்சுவை எப்படி இருக்கிறது? எவ்வகையான உணவையும் பானங்களையும் அவர் மிகவிரும்பகிருர்? அவ ருக்கு எதன்மேல் வெறுப்பு இருக்கிறது? ஒவ்வொரு பொருளும் அதற்கு

பிடப்படாமல் இருந்தால் வைத்தியர் அவ்விஷயமாக என்னென்ன விவரங்கள் இருக்கின்றன என்று கேட்க வேண்டும். அப்படிக் கேட்கப்படும் கேள்விகள் பொதுப் படையாகத்தான் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவைகளைப்பற்றிய முழு விவரங்களையும் அவர்கள் குறிப்பிடுவார்கள்.

நோயாளிக்கு நோயினுல் ஏற்படும் உணர்ச்சிகளின் விவரங்களை அறிய அவர் கூறுவதையே நாம் நம்பவேண்டி இருக்கிறது. ஆதலால் சுயமாகவும், கேட்ட கேள்விகளுக்கு விடை அளித்ததின் மூலமும் தேவையான விவரங்களைத் தெரிவித்து நோயின் உருவை ஏறக் குறைய நல்லமுறையில் வெளியிட்ட பிறகு மேலும் சில விவரங்கள் வேண்டுமென்று வைத்தியர் நினைத்தால் அவர் விசேஷமாக கேள்விகளைத் தாராளமாய்க் கேட்கலாம்.*

உரியதான சுவையுடன் இருப்பதாகத் தோன்றுகிறதா அல்லது மாருன சுவையுள்ளதாகத் தெரிகிறதா? உணவு அல்லது பானங்களை உட்கொண்ட பிறகு அவருக்கு ஏற்படும் உணர்ச்சிகள் என்னென்ன? தலை, கைகால்கள் அடிவயறு ஆகியவைகளைப் பற்றிச் சொல்வதற்கு ஏதாவது விவரங்கள் இருக்கின்றனவா?

*உதாரணமா, எவ்வளவு தடவைகள் மலம் கழிகிறது? மலத்தின் தன்மை என்ன? மலம் வெண்மை நிறமாய் இருந்திருந்தால் அது வெறும் சளிப்பொருளாய் இருந்ததா, அல்லது மலமாகவே இருந்ததா ? மலம் கழிந்தபோது வலி இருந்ததா, அல்லது இல்லையா ? வலிகளின் தன்மை என்ன? எந்த இடத்தில் ஏற்பட்டன? நோயாளி வாந்தி செய்த பொருள் எது? வாயிலுள்ள கெட்டசுவை, அழுகியதுபோல் இருக்கிறதா? புளிப்பாய் இருக்கிறதா கசப்பாய் இருக்கிறதா அல்லது வேறு எப்படி இருக்கிறது? கெட்டசுவை எப்போது ஏற்படுகிறது? சாப்பிட்ட பிறகா? சாப்பிடும் போதா, சாப்பிடுவதற்கு முன்பா? பகலில் எந்தநேரத்தில் அது அதிகமாய் இருக்கிறது? வயிற்றிலிருந்து மேல்நோக்கி ஏப்பம், நெஞ்சுகரிப்பு முதலியவை வந்தால் அவைகளின் சுவை என்ன? மூத்திரம் கழிக்கும் சமயத்திலே கலங்கி இருக்கிறதா அல்லது வெளியாகிச் சிறிதுநேரம் சென்றபிறகு கலங்கலாய் மாறுகிறதா? வெளியேறும் சமயத்தில் அதன் நிறம் என்ன? மூத்திரத்தைப் பிடித்து வைத்திருந்தால் அடியில் தேங்கும் வண்டலின் நிறமென்ன? தூங்கும்போது நோயாளி எவ்விதம் நடந்து

கொள்கிறார்? நோயின் துன்பத்தை தன்னால் பொறுக்க முடியவில்லையே என்ற பாவனையில் அழுகிறாரா, பேசுகிறாரா அல்லது வீறிட்டுக் கதறுகிறாரா? தூங்கும்போது திடுக்கிட்டு எழுந்து கொள்கிறாரா? அவர் குறட்டைவிட்டால், காற்றை உள்ளிழுக்கும் நேரத்திலா, வெளியேவிடும் நேரத்திலா? மல்லார்ந்துதான் படுத்துக்கொள்கிறாரா அல்லது வேறு எவ்விதம் படுத்துக்கொள்கிறார்? தன் உடல் முழுவதையும் நன்றாய் மூடிப்போர்த்திக் கொள்கிறாரா? அல்லது மேலே துணிபடுவதை அவரால் பொருக்க முடியவில்லையா? தூக்கத்திலிருந்து சுலபமாக விழித்துக் கொள்கிறாரா அல்லது மிக ஆழ்ந்த தூக்கம் உண்டாகிறதா? ஒவ்வொரு நோய்க் குறியும் எவ்வளவு நேரத்துக்கொருமுறை தோன்றுகிறது? ஒவ்வொரு குறியும் மறுபடி தோன்றுவதற்குக் காரணமாய் அமைவது எது? உட்கார்ந்து கொண்டிருப்பது, படுத்துக்கொண்டிருப்பது, நின்றுக் கொண்டிருப்பது, நடமாடிக்கொண்டிருப்பது முதலிய செயல்களில் எதைச்செய்து கொண்டிருக்கும்போது அது தோன்றுகிறது? அது வழக்கமாய் எச்சமயத்தில் தோன்றுகிறது? பட்டினி கிடக்கும்போதா? காலையிலா? மாலையிலா? உணவு உட்கொண்டபிறகா? உடம்பில் குளிர் எப்பொழுது வர ஆரம்பித்தது? லேசான சிலுசிலுவென்ற உணர்ச்சி மாத்திரம் இருந்ததா அல்லது நல்ல குளிர் இருந்ததா? அப்படியானால் எந்தெந்த இடங்களில் குளிர் இருந்தது? குளிரும் உணர்ச்சி உள்ளூர இருந்தபோதிலும் தொட்டுப் பார்க்கும்போது உடம்பு சூடாய் இருந்ததா? உடலில் உதரல் இல்லாமல் வெறும் குளிர் உணர்ச்சி மட்டும் இருந்ததா? முகத்தில் சிவசிவப்பு இல்லாமல் சூடான உணர்ச்சி மட்டும் இருந்ததா? தொடும்போது உடம்பின் எந்தெந்தப் பகுதிகள் சூடாய் இருந்தன? தொடும்போது உடலில் சூடு எதுவும் தெரியாமல் உள்ளூரச்சுடும் உணர்ச்சி இருந்ததா? குளிர் எவ்வளவு நேரம் இருந்தது? சூடு எவ்வளவு நேரம் இருந்தது? தாகம் எப்பொழுது தோன்றியது—குளிர் இருந்த சமயத்திலா? அல்லது சூடு இருந்த சமயத்திலா? அல்லது அவைகளுக்கு முன்னதாகவா அல்லது பிறகா? தாகம் எவ்வளவு கடுமையாய் இருந்தது. குடிப்பதற்கு எவ்விதமான பானம் வேண்டுமென்று நோயாளி கேட்டார்? வியர்வை எப்பொழுது ஏற்பட்டது-சூடு மறைந்தவுடனா அல்லது ஆரம்பத்திலா? அல்லது சூடு மறைந்து எவ்வளவு நேரம் கழித்து ஏற்பட்டது? தூங்கும்போதா அல்லது எவ்வளவு நேரம்கழித்து ஏற்பட்டதா? தூங்கும்போதா அல்லது விழித்துக் கொண்டிருக்கும்போதா? வியர்வையின் அளவு என்ன? வியர்வை சூடாய் இருந்ததா, சில்லிப்பாய் இருந்ததா? எந்தப்பாகங்களில் வியர்வை ஏற்பட்டது? அதன் வாசனை என்ன? குளிர் நிலைமையில் அல்லது அது வருவதற்குமுன் நோயாளிக்கு ஏற்பட்ட துன்பங்கள் என்னென்ன? சூடுஏற்பட்ட நிலைமையில் ஏற்பட்ட துன்பங்கள் யாவை? அதற்குப் பிறகு என்ன ஏற்பட்டது? வியர்வை நிலையிலும் அதற்குப்பிறகும் என்ன ஏற்பட்டது? முதலிய விவரங்களைக் கேட்டறிய வேண்டும்.

இவ் விவரங்களை எழுதி முடித்தவுடனே நோயாளியிடம் தானகவே கவனித்து அறிந்தவைகளையும்* வைத்தியர் குறித்துக் கொள்கிறார். அவ்வாறு கவனித் தறியப்பட்ட விவரங்களில் எவை எவை நோய் வருவதற்கு முன்ன தாக இருந்தன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதற்கு முன் மருந்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயத்தில், நோயாளியிடம் காணப்பட்ட குறிகள் நோயின் உண்மையான உருவைக் காட்டுவதில்லை; மருந்து சாப்பிடுவதற்கு முன்னதாகவும் மருந்து சாப்பிடுவதை நிறுத்திச் சில

---

*நோயாளியைப் பார்க்கச் சென்ற போது அவர் எவ்விதம் நடந்து கொண்டார்? கலகலவென்று பேசாமல் ஏக்கம் பிடித்திருத்தல், சண்டை பிடிக்கும் குணம், மிக அவசரமாகப் பேசுதல், வேலை செய்தல், கண்ணீர் விட்டு அழுதல், கவலைப்படுதல், நம்பிக்கை இழத்தல், வருத்தமாய் இருத்தல், நம்பிக்கையுடன் இருத்தல், அமைதியாய் இருத்தல் ஆகிய பல தன்மைகளில் நோயாளியிடம் காணப்பட்டது எது? மயக்கமாய் இருந்தாரா அல்லது சொல்வதைப் புரிந்து கொள்ள முடியாத அளவு மந்தமாய் இருந்தாரா? பேசும் போது அவர் குரல் எப்படி இருந்தது? கட்டைக் குரலாய் இருந்ததா அல்லது கம்மிய குரலாய் இருந்ததா அல்லது புரிந்து கொள்ள முடியாதபடி இருந்ததா? அவருடைய முகம், கண்கள், சருமம் ஆகியவைகளின் நிறம் எப்படி இருந்தது? அவருடைய முகத் தோற்றம், கண்கள் ஆகியவை எந்த அளவுக்குக் களையாக இருந்தன? அவருடைய நாக்கு, சுவாசம், வாயின் நாற்றம், செவிப்புலன் ஆகியவைகளின் நிலைமை எப்படி இருந்தது? கண்ணின் கருமணிகள் விரிந்திருந்தனவா, சுருங்கி இருந்தனவா? இருட்டிலும் வெளிச்சத்திலும் பார்வையில் மாற்றம் எவ்வளவு வேகமாகவும் எந்த அளவிலும் ஏற்பட்டது? நாடியின் தன்மை என்ன? அடி வயிறு எப்படி இருந்தது? தொட்டுப் பார்க்கும் போது அவர் உடலின் ஒவ்வொரு பகுதியும் எப்படி எப்படி இருந்தது? அதாவது கசகசவென்று வியர்வையுடன் இருந்ததா அல்லது சூடாய் இருந்ததா? சில்லிப்பாய் இருந்ததா அல்லது காய்ந்து இருந்ததா? எப்படிப் படுத்திருந்தார்? அதாவது தலையைப் பின் பக்கம் வளைத்துக் கொண்டா? பாதி அல்லது முழுவதும் வாயைத் திறந்து கொண்டா? கைகளைத் தலைமேல் வைத்துக் கொண்டா? மல்லார்ந்து கொண்டா? அல்லது வேறு எப்படி? படுக்கையை விட்டுத் தானகவே எழுந்திருக்க என்ன முயற்சி செய்தார்? இன்னும் இவை போன்ற குறிப்பிடத் தகுந்த பல விவரங்களையும் வைத்தியர் கவனித்தறிய வேண்டும்.

நாட்கள் கழிந்த பிறகும் காணப்படும் நோய்க் குறிகளும் கோளாறுகளுமே நோயின் உண்மையான உருவத்தைத் தெரிந்து கொள்ள உதவி செய்கின்றன. ஆகவே அவை களை வைத்தியர் விசேஷமாகக் குறித்துக் கொள்ள வேண்டும். நோய் நீடிக்கும் வகையைச் சேர்ந்ததாய் இருந்து வைத்தியரிடம் வரும் வரை நோயாளி மருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார் என்ருல் மருந்து சாப்பிடு வதை நிறுத்திச் சில நாட்களான பிறகு வரும்படிச் சொல்ல வேண்டும். அல்லது (நோயாளியைத் திருப்தி செய்வதற்காக) மருந்து சேராத ஒரு பொருளை (மாத் திரைகள் அல்லது தண்ணீர்) உட் கொள்ளும்படிக் கொடுத்து விட்டுச் சில நாட்கள் சென்றவுடன் நோய்க் குறிகளை விரிவாய்ச் சோதித்தறிய வேண்டும். அப் பொழுது தான் நோயின் இயற்கை வடிவைத் தெளிவாய் அறிய முடியும்.

• •

ஆனுல் நோய் மிக வேகமாக வளர்ச்சியடையும் குணமுள்ள தாய் இருக்கிறது; அதன் ஆபத்தான குறிகள் சிறிதளவு தாமதத்துக்கும் இடம் தரவில்லை; மருந்து சாப்பிடுவதற்கு முன் இருந்த நோய்க் குறிகளைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவ்விதமான ஓர் நிலைமையில், நோயாளி யிடம் தென்படும் நோய்க் குறிகளை, (அவை மருந்து களால் மாற்றப் பட்டிருந்தாலும்) உள்ளதை உள்ளபடி கவனிப்பதுடன் வைத்தியர் திருப்தியடைய வேண்டும். அப்பொழுது தான் மருந்துகளாலும் முதலில் வந்த நோயினுலும் உண்டாக்கப்பட்டுள்ள கூட்டு நோயின் முழு உருவையும் தன்மையையும் அறிந்து கொள்ளலாம்; அசல் நோயைவிடத் தகுதியற்ற மருந்துகளால் விளையும் கேடுகள் ஆபத்தானவை; ஆகவே விரைவிலும் தகுந்த ஹோமியோபதி மருந்தைக் கொடுத்தும் சிகிச்சை செய்ய வேண்டும். விஷத் தன்மையுள்ள மருந்துகளால் நோயாளியின் உயிர் பறிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

நோய் தோன்றுவதற்குக் காரணமான விஷயத்தை நோயாளியை அல்லது அவருடைய நண்பர்களைத் தனியே அழைத்துக் கேட்டால் அவர்கள் தாமாகவே சொல்லி விடுவார்கள்; அல்லது சாமர்த்தியமாகக் குறுக்குக் கேள்விகளைக் கேட்டும் அறியலாம்.*

நீடிக்கும் வகையைச் சேர்ந்த நோய்களைப் பற்றி ஆராயும் போது, நோயாளி செய்து வரும் தொழில், வாழும் விதம், உண்ணும் உணவு, குடும்பச் சூழ்நிலை முதலிய பல விஷயங்களையும் நன்ருகச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அவ்வாறு பார்த்தால் அவ்விஷயங்களில் எவை எவை நோயை உண்டாக்குகின்றன அல்லது நீடிக்கச் செய்கின்றன என்பதை நிர்ணயித்து அவைகளை விலக்கிஞல் விரைவில் குணம் காண வழி செய்யலாம்.†

---

*விஷம் அருந்துதல் அல்லது தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தல், இயற்கைக்கு மாருன முறைகளில் சிற்றின்பம் பெறுதல். அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபடுதல், மிதமிஞ்சி கள், சாராயம், காப்பிப் பானம், உணவு வகைகள் ஆகியவைகளை உட்கொள்ளுதல், துன்மார்க்க நோய்களைச் சம்பாதித்துக் கொண்டிருத்தல், நிறைவேருத காதல், பொருமை, குடும்பத் தொல்லைகள், கவலை, குடும்பத்தில் நேர்ந்த நஷ்டத்திஞல் வருத்தம், கௌரவமாக நடத்தப்படாமை, மதிப்பை இழத்தல், வஞ்சம் தீர்க்க முடியாமல் போகுதல், பண விஷயத்தில் சங்கடமான நிலைமை, மூட நம்பிக்கை காரணமாய் ஏற்படும் பயம், பசி, பிறப்பு உறுப்புகள் சரிவர அமைந்திராமை, ஏதோ ஒரு உறுப்பு பிதுங்கி இருத்தல், இடம் நழுவி இருத்தல் முதலிய பல அந்தரங்கமான விவரங்களை நோயாளியோ அல்லது அவருடைய நண்பர்களோ தாமாகச் சொல்லத் தயங்கும்போது வைத்தியர் சாமர்த்தியமாய்க் கேள்விகள் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

†பெண்களுக்கு ஏற்படும் நீடிக்கும் வகை நோய்களில் கருவுற்றிருத்தல், மலட்டுத் தன்மை, சிற்றின்ப ஆசை, பிள்ளைப் பேறு, கருச்சிதைவு, குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்தல், மாதவிடாய்ப் போக்கின் தன்மை ஆகிய விவரங்களை முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். கடைசியாகக் கூறப்பட்ட விவரத்தைப்பற்றி இன்னும் விரிவாய்த் தெரிந்து கொள்ளத் தவறக் கூடாது. போக்கு உரிய காலத்துக்கு முன்னதாக அடிக்கடி ஏற்படுகிறதா அல்லது தாமதமாய் ஏற்படுகிறதா ; எவ்வளவு நாட்கள் நீடித்திருக்கிறது ; இடைவிடாமல் வெளியாகிறதா அல்லது விட்டு

நீடிக்கும் வகை நோய்களில், மேலே குறிப்பிட்ட நோய்க் குறிகளையும் மற்ற விவரங்களனைத்தையும் மிகுந்த கவனமாய்க் கேட்டறிய வேண்டும். அத்துடன் மிக அல்பமானவை என்று கருதக்கூடிய சில்லரைக் குறிகளைக் கூட விட்டுவிடக் கூடாது. இதற்குக் காரணம் இரு வகைப்படும். முதலாவது: நீடிக்கும் வகை நோய்களில், சில்லரைக் குறிகள் மிகுந்த விசேஷத்தன்மை பொருந்தியவைகளாய் இருக்கின்றன. திடீர் வகை நோய்களில் அவ்விதம் இல்லை. ஆதலால் நீடிக்கும் வகை நோய்களைக் குணம் செய்ய வேண்டுமானால் விசேஷத்தன்மை பொருந்திய சில்லரைக் குறிகளைக் கவனிக்காமல் முடியாது. இரண்டாவது: நோயினால் ஏற்படும் வேதனைகளை நீண்ட காலமாய் அனுபவித்துப் பழக்கப்பட்டு விட்டதால் சில்லரைக் குறிகளை நோயாளிகள் அவ்வளவாகப் பாராட்டுவதில்லை. அலட்சியமும் செய்யலாம். தம் உடம்புடனேயே பிறந்தது என்றும் நினைக்கலாம். பதினைந்து அல்லது இருபது ஆண்டுக் காலமாய் நோயின் வேதனைகளுக்குப் பழக்கப்பட்டுவிட்ட அவர்கள் இச்சில்லரைக் குறிகள் நோயினால் ஏற்பட்டவை, ஆரோக்கிய நிலைமைக்கு மாறுபட்டவை என்று நாம் கூறினால் எளிதில் நம்ப மாட்டார்கள். ஆனால், சில்லரைக் குறிகள் விசேஷத்தன்மை வாய்ந்தவை, ஏற்ற மருந்தைத் தேர்ந்தெடுப்பதில் பல சமயங்களில் உதவியாய் இருப்பவை என்பதை வைத்தியர் மறக்கக் கூடாது.

விட்டு வெளியாகிறதா; அதன் பொதுவான அளவு என்ன; எவ்வளவு கறுப்பு நிறமாய் இருக்கிறது; போக்கு தோன்றுவதற்கு முன்போ அல்லது நின்ற பிறகோ வெள்ளை நீர்க்கழிவு வெளியாகிறதா; போக்கு உள்ள போதோ, முன்னோ பிறகோ ஏற்படக்கூடிய உடல் மனக் கோளாறுகள், உணர்ச்சிகள், வலி ஆகியவைகளின் விவரம்; வெள்ளை நீர்க்கழிவு இருந்தால் அதன் தன்மை, அது வெளியாகும்போது காணப்படும் உணர்ச்சிகள், கழிவு நீரின் அளவு, எவ்வித நிலைமைகளில், சமயங்களில் அது தோன்றுகிறது ஆகியவைகளைக் கேட்டறிய வேண்டும்.

நோயாளிகளின் குண விசேஷங்கள் பல விதமாய் மாறுபட்டு இருக்கின்றன. உண்மையான காரணம் எதுவும் இல்லாமல் தமக்கு ஏதோ ஒரு நோய் வந்து விட்டதாக எண்ணி வீணில் கவலைப் படுகிறவர்கள், நோயின் வேதனைகளைத் தாங்க முடியாத உடல்வாகு உள்ளவர்கள் ஆகியோர் வேதனையிலிருந்து விரைவில் விடுபட வேண்டும் என்ற துடிப்பினால் உந்தப்பட்டுத் தம் நோய்க் குறிகளை மிகைப்படுத்திக் கூறுவார்கள். மற்றும் சிலர் சோம்பல், போலி வெட்கம், அடக்கமான சுபாவம் அல்லது மனோ பலவீனம் ஆகியவைகளால் தம் நோய்க் குறிகளில் பலவற்றைச் சொல்லாமல் இருந்துவிடுவார்கள்; சொல்லப்படும் குறிகளும் தெளிவாய் இருக்காது. அக்குறிகளில் சில உபயோக மற்றவை என்றும் அவர்கள் கூறலாம்.

நோயாளியின் நண்பர்களும் அவரைக் கவனிப் போரும் சொல்லக்கூடிய நோய்க் குறிகளில் சில உண்மைக்கு மாறாகவும் - தவறாகவும் இருப்பது இயல்பு. ஆதலால் தன் நோயைப்பற்றி வைத்தியர் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கந்துடன் நோயாளி கூறும் விவரங்களையே நாம் பெரிதும் மதிக்க வேண்டும். அதே போல எல்லா நோய்களிலும், குறிப்பாக நீடிக்கும் வகை நோய்களில், அவைகளின் உண்மையான, முழு உருவங்ள், விசேஷக் குறிகள் ஆகியவைகளை விசாரிக்கும் பொழுது மனித சுபாவத்தை அறிந்து, பகுத்தறிவை உபயோகித்துப் பொறுமையைக் கடைப் பிடித்து நடக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

மொத்தத்தில் திடீர்வகை நோய்களையும், தோன்றிச் சில நாட்களே ஆன நோய்களையும் விசாரிப்பது வைத்தியருக்கு மிக மிகச் சுலபமாய் இருக்கிறது. ஆரோக்கிய நிலைமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் நோய்க்குறிகளும் தோன்றிச் சில நாட்களே ஆவதால் அவை நோயாளி, அவர் நண்பர்கள் ஆகியவர்களின் நினைவில்

பசுமையாய் இருக்கின்றன. அது போன்ற சமயங்களிலும் நோயின் விவரங்கள் அனைத்தையும் வைத்தியர் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் தான் என்றாலும் அவர் விசாரணை செய்ய வேண்டியது மிகக் குறைவாய் இருக்கும். நோயாளியும் அவருடைய நண்பர்களும் தாமாகவே பெரும்பகுதியான விவரங்களைக் கூறி விடுவார்கள்.

பெரு வாரியாகவோ அல்லது இங்கொன்றும் அங்கொன்று மாகவோ தோன்றும் நோய்களின் மொத்தக் குறிகளைப் பற்றி விசாரணை செய்கையில், அவைகளைப் போன்ற ஒரு நோய், அதே பெயரிலோ அல்லது வேறு பெயரிலோ, உலகத்தில் எப்பொழுதாவது தோன்றியிருக்கிறதா இல்லையா என்று ஆராயவேண்டிய அவசியம் துளிக் கூட இல்லை. அவ்வகையான ஒரு நோயில் தென்படும் புதுமை அல்லது விநோதம் காரணமாக அந்நோயைச் சோதிப் பதிலோ சிகிச்சை செய்வதிலோ மாறுதல் ஏற்படமுடி யாது. ஏனெனில் உலகில் தோன்றும் ஒவ்வொரு நோயையும் புத்தப் புதியதாகவே மதித்து அதை முற்றிலும் விசாரித்தறிய வேண்டும். உண்மையைப் புறக் கணித்துக் கற்பனையை நாடுவது எச் சமயத்திலும் கூடாது. தன்னிடம் சிகிச்சைக்கு வரும் நோயாளியின் நோய் முழுவதுமோ அல்லது அதன் ஒரு பகுதியோ தனக்குத் தெரிந்தது தான் என்ற முன் கூட்டிய அபிப் பிராயம் கொள்ளாமல் இருக்க வேண்டும். எல்லாச் சமயங்களிலும் நோயின் எல்லா விவரங்களையும் கவன மாய்ச் சோதித்தறிய வேண்டும். உண்மையான குற்ற மில்லாத முறையில் வைத்தியத் தொழில் புரிய ஆவல் உள்ளோரின் விருப்பம் நிறை வேற இதுவே வழி. ஊன்றிக் கவனித்தால் உலகில் பெருவாரியாய்த் தோன்றும் ஒவ்வொரு நோயும் பல விஷயங்களில் அதற்கு முன்னதாகத் தோன்றிய எந்தப் பெருவாரி நோயுடனும் சிறிதளவு கூட ஒற்றுமை யுள்ளதாக இல்லை. தொற்றும் குண முள்ள ஒரு வகைப் பொருளால் (கிருமிகளால்) உற்பத்தி செய்யப்படும் பெரியம்மை,

சின்னம்மை முதலிய பெருவாரி நோய்கள் மட்டும் இதற்கு விலக்கு.

பெருவாரி நோய் ஒன்றுல் தாக்கப்பட்டுத் தன்னிடம் சிகிச்சை பெற வரும் முதல் நோயாளியின் குறிகளைக் கொண்டு அந் நோயின் முழு உருவத்தையும் தெரிந்து கொள்ள வைத்தியருக்கு முடியாமல் போவது சகஜம். பல நோயாளிகளை ஊன்றிக் கவனித்த பிறகு தான் நோயின் மொத்தக் குறிகளை அறிய முடியும். ஆயினும் மிகக் கூர்ந்து கவனிக்கும் வைத்தியர் ஒன்று அல்லது இரண்டு நோயாளிகளைப் பார்த்தவுடனே பல சமயங்களில் நோயின் உண்மையான தன்மையையும் முழு உருவையும் அறிந்து கொண்டு அதற்கேற்ற ஹோமியோபதி மருந் தைத் தேர்ந் தெடுக்கலாம்.

பெருவாரி நோயினுல் தாக்கப்படும் பல நோயாளிகளின் குறிகளை எழுதிக் கொண்டு வரும்போது அந் நோயின் உருவக்கோடு படிப்படியாய்ப் பூர்த்தியடைகிறது. குழப் பத்தை உண்டாக்குவதில்லை. நோயின் பொதுக் குறி களில் (உதாரணம்: பசி இல்லாமை, தூக்கம் இல்லாமை முதலியவை) காணப்படும் விசேஷத் தன்மைகள் தெளிவாய்த் துலங்குவதுடன் அதன் சிறப்புக் குறிகளும் முக்கியக் குறிகளும் மேலும் விளக்கம் பெற்று நோயின் தனிப்பட்ட குறிகளாய் அமைகின்றன. குறிப்பிட்ட ஒரு சமயத்தில் பெருவாரி நோயொன்றினுல் தாக்கப்படும் எல்லா நோயாளிகளும் ஒரே ஒரு இடத்திலிருந்து தான் நோயை அடைந்திருக்கின்றனர் என்பது நிச்சயம். ஆதலால் அவர்கள் எல்லோரும் ஒரே நோயினுல் தான் தாக்கப்பட்டிருக்கின்றனர். ஆயினும் இத்தகைய பெரு வாரி நோயின் முழு உருவத்தையும் ஒரே ஒரு நோயாளி யிடமிருந்து அறிய முடியாது. மாறுபட்ட உடல் வாகுள்ள பல நோயாளிகளின் நோய்க் குறிகளைத் தொகுத்துத் தான் அறிய முடியும்.

அனேகமாகத் திடீரென்றே தோன்றும் குணமுள்ள பெருவாரி நோய்களைப் போலவே, விஷநோய்க் கூறுகளால், அவைகளிலும் முக்கியமாய் ஸோரா எனப்படும் விஷநோய்க் கூற்றினுல், ஏற்படும் நீடிக்கும் வகை நோய்களை மிக நுணுக்கமாய் ஆராய்ந்து அவைகளின் குறிகளனைத்தையும் மிக விரிவான முறையில் கவனிக்க வேண்டும். ஏனெனில் பெருவாரி நோய்களில் காணப்படுவதைப் போலவே நீடிக்கும் வகை நோய்களிலும் ஒரு நோயாளியிடம் அந்நோய்களின் பல குறிகளில் ஒரு சிலவே காணப்படும். இரண்டாவது நோயாளியிடம் வேறு சில குறிகள் தென்படும். இவ்விதம் ஒவ்வொரு நோயாளியிடமும் காணப்படும் ஒவ்வொருவிதமான நோய்க் குறிகள் நோயின் மொத்தக் குறிகளில் ஒரு பகுதியே. ஆதலால் எல்லாப் பகுதிகளையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால்தான் விஷநோய்க் கூற்றினுல் உண்டாக்கப்படும் நோய்களின் முழு உருவத்தையும் நாம் உணர முடியும். முழு உருவத்தை உணராமல் விஷ நோய்க் கூறுகளை நீக்கக்கூடிய ஹோமியோபதி மருந்தைக் கண்டு பிடிக்க முடியாது. விஷநோய்க் கூறுகளை நீக்கும் மருந்துகளால்தான் நீடிக்கும் வகை நோய்களைக் குணம் செய்ய முடியும்.

எவ்வகையைச் சேர்ந்ததாய் இருந்தாலும், ஒரு நோயின் மொத்தக் குறிகளை, அதாவது அதன் உருவத்தை, ஒழுங்காய் வரைந்துவிட்டோமானுல், மிகக் கஷ்டமான ஒரு காரியத்தை முடித்தவர்களாவோம். சிகிச்சை செய்யும் காலத்தில் வைத்தியருக்குத் தேவையான சமயங்களிலெல்லாம் அந்நோயின் உருவம் உதவி செய்யும். மொத்தக் குறிகளிலுள்ள ஒவ்வொரு பிரிவையும் தனித் தனியே ஆராயலாம். சிறப்புக் குறிகளைத் தேடிப் பிடித்து முழு நோயையும் நீக்க வல்ல மருந்துகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

இரண்டாவது முறையாக நோயாளியைச் சோதனை செய்யும்போது முதல் சோதனையில் காணப்படாத புதுக் குறிகள் இருந்தால் அக்குறிகளைச் சேர்த்து, முதல் சோதனையில் காணப்பட்டு அப்பொழுது காணப்படாத குறிகளை அடித்துவிட்டால், மருந்துகளால் ஏற்பட்ட விளைவுகளையும், நோயாளியின் உடல் நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் வைத்தியர் எளிதிலே கண்டு கொள்ளலாம்.

*இரண்டாவது வினாவுக்கு விடை (105—145)

உண்மையான வைத்தியரொருவர் நோயை நீக்கத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களைத் தீர்மானிப்பது எப்படி என்ற முதல் கேள்விக்கு மேலே விடை அளித்தாகிவிட்டது. அடுத்தபடி இயற்கையாக ஏற்படும் நோய்களை நீக்கத்தக்க பொருள்கள், மருந்துகளுக்குள்ள நோயுண்டாக்கும் சக்தி ஆகியவைகளைப் பற்றித் தெரிந்துகொள்வது எப்படி என்ற இரண்டாம் கேள்விக்கு விடையளிக்க வேண்டும். இவ்விடை தெரிந்தால்தான், அதாவது ஒவ்வொரு மருந்தும் (நோயற்ற உடலில்) தோற்றுவிக்கும் (செயற்கை நோய்க்) குறிகளின் பட்டியலைக்கொண்டுதான், அவைகளில் எந்த மருந்து சிகிச்சைக்கு வந்துள்ள (இயற்கை) நோயின் மொத்தக் குறிகளுடன் ஏறக்குறைய ஒற்றுமையுள்ள குறிகளை உண்டாக்கியிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அம் மருந்தைக் கொடுத்து குணம் செய்ய முடியும்.

பல மருந்துகளைப் பற்றி, அவை ஒவ்வொன்றும் நோயற்ற உடலில் ஏற்படுத்தும் மாற்றங்களும் தோற்றுவிக்கும் (செயற்கை) நோய்க் குறிகளும் என்னென்னவென்று முதலில் விவரமாய்த் தெரிந்துகொள்ள வேண்டும்.

---

*வினாவின் விவரம் 51-ம் பக்கத்தில் காணலாம்.

அப்போதுதான் இயற்கை நோய்களுக்கு ஏற்றதாயுள்ள மருந்தைத் தேடிப் பொறுக்க முடியும்.

ஒவ்வொரு மருந்துக்கும் என்னென்ன நோய்க் குறிகளை உண்டாக்கும் வல்லமை இருக்கிறது என்று நிர்ணயிக்க மருந்துகளை நோய் உள்ளவர்களுக்குக் கொடுத்துச் சோதிக்கலாம். ஆனால், அவ்வாறு செய்தால் மருந்தினால் உடலில் தோன்றக்கூடிய நோய்க் குறிகள் இயற்கை நோயின் குறிகளுடன் கலந்து குழப்பத்தை உண்டாக்கிவிடும்.

ஆதலால் ஆரோக்கியமான மனித உடலிலே மருந்துகளால் தோற்றுவிக்கப்படும் நோய்க் குறிகள் என்னென்ன என்பதைத் தவறு இல்லாமல் நிர்ணயிக்க வேறு வழி இல்லை. ஒவ்வொரு மருந்தும் நோயற்ற ஒருவரின் உடலிலும் மனதிலும் என்னென்ன மாற்றங்களையும் குறிகளையும் அதாவது நோய்க் குறிகளை உண்டாக்கும் வல்லமை பெற்றிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள, ஒவ்வொரு மருந்தையும் தனித் தனியே, மிதமான அளவுகளில், நோயற்ற ஒருவருக்குக் கொடுத்துச் சோதிப்பதைத் தவிர வேறு சிறந்த வழி ஒன்றுமே இல்லை. செயற்கை நோய்க் குறிகளை (நோயற்ற உடலில்) உண்டாக்கும் இயல்பைப் பெற்றிருப்பதாலேயே, ஒவ்வொரு மருந்தும் இயற்கை நோயை நீக்குகிறது.

இந்த வழியை முதன் முதலில் கண்டு பிடித்தது நானே. ஹோமியோபதி மருந்துகளால்தான் மனித வர்க்கத்தின் நோய்களை நீக்க முடியும் ; அவை மக்களுக்கு ஓர் வரப் பிரசாதமாய் அமையும், என்ற பேருண்மையில் ஆழ்ந்த, அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு இருந்ததாலேயே, விடாமுயற்சியுடன் இவ்வழியில் தொடர்ந்து சென்றேன்.

• •

தவறுதலாக அல்லது தன்னுயிரையோ, பிற உயிரையோ மாய்க்கும் பொருட்டு அல்லது வேறு ஏதோ ஒரு சந்தர்ப்பம் காரணமாய் நோயற்ற உடலுள்ளவர்களை

மருந்துப் பொருள்களை அதிக அளவில் உட்கொண்ட போது உடலில் காணப்பட்ட விளைவுகளை எனக்கு முன்னிருந்த ஆசிரியர்கள் பலர் கவனித்துக் குறித்து வைத்திருக்கின்றனர். என் உடலிலும் நோயற்ற வேறு சிலர் உடலிலும் அம்மருந்துகளைச் செலுத்திச் சோதனை செய்தபோது தோன்றிய குறிகள் அவ்விளைவுகளுடன் பெரும்பாலும் ஒற்றுமையாய் இருந்ததை நான் கவனித்தேன். விஷமிடப்பட்ட வரலாறுகளைப் பற்றியும் இத்தகைய பலம் பொருந்திய மருந்துகளின் கெடுதலான விளைவுகளைப் பற்றியும் அவர்கள் விரிவாய் எழுதியதற்கு முக்கியக் காரணம் இம்மருந்துகளை உபயோகிப்பது ஆபத்து என்று மற்றவர்களை எச்சரிக்கவே ஆகும். ஆயினும் இவ்விஷ மருந்துகளை உட்கொண்டு தங்களிடம் சிகிச்சை பெற வருவோர் தெய்வாதீனமாய்ப் பிழைத்துவிட்டால் "பார்த்தீர்களா என் சாமர்த்தியத்தை; எவ்வளவு கொடுமையான விஷத்திலிருந்து காப்பாற்றி விட்டேன்" என்று தற்பெருமை பேசிக் கொள்ளவும், அவர்கள் இறந்துவிட்டால் "நான் ஏன்ன செய்வேன்? விஷம் அவ்வளவு கொடுமையானது" என்று கூறி விஷத்தின்மீது பழியைச் சுமத்திவிட்டுத் தான் தப்பித்துக் கொள்ளவும் அவ்விவரங்கள் ஓரளவுக்கு உபயோகப் படுத்தப்பட்டன. மருந்துப்பொருள்களிலுள்ள விஷத் தன்மைக்கு அத்தாட்சிகள் என்று சர்வ சாதாரணமாய் அவர்கள் குறித்து வைத்துள்ள விவரங்கள் கீழுள்ள மாபெரும் உண்மைகளை வெளியிடுகின்றன என்பதை அவர்கள் கனவிலும் நினைக்கவில்லை.

1. இயற்கை நோய்களில் ஏற்படும் ஒற்றுமையான குறிகளை நீக்கும் வல்லமை அம்மருந்துகளுக்கு இருக்கிறது.
2. அம்மருந்துகளுக்குள்ள நோய்களை உண்டாக்கும் சக்திகள் ஹோமியோபதி முறைப்படி நோய்களை நீக்க அவைகளால் முடியும் என்பதற்கு அடையாளம்.
3. நோயற்ற உடலில் மருந்துகள் ஏற்படுத்தும் மாற்றங்களிலிருந்துதான் அவைகளின் நோய் தீர்க்கும்

வல்லமையை அறிய முடியும். வேறு வழி கிடையாது. நோய்களைக் குணம் செய்ய உதவும் மருந்துகளின் உண்மையான சக்தியை சாமர்த்தியமாய்ப் புனையப் படும் கற்பனைகளின் மூலமோ, மருந்துகளின் வாசனை, சுவை, தோற்றம் ஆகியவைகளைக் கொண்டோ, ரஸாயன முறைப்படி ஆராய்ச்சிகள் செய்தோ அல்லது பல மருந்துகளைக் கலந்து கொடுப்பதாலோ அறிய முடியாது.

மருந்துகளால் ஏற்படுத்தப்படும் உண்மையான விளைவு களைப் பற்றி நான் கவனித்தறிந்த விவரங்கள் எனக்கு முன் இருந்தவர்கள் எழுதி வைத்துள்ள விவரங்களுடன் ஒற்றுமையாய் இருக்கின்றன. அது மட்டுமல்ல. வேறு பல ஆசிரியர்கள் எழுதியுள்ள விவரங்களுடனும் ஒற்றுமையாய் இருக்கின்றன. நோயற்ற மனித உடலில் நிலையான, அழிவற்ற இயற்கைச் சட்டங்களுக்கு உட்பட்டுத் தாம் உண்டாக்கும் நோய்க் குறிகளை மருந்துகள் நீக்கு கின்றன என்பதும் அவ்வியற்கைச் சட்டங்களின் துணை கொண்டு ஒவ்வொரு மருந்தும் அதனதன் தன்மைக்குத் தக்கபடி உண்மையான நோய்க் குறிகளை உண்டாக்கு கின்றது என்பதும் இப்பொழுது எளிதிலே விளங்கும்.

மிக அதிகமான அளவுகளில் மருந்துகளை உட்கொண்டதால் ஏற்பட்ட கெடுதலான விளைவுகளைப் பற்றி முற்காலத்திய வைத்தியர்கள் எழுதி வைத்துள்ள விவரங்களிலிருந்து ஆரம்பக் காலத்தில் தோன்றிய குறிகளுக்கு நேர் மாறான குறிகள் முடிவுக் காலத்தில் தோன்றின என்பது தெரி கிறது. *முதல் வேலைக்கு, அதாவது மருந்துகள் உயிர்ப்புச் சக்தியைத் தாக்கும் முதல் வேலைக்கு நேர் எதிராக உள்ள இக் குறிகள் உடலிலுள்ள உயிர்ப்புச் சக்தியின் எதிர்த் தாக்குதலினால் அதாவது அதன் †இரண்டாம் வேலையினால்

---

*முதல் வேலை—Primay Action (ப்ரைமரி ஆக்ஷன்)

†இரண்டாம் வேலை—Secondary Action (ஸெகண்டரி ஆக்ஷன்)

ஏற்பட்டவை. நோயற்ற உடலில் மருந்துகளைக் குறைந்த அளவில் கொடுத்துச் சோதனை செய்யும் போது இரண்டாம் வேலைக் குறிகள் அனேகமாய் ஏற்படுவதில்லை. மருந்துகளின் அளவை மேலும் சிறிது குறைத்துச் சோதனை நடத்தினால் இரண்டாம் வேலைக் குறிகள் என்ற பேச்சுக்கே இடமிருப்பதில்லை. ஹோமியோபதி முறைப்படி நோய்களை நீக்குவதற்காக மருந்துகளை உபயோகிக்கும் போது உடலை நோயற்ற நிலைமைக்கு மீட்டுக் கொண்டு வர எவ்வளவு தேவையோ அந்த அளவுக்குத்தான் உயிருள்ள உடல் மருந்தை எதிர்த்து வேலை செய்கிறது.

மயக்க மூட்டும் மருந்துகள் மட்டும் மேலுள்ளதற்கு விதிவிலக்கு. நோயற்ற உடலில் அம் மருந்துகளை மிதமான அளவுகளில் கொடுத்துச் சோதனை செய்தால் கூட, முதல் வேலையில் அவை சில சமயங்களில் உடலின் உணர்ச்சிகளைப் போக்கி விடுகின்றன. அதனால் அவைகளின் இரண்டாம் வேலையில் அவை உடல் உணர்ச்சிகளை அதிகரிக்கின்றன.

மயக்க மூட்டும் மருந்துகளைத் தவிர வேறு எந்த மருந்தும் நோயற்ற உடலில், மிதமான அளவில் கொடுக்கப் பட்ட போது, அதன் முதல் வேலையைத் தவிர, அதாவது ஆரோக்கியத்தைக் கெடுத்துப் பல நாட்களுக்கோ சில நாட்களுக்கோ நீடிக்கும் நோயொன்றை ஏற்படுத்துவதற்கான நோய்க் குறிகளைத் தவிர வேறு எதையும் உண்டாக்கவில்லை.

சில மருந்துகளால் அவைகளால் முதலிலோ பிறகோ தோற்றுவிக்கப்படும் நோய்க் குறிகளுக்கு ஓரளவு மாறான அல்லது முற்றிலும் எதிரான வேறு பல நோய்க் குறிகள் தோன்றுகின்றன. அவைகளை மருந்தின் இரண்டாம் வேலை என்றோ அல்லது உயிர்ப்புச் சக்தியின் எதிர்ப்பு என்றோ நினைக்கக் கூடாது. மருந்துகளின் முதல் வேலையில் அவை ஒரு பகுதியே. ஆதலால் அக் குறிகளை

மருந்தின் ‡மாற்று வேலை எனப்பெயரிட்டு அழைக்கிறோம்.

மருந்துகளின் குறிகளில் சில எல்லா மனிதர்களிடமும் தோன்றுகின்றன. சில மிக அபூர்வமாகவோ அல்லது ஒரு சிலரிடம் மட்டுமோ தோன்றும். மற்றும் சில ஆரோக்கிய நிலையிலுள்ள எவருக்குமே தோன்றுவதில்லை.

பெரும்பாலான மக்களுக்கு எவ்விதத் தீங்கையும் உண்டாக்காத சிற்சில பொருள்க்ள் ஒரு சிலருக்குக் கூடுதலாகவோ குறைவாகவோ நோயை உண்டாக்குகின்றன. இதற்குக் காரணம் அவர்களுடைய மாறுபட்ட உடல் வாகு என்று சொல்லப்படுகிறது. உடல் வாகு காரணமாய்த்தான் அப்பொருள்கள் மற்றுமுள்ள பலரையும் தாக்கவில்லை என்று நினைப்பது சரியல்ல. ஏனெனில் நோயற்ற உடலில் நோய்க் குறிகளை ஏற்படுத்த இரண்டு விஷயங்கள் தேவை. ஒன்று நோயை உண்டாக்கும் பொருள்களுக்கு இயல்பாய் அமைந்துள்ள சக்தி. மற்றொன்று நோயுண்டாக்கும் பொருளால் தாக்கப்படும் தன்மை உயிர்ப்புச் சக்திக்கு இருத்தல். ஆகவே ஒரு நோய்ப் பொருளால் ஒரு சிலர் மட்டும் நோய் உறுவதற்கு அவர்களுடைய உடல் வாகு ஒன்றே காரணம் என்று சொல்ல இடமில்லை. நோய்ப் பொருள்களின் சக்தி, உயிர்ப்புச் சக்தியின் நோயை ஏற்கும் தன்மை ஆகிய இவ்விரண்டும் அதில் பங்கு கொள்கின்றன. நோய்ப் பொருள்கள் எல்லோர் உடலையும் தவறாமல் தாக்கத்தான் செய்கின்றன. ஒரு சிலர் உடலில் மட்டும் நோய்ப் பொருளை ஏற்கும் தன்மை இருப்பதால் அவர்களுக்கு நோயின் குறிகள் தோன்றுகின்றன. ஒரு நோய்ப் பொருளின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் என்று கருதப்படும் நபர்களிடம் தென்படும் நோய்க் குறிகளைக் கவனித்து, அக்குறிகளுடன் நெருங்கிய ஒற்றுமையுள்ள குறிகளை

‡மாற்று வேலை—Alternating Action (ஆல்டர்னேடிங் ஆக்ஷன்)

உடைய நோயில் அப்பொருளை ஹோமியோபதி மருந்தாய் உபயோகித்தால் நோயுற்றவர்கள் எல்லோருக்கும் குணம் ஏற்படுகிறது. ஆகவே நோய்ப் பொருள்கள் எல்லோர் உடலிலும் தம் சக்தியைக் காட்டத்தான் செய்கின்றன என்பது இப்பொழுது விளங்கும்.

ஒவ்வொரு மருந்தும் மனித உடலைத்தாக்கி அதற்கே உரியதான நோய்க் குறிகளைத் தோற்றுவிக்கிறது. அந்நோய்க் குறிகள் வேறு மருந்துகளால் தோற்றுவிக்கப்படும் நோய்க் குறிகளுடன் முற்றிலும் ஒற்றுமையுள்ளவைகளாய் இருப்பது கிடையாது.

தாவரங்களில் பல இனங்கள் இருக்கின்றன. புறத்தோற்றம், உயிர் வாழும் விதம், வளர்ச்சி, சுவை, வாசனை முதலிய விஷயங்களில் ஒவ்வொரு இனத்துக்கும் வேற்றுமை இருக்கிறது. உலகில் கிடைக்கும் கனிப் பொருள்கள், உப்புப் பொருள்கள் ஆகியவை ஒன்றுக்கொன்று பல விதங்களில் மாறுபாடாய் இருக்கின்றன. இதனால் தான் குழப்பம் இல்லாமல் அவை ஒவ்வொன்றையும் நாம் தனித் தனியாய்ப் பாகுபாடு செய்து அறிந்து கொள்கிறோம். இதே போல அவை உண்டாக்கும் நோய்க் குறிகளிலும் வித்தியாசம் இருக்கிறது. எப்பொழுது அவை உண்டாக்கும் நோய்க் குறிகளில் வித்தியாசம் இருக்கிறதோ, அப்போது அவை நீக்கும் நோய்க் குறிகளிலும் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும் என்று சொல்லத் தேவை இல்லை. ஒவ்வொரு பொருளும் மனிதர்களின் ஆரோக்கியத்தைக் குலைத்து, வேறு ஒரு பொருளால் தோற்றுவிக்கப்பட்டனவோ என்ற சந்தேகத்துக்குச் சிறிதும் இடம் வைக்காதபடி, ஒவ்வொரு விதமான, வேற்றுமைகளை உடைய நோய்க் குறிகளை உண்டாக்குகின்றன.

மனிதனின் உயிரும் சாவும், நோயும் ஆரோக்கியமும் மருந்துகளில் அடங்கி இருக்கின்றன. ஆதலால் ஒவ்வொரு மருந்துக்கும் உள்ள தனிப்பட்ட குணங்களைக்

கவனமாய் அறிந்து கொள்ளவேண்டும். மருந்துகளைப் பற்றிய உண்மையான அறிவைப் பெறவும் நோய்களை நீக்க அவைகளை உபயோகிக்கும் போது தவறு நேராமல் இருக்கவும் நோயற்ற உடலிலே அவைகளைக் கொடுத்துச் சோதனை செய்து அவைகளின் வலிமையையும் உண்மை விளைவுகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். தவறு இல்லாமல் மருந்துகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தால் தான் மனிதனின் மனதிலும் உடலிலும் ஏற்படும் நோய்களை விரைவிலும் நிரந்தரமாகவும் நீக்க முடியும்.

நோயற்ற உடலிலே மருந்துகளால் ஏற்படுத்தப்படும் விளைவுகள் யாவை என்று கண்டு பிடிக்கச் சோதனை செய்யும் போது அம் மருந்துகளின் தன்மையை அனுசரித்து அவைகளின் அளவுகளைக் குறைக்கவும் கூட்டவும் வேண்டும். இவ்விஷயத்தை மறக்கக் கூடாது. அதாவது கொடூரத் தன்மையுள்ள மருந்துகள் குறைந்த அளவுகளில் கொடுக்கப்பட்டாலும் உறுதியான உடல் கட்டு உள்ளவர்களையும் தாக்கி நோய்க் குறிகளை உண்டாக்குகிறது. அதிகமான கொடூரத் தன்மை இல்லாத மருந்துகளை அதிக அளவுகளில் கொடுத்துச் சோதனை செய்யலாம். மிகப் பலவீனமான தன்மையுள்ள மருந்துகளைச் சோதனை செய்வதற்காக உட்கொள்ளும் மனிதர்கள் நோய் இல்லாமல் இருப்பதுடன் ஒற்றை நாடி உடலையும் எளிதிலே உணர்ச்சிகளை அறியும் தன்மையையும் பெற்றிருக்க வேண்டும்.

இம் மருந்துச் சோதனைகளில் இரண்டு மாபெரும் விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. ஒன்று வைத்தியக் கலையின் எல்லாப் பிரிவுகளும் மாசுமருவற்றதாய் ஆக வேண்டும். இரண்டாவது மனித சமூகத்தின் பிற்காலச் சந்ததிகள் எல்லோருடைய நலன்களும் செவ்வனே பாதுகாக்கப்பட வேண்டும். ஆதலால் உபயோகிக்கும் மருந்துகள் நமக்கு நன்ருய்த் தெரிந்தவைகளாய் இருக்க வேண்டும். அவைகளின் சுத்தத் தன்மையில் எவ்விதச் சந்தேகத்துக்கும் இடம் இருக்கக்கூடாது.

இம்மருந்துகள் ஒவ்வொன்றையும் முற்றிலும் தூய்மையான உருவிலே உட்கொள்ளவேண்டும். அதாவது அருகில் கிடைக்கும் பச்சிலை மூலிகைகளை நசுக்கிச் சாறு பிழிந்து உட்கொள்ளலாம். சாறு கெட்டுப் போகாமல் இருக்க அதனுடன் சிறிதளவு அல்கஹாலைக் * கலக்கலாம். அயல் நாடுகளிலேயே கிடைக்கக் கூடிய பச்சிலை மூலிகைகளைத் தூள் செய்து உட்கொள்ளவேண்டும். அல்லது அவை பசுமையாய் இருந்த சமயத்தில் சாறு பிழிந்து உடனே அல்கஹாலுடனும் பிறகு குறிப்பிட்ட அளவில் தண்ணீருடனும் கலந்து வைக்கப்பட்ட திரவத்தை உட்கொள்ளலாம். உப்புக்களையும் பிசின்களையும் தேவையான நேரத்தில் தான் த்ண்ணீரில் கரைத்து உட்கொள்ளலாம். காய்ந்துபோய் விட்ட பச்சிலை மூலிகைகளில் மருந்துச்சக்தி குறைவாகத் தான் இருக்கும். ஆதலால் பசுமையாய்க் கிடைக்காத மூலிகைகளைத் துண்டு துண்டாய் வெட்டிக் காய்ந்த தண்ணீரை ஊற்றி வடிக்கட்டித் தயாராகும் கஷாயத்தைச் சூடாய் இருக்கும் போதே உபயோகிக்கவேண்டும். தாவரங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் கஷாயங்கள் யாவும் அல்கஹாலைச் சேர்க்காவிட்டால் மிக விரைவில் புளித்துக் கெட்டுப்போய் விடுகின்றன.

இச் சோதனைகளில் ஒவ்வொரு மருந்தையும் தனித்தனியே உபயோகிக்க வேண்டும். வேற்றுப் பொருள் எதனுடனும் கலக்கக் கூடாது. மருந்தை உட்கொண்ட அன்றும் அடுத்துச் சில நாட்கள் வரையிலும் அல்லது மருந்தின் விளைவுகளை ஆராய வேண்டுமென்று நாம் விரும்பும் நாட்களிலும் மருந்துக் கலப்புள்ள எப்பொருளையும் உட்கொள்ளக் கூடாது.

சோதனைக்காலம் முழுவதும் சோதனையாளர் உணவு விஷயத்தில் கண்டிப்பான ஒழுங்கை அனுசரிக்க வேண்டும்.

---

* அல்கஹால் (Alcohol) என்பது சுத்தம் செய்யப்பட்ட சாராயம்.

நாவுக்குச் சுவைதரும் பொருள்களைக் கூடுமான வரை விலக்க வேண்டும். உடலுக்கு ஊட்டம்தரும் எளிய உணவை மட்டும் உட்கொள்ளலாம். பச்சைக் காய்கறிகள், கீரைகள், கிழங்குகள், குழம்பு, ரஸம் ஆகியவைகளும் விலக்கப்படவேண்டும். காப்பி, டீ, ஒயின் முதலிய மதுபான வகைகள் ஆகிய பொருள்களையும் தள்ள வேண்டும்.

சோதனையாளர் சோதனைக்காலம் முழுவதும் உள்ளத்தாலோ உடலாலோ அளவு மீறி உழைக்கக் கூடாது; புத்தியைச் சிதறவிடக் கூடாது; உணர்ச்சி வயப்படக் கூடாது; கவனத்தைக் கவரக்கூடிய எந்த அவசர வேலையும் அவருக்கு இருக்கக் கூடாது; கவனமாய்த் தன்னை ஆராய்வதிலேயே நேரத்தைச் செலவிடவேண்டும். அவ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது அதைக் கலைக்கக் கூடாது. அவருடைய உடலுக்கு இயற்கையாய் அமைந்துள்ள ஆரோக்கிய நிலைமையுடன் அவர் இருக்க வேண்டும். தன்னுடலில் மருந்தினால் உண்டாகும் உணர்ச்சிகளைச் சரியான முறையில் சொல்லவும் விளக்கவும் போதுமான அறிவுள்ளவராய் இருக்கவேண்டும்.

ஆண், பெண் ஆகிய இரு பாலாரிடமும் மருந்துகள் சோதிக்கப்படவேண்டும். ஆண்-பெண்-உறவு விஷயமாக மருந்துகளால் ஏற்படுத்தப்படும் இயற்கைக்கு மாறான மாறுதல்கள் அப்பொழுதுதான் வெளிப்படும்.

மருந்துகளின் விளைவுகளைச் சோதித்தறிவதற்காக அவைகளை எவ்விதமான செய் நேர்த்தியும் செய்யாமல் உபயோகித்தால் அவைகளினுள்ளே மறைந்து இருக்கும் சக்திகள் வெளியாவது இல்லை. ஆனால் அவைகளை ஒழுங்கான முறையில் நன்றாகப் பொடிசெய்தும் பலமாய்க் குலுக்கியும் வீரியப்படுத்தி உபயோகித்தால் அவைகளினுள்ளே மறைந்திருந்த சக்திகள் நம்ப முடியாத அளவுக்கு வெளிப்படுகின்றன. நவீன ஆராய்ச்சிகள் இவ்விஷயத்தை வெளியிடுகின்றன. சக்தியற்றவை என்று

கருதப்படும் பொருள்களாய் இருந்தாலும் அவைகளி லுள்ள மருந்துச் சக்தியை ஆராய இம்முறை மிகச் சிறந் தது என்பதை நாம் இப்போது அறிகிறோம். அதற்காக நாம் கையாளும் வழி என்ன வென்றால் சோதனையாளர் வெறும் வயிருக இருக்கும் போது ஒவ்வொரு நாளும் மருந்தின் முப்பதாவது வீரியத்திலுள்ள நான்கு அல்லது ஐந்து மிகச் சிறிய மாத்திரைகளைச் சிறிது தண்ணீருடன் கொடுக்கிறோம். இதைப் போலவே அவர் பல நாட்க ளுக்கு மருந்தைத் தொடர்ச்சியாய் உட் கொண்டு வர வேண்டும்.

மேலுள்ள அளவுப்படி மருந்தை உட்கொண்ட பிறகு அதனால் தோன்றும் விளைவுகள் (நோய்க்குறிகள்) தெளிவாய் இல்லாவிட்டால் ஒவ்வொரு நாளும் மேலும் சில மாத்திரைகளைக் கூடுதலாய் உட்கொண்டு வரலாம். நோய்க்குறிகள் தெளிவாகவும், பலமாகவும், நோயற்ற நிலைமையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு மாறுதலும் ஏற்படும்வரை மருந்தை உட்கொண்டு வரவேண்டும். மருந்துகள் எல்லோர் உடம்பிலும் ஒரே விதமாய் வேலை செய்வதில்லை. ஏகத்தாரன வித்தியாசம் இருக்கிறது. பலவீனமாயுள்ள ஒருவர் உடலில் சக்தி வாய்ந்ததென்று கருதப்படும் ஒரு மருந்தை மிதமான அளவில் கொடுத் தால் நோய்க்குறிகள் உண்டாவதில்லை. ஆனால் அதே மனிதர் சக்திக் குறைவாயுள்ள மற்றோர் மருந்தினால் பல மாய்த் தாக்கப்படுகிறார். இது மட்டு மல்ல. திடகாத்திர மான உடலுள்ளவர்களில் சிலர் சக்தி குறைவான மருந்துகளால் கடுமையாய்த் தாக்கப்பட்டு சக்தி வாய்ந்த மருந்துகளால் லேசாகப் பாதிக்கப் படுகின்றனர். இவ்விஷயத்தை நாம் முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியாது. ஆதலால் ஒவ்வொரு சந்தர்ப்பத் திலும் ஆரம்பத்தில் மருந்தைக் குறைவான அளவில் கொடுத்துப் பிறகு தேவையானால் நாளுக்கு நாள் அளவை அதிகரித்துக் கொள்ளலாம்.

முதல் வேளையில் கொடுக்கப்படும் மருந்து தேவையான அளவுக்குப் பலம் வாய்ந்ததாய் இருந்தால் ஒரு அனு கூலம் இருக்கிறது. அதாவது நோய்களின் வரிசைக் கிரமத்தை சோதனையாளர்களால் அறிய முடிகிறது. ஆகவே ஒவ்வொரு குறியும் எந்த நேரத்தில் தோன்றியு தென்பதைச் சரியாகக் குறித்துக்கொள்ள முடியும். மருந் தின் தன்மையையும் அதன் முதல் வேலை, இரண்டாம் வேலை, மாற்று வேலை ஆகியவைகளின் ஒழுங்கையும் தெளிவாய்த் தெரிந்து கொள்ள இக்குறிப்புகள் மிகவும் உதவியாய் இருக்கின்றன. சோதனையாளருக்கு உணர்ச்சிகளை நுட்பமாய் அறியும் தன்மையும் கவனிக்கும் திறமையும் இருந்தால் மிகவும் குறைந்த அளவில் உள்ள மருந்தே பல சமயங்களில் போதுமானதாக இருக்கும். ஒரு மருந்து வேலை செய்யும் கால அளவைப் பல முறை சோதனை செய்து ஒப்பிட்டுப் பார்த்தால் தான் கண்டு பிடிக்கமுடியும்.

ஒரே மருந்தை ஒரே ஒருவருக்குத் தொடர்ச்சியாய்ப் பல நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் சிறிது அதிகரித்த அளவில் கொடுத்து வந்தால் அம்மருந்தினால் உண்டாகக் கூடிய நோய்க்குறிகள் அனைத்தையும் பொதுப்படை யாய்த் தெரிந்து கொள்ளலாமே தவிர ஒவ்வொரு நோய்க்குறியும் எந்த வரிசையில் தோன்றியதென்பதைத் தெரிந்து கொள்ள முடியாது. பின்னதாகக் கொடுக்கப் படும் மருந்து அதற்கு முன்னதாகக் கொடுக்கப்பட்ட மருந்தினால் தோன்றிய நோய்க் குறிகளில் சிலவற்றை நீக்கும் அல்லது மாற்றும். இவ்விதம் நீக்கப்படும் அல்லது மாற்றப்படும் குறிகளைத் தனியாய்க் குறித்துக் கொள்ள வேண்டும். மறு முறை நடத்தப்படும் சுத்தமான சோதனையின் மூலம் அக்குறிகள் உடலின் எதிர்ப்புக் காரணமாய்த் தோன்றியதா அல்லது மருந்தின் இரண்டாம் வேலை அல்லது மாற்று வேலையினால் தோன்றியதா என்பதைத் தெரிந்து கொள்ளும்வரை

அவைகளைச் சந்தேக முள்ளவைகளாகவே கருத வேண்டும்.

நோய்க்குறிகள் தோன்றும் வரிசைக் கிரமத்தையோ அல்லது மருந்து உடலில் தங்கி வேலை செய்யக்கூடிய கால அளவையோ தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அவைகளின் குறிகளை அறிவதே போதுமென்று நினைக்கும் சமயங்களில் அம்மருந்தைத் தொடர்ச்சியாய்ப் பல நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் அதிகரித்த அளவில் கொடுத்து வருவதே நலம். இவ்வழிப்படி முன் பின் தெரியாத, பலமற்ற மருந்துகளின் குறிகளையும் வெளிப் படுத்தலாம். உணர்ச்சிகளை நுட்பமாய் அறியும் உடல் வாகு உள்ளவர்களிடம் இச்சோதனையைச் செய்வது மிகச் சிறந்தது.

மருந்தை உட்கொண்ட பிறகு ஏதோ ஒரு உணர்ச்சி அதாவது நோய்க்குறி தோன்றுவதாக வைத்துக் கொள்வோம். அக்குறியின் திட்டமான தன்மை யைத் தெரிந்து கொள்ள சோதனையாளர் அச்சமயத் தில் தன் இருக்கையைப் பலவிதமாய் மாற்றி, அதாவது தாக்கப்பட்டுள்ள பகுதியை அசைத்தல், அறையினுள் அல்லது வீட்டுக்கு வெளியே நடமாடுதல், நின்று கொள்ளல், உட்காருதல், கீழே படுத்துக் கொள்ளல் முதலிய பல செய்கைகளைச் செய்து அவைகளில் எதனுல் நோய்க்குறி அதிகரிக்கிறது, குறைகிறது அல்லது மறைகிறது? எந்த விதமாய் உடல் இருந்த போது உணர்ச்சி தோன்றியதோ அந்த விதமாய் உடலை மீண்டும் வைத்தால் அவ்வுணர்ச்சி திரும்பித் தோன்று கிறதா? உணவு உட்கொள்வது, பானங்களைக் குடிப்பது, பேசுவது, இருமுவது, தும்முவது முதலிய பல உடல் வேலைகளில் எதனுலாவது உணர்ச்சியில் மாறுதல் உண் டாகிறதா? ஆகிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் பகலில் அல்லது இரவில் எந்த நேரத்தில் அக்குறி வழக்கமாகவும் மிகத் தெளிவாகவும்

தோன்றுகிறது என்பதையும் கவனிக்கவேண்டும். இவ் வழியினுல் ஒவ்வொரு நோய்க் குறிக்கும் உள்ள தனிப் பட்ட சிறப்புத்தன்மை வெளியாகும்.

வெளியே உள்ள எல்லா (நோயுண்டாக்கும்) பொருள்களுக்கும், விசேஷமாய் எல்லா மருந்துகளுக்கும் உயிர் உள்ள உடல்களைத் தாக்கி அதனதன் தன்மைக்கேற்றவாறு ஆரோக்கியத்தைக் குலைத்து நோய்க்குறிகளை உண்டாக்குகின்றன. ஆனுல் ஒரு மருந்துக்கு உரித்தாயுள்ள நோய்க் குறிகள் யாவும் ஒரே ஒரு மனிதரிடமோ, ஒரே சமயத்திலோ அல்லது ஒரே சோதனையிலோ தோன்றுவது கிடையாது. சில குறிகள் ஒருவருக்கு ஒரே ஒரு சோதனையில் மட்டும் தோன்றுகின்றன; மற்ற குறிகள் இரண்டாவது அல்லது மூன்ருவது சோதனையில் தோன்றுகின்றன. வேருெருவருக்கு வேறு சில குறிகள் தோன்றுகின்றன. அக் குறிகளில் சில நான்காவது, எட்டாவது அல்லது பத்தாவது சோதனையாளரிடம் ஏற்படலாம். இன்னும் சில இரண்டாவது, ஆருவது அல்லது ஒன்பதாவது சோதனையாளரிடம் தோன்றியிருக்கலாம். இதைத் தவிர எந்த ஒரு குறியும் எல்லாச் சோதனையாளர்களுக்கும் ஒரே நேரத்தில் ஏற்படுமென்று சொல்ல முடியாது.

ஒரு மருந்தின் சக்தியால் தோன்றக்கூடிய நோயின் முழு விவரங்களையும் அறிந்து கொள்வது எப்படி? பற்பல வித உடல்வாகு உள்ள ஆண்-பெண் இரு பாலாருக்கும் பல முறைகள் அம்மருந்தைக் கொடுத்துச் சோதித்தால்தான் அனேகமாக எல்லா விவரங்களும் கிடைக்கும். ஒவ்வொரு மருந்துக்கும் உள்ள நோயுண்டாக்கும் சக்தியைச் சோதித்தாகிவிட்டது என்று நாம் திடமாக நம்ப வேண்டுமானுல் அம்மருந்தை எவ்வளவு தடவை சோதித்தாலும் பழைய குறிகளைத் தவிர புதிய குறிகள் எதுவும் தோன்ருமல் இருக்க வேண்டும்.

ஒரு மருந்தின் சக்தியினால் உண்டாக்கப்படும் நோய்க் குறிகள் யாவும் ஒரே ஒரு மனிதரிடத்திலேயே தோன்று வதில்லை; உடல் அமைப்பிலும் அறிவுத்திறனிலும் மாறு பட்டுள்ள பற்பல மனிதர்களிடத்தில் தான் தோன்று கின்றன என்பவைகளை மேலே குறிப்பிட்டிருக்கிறோம். ஆயினும் அழிவற்ற, மாற்ற முடியாத இயற்கைச் சட்டப் படி ஒவ்வொரு மனித உடலிலும் அக்குறிகள் அனைத்தை யும் உண்டாக்கும் குணம் மருந்துக்கு இருக்கத்தான் செய்கிறது. இந்தக் குணத்தைப் பெற்றிருப்பதால் ஒற்றுமையான குறிகளையுடைய (இயற்கை) நோயுள்ள வருக்கு மருந்தைக் கொடுத்தால் அம்மருந்தின் குறிகள் யாவும், நோயற்ற உடலில் மிக அரிதாகத் தோன்றும் குறிகள் கூட, நோயை நீக்க உதவியளிக்கின்றன; அச் சமயங்களிலே மருந்து மிகச் சிறிய அளவில் இருந்தாலும், ஹோமியோபதிச் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்படுவதால், நோயாளியின் உடலில் இயற்கை நோயின் குறிகளை ஒத்த ஓர் செயற்கை நோயைச் சந்தடியில்லாமல் தோன்றச் செய்கிறது. அதனால் பழய நோய் விரைவிலும் நிரந்தரமாகவும் நீக்கப்படுகிறது.

சோதனையைச் சுலபமாய் நடத்த நாம் தேர்ந்தெடுக்கும் சோதனையாளர் உண்மையை மதிப்பவராகவும் எல்லா விஷயங்களிலும் மிதமாய் இருப்பவராகவும் உணர்ச்சிகளை உணரக் கூடியவராகவும் அதாவது தன்னுடலில் உண்டா கும் மிகச் சிறிய உணர்ச்சியைக் கூடக் கிரகித்தறியும் வல்லமையுள்ளவராகவும் இருக்க வேண்டும். இத்தகைய சோதனையாளருக்கு மருந்தை மிகவும் மிதமான அளவு களில் கொடுத்தால் மருந்தின் வேலை மிகத் தெளிவாய்த் தென்படும். அதாவது இரண்டாம் வேலையின் குறிகளோ, உயிர்ப்புச் சக்தியின் எதிர்ப்பினால் ஏற்படும் குறிகளோ அதனுடன் கலக்காமல் அவசியமாய் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய குறிகள் மட்டும் உண்டாகும். ஆனால் மிதமீறிய அளவுகளிலே மருந்தைக் கொடுத்துச் சோதனை செய்தால் இரண்டாம் வேலைக் குறிகள் பல

தோன்றுவதுடன் முதல் வேலைக் குறிகளும் மிக வேகமாக வும் கடுமையாகவும் ஏற்படுவதால் குழப்பம் உண்டாகிக் குறிகளைச் சரிவரக் கவனிக்க முடியாமல் போகும். இவை களைத் தவிர அதிக அளவில் மருந்துகளைக் கொடுத்தால் உயிருக்கு ஆபத்தும் நேரலாம். மன்னுயிரைத் தன்னுயிராய்க் கருதுவோர் இதற்கு ஒரு பொழுதும் உடன் படமாட்டார்.

மருந்து உடலில் வேலை செய்யும் காலத்தில் சோதனையாள ருக்கு ஏற்படும் எல்லா உபாதிகளும் ஆரோக்கிய நிலைமை யிலிருந்து மாறுபட்ட குறிகளும் மருந்தினுல் தான் உண்டாக்கப்படுகின்றன. மருந்தை உட் கொள்வதற்குப் பல காலம் முன்னதாக இயற்கையான முறையில் சோதனையாளருக்கு அதைப் போன்ற நோய்க் குறிகள் தோன்றியிருந்தாலுங்கூட இப்பொழுது தோன்றிய குறிகளை மருந்துக்கு உரியவை என்றே கருதவேண்டும். பழைய காலத்தில் தானுகத் தோன்றிய குறிகளே மருந்தை உட்கொண்ட பிறகும் தோன்றுமானுல் அக்குறிகள் ஏற் படுவதற்குச் சாதகமான உடல்வாகு சோதனையாளருக்கு இருக்கிறது என்றே நினைக்க வேண்டும். இவ்விதச் சந்தர்ப்பத்தில் அக்குறிகள் மருந்தின் விளைவேயாகும். உட் கொள்ளப்பட்ட மருந்து உடலெங்கும் பரவி ஆரோக்கிய நிலைமையில் மாறுதலை ஏற்படுத்தும் சமயத்தில் நோய்க் குறிகள் தாமாகவே தோன்றுவதற்கு இடமில்லை. அவை மருந்தின் விளைவேயாகும்.

தன் உடலிலேயே மருந்துச் சோதனையை நடத்த முடியாத போது வைத்தியர் வேறு ஒருவரிடத்தில் சோதனையை நடத்தலாம். சோதனையாளர் மருந்தை உட் கொண்ட தினுல் தன்னுடலில் தோன்றும் உணர்ச்சிகள், உபாதி கள், ஆரோக்கிய நிலைமையில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவைகளையும் அவை தோன்றும் நேரத்தையும் அவ்வப்போது குறித்துக் கொண்டு வர வேண்டும்.

அத்துடன் மருந்து சாப்பிட்டு எவ்வளவு நேரம் கழிந்த பிறகு ஒவ்வொரு குறியும் தோன்றியது, எவ்வளவு நேரம் நீடித்திருந்தது ஆகிய விவரங்களையும் குறித்துக்கொள்ள வேண்டும். சோதனை முடிந்த உடனே வைத்தியர் சோதனையாளரைத் தன் எதிரில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு நோய்க் குறியைப் பற்றியும் விவரமாய்க் கேட்டறிந்து முக்கிய விஷயங்களை எழுதிக் கொள்ள வேண்டும். சோதனை பல நாட்களுக்கு நடத்தப்படும் போது ஒவ்வொரு நாளும் சோதனையாளரை விசாரிக்க வேண்டும். அப்பொழுதுதான் சோதனையாளருக்குத் தன் நோய்க் குறிகளைப் பற்றி நல்ல ஞாபகம் இருக்கும்.

தன் நோய்க் குறிகளைச் சோதனையாளரால் எழுத முடியா விட்டால், ஒவ்வொரு நாளும் தனக்கு ஏற்படும் குறிகளை யும் அவை ஏற்பட்ட விதத்தையும் அவர் வைத்தியரிடம் தெரிவிக்க வேண்டும். சோதனையாளர் தானாகவே வைத்தியரிடம் தெரிவித்த விவரங்களே நம்பத்தக்கவை யாக மதிக்கப்படவேண்டும். அனுமானம் செய்யப்பட்ட குறிகளையும், "உண்டு" அல்லது "இல்லை" என்று விடை வரக்கூடிய கேள்விகளால் கிடைக்கும் குறிகளையும் கட்டாயமாய் விலக்க வேண்டும். இயற்கை நோய்களின் உருவத்தை அறியும் விஷயமாக என்னென்ன எச்சரிக் கைகளை நாம் கையாள வேண்டுமென்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். (பக்கம் 60-69) அவ்வெச்சரிக்கை களையே இச்சமயத்திலும் நாம் கையாள வேண்டும்.

நோய் நொடியற்ற உடல், முன் கூட்டியே அபிப்பிராயம் கொள்ளாத உள்ளப் பாங்கு, உணர்ச்சிகளை எளிதில் கிரகித்தறியும் வல்லமை ஆகிய குணங்கள் பொருந்திய வைத்தியர் மேலே சொல்லப்பட்ட விதிகளுக்கிணங்க மருந்துகளைத் தன்உடலில் கொடுத்துச் சோதிப்பதுதான் சிறந்தது. ஆரோக்கிய நிலைமையில் ஒவ்வொரு மருந்தும் ஏற்படுத்தக் கூடிய மாறுதல்கள், ஆரோக்கியமான

உடலில் அது உண்டாக்கக் கூடிய செயற்கை நோய்கள், நோய்க் குறிகள் ஆகியவைகளைத் தெரிந்து கொள்ள இதுவே சிறந்த வழி. மருந்துகளால் தன் உடலில் உண்டாகும் மாறுதல்களைத் திட்டமாகவும் தவறு இல்லா மலும் அவரால் அறிந்து கொள்ள முடியுமல்லவா! *

---

* தன் உடலிலேயே மருந்துகளைச் சோதிப்பதால் வைத்தியருக்கு விலை மதிக்க முடியாத வேறு பல அனுகூலங்கள் ஏற்படுகின்றன. மருந்துகளைச் சோதனை செய்த காலத்தில் தான் அனுபவித்த நோய்க் குறிகளினால் ஆரோக்கிய நிலைமையை மாற்றுவதில் அவைகளுக்கு உள்ள வல்லமையைப் பற்றிக் கடுகளவு சந்தேகத்துக்கும் இடமில்லாமல் போய் விடுகிறது. நோயுண்டாக்கும் சக்திதான் நோய் தீர்க்கும் சக்தியாக மாறுகிறது என்பது தெரிந்த விஷயம். தன்னைத் தானே ஆராய்ந்து கொள்வதால் தன்னுள் தோன்றும் உணர்ச்சிகள், தன் சிந்தனைகள் செல்லும் விதம், குணம் ஆகியவைகளை அறிந்துகொள்ள வர்ய்ப்பு ஏற்படுகிறது. (ஆத்ம விசாரனையினால்தான் ஒருவனுக்கு உண்மையான அறிவு தோன்றுகிறது.) அத்துடன் வைத்தியருக்குத் தேவையான கவனிக்கும் திறமை ஏற்படவும் இது வழி செய்கிறது. மற்றவர்களிடத்தில் நடத்தப்படும் சோதனைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் விவரங்கள் அவ்வளவு சுவாரசியமுள்ளதாய் இருப்பதில்லை. பிறரிடம் சோதனையை நடத்தும்போது சோதனையாளர் தன் உணர்ச்சிகளை மாற்றாமல், மறைக்காமல் உள்ளதை உள்ளபடியே சொன்னாரோ இல்லையோ என்று கவலைப்பட வேண்டியிருக்கும். சோதனையாளர் தன்னை எந்த சமயத்திலாவது ஏமாற்றிவிட்டாரோ என்ற சந்தேகம் நீங்காமல் இருக்கும். பிறரிடம் மருந்துகளைச் சோதனை செய்து அவைகளின் நோய்க் குறிகளைக் கண்டுபிடித்து உண்மையை அறிந்து கொள்வதில் இவ்வளவு இடையூறுகள் இருக்கின்றன. இந்த இடையூறுகளை முற்றிலும் நீக்க முடியாது. ஆனால் தன் உடலிலேயே மருந்துச் சோதனையை நடத்தினால் எள்ளளவு இடையூறுக்கும் இடமில்லை. மருந்தினால் தன்னுடலில் தோன்றிய உணர்ச்சிகளின் தன்மை அவருக்குத் திட்டவட்டமாய்த் தெரியும். மற்ற மருந்துகளையும் உட்கொண்டு சோதனை செய்ய வேண்டுமென்ற ஆவல் மேன்மேலும் அதிகமாகும். இவ்விதம் தன் உடலிலேயே அடிக்கடி மருந்துச் சோதனைகளை நடத்திக்கொள்வதால் செயற்கை நோய்க் குறிகளைக் கவனித்தறியும் கலையில் அவருக்கு நாளுக்கு நாள் பழக்கம் அதிகமாகிறது. நோய் தீர்க்கும் கருவிகளான மருந்துகளின் உண்மையான மதிப்பையும் உபயோகத்தையும் ஐயந்திரிபற வெளியிடுகிற இச்சோதனைகளில் வைத்தியரின் ஆர்வம் அளவு கடந்து நிற்கும். மருந்துச் சோதனையினால் உடலில் தோன்றும் நோய்க்குறிகள் உடலுக்குத் தீங்கிழைக்குமோ என்ற கவலையே வேண்டாம். மருந்துகளால் அடிக்கடி தாக்கப்பட்ட சோதனையாளரின் உடல் வைரம் பாய்ந்தது

ஒரு நோயை நீக்குவதற்காக ஒரு மருந்தைக் கொடுத்த பிறகு தோன்றும் பல நோய்க் குறிகளில் எவையெவை மருந்தினுல் தோன்றியுள்ளன, எவையெவை நோயினுல் தோன்றியுள்ளன என்று பிரித்துச் சொல்வது மிகக் கடினம். மிகக் கூர்மையாகக் கவனிக்கும் திறமை உள்ளவர்களாலேயே அது சாத்தியமாகும்.

மருந்துகள் பலவற்றை மேலே உள்ளபடி நோயற்ற உடலில் ஒவ்வொன்ருகக் கொடுத்துச் சோதித்து அவைகளால் தோற்றுவிக்கப்படும் எல்லா நோய்க் குறிகளையும் கவனமாகவும் உண்மையாகவும் குறித்து வைத்துக் கொண்டோமாஞல் நம்மிடம் ஒரு உண்மையான மருந்துகளின் இயல்புகளைக் கூறும் நூல் (மெட்டீரியா மெடிகா—Materia Medica) இருக்கிறதென்று மதிக்கலாம். ஒவ்வொரு மருந்துக்கும் உள்ள நோய்க் குறிகளைப் பற்றிய உண்மையான, கலப்பற்ற, நம்பத்தக்க விவரம் இந் நூலில் அடங்கியிருக்கிறது. அவ்விவரங்களின் துணைகொண்டு ஹோமியோபதி முறைப்படி இயற்கை நோய்களுக்கு ஏற்றதான மருந்துகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

மேலே குறிப்பிட்ட மெட்டீரியா மெடிகாவில் கற்பனையான விஷயமெதையும் சேர்க்கக் கூடாது. சேர்க்கப்படும் ஒவ்வொரு விஷயமும் உண்மையானதாய் இருக்க வேண்டும்.

கணக்கற்ற பற்பல மருந்துகளைச் சோதித்து மனிதனின் ஆரோக்கிய நிலைமையை மாற்றுவதில் அவைகளுக்கு உள்ள உண்மையான சக்தியை ஒழுங்காக அறிந்து கொண்டால்தான், பல்லாயிரக் கணக்காய் இருக்கும் இயற்கை நோய்கள் ஒவ்வொன்றுக்கும் அதனுடன் ஒற்றுமையுள்ள செயற்கை நோயை உண்டாக்கும் பொருளை (குணம் செய்யக்கூடிய ஒற்றுமையுள்ள

போல் உறுதியாகி எல்லாவிதச் செயற்கை, இயற்கை நோய்ப் பொருள்களையும் விரட்டியடித்து வெற்றி காண்கிறது என்பது அனுபவ வாயிலாக வெளிப்படுகிறது.

செயற்கை மருந்தைக்) கண்டுபிடிக்க நம்மால் முடியும். செயற்கை நோய்க் குறிகள் உண்மையாய்இருப்பதாலும், மருந்துச் சோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சக்தி வாய்ந்த மருந்துகள் ஒவ்வொன்றும் ஏராளமான நோய்க் குறிகளை வெளிப்படுத்தியதாலும் தகுந்த ஹோமியோபதி மருந்து இல்லை என்று சொல்லக்கூடிய நோய் எதுவுமே இல்லையென்று கூறலாம்.

மூன்ருவது வினுவுக்கு விடை 146—258

இயற்கை நோய்களை ஹோமியோபதி முறைப்படி நீக்க, மருந்துகளின் உண்மையான வேலைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். மருந்துகளின் உண்மையான வேலைகளைத் தெரிந்துகொள்ள அவைகளை நோயற்ற மனிதர்களுக்குக் கொடுத்துச் சோதிக்க வேண்டும். அவ்வாறு சோதித்த போது செயற்கை நோய்களைத் தோற்றுவித்த இக் கருவிகளை (மருந்துகளை) உண்மையான வைத்தியர் **எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்பது மூன்ருவது வினுவாக அமைந்துள்ளது.**

மருந்துச் சோதனை நடத்தப்பட்டபோது தத்தமக்குள்ள செயற்கை நோய்க் குறிகளை வெளியிட்ட பற்பல மருந்துகளில் எந்த மருந்தின் நோய்க் குறிகள் குறிப்பிட்ட ஓர் இயற்கை நோயின் மொத்தக் குறிகளுடன் மிக நெருங்கிய ஒற்றுமையுடன் காணப்படுகின்றனவோ, அம்மருந்தே அவ்வியற்கை நோய்க்கு ஏற்ற ஹோமியோபதி மருந்தாக இருக்கும்; இருந்தே தீரவேண்டும். அதுவே அந்நோய்க்குச் சஞ்சீவி.

நீக்கப்பட வேண்டிய (இயற்கை) நோயுடன் மிக நெருங்கிய ஒற்றுமையுள்ள (செயற்கை நோய்க்) குறிகளை உண்டாக்கும் இயல்பும் சக்தியும் கொண்டது, அதாவது, ஒற்றுமையுள்ள செயற்கை நோயை உண்டாக்குகிறது என்ற காரணத்தினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மருந்து தகுந்ததோர் அளவில் கொடுக்கப்பட்டால் நோயாளியின்

உயிர்ப்புச் சக்தியினுள்ளே சூட்சுமமாய் நுழைந்து இயற்கை நோயினுல் தாக்கப்பட்டுள்ள அதே உடல் உறுப்புகளேயும் பகுதிகளேயும் தாக்கி அவ்விடங்களில் தன்னுடைய செயற்கை நோயைப் புகுத்துகிறது. அது வரை உடலேப் பீடித்திருந்த இயற்கை நோயைவிட அதிகச் சக்தியும் ஒற்றுமையும் வாய்ந்த செயற்கை நோய் தோன்றியவுடன் உயிர்ப்புச் சக்தி துள்ளி யெழுந்து முன்பிருந்த இயற்கை நோயிலிருந்து விடுதலே பெறுகிறது. செயற்கை நோயின் சக்தி அதிக மாய் இருந்தபோதிலும் நாம் உபயோகித்த மருந்தின் அளவு மிகக் குறைவாய் இருப்பதால் அது உயிர்ப்புச் சக்தியினுல் சீக்கிரமே வெல்லப்படுகிறது. இதனுல் உடலி லிருந்த பழய, புதிய நோய்கள் இரண்டும் நீங்கி நீடித்த குணமும் ஆரோக்கியமும் தோன்றுகின்றன.

இவ்வாறு தகுந்த ஹோமியோபதி மருந்து தேர்ந்தெடுக்கப் பட்டுச் சரியாகவும் உபயோகிக்கப்பட்டால் என்ன நேருகிறது ? கெடுதலான குறிகளுடனும் பலவிதமான உபாதிகளுடனும் காணப்பட்ட நோய் சமீபத்திலே ஏற்பட்டிருந்தால் ஒரு சில மணி நேரத்திலும் சிறிது நாட்பட்டதாய் இருந்தால் சில நாட்களிலும் மாயமாய் மறைந்து போகிறது. செயற்கை நோய்க் குறிகள் கூடக் காணப்படுவதில்லே. மிகவும் நாட்பட்ட நோய்கள் (விசேஷமாகச் சிக்கலாகிவிட்ட நோய்கள்) நீங்குவதற்கு இன்னும் சிறிது காலம் அதிகமாகத்தான் ஆகும். அலோபதி முறைப்படி சிகிச்சை செய்யப்பட்ட சமயங் களில் இயற்கை நோயுடன் அலோபதி மருந்துகளின் விளேவுகளாகிய செயற்கை நோயும் ஒன்று சேர்ந்து நோயாளியின் உடல் பாழாகி விடுவதால் நோய் நீங்கப் பல காலமாகும்.

ஒன்று அல்லது பல அல்பமான நோய்க் குறிகள் சிறிது காலமாகத்தான் இருக்கின்றன என்று சொல்லிக் கொண்டு வரும் நோயாளிக்கு மருந்து தேவை என்று நினேக்கக்கூடிய நோய் இருப்பதாக வைத்தியர் கருதக்

கூடாது. நோயாளியின் உணவிலும் பழக்க வழக்கங்களிலும் சிறிது மாறுதல் செய்தாலே அக்கோளாறுகள் குணமாகிவிடும்.

ஆனால் கடுமையான உபத்திரவங்கள் சில இருப்பதாக நோயாளி கூறுவாரேயானால் வைத்தியர் அவரைச் சோதிக்க வேண்டும். அவ்வாறு சோதித்தால் நோயாளி கூறியதைத் தவிர வேறு பல நோய்க் குறிகளும் இருப்பது தெரியவரும். எல்லாக் குறிகளையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் நோயின் முழு வடிவம் புலனாகும்.

திடீர் வகை நோய் எவ்வளவுக் கெவ்வளவு கடுமையாய் இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அதன் குறிகள் பலவாகவும் தெளிவாகவும் இருக்கின்றன. அதைப் போலவே போதிய அளவு எண்ணிக்கையுள்ள மருந்து களின் வேலைகளைப்பற்றி நாம் தெரிந்துகொண்டிருந் தால் நோய்க்கு ஏற்றதான மருந்தைத் தவறின்றித் தேர்ந்தெடுக்க முடியும். பல்வேறு மருந்துகளின் குறிப் பட்டியல்களிலிருந்து, இயற்கை நோயின் மொத்தக் குறிகளைப் பெரும்பாலும் ஒத்துள்ள செயற்கை நோயைத் தோற்றுவித்த மருந்து எது என்று தேர்ந் தெடுப்பது கஷ்டமாய் இருக்காது.

ஏற்ற ஹோமியோபதி மருந்தைத் தேடுகிற அதாவது நீக்கப்பட வேண்டிய இயற்கை நோயுடன் ஒற்றுமை யுள்ள செயற்கை நோயைத் தோற்றுவித்த மருந்தைக் கண்டு பிடிப்பதற்காக, இயற்கை நோயின் மொத்தக் குறிகளுடன் நமக்குத் தெரிந்த மருந்துகளின் குறிப்பட்டியல்களை ஒப்பிட்டுப்பார்க்கும் இவ்வேலையில், **மிகத்தெளிவாய், தனிப்பட்டதாய், அபூர்வமாகவும் வினோத மாகவும் உள்ளதாய் (விசேஷத்தன்மை) இருக்கும் நோய்க்** குறிகள் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன; கருதப் படவும் வேண்டும். ஏனெனில் **தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்தின் குறிப் பட்டியலில் காணப்படும் விசேஷக் குறிகளுடன் நோயின் விசேஷக் குறிகள் ஒற்றுமையாய்**

இருக்க வேண்டும்; அப்பொழுது தான் அம்மருந்து அந்நோயை நீக்க மிகவும் ஏற்றதாகும். பசி இல்லாமை, தலைவலி, பலவீனம், நல்ல தூக்கம் இல்லாமை, இனம் கூறமுடியாத வேதனை, இன்னும் இவை போன்ற பொதுவான, திட்டமாய்க் கூறமுடியாத குறிகளைப்பற்றி நாம் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் பொதுவான நோய்க்குறிகள் எல்லா நோய்களிலும் எல்லா மருந்துகளிலுங் கூடக் காணப்படுகின்றன.

மிக மிகத் தகுந்தது என்று தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்தின் குறிப்பட்டியலில், நீக்கப்பட வேண்டிய நோயின் விநோத மான, அபூர்வமான, தனிப்பட்டதான (விசேஷக்) குறிகள் காணப்பட்டால், நோய்க்குறிகளுடன் அதிக அளவில் ஒற்றுமையுள்ளதாகவும் இருந்தால் அந்நோய்க்கு அம் மருந்தே ஹோமியோபதி முறைப்படி மிக மிக ஏற்றது. அம்மருந்தைக் கொடுக்க முதல் வேளையிலேயே அதிக மான உபத்திரவங்கள் எதுவும் ஏற்படாமல் நோய் (அதிக நாட் படாததாய் இருந்தால்) நீங்கும்.

அதிகமான உபத்திரவங்கள் எதுவும் இல்லாமல் என்று நான் எழுதியிருப்பதின் காரணத்தை இதோ குறிப் பிடுகிறேன். மிக ஏற்றது என்று தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்படும் மருந்தின் பல குறிகளில் நோய்க் குறிகளுடன் ஒற்றுமையுள்ள சில குறிகள் மட்டும் அதைவிடப் பலவீனமாயுள்ள நோய்க் குறிகளைப் போக்கடித்து உடலில் அந்நோய்க் குறிகள் குடி கொண்டிருந்த இடங்களைப் பிடித்துக் கொள்கின்றன. மருந்தின் மற்ற குறிகளுக்கும் நோய்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையாதலால் அவைகளால் ஒரு பயனும் விளைவதில்லை. ஹோமியோபதி முறைப்படி மிகவும் குறைந்த அளவில் மருந்து உபயோகிக்கப் படுவதால், மணிக்கு மணி குணமடைந்து வரும் நோயாளி நோயுடன் சம்பந்த மில்லாத மருந்துக் குறிகளினால் பாதிக்கப்படுவது கிடையாது.

எவ்வளவு நன்ருகத் தேர்ந்தெடுக்கப் பட்டாலும், நோயாளிக்கு உணர்ச்சிகளை நுட்பமாய் உணரும் உடல் வாகு இருந்து மருந்தின் அளவும் போதிய அளவுக்கு நுண்ணியதாக இல்லாமல் இருந்தால், அம்மருந்து உடலில் தங்கி வேலை செய்யும் காலத்தில் சிறிதளவாவது வேதனையோ அல்லது புதியதான நோய்க் குறிகளோ தோன்ருமல் இருப்பதில்லை. எந்த ஹோமியோபதி மருந்தும் இதற்கு விலக்கில்லை. மருந்தும் நோயும் எல்லாக் குறிகளிலும் ஒற்றுமையாய் இருப்பது அரிதினும் அரிது. ஆயினும் (சாதாரணமான சந்தர்ப்பங்களில்) முக்கியத்துவம் அற்ற இவ்வித்தியாசங்கள் உயிர்ப்புச் சக்தியினுல் புறக்கணிக்கப்படுகின்றன; அளவு மீறிய உணர்ச்சியுள்ளவர்களைத் தவிர மற்ற நோயாளிகளிடம் அவைகளின் விளைவைக் காண முடியாது. மாறுபாடான குணங்களை உடைய கலவை மருந்துகளை உட்கொள்வது, தவருன பழக்க வழக்கங்கள், கோபதாபம் ஆகிய மன உணர்ச்சிகளுக்கு வசப்படுதல் ஆகியவை எதுவும் குறுக்கிடாவிட்டால் ஆரோக்கிய நிலைமை படிப்படியாய்த் திரும்பி முழு குணமும் ஏற்படுகிறது.

ஹோமியோபதி முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் மருந்து நோய்க்கு ஏற்றதாகவும் குறைந்த அளவிலும் இருப்பதால் ஒற்றுமையான குறிகளை உடைய நோயை மிருதுவாக நீக்கி அழித்தும் விடுகிறது. நோய்க் குறிகளுடன் ஒற்றுமை இல்லாத அதன் மற்ற குறிகளை அதாவது புதிய கெடுதலான கோளாறுகளைத் தோற்றுவிப்பதில்லை. இது உண்மையே ஆயினும் மருந்தை உட்கொண்டதிலிருந்து சுமார் ஒரு மணி அல்லது சில மணி நேரங்கள்வரை நோய்க்குறிகள் சிறிது அதிகரித்தே காணப்படுகின்றன. கொடுக்கப்படும் மருந்தின் அளவு மிக அதிகமாய் இருந்தால் இப் புதிய குறிகள் பல மணி நேரங்களுக்கு நீடித்திருக்கலாம். அவை இயற்கை நோய்க் குறிகளைப் போலவே தோன்றுவதால் நோயாளிக்குத் தன்னுடைய நோய்தான் அதிகமாகியிருக்

கிறதோ என்று நினைக்கும்படி இருக்கும். ஆனால் உண்மையில் அவை இயற்கை நோயை விடச் சிறிது அதிக வலிமை வாய்ந்த மருந்தினால் ஏற்படும் நோய்க் குறிகளே.

● ஹோமியோபதி முறைப்படி கொடுக்கப்படும் மருந்தினால் முதல் சில மணி நேரங்களில் நோய் அதிகமாவது நியாய மாக ஏற்படக் கூடியதேயாகும். (இவ்விதம் நோய் அதிக மானால் முதல் வேளை மருந்தினாலேயே நோய் முக்காலும் படிமானத்துக்கு வந்துவிடும் என்று முன் கூட்டியே தீர்மானம் செய்துவிடலாம்) ஏனெனில் இயற்கை நோயை முறியடித்து அழிக்க வேண்டுமானால் மருந்து அவ்வியற்கை நோயைவிடப் பலம் வாய்ந்ததாகத்தான் இருக்க வேண்டும். பலமுள்ள நோய் பலவீனமான நோயை அழித்து விடுவதை இதற்கு உதாரணமாய்க் கூறலாம்.

கொடுக்கப்படும் ஹோமியோபதி மருந்தின் அளவு குறையக் குறைய மருந்து கொடுத்தபின் சிறிது நேரத்துக்குக் காணப்படும் நோய் அதிகரிப்பின் காலமும் அளவும் குறைவாய் இருக்கும். ஆயினும் ஹோமியோபதி மருந் தின் அளவை நாம் எவ்வளவு தூரம் குறைத்தாலும் இயற்கை நோயை நீக்க முடியாத அளவுக்கு அதன் அளவைக் குறைக்க முடியாது. அதாவது அளவை மிக மிகக் குறைத்தாலும் ஹோமியோபதி மருந்து இயற்கை நோயை நிச்சயமாய் அழித்துவிடும். இதனால் தான் ஏற்றதான ஹோமியோபதி மருந்தை உட்கொண்டவுடன் சிறிது நேரத்துக்கு நோய் அதிகமாய்க் காணப்படுகிறது. மருந்து கொடுத்தபின் சில மணி நேரங்களுக்கு மட்டும் நோய் அதிகரித்துக் காணப்படுகிறது என்று நான் குறிப் பிடுவது அதிக நாட்படாத, திடீர் வகை நோய்களில் மட்டும்தான். பல காலமாய் நீடித்திருக்கும நோயில் அதிகக் காலம் உடலில் தங்கி வேலை செய்யும் மருந்தை

உபயோகிக்கும்போது அம்மருந்து பல நாட்கள் உடலி னுள் தங்கியிருப்பதால் சில சமயங்களில் ஆறு, எட்டு அல்லது பத்து நாட்களுக்குக்கூட நோய் அதிகரித்துக் காணப்படலாம். அதாவது ஒவ்வொரு நாளும் சில மணி நேரங்களுக்கு நோய் அதிகரிப்பதும் இடை நேரங்களில் குறைவதுமாக இருந்து முடிவில் முழு குணமும் தோன்றும்.

ஒவ்வொன்றுக்கும் உரியதான, உண்மையான குணங்கள் என்னென்ன வென்று அறியப்பட்ட மருந்துகளின் எண்ணிக்கை அதிகமாய் இல்லாத போது, சிகிச்சைக்கு வந்துள்ள நோயின் பல குறிகளில் ஒரு சில குறிகளே, மிகச் சரியானது என்று தேர்ந்தெடுக்கப்படும் மருந்தில் காணப்படும். ஆயினும் அதைவிடத் தகுதி வாய்ந்த வேறு மருந்து இல்லாததால் அதை உபயோகிப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

இவ்விதமான சமயத்தில், கொடுக்கப்படும் மருந்தினுல் நோய் முழுவதுமோ அல்லது தொந்திரவு இல்லாமலோ குணமாகுமென்று நாம் எதிர் பார்க்க முடியாது என்பது உண்மையே. ஏனெனில் அம்மருந்தைக் கொடுத்தபின், நோயில் அதற்கு முன் காணப்படாத, முழுத்தகுதியும் பெற்றிராத மருந்தினுல் உண்டாக்கப்பட்ட, அதிகப்படி யான குறிகள் தோன்றுகின்றன. ஆயினும் நோயின் ஒரு பகுதி,அதாவது மருந்தின் குறிகளோடு ஒற்றுமை பெற்று இருக்கும் நோய்க் குறிகள் குணமாவது இதனுல் தடைப் படுவதில்லை. அதிகப்படியான குறிகள் தோன்ருமல் குணம் ஏற்படுவதில்லை என்பது தான் விஷயம். இருந்த போதிலும் கொடுக்கப்படும் மருந்தின் அளவு கூடுமான வரை குறைவாக இருந்தால் அதிகப்படியான குறிகள் கடுமையாய் இருப்பதில்லை.

மிகவும் தகுதி வாய்ந்தது என்று தேர்ந்தெடுக்கப்படும் மருந் தின் செயற்கை நோய்க்குறிகளில் ஒரு சிலவே இயற்கை நோயுடன் ஒற்றுமையாய் இருக்கின்றன என்று

வைத்துக் கொள்வோம். அச்சமயத்தில் அம்மருந்திஞல் குணம் ஏற்படுமா என்று சந்தேகப்பட வேண்டியதில்லே. **ஒற்றுமையாயுள்ள குறிகள் நோயின் அபூர்வமான தனிப்பட்ட விசேஷக் குறிகளேப் போல் இருப்பதே போதும்.** அவ்வாறு இருந்தால் வேறு எவ்விதக் கோளாறும் உண்டாகாமல் குணம் தோன்றும்.

மருந்துக் குறிகள் மேலே உள்ளபடி நோயின் விசேஷக் குறிகளுடன் ஒற்றுமையாய் இல்லாமல் அதன் பொது வான, சாதாரணக் குறிகளுடன் மட்டுமே (குமட்டல், பல வீனம், தலேவலி முதலியவைகளே உதாரணங்களாகக் கூறலாம்) ஒற்றுமையுள்ளதாக இருந்தால், அதைவிடத் தகுதி வாய்ந்த வேறு மருந்தும் தெரியா விட்டால் நோய் விரைவில் குணமாகு மென்று வைத்தியர் நம்ப முடியாது. ஆனுல் இவ்விதமான ஓர் சந்தர்ப்பம் தோன்றுவது மிக அபூர்வம். ஏனெனில் ஏராளமான மருந்துகளின் உண்மை விவரங்கள் நமக்குத் தெரிந்திருக்கின்றன. ஏதோ ஒரு மருந்திஞல் துன்பம் நேருமாஞல் அதை விடத் தகுதி வாய்ந்த மற்ருேர் மருந்தைக் கொடுக்கும் போது அத்துன்பம் மறைந்து விடுகிறது.

முழுத் தகுதியும் இல்லாத ஒரு ஹோமியோபதி மருந்தை உபயோகிக்கும் காலத்தில் அதிகப்படியான குறிகள் தோன்றிஞல், நோய் திடீர் வகையைச் சேர்ந்ததாய் இருந்தால், மருந்தின் சக்தி முழுவதும் செலவழியும் காலம் வரை நாம் காத்திருக்க வேண்டியதில்லே. புதி தாகத் தோன்றிய குறிகளுடன் நோயின் பழய குறிகளில் மிச்சம் இருக்கும் குறிகளேயும் ஒன்று சேர்த்து மாறுபட்ட நிலேமையை மீண்டும் ஆராயவேண்டும். அவ்வாறு ஆராய்ந்தால் அந் நிலேமைக்கு முற்றிலும் ஏற்றதான மற்ருேர் மருந்தைக் கண்டுபிடித்து விடலாம். அம் மருந்தைக் கொடுத்தால் ஒரு வேளேயிலேயே நோய் முழுவதும் நீங்கும் அல்லது கணிசமான அளவு நோய் பணிந்து விடும். இரண்டாவதாகக் கொடுக்கப்பட்ட

மருந்திலும் விரும்பிய பலன் விளையாவிட்டால் மறு படியும் நோயின் அப்போதயக் குறிகளைக் கவனித்து அதற்கேற்றபடி மருந்தைத் தேடிக் கொடுக்கவேண்டும். நோய் முற்றிலும் நீங்கிப் பழய ஆரோக்கிய நிலைமை திரும்பும் வரை இவ்விதம் நாம் அடிக்கடி நோயின் குறி களைத் திரும்பத் திரும்ப ஆராய்ச்சி செய்து தகுதியான ஹோமியோபதி மருந்துகளைக் கொடுத்து வரலாம்.

முதல் முறையாக ஒரு நோயைப் பரீக்ஷை செய்து ஏற்ற மருந்தைத் தேர்ந்தெடுக்கும் சமயத்தில் நோயின் மொத்தக் குறிகளை நீக்க அவ் வொரு மருந்து மட்டும் போதாது என்றும் போட்டியிடுவதைப் போல அந் நோய்க்கு இரண்டு மருந்துகள் தகுதி வாய்ந்தவையாக இருக்கின்றன என்றும் தோன்றினால் அவ்விரண்டில் ஏதோ ஒன்றைக் கொடுத்த பிறகு மற்றொரு மருந்தை அடுத்தபடியாகக் கொடுப்பது சரியான வழியல்ல. முதல் மருந்தினால் நோய்க் குறிகளில் மாறுதல்கள் ஏற்பட் டிருக்கும். ஆதலால் நோயாளியை மீண்டும் பரீக்ஷை செய்து மாறுபட்ட நிலைமைக்கு ஏற்றதான மருந்தைத் தேர்ந்தெடுத்து உபயோகிக்க வேண்டும். சிற்சில சமயங் களில் முதல் பரீக்ஷையில் இரண்டாவதாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட மருந்தும் தகுதியுள்ளதாக ஆகலாம்.

கெட்ட நடவடிக்கை காரணமாக இல்லாமல், ஸோரா விஷ நோய்க் கூறினால் ஏற்படும் நீடிக்கும் வகை நோய்களில், நோயைக் குணம் செய்ய ஸோராவை அடக்கும் சக்தி வாய்ந்த பல மருந்துகளை ஒன்றன் பின்னொன்றாகக் கொடுக்க வேண்டி இருக்கிறது. மருந்தை மாற்றும் போது ஒவ்வொரு தடவையும் அதற்கு முன்னதாகக் கொடுக்கப்பட்ட மருந்தின் வேலை தீர்ந்த பிறகு மிச்சம் இருக்கும் குறிகளை ஆதாரமாய்க் கொண்டே ஏற்ற ஹோமியோபதி மருந்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நோயின் குறிகள் மிகச் சிலவாய் இருக்கும் போது அந் நோயைக் குணம் செய்வதில் கஷ்டம் தோன்றுகிறது.

101594

இக் கஷ்டமான நிலைமையை நாம் மிகக் கவனர்ய்ப்ம பார்க்க வேண்டும். அதை நீக்கினல் யாவற்றினும் சிறந்த நம் ஹோமியோபதிச் சிகிச்சையினல் அந் நோயைக் குணம் செய்து விடலாம்.

இரண்டொரு குறிகள் மட்டுமே உள்ள நோய்களைக் குணம் செய்வது மிகக் கடினம். ஏனெனில் இவ்வொன்றிரண்டு குறிகள் நோயின் மற்ற எல்லாக் குறிகளையும் மறைத்து விடுகின்றன. இத்தகைய நோய்களை அரைகுறை நோய்கள் என்று அழைக்கலாம்.

இவ் வரைகுறை நோய்களின் முக்கியமான குறி, ஒன்று உடலின் உட்புறக் கோளாருகவோ (வருஷக் கணக்காய் இருந்து வரும் தலைவலி, பல காலமாய் நீடித்திருக்கும் வயிற்றுப் போக்கு, பல்லாண்டுகளாய்த் தோன்றிக் கொண்டிருக்கும் இருதய வலி, முதலியவைகளை உதாரணங்களாய்க் கூறலாம்) அல்லது உடலின் வெளிப்புறக் கோளாருகவோ இருக்கலாம். வெளிப்புறக் கோளாறுகளைச் சரும நோய்கள் என்று அழைக்கிறோம்.

முதல் வகையைச் சேர்ந்த (உடலின் உட்புறக் கோளாறு) அரைகுறை நோய்களில் நோயின் முழு வடிவம் வெளிப்படாமல் இருப்பதற்குப் பெரும்பாலும் வைத்தியரின் கவனக் குறைவே காரணமாய் இருக்கிறது. வெளியே காணப்படும் குறிகளை அவர் முற்றிலும் கண்டு பிடிக்கத் தவறி விடுகிறார்.

ஆயினும் எவ்வளவு கவனமாகப் பரீக்ஷை செய்தாலும் ஒன்றிரண்டு கடுமையான, கொடுமையான நோய்க் குறிகளைத் தவிர வேறு எவ்விதமான குறிகளும் புலப்படாத சில நோய்களும் இருக்கத்தான் செய்கின்றன. இதைப் போன்ற நோய்களில் வெற்றி காண்பதற்கு உள்ள வழி யாதெனில் புலப்படும் ஒரு சில குறிகளையே ஆதாரமாய்க் கொண்டு அவைகளுக்கு மிக மிக ஏற்ற தென்று நமக்குத் தோன்றும் மருந்தைக் கொடுப்பது தான்.

காணப்படும் இரண்டொரு நோய்க்குறிகள் தெளிவான தாய், தனிப்பட்டதாய், அபூர்வமாய், விநோதமாய் இருந்தால் ஹோமியோபதி முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் மருந்து சிற்சில சமயங்களில் நோயை முற்றிலும் அழிக்கக் கூடியதாக இருப்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும் தகுதியான மருந்தைத் தேர்ந்தெடுக்கப் போதிய அளவு குறிகள் இல்லாமல் இருந்தால் பல சமயங்களில் நோய் சிறிதளவே குணமடைகிறது.

இத்தகைய ஒரு நோய்க்குக் கூடுமான அளவுக்கு நல்ல முறையில் மருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் மேலே குறிப்பிட்டபடி அது முற்றிலும் ஹோமியோபதியை அனுசரித்ததாக இல்லை. இக் காரணத்தால் அதனுடன் ஓரளவுக்கே ஒற்றுமையுள்ள நோய்க்குக் கொடுக்கப்படும்போது நோயுடன் ஒற்றுமை யற்ற தன் மற்ற குறிகளைத் தோற்றுவிக்கிறது. இப்புதிய குறிகள் நோயின் குறிகளுடன் கலந்துவிடுகின்றன. இக்கலப்புக் குறிகளை மருந்தின் குறிகளாகக் கருதக் கூடாது. அதற்குமுன் அவ்விதமான நோய்க்குறிகள் நோயாளிக்கு எச்சமயத்திலும் ஏற்படவில்லையே என்பதற்காக அவைகளை நோயுடன் சம்பந்தமற்றதாக எண்ணக் கூடாது. நோயின் குறிகளாகவே மதிக்க வேண்டும். அவ்வாறு மதித்துச் சிகிச்சையைத் தொடர்ந்து நடத்த வேண்டும்.

ஒரு சில நோய்க்குறிகளே இருந்ததினல் முற்றிலும் ஏற்றதான மருந்தைத் தேர்ந்தெடுக்க முடியாமல் போய்விட்ட இச்சமயத்திலும் அரை குறையாய்த் தேர்ந்தெடுக்கப்படும் மருந்து நோயின் முழுக் குறிகளை வெளியே கொண்டு வந்து முற்றிலும் ஏற்றதான மற்றொரு ஹோமியோபதி மருந்தைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

முதலில் கொடுக்கப்பட்ட மருந்தினல் ஓரளவு அனுகூலம் தோன்றிப் பிறகு யாதொரு குணமும் காணப்படா விட்டால் (புதியதாகத் தோன்றியுள்ள குறிகள் ஆபத்

தானவையாக இல்லாதபோது) நோயாளியை மீண்டுமொரு சோதனை செய்து அச்சமயத்தில் காணப்படும் மாறுபட்ட குறிகளுக்கு ஏற்றதான வேறு ஹோமியோபதி மருந்தொன்றைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்க வேண்டும். முதல் மருந்து கொடுக்கப்பட்டபோது காணப்பட்டதைவிட இப்போது குறிகள் தெளிவாகவும் அதிக எண்ணிக்கையிலும் இருக்கும். இவ்விதம் கொடுக்கப்படும் மருந்தினுல் நன்மை விளைவது நின்றவுடன் அச்சமயத்தில் நோய்க் குறிகளை மறுபடி ஆராய்ந்து அதற்கேற்றபடி மற்ருேர் மருந்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்க வேண்டும். நோய் முற்றிலும் நீங்கும்வரை இவ்விதம் தொடர்ந்து செய்துவர வேண்டும்.

அரைகுறை நோய்களில் முதன்மை வகிப்பது உடலின் மேற்பகுதியான சருமத்தில் உண்டாகும் கோளாறுகளேயாகும். சரும நோய் உடம்பின் எந்த இடத்தில் இருக்கிறதோ அந்த இடத்தில் மட்டுமே நோய் இருப்பதாகவும் மற்ற பகுதிகள் ஆரோக்கியமாய் இருப்பதாகவும் இதுவரை வைத்தியர்கள் கருதி வந்துள்ளனர். இக்கருத்து மிகத் தவருனது ; மிக மிகக் கொடுமையான விளைவுகளை உண்டாக்கிய சிகிச்சைக்கு வழி காட்டியுள்ளது.

அடிதடிபட்டோ, கீழே விழுந்தோ, கத்தி முதலிய ஆயுதங்களாலோ உடலின் வெளிப்புறத்தே நேரும் சேதங்களால் தோன்றும் சருமக் கோளாறுகளை வெளிப்புற நோய் என்று சொல்லலாம். ஆயினும் வெளிக் காரணங்களால் சருமத்தில் ஏற்படும் சேதம் அதிகமாய் இருந்தால் உடம்பு முழுவதும் அக்கோளாறில் பங்கு கொள்கிறது ; சுரம் முதலிய அறிகுறிகள் தோன்றுகின்றன. இச்சமயத்தில் அக்கோளாறுக்கு ஆயுத சிகிச்சை தேவை என்ருலும் அது ஓரளவுக்குத்தான்; அதாவது உயிர்ப்புச் சக்தியின்மூலம் ஏற்படவேண்டிய

நன்மைக்குக் குறுக்காக நிற்கும் தடைகளை நீக்குவதற்கே ஆயுத சிகிச்சை அனுசரிக்கப்படவேண்டும். நழுவிப் போன எலும்பு மூட்டுகளைப் பொருத்தி வைத்தல்; பிளந்துபோன சருமத்தின் இரு உதடுகளும் ஒட்டிக் கொள்ளும்படித் துணியினால் கட்டி விடுதல், உடலின் உட்புறத்தே ஊடுருவிச் சென்றுவிட்ட வேற்றுப் பொருள்களை வெளியே எடுத்து விடுதல், உடலின் சந்து பொந்துகளில் நீர்ப்பொருள் தேங்கித் துன்பத்தை உண்டாக்கும்போது அங்கே பொத்துவிட்டு நீரை வடியச் செய்தல், முறிந்துபோன எலும்பைச் சேர்த்துப் பொருத்தி வைத்துக் கட்டுதல் முதலியவைகளை உதார ணங்களாய்க் கூறலாம். விபத்துக்களால் உடல் முழுவதும் தாக்கப்படாமல் இருப்பது மிக அபூர்வம்தான். கடுமையான அடிதடிகளால் கடுமையான சுரம் தோன்றும் போது அச்சுரத்தையும் மற்றுமுள்ள எல்லா உடல் வேதனைகளையும் உள்ளுக்கு மருந்து கொடுத்தே நீக்க வேண்டும். நெருப்புச் சுடுதல், கொதிக்கும் தண்ணீர் முதலியவை பட்டு வெந்து போகுதல், ஆகிய காரணங் களால் உண்டாகும் வலியை ஹோமியோபதி முறைப் படியே அடக்க வேண்டும். இதுபோன்ற சமயங்களில் ஹோமியோபதி வைத்தியரும் ஹோமியோபதி மருந்து களும் நிச்சயமாகத் தேவை.

எவ்விதமான விபத்தும் காரணமாய் இல்லாமல் அல்லது மிக அல்பமான ஏதோ ஒரு காரணத்தினால் உடலின் வெளிப்புறத்தே தோன்றும் சருமக் கோளாறுகளுக்கு ஆதாரம் முற்றிலும் வேறாக இருக்கிறது. உடலின் உட்புறத்தே உள்ள ஏதோ ஒரு கோளாறே அவை களுக்கு ஆதாரமாய் இருக்கிறது. ஆகவே அச்சரும நோய்களை வெளிப்புற நோய்கள் என்று மதிப்பதும் மேற்பூச்சு மருந்துகளே போதுமென்று முடிவு செய்து அவ்வாறே சிகிச்சை செய்வதும் ஆயிரமாயிரமாண்டு களாக அலோபதி முறையில் உள்ள மிகுந்த கேட்டை விளைவிக்கும் சிகிச்சை முறைகளில் ஒன்று.

இத்தகைய சரும நோய்கள் உடலின் வெளிப்புறத்தில் மட்டுமே இருப்பதாகக் கருதப்பட்டன. ஆகவே அவை வெளிப்புறக் கோளாறுகள் என்று அழைக்கப்பட்டன. உடலின் மேல் சரும நோய் உள்ள ஒரு இடத்தைத் தவிர மற்ற எந்த இடத்திலும் நோய் இல்லை யென்றும் சரும நோயுள்ள இடத்துக்கும் உடலின் மற்ற பகுதி களுக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை யென்றும் (அலோபதியர்கள்) நினைப்பதாகத் தெரிகிறது.

உடலின் உட்புறத்தே உள்ள ஏதோ ஒரு காரணம், உடலின் ஒத்துழைப்பு ஆகியவை இல்லாமல் எவ்விதமான சருமக் கோளாறும் தோன்றவோ, நீடித்திருக்கவோ, வளரவோ முடியாது. ஆகவே உடலும் நோயுற்றே இருக்க வேண்டு மென்பது சிறிதளவு சிந்தித்தாலே விளங்கும். உயிர்ப்புச்சக்தி, உடலின் மற்றப் பகுதிகள் ஆகியவைகளின் ஒத்துழைப்பும் அனுமதியும் இல்லாமல் சருமக் கோளாறு தோன்றியிருக்க முடியாது. உடல் உறுப்புக்களின் பல்வேறு உணர்ச்சிகளும் வேலைகளும் ஒன்றோடொன்று மிக நெருக்கமான தொடர்பு உள்ளவை. ஆதலால் முழு உடலிலும் கோளாறு இருப்பதாலேயே சருமக் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. உடலின் உட்புறத்தே நோய் இல்லாமல் வெளிப்புறத்தே எவ்வித நோயும் தோன்ற முடியாது.

அல்பமான விபத்துக்களால் அல்லது ஒருவிதக் காரணமும் இல்லாமல், உடலின் வெளிப்புறத்தே தோன்றும் ஒரு நோய்க்கு உண்மையான சிகிச்சை செய்வது எப்படி? உள்ளுக்கு மருந்துகளைக் கொடுத்து நோய் முழு வதையும் அழிக்க வேண்டும். அப்போதுதான் சிகிச்சை நிச்சயமான, உண்மையான பயனைத்தரும்.

மேலுள்ள விஷயம் முற்றிலும் உண்மை என்பது நமது அனுபவத்தில் சந்தேகத்துக்கு இடம் இல்லாத முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. சக்தி வாய்ந்த ஒவ்வொரு

மருந்தும் அதை உட்கொண்ட உடனே நோயாளியின் ஆரோக்கிய நிலையில் முக்கியமான மாறுதல்களை எல்லாச் சமயங்களிலும் ஏற்படுத்துகிறது. முக்கியமாக, வெளிப் புறத்தே நோய் உள்ள பகுதியிலும் மாறுதலை உண்டாக்கு கிறது. உடலின் வெளிப்புறத்தில் முக்கிய மற்ற இடத்திலே நோய் இருந்தாலும் கூட இம் மாற்றம் தவருமல் ஏற்படுகிறது. இம் மாற்றத்தின் விளைவாக வெளிப்புறத்தே இருந்த நோய் மறைந்து விட்டால் உடல் முழுவதுமே ஆரோக்கிய நிலைமையைத் திரும்பப் பெறுகிறது. மேல் பூச்சு மருந்து எதுவும் தேவையில்லை. ஆனல், கொடுக்கப்படும் மருந்து நோயின் மொத்தக் குறிகளை ஆதாரமாய் வைத்து ஹோமியோபதி முறைக் கிணங்க முற்றிலும் தகுதியுடையதாக இருக்கவேண்டும்.

நோயை ஆராய்ச்சி செய்யும் காலத்தில், வெளிப்புறத்தே தென்படும் நோயின் உண்மையான தன்மையைக் கவனிப்பதுடன், நோயாளியின் ஆரோக்கிய நிலைமையில் ஏற்பட்டுள்ள எல்லா மாறுதல்களையும் வேதனைகளையும் குறிகளையும், மருந்து கொடுப்பதற்கு முன்னதாகக் காணப்பட்ட குறிகளையும் சேர்த்துக் கவனித்தால், ஏற்ற மருந்தைத் தேர்ந்தெடுக்கும் வேலை வெற்றிகரமாய் முடிகிறது. இவ்வழியினல் நமக்குக் கிடைத்த நோயின் மொத்தக் குறிகளுடன் பெரும்பாலும் ஒற்றுமையுள்ள செயற்கை நோய் ஒன்றைத் தோற்றுவித்த மருந்து எது என்று ஹோமியோபதி முறைக் கிணங்கத் தேர்ந் தெடுத்துக் கொடுப்பது சாத்தியமாகும்.

மேலுள்ளபடி தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்ட மருந்தை உட்கொண்டவுடன் (நோய் சமீபத்தில் தோன்றிய தாயின் முதல் வேளை மருந்திலேயே) சருமக் கோளாறும் உடலில் பொதுவாய்க் காணப்பட்ட நோய்க் குறிகளும் ஒரே சமயத்தில் குணமாகி விடுகின்றன. சரும நோய் உடலினுட் புறத்தே இருந்த ஒரு நோயினல்தான் தோன்றியது என்பதும் அதைத் தனிப்பட்ட ஒரு

நோயாகக் கருத முடியாது என்பதும் நோயின் பல குறிகளில் அது மிகத் தெளிவாய்த் தெரியும் ஒரு குறியே என்பதும் இப்போது புலனுகும்.

சரு நோய் சமீபத்தில் தோன்றியதாய் இருந்தாலும் சரி அல்லது பல காலமாய் நீடித்திருந்து வருவதானுலும் சரி, நோய் உள்ள இடத்தின் மேலே எதையும் தடவவோ, தேய்க்கவோ வேண்டியதில்லே. அதனுல் பயனும் இல்லே. நோய்க்கு ஏற்றதாய், உள்ளுக்குச் சாப்பிட்டால் அதை நீக்க வல்லமை உள்ளதாய் இருக்கும் மருந்தைக்கூட மேலே தடவவேண்டியதில்லே. மருந்தை உள்ளுக்குச் சாப்பிடும்போது கொஞ்சம் மேலேயும் தடவினுல் என்ன என்று கேட்கலாம். ஆனுல் அவ்வாறு தடவுவதில் எவ்வித நன்மையும் இல்லே. ஏனென்ருல் பலமான வெளிப்புற விபத்துக்கள் எதுவும் காரணமாய் இல்லாமல், சூட்சுமமான முறையில் அல்லது உடலின் உட்புற நோயினுல் தோன்றும் திடீர் வகைச் சரும நோய்கள் (உதாரணம் : அக்கிப்படுவன், ஒரு சில உறுப்புகளில் மட்டும் வேக்காடு, ஆகியவை) நோயாளியின் உடலிலே உள்ளும் புறமும் தென்படும் குறிகளுக்குத் தக்கபடி ஹோமியோபதிக் கோட்பாடுகளுக்கு இணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்துகளே உள்ளுக்குக் கொடுத்தால் மிக நிச்சயமாய்க் குணமடைந்து விடுகின்றன. பெரும்பாலான சமயங்களில் இம் மருந்துகளேத் தவிர வேறு துணே சிகிச்சை எதுவும் தேவைப்படுவது இல்லே. ஆனுல் சிற்சில சமயங்களில் இந் நோய்கள் அம்மருந்துகளால் முற்றிலும் நீக்கப்படாமல் சரும நோய் அப்படியே இருந்து வருமானுல் ஸோரா எனப்படும் விஷ நோய்க் கூறுதான் அந் நிலேமைக்குக் காரணமாய் இருக்கும். இதுவரை உடலின் உட்புறத்தே உறங்கிக் கிடந்த இவ் விஷ நோய்க் கூறு இப்பொழுது விழித்தெழுந்து உடலின் வெளிப்புறத்தே தென்படும் நீடிக்கும் வகை நோயாய் உருவெடுத்துள்ளது (என்று அறிய வேண்டும்).

இதுபோல் நிகழ்வது அபூர்வம் என்று சொல்ல முடியாது. அவ்வாறு நிகழ்ந்தால் நோயை முற்றிலும் குணம் செய்ய அதன் கடுமை தணிந்தவுடன் (நீடித்திருக்கும் நோய்களைச் சிகிச்சை செய்யும் விஷயமாக நான் எழுதியுள்ள புத்தகத்தில் உள்ளபடி) நோயாளியிடம் அச் சமயத்திலும் அதற்கு முன்னதாகவும் காணப்பட்ட நோய்க் குறிகளை ஆதாரமாய் வைத்து ஏற்றதான, ஸோரா விஷத்தை அடக்கக்கூடிய மருந்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்க வேண்டும். நாட்பட்ட சரும நோய்களில், அவை கெட்ட நடத்தையினால் ஏற்படாதவைகளாய் இருந்தால் ஸோரா விஷ நோய்க் கூறை அடக்கும் மருந்தொன்றே போதும்.

ஹோமியோபதிக் கோட்பாடுகளுக் கிணங்க நோயின் மொத்தக் குறிகளுக்கு ஏற்றதான மருந்தை உள்ளுக்குச் சாப்பிடுவதுடன் நோயுள்ள இடத்தின் மேலே தடவியும் வந்தால் நோய் அதிக விரைவில் நீங்கிக் குணம் ஏற்படுமென்று தோன்றுவது இயல்பு.

ஆனால் ஸோரா விஷநோய்க் கூறினால் உண்டாக்கப்படும் சரும நோய்களில் மட்டுமின்றி, ஸிபிலிஸ், ஸைகோஸிஸ் ஆகிய மற்ற இரு விஷநோய்க் கூறுகளால் தோன்றும் சரும நோய்களிலும் இவ்விதச் சிகிச்சையை (மருந்தை நோயுள்ள இடத்தின் மேலே தடவுவது) கையாளக் கூடாது. ஏனென்றால் உடலின் வெளிப்புறக் கோளாறு ஒன்றே (சரும நோய்) ஒரு நோயின் முக்கியமான குறியாக இருக்கும் சமயத்தில், உட்கொள்ளப்படும் மருந்தை அதே சமயத்தில் மேலே தடவுவதற்கும் உபயோகித்தால் மிகப் பெரியதோர் இடையூறு ஒன்று தோன்றுகிறது. அதாவது அம்மருந்தை சருமக் கோளாறுள்ள இடத்தின் மேலே தடவுவதால் நோயின் முக்கியமான குறி (சருமக் கோளாறு) உள்ளிருக்கும் நோய் குணமாவதற்கு முன்பாகவே குணமாகி விடுகிறது. இதனால் நோய் முழுவதும் நீங்கிவிட்டது என்று நினைத்து

ஏமாறுவதற்கு இடமேற்படுகிறது. எப்படி இருந்தாலும் சருமக் கோளாறு மிக முன்னதாக மறைந்துவிடும்போது உட்கொள்ளப்படும் மருந்திஞல் உள்ளிருக்கும் நோய் நீங்கிவிட்டதா இல்லையா என்று முடிவு செய்வது கஷ்டமாய் விடும்; சில சமயங்களில் முடிவு செய்வது சாத்தியமே இல்லை.

இக் காரணத்திஞலேயே, விஷநோய்க் கூறுகளால் தோன்றும் நீடிக்கும் வகை நோய்களின் சருமக் கோளாறுகளில் உள்ளுக்குச் சாப்பிட்டால் நோயை முற்றிலும் நீக்க வல்லமையுள்ள மருந்தை (உள்ளுக்குச் சாப்பிடாமல்) மேற் புறத்தில் மட்டும் தடவுவது கூடாது. ஏனென்ருல் அந்நீடிக்கும் வகை நோயின் வெளிப்புறக் கோளாறு மட்டுமே மறைந்து அரை குறைவான குணமே ஏற்படுகிறது. நோயற்ற நிலைமை முற்றிலும் தோன்றுவதற்கு அவசியமான உட்புறச் சிகிச்சை விஷயம் குளறுபடியாகி விடுகிறது. முக்கியமான குறி (சருமக் கோளாறு) மறைந்து போய்விட்டது. அதிகத் தெளிவு இல்லாத மற்ற குறிகளே பாக்கியாக இருக்கின்றன. நோயின் உருவைத் தெளிவாகவும் உண்மையாகவும் வெளியிட அவை போதாது.

நோய்க்கு ஏற்ற ஹோமியோபதி மருந்து கண்டு பிடிக்கப் படுவதற்கு முன்னதாக, கார மருந்துகளாலோ, கத்தியிஞலோ சருமக் கோளாறு அழிக்கப்பட்டு விட்டால் அந்நோயைக் குணம் செய்வது மிக மிகக் கஷ்டமாகி விடுகிறது. நோயின் உண்மையான த்ன்மையை நமக்கு அறிவித்து ஏற்ற மருந்தைத் தெளிவுபடுத்த உதவும் நோயின் வெளிப்புறக் குறி (சருமக் கோளாறு) முற்றிலும் அழிந்து விடுவதாலும் மற்ற குறிகள் அவ்வளவு தெளிவாய் இல்லாததாலுமே இக் கஷ்டம் ஏற்படுகிறது.

சருமக் கோளாறு அழியாமல் இருந்தால் நோயை முற்றிலும் நீக்கத்தக்க ஹோமியோபதி மருந்தைத் தேர்ந்தெடுத்துச் சிகிச்சை செய்யும் விஷயத்தில்

நமக்குத் துணை புரியும். ஏற்ற மருந்தைத் தேர்ந்தெடுத்து அதை உள்ளுக்குச் சாப்பிடக் கொடுத்துவரும் காலத்தில் சருமக்கோளாறு மறையாமல் இருக்கும் வரை நோய் முழுவதும் நீங்கவில்லை என்றும் மறைந்து போய்விட்டால் நோய் முற்றிலும் குணமாகி விட்டது என்றும் நாம் நிச்சயமாய் அறிந்து கொள்ளலாம்.

மனித உடலிலுள்ள உயிர்ப்புச்சக்தி, தன்னுடைய சக்தியைக் கொண்டு நீக்க முடியாத நாட்பட்ட வகை நோயொன்றால் தாக்கப்படும் போது, முக்கியமான உறுப்புக்களை அழித்து உயிரைப் போக்க முற்படும் அந் நோயைச் சாந்தப் படுத்துவதற்காக, உடலின் வெளிப் புறத்திலே சருமக் கோளாறு ஒன்றை உண்டாக்கும் வழியைக் கையாள்கிறது. அதனால் உட்புறத்தே இருந்த நோய் வெளிப்புறம் இழுக்கப்படுகிறது. வெளிப்புற நோய் இருப்பதினால் உட்புறநோய் குணமாவது இல்லை; அதன் கடுமையும் குறைவதில்லை; ஆனால் சிறிது காலத்துக்குச் சாந்தமாய் இருக்கிறது. வெளிப் புறநோய் உட்புற நோயின் ஒரு பகுதியே. உயிர்ப்புச் சக்தியினால் உடலின் முக்கிய மில்லாத ஒரு இடத்துக்குத் தள்ளப்பட்ட உட்புறநோயே அது. ஆனால் இவ்வெளிப்புற நோயினால் உட்புற நோயைச் சாந்தப் படுத்தவே முடிகிறது. அதைக் குணம் செய்யவோ, அதன் கடுமைக் குணத்தைத் தணிக்கவோ முடியவில்லை. வெளிப்புற நோயைச் சிறிதும் இலக்ஷியம் செய்யாமல் உட்புறநோய் படிப்படியாக அதிகமாகவே செய்கிறது. உட்புறநோய் அதிகரிக்க அதிகரிக்க, அதற்கேற்றபடி வெளிப்புற நோயை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை இயற்கைக்கு நேருகிறது. அப்போதுதான் உட்புற நோயை ஓரளவுக்குச் சாந்தமாய் வைத்திருக்க முடியும். 'கால்களில் காணப் படும் நாட்பட்ட குழிப்புண்கள் உடலின் உட்புறத்தே உள்ள ஸோரா விஷ நோய்க்கூறு குணமாகாத வரையில்

அதிக மாகின்றன. அதேபோல் உள்ளே இருக்கும் ஸிபிலிஸ் விஷ நோய்க்கூறு குணமாகும் வரை பிறப்பு உறுப்பில் பறங்கிப் புண் பெரியதாகிக் கொண்டே இருக்கிறது. உள்ளே இருக்கும் நோய் அதிகமாவதா லேயே வெளிப்புறமிருக்கும் நோய் அதிகமாகிறது.

நோய் முழுவதையும் குணம் செய்து விடலாம் என்ற நம்பிக்கை கொண்டு வெளிப்பூச்சு மருந்துகளை உபயோகித்து நோயின் வெளிப்புறக்குறியை அலோபதி வைத்தியர் அழித்து விடுவாரேயானால், அந்நிலைமையைச் சமாளிப்பதற்காக இயற்கை இது வரை உறங்கிக் கிடந்த உட்புற நோயையும் மற்ற குறிகளையும் கிளப்பி விடுகிறது; அதாவது உட்புற நோய் அதிகமாகிறது. இவ்விதம் உட்புற நோய் அதிக மாகும்போது அதை வெளிப்புற நோய் உடலின் உள்ளே தள்ளப் பட்டது அல்லது நரம்பு களின் மீது ஏவப்பட்டது என்று சொல்வது வழக்கம்.

உடலின் வெளிப்புறக் கோளாறுகளை நீக்குவதற்காகச் செய்யப்படும் ஒவ்வொரு வெளிப்புறச் சிகிச்சையும் உட்புறக்கோளாறைக் குணம் செய்யாமல் அப்படியே விட்டு விடுகிறது. ஸோரா விஷ நோய்க்கூறினால் உடலின் வெளிப்புறத்தில் தோன்றும் கோளாறுகளை பல விதமான களிம்புகளைத்தடவிப் போக்கி விடுவது, (ஸிபிலிஸ் விஷ நோய்க் கூறினால் பிறப்பு உறுப்புகளில் உண்டாகும்) பறங்கிப் புண்ணைக் கார மருந்துகளால் சுட்டு விடுவது, (ஸைக்கோஸிஸ் விஷ நோய்க் கூறினால் பிறப்பு உறுப்புகள், ஆசன வாய் ஆகிய இடங்களில் வளரும்) கெட்ட சதையைக் கத்தியால் அறுத்தெறிந்து விடுவது, ஆகியவைகளை உதாரணங்களாகக் கூறலாம். மிகவும் கொடிய இவ்வெளிப்புறச் சிகிச்சை முறை இது வரை எல்லோராலும் கையாளப்பட்டு வந்திருக்கிறது. மனித இனத்தை வாட்டி வதைக்கும் எண்ண வொண்ணாத பற்பல நீடிக்கும் நோய்கள் இவ்வெளிப் புறச் சிகிச்சையினால் தோன்றியுள்ளன. மனித

இனத்துக்கு வைத்தியர்கள் செய்யும் மாபெரும் துரோகம் என்றும் இச் சிகிச்சையைக் கூறலாம். ஆயினும் வெளிப்புற நோய்களுக்கு இது வொன்றே சிகிச்சை என்று இது வரை வைத்திய ஆசிரியர்கள் போதித்து வந்திருக்கின்றனர். அவ்விதமே கையாளப்பட்டும் வந்திருக்கிறது.

ஆரோக்கியக் குறைவான வழியிலே வாழ்க்கையைத் தொடர்ந்து பல காலம் நடத்துவது, அலோபதி வைத்தியர்கள் நோய்களுக்குத் தவருகவும் தீங்கை விளைவிக்கும் வகையிலும் பற்பல மருந்துகளைக் கொண்டு சிகிச்சை செய்தல் ஆகிய காரணங்களால் தோன்றும் நோய்களை நீடிக்கும் நோய்களின் பட்டியலிலிருந்து எடுத்து விட்டால் மீதியுள்ள எல்லா நீடித்த கோளாறு களும் நோய்களும் உடலின் உட்புறத்தே உள்ள **ஸிபிலிஸ், ஸைகோஸிஸ், ஸோரா** என்று அழைக்கப்படும் மூவகை விஷநோய்க் கூறுகளாலேயே உண்டாகின்றன. அவ்விஷயத்தில் எவ்வித விதிவிலக்கும் இல்லை. ஸிபிலிஸ், ஸைகோஸிஸ் ஆகிய இரண்டைவிட ஸோரா விஷ நோய்க் கூறினுல் தோன்றும் நோய்களே மிக அதிகமாக இருக்கின்றன. வெளிப்புறக் கோளாறு தோன்று வதற்கு முன்பாகவே அதற்குக் காரணமான விஷ நோய்க் கூறு உடல் முழுவதையும் தன் வசமாக்கி உடலினுள்ளே எல்லாத் திசைகளிலும் ஊடுருவிச் சென் றிருக்கிறது. (உடலினுள்ளே இருப்பது ஸோரா விஷ நோய்க் கூருக இருந்தால் பொறுக்குகள் தோன்றும் சரும நோய்களும், ஸிபிலிஸ் விஷநோய்க் கூருக இருந்தால் பறங்கிப் புண் அல்லது அரையாப்புக் கட்டியும், ஸைகோஸிஸ் விஷ நோய்க் கூருய் இருந்தால் கெட்ட சதை வளர்ச்சியும் வெளிப்புறக் கோளாறுகளாய் ஏற்படுகின்றன.) வெளிப்புறக் கோளாறு தோன்றிய தால் உடலைப் பீடித்துள்ள விஷ நோய்க் கூறுக்குத் தன் சொரூபத்தை வெளியிட முடியாமல் போய்விடுகிறது.

ஆகவே வெளிப்புறக் கோளாறை அழித்துவிட்டால் விஷ நோய்க் கூறு எதுவாய் இருந்தாலும் அது இயற்கையின் தூண்டுதலால் உடனேயோ அல்லது சில நாட்கழித்தோ முழு வளர்ச்சி பெற்று நம்ப முடியாத அளவில் பற்பல வகைப்பட்ட நீடிக்கும் நோய்களை உண்டாக்குகிறது. வைத்தியர்கள் ஒழுங்கான வழியில் சிகிச்சை செய்து இம்மூன்று விஷநோய்க் கூறுகளையும் மேல் பூச்சு மருந்துகளை உபயோகியாமல் ஏற்ற ஹோமியோபதி மருந்துகளை உள்ளுக்குக் கொடுத்து நீக்கியிருந்தால் ஆயிரமாயிர மாண்டுகளாக மனித இனத்தைச் சுட்டெரித்து வரும் இந்நீடித்த நோய் களின் எண்ணிக்கை மிகவும் குறைவாய் இருந்திருக்கும்.

நீடிக்கும் தன்மையுள்ள விஷ நோய்க் கூறுகளால் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்படும் வெளிப்புறக் கோளாறுகளையோ அல்லது அவை மேலும் வளர்ச்சி யடையும்போது தோன்றும் இரண்டாம் வரிசைக் கோளாறுகளையோ வெளிப்பூச்சு மருந்துகளைக்கொண்டு ஒருக்காலும் சிகிச்சை செய்ய மாட்டார் ஹோமியோபதி வைத்தியர். உடல் வேலையைத் தூண்டும் மருந்துகளை* வெளிப்புறமாய் உபயோகித்தோ அல்லது ஆயுதங்களை உபயோகித்தோ சிகிச்சை செய்ய மாட்டார். வெளிப்புறக் கோளாருய் இருந்தாலும் சரி, இரண்டாம்தரக் கோளாருய் இருந்தாலும் சரி, அவைகளை ஏற்படுத்திய விஷநோய் கூறைக் நீக்கவே சிகிச்சை செய்கிருர். அச் சிகிச்சையினுல் அக் கோளாறுகள் தாமாகவே மறைந்து போகின்றன. ஆனுல் அவ்விதமான நோய்களை முதலில் சிகிச்சை செய்த அலோபதி வைத்தியர் இவ்வழியைப் பின்பற்றி யிருக்கமாட்டார். அதனுல் ஹோமியோபதி வைத்தியரிடம் அந் நோயாளிகள் சிகிச்சை பெறவரும் காலத்தில் வெளிப்புறக் கோளாறுகள்* வெளிப்புற மருந்துகளால் அழிக்கப்

*உதாரணமாக, உதடுகளிலும் முகத்திலும் தோன்றும் புற்றுநோயில் (இது ஸோரா விஷநோய்க் கூறு முழு வளர்ச்சி யடையும்போது தோன்றும்

பட்டிருக்கும். ஆதலால் இரண்டாம்தரக் குறிகளையே, அதாவது விஷ நோய்க் கூறுகள் பொங்கியெழுந்து வளர்ச்சியடைவதால் தோன்றும் கோளாறுகளையே ஹோமியோபதி வைத்தியர் இப்பொழுது காண முடிகிறது. முக்கியமாக ஸோரா விஷநோய்க் கூறினுல் தோன்றும் நீடிக்கும் நோய்களைச் சமாளிக்க வேண்டி இருக்கும். அந் நோய்களுக்கு எவ்வாறு உட்புறச் சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்பது பற்றி பல ஆண்டுகளாய்க் கவனித்தும் சிந்தித்தும் அனுபவித்தும் நான் அறிந்த விஷயங்களை "நீடித்திருக்கும் நோய்கள்" என்று பெயருள்ள எனது நூலில் எழுதியிருக்கிறேன்.

ஒரு கோளாறு) வெள்ளைப் பாஷாணத்தால் தயாரிக்கப்பட்ட மருந்தை புற்றின் மேலே தடவி அதை அழிப்பதை நான் ஆதரிக்கமாட்டேன். அச் சிகிச்சை அளவு மீறிய வலியைத் தருகிறது; பல சமயங்களில் பயனற்ற தாய் விடுகிறது என்பதற்காக மட்டும் நான் அவ்வாறு சொல்லவில்லை. ஆர்ஸனிக மருந்து வெளிப்புறமுள்ள புண்ணை நீக்குவதில் வெற்றி பெற்றாலும் அதன் அடிப்படை நோய் சிறிதளவும் பாதிக்கப்படாமல் அப்படியே இருப்பதால் உயிர்ப்புச் சக்தி அடிப்படை நோயை உடலின் மற்றொரு பகுதியில் மாற்றி விடுகிறது. அவ்வாறு மாற்றப்படும் பகுதி உடலின் முக்கிய உறுப்பாகவும் இருக்கலாம். இவ்வாறு முக்கியமில்லாத இடத்திலிருந்து முக்கியமான இடத்துக்கு நோய் மாறுவதற்கு இடமளிக்கக் கூடாது என்பதற்காகவே சொல்கிறேன். கண்கள் குருடாகுதல், காது கேளாமை, பைத்தியம், அடிக்கடி மூச்சை அடைக்கும் காச நோய், நீர்ச் சுரப்பு, மூளையினுள் இரத்தக் குழாய் வெடித்தல் முதலியவைகளை உதாரணங்களாய்க் கூறலாம். சில சமயங்களில் புற்றுநோய் அதிக வளர்ச்சியடையாமல் இருந்து உயிர்ப்புச் சக்தியின் வலிமையும் அதிக மாய் இருக்கலாம். அச்சமயங்களில் ஆர்ஸனிக மருந்தை வெளிப்புறமாய் உபயோகிப்பதால் வெற்றி கிடைக்கலாம். ஆனால் உள்ளுக்கு மருந்து கொடுத்து முழு நோயையும் குணம் செய்ய அச்சமயத்தில்தான் சாத்திய மாய் இருக்கும்.

முகத்தில் அல்லது பெண்களின் ஸ்தனங்களில் உண்டாகும் புற்றைக் கத்தியால் வெட்டியெடுத்துவிடும் போதும், நீருள்ள சதைக் கட்டிகளைக் கிழித்துவிடும்போதும் மேலுள்ளதைப் போன்ற விளைவே தோன்றுகிறது. அதைவிடக் கொடியதான விளைவும் தோன்றலாம். எது எப்படி இருந் தாலும் வாழ்நாள் குறுகிச் சாவு நெருங்கி விடுகிறது. இவ்வித விளைவுகள் கணக்கிட முடியாத அளவுக்கு ஏற்பட்டுள்ள போதிலும் அலோபதி வைத்தி யர்கள் ஒவ்வொரு கேசிலும் பழய வழியையே பின்பற்றி வருகின்றனர்.

நீடித்த நோயொன்றுக்குச் சிகிச்சை செய்ய ஆரம்பிப்பதற்குமுன், நோயாளிக்குத் துன்மார்க்க நோய் (ஸிபிலிஸ் அல்லது கெட்ட சதை வளர்ச்சியை உண்டாக்கும் மேகவெட்டை) ஏதாவது தொற்றியிருக்கிறதா என்று மிகக் கவனமாய் ஆராய வேண்டும். ஏனென்ருல் நோயாளிக்கு ஸிபிலிஸ் நோயின் குறிகள் மட்டும் (அல்லது இக்காலத்தில் மிக அரிதாகக் காணப்படும் கெட்ட சதையை உண்டாக்கும் மேகவெட்டைமட்டும்) காணப்பட்டால் அந்நோயை இலக்காக வைத்துச் சிகிச்சை செய்யவேண்டும். ஆனுல் இக்காலத்தில் அந்நோய்கள் பெரும்பாலும் ஸோரா விஷ நோய்க் கூறுடன் கலந்தே காணப்படுகின்றன. தனியாக இருப்பது அபூர்வம். நீடிக்கும் நோய்களுக்கு ஸோரா விஷநோய்க்கூறே முக்கிய காரணமாய் விளங்குகிறது.

மேலுள்ள விவரங்களைத் தெரிந்து கொண்ட பிறகு, நீடித்துள்ள அந்நோய்க்கு அதுவரை செய்யப்பட்ட அலோபதிச் சிகிச்சையின் விவரம், அடிக்கடியும் பிரதானமாகவும் கொடுக்கப்பட்ட மருந்துகளின் விவரம், அவைகளால் ஏற்பட்ட குண குணங்களின் விவரம் ஆகியவைகளையும் ஹோமியோபதி வைத்தியர் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நோயின் தன்மையில்

---

*நீடித்திருக்கும் நோய் மிகக் கடுமையானதாய், குணம் செய்ய முடியாததாய் இருக்கும் சந்தர்ப்பங்களில்கூட, அது பல வருஷங்களுக்குமுன் குளிரில் அடிபட்டது (மழையில் சொட்டச் சொட்ட நனைந்து விடுதல், உடம்பு வியர்த்துக் கொண்டிருக்கும்போது குளிர்ந்த தண்ணீரைக் குடித்தல் ஆகியவை), பயந்து கொண்டது, சுளுக்கு ஏற்பட்டது, மனக் கசப்புக்கு உள்ளானது போன்ற ஏதோ ஒரு காரணத்தினுல்தான் நோய் தோன்றியது என்று நோயாளியும் அவருடைய நண்பர்களும் தீர்மானமாய்க் கூறலாம். அவ்வளவு உறுதியாகச் சொல்கிருர்களே என்று நினைத்து நாம் ஏமாறக் கூடாது. இத்தகைய காரணங்களால் நீடிக்கும் நோய்களை ஆரோக்கியமான ஒருவர் உடலில் ஏற்படுத்தவோ, வருஷக் கணக்கில் நீடித்து வளரச் செய்யவோ முடியாது. ஸோரா விஷநோய்க் கூறினுல் அது சாத்தியமாகும். வேண்டுமானுல் நோயாளி குறிப்பிடும் காரணத்தால் உடலினுள்ளே உறங்கிக் கிடந்த விஷநோய்க்கூறு தட்டியெழுப்பப்பட்டது என்று வைத்துக் கொள்ளலாம்.

ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிய முடியும். சாத்திய மானால் முன் சிகிச்சையினால் ஏற்பட்டுள்ள கேடுகளை நீக்கலாம்; அல்லது ஏற்கனவே தவறாக உபயோகப் படுத்தப்பட்ட மருந்துகளை இப்பொழுது உபயோகிக் காமல் இருக்கலாம்.

நோயாளியின் வயது, அவர் வாழும் விதம், உண்ணும் உணவு, செய்யும் தொழில், குடும்பத்தில் அவருக்கு உள்ள அந்தஸ்து, பிறருடன் பழகும் விதம் முதலிய விவரங்களைச் சீர்தூக்கிப் பார்த்து அவைகளில் எதனா லாவது நோய் அதிகரிக்க இடம் இருக்கிறதா அல்லது சிகிச்சைக்கு அனுகூலம் அல்லது பிரதிகூலம் ஏற்படுமா என்பதை நிர்ணயிக்க வேண்டும். இதைப் போலவே நோயாளியின் மனதையும் மனப் பாங்கையும் கவனித்து அவைகளால் நாம் செய்யும் சிகிச்சைக்கு இடையூறுகள் ஏற்படுமா என்பதைத் தெரிந்துகொண்டு இடையூறு ஏற்படுமென்று தோன்றினால் ஏற்றபடி அவ ருடைய சுபாவத்தில் மாறுதலை உண்டாக்க வேண்டும்.

இது முடிந்த பிறகு, வைத்தியர் நோயாளியுடன் பன்முறை பேசி நோயின் முழு உருவத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதிலிருந்து நோயின் முக்கியமான, விஷேதமான (விசேஷமான) குறிகளைத் தேடிப் பிடித்து அக்குறிகளுடன் மிக நெருங்கிய ஒற்றுமையுள்ள குறிகளை உடைய ஸோரா விஷநோய்க் கூறை அடக்கும் மருந்தொன்றைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்துச் சிகிச் சையைத் துவக்க வேண்டும்.

அரை குறை நோய்கள் என்று மேலே நான் குறிப்பிட் டவைகளில் அனேகமாக எல்லா நோய்களுமே ஸோரா விஷநோய்க் கூறினால்தான் தோன்றுகின்றன. அரை குறை நோய்களில் ஒரே ஒரு குறிமட்டும் தனிப்பட்ட தாய், பெரியதாய், பிரதானமாகவும் ஆகிவிடுவதால் மற்ற குறிகள் யாவும் மறைந்துபோய் விடுகின்றன. இதனால் அரைகுறை நோய்களைக் குணம் செய்வது கடினமாய்

இருக்கிறது. மன நோய்கள் என்று அழைக்கப்படும் நோய்களும் அரை குறை நோய்கள் என்ற பிரிவில் அடங்கியுள்ளன. ஆனால் மன நோய்கள் மற்ற நோய் களுடன் சேராத தனிப்பட்ட இனமாகக் கருதக்கூடாது. ஏனென்றால் உடலைப் பற்றிய நோய்கள் என்று கருதப் படும் நோய்கள் அனைத்திலும் நோயாளியின் மனமும் குணமும் மாறுபாடடைந்தே இருக்கின்றன. நம்மிடம் சிகிச்சை பெறவரும் ஒவ்வொரு கேசிலும் நோயின் மொத்தக் குறிகளுடன் நோயாளியின் குணத்தையும் நிச்சயமாகக் கவனிக்க வேண்டும். அப்பொழுது தான் நோயின் உண்மை வடிவை அறிந்து ஏற்ற ஹோமியோ பதி மருந்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து வெற்றி யடைய முடியும்.

ஏற்ற ஹோமியோபதி மருந்தைத் தேர்ந்தெடுக்க, நோயாளியின் மனக் குறிகள் பல சமயங்களில் முக்கிய மானவையாக அமைந்து விடுகின்றன. ஆகவே மனக் குறிகளின் சிறப்புத்தன்மை பற்றி மேலும் எழுதத் தேவை இல்லை. இச்சிறப்புக் குறிகளைக் கூர்ந்து கவனிக்கும் வைத்தியரால் எளிதிலே அறிந்து கொள்ள முடியும்.

எல்லா வகை நோய்களிலும் மனிதனின் மனதிலும் குணத் திலும் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. அவை முக்கிய மான குறிகளாகவும் இருக்கின்றன. நோய் நீக்கும் பொருள்களைப் படைத்த கடவுள் மனக் குறிகளையும் மறக்கவில்லை யென்றே தெரிகிறது. ஏனெனில் எல்லா மருந்துப் பொருள்களிலும் மனிதனின் மனதிலும் குணத் திலும் மாறுபாடுகளை உண்டாக்கக் கூடிய வல்லமை காணப்படுகிறது. அதுமட்டு மல்ல ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு விதமான மாறுபாடுகளைத் தோற்றுவிக்கிறது.

ஆதலால் ஒவ்வொரு நோயிலும், அது திடீர் வகையைச் சேர்ந்ததாய் இருந்தாலும் சரி, அதன் மொத்தக் குறிக ளுடன் நோயாளியின் மனதிலும் குணத்திலும் ஏற்

பட்டுள்ள மாறுதல்களையும் கவனித்து அம் மொத்தக் குறிகளையும் மனகுண மாறுபாடுகளையும் எம்மருந்து உண்டாக்கியிருக்கிறது என்று தேர்ந்தெடுக்கா விட்டால் ஹோமியோபதி முறைப்படி அந்நோயைக் குணம் செய்ய நிச்சயமாக முடியாது.

மன. நோய்களைக் குணம் செய்யும் விஷயமாக நான் ஒன்றிரண்டு விஷயங்களைத் தவிர, வேறெதுவும் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில் மற்ற நோய்களைக் குணம் செய்யும் போது கையாளப்படும் முறைகளே, மன நோய்களைக் குணம் செய்யும் போதும் கையாளப்பட வேண்டும். அதாவது சிகிச்சைக்கு வந்துள்ள நோயாளியிடம் காணப்படும் உடல், மனக் குறிகளுடன் மிக நெருங்கிய ஒற்றுமையுள்ள செயற்கை நோய்க் குறிகளை எந்த மருந்து நோயற்ற ஒருவர் உடலிலும், மனத்திலும் உண்டாக்கியிருக்கிறதோ, அம் மருந்தே அந்நோயைத் தீர்க்கும் வல்லமையுள்ளது. வேறு எவ்வழியாலும் நீக்க முடியாது.

மனதைப் பற்றியவை என்றழைக்கப்படும் எல்லா நோய்களும், உடலைப் பற்றிய நோய்களே என்பதில் சந்தேகமில்லை. இந் நோய்களில் மனக் குறிகள் அதிகரிக்கின்றன. அதே சமயத்தில் உடல் குறிகள் (பல சமயங்களில் மிக வேகமாக) மறைய ஆரம்பிக்கின்றன. முடிவில், அரை குறை நோய்கள் என்று திட்டமாகக் கூறுமளவிற்கு மாறுதலை அடைந்து விடுகின்றன.

மேலே விவரித்துள்ளபடி உடலைப் பற்றிய நோய்கள் மனதைப் பற்றிய நோய்களாக மாறி விடுவது அபூர்வமான நிகழ்ச்சிகளல்ல. சுவாச கோசங்களில் சீழ்ப் பிடித்தல், உடலிலுள்ள முக்கியமான ஒரு உறுப்பு கெட்டு விடுதல், திடீர் வகை நோய்கள், பிள்ளைப் பேறுக்காலம் முதலிய நோய்களில் சாவு தவிர்க்க முடியாது என்று தோன்றும் சந்தர்ப்பங்களில், நோயாளியிடம் ஏற்கனவே காணப்பட்ட மனக் குறிகள் மிக வேகமாக அதிகரித்து

பைத்தியம், ஏக்கம் அல்லது சித்தப்பிரமையாக மாறி விடலாம். அச்சமயத்தில் உடலைப் பற்றிய ஆபத்தான குறிகள், அடங்கி, ஒடுங்கிக் குறைந்து மறைந்து விடுகின்றன. மிகக் கூர்ந்து கவனிக்கும் இயல்புள்ள வைத்தியராலேயே, மறைந்து விட்ட உடற் குறிகளைக் கண்டு பிடிக்க முடியும்.

இத்தகைய நோய்களில் காணப்படும் எல்லாக் குறிகளையும், அதாவது உடலில் காணப்படும் குறிகளுடன் நோயாளியின் முக்கியமான மனக் குறியையும் மிகக் கவனமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான், அந்நோய்களை முற்றிலும் அழிப்பதற்கு ஏற்றதான மருந்தைக் கண்டு பிடிக்க முடியும். அதாவது எந்த மருந்து மேலுள்ள நோய்களில் காணப்படும் உடற் குறிகளுடன் மனக் குறிகளையும் நோயற்ற ஒருவர் உடலில் உண்டாக்கியது என்று கண்டு பிடிக்க வேண்டும்.

உடலைப் பற்றியிருந்த நோய் மனத்தைத் தாக்கி அரை குறை நோயாக மாறுவதற்கு முன்பிருந்த குறிகள் கவனிக்கப்பட வேண்டும். அக்குறிகளை நோயாளியின் நண்பர்களிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

உடலைப் பற்றிய நோயில் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட குறிகளைத் தற்சமயம் காணப்படும் குறிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் முதலில் இருந்த குறிகள் மறைக்கப் பட்டிருந்த போதிலும் அழிக்கப்படவில்லை என்பது தெரியும். எப்போதாவது மனக் குறிகளின் வேகம் குறையுமானல் அப்போது, உடற் குறிகள் மறைந்தே இருந்தன; உடலை விட்டு நீங்கவில்லை என்பது புலனாகும்.

நோயின் ஆரம்ப காலத்திலும் தற்காலத்திலும் காணப்படும் உடற்குறிகளுடன் நோயாளியின் நண்பர்களாலும், வைத்தியராலும் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளியின் மனக் குறிகளைச் சேர்த்தால் நோயின் முழு வடிவமும்

வெளிப்படும். ஹோமியோபதி முறைப்படி அந்நோயை நீக்கிக் குணம் செய்ய ஏற்றதோர் மருந்தை, அதாவது நோயில் காணப்படும் உடற் குறிகளை மட்டுமல்லாது மனக்குறியையும் உண்டாக்கிய மருந்தைத் தேட வேண்டும். அம்மருந்து ஸோரா விஷநோய்க் கூறை அடக்கும் வல்லமை யுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

ஆனால் பைத்தியமோ அல்லது சித்தப் பிரமையோ (பயம், மனவேதனை, சாராயம் முதலிய போதையூட்டும் பானங்களை அளவுமீறிக் குடித்தல் இவை போன்ற காரணங்களால் ஏற்படலாம்) திடீர் வகை நோய்களைப் போல் திடீரென்று தோன்றும் சமயங்களில் ஸோரா விஷநோய்க் கூறை அடக்கும் மருந்துகளை முதலிலேயே உபயோகிக்கக் கூடாது. குறிகளுக்குத் தக்கவாறு மற்ற வகை மருந்துகளை (அகோனைட், பெல்லடொன்னா, ஸ்ட்ரமோனியம், ஹயஸ்யாமஸ் முதலியவை) உபயோகிக்க வேண்டும். அப்போது ஸோரா விஷநோய்க்கூறு அதனுடைய பழய உறக்க நிலைக்குத் திரும்பி நோயாளி முற்றிலும் குணம் அடைந்தவர்போல் காணப்படுவார்.

ஸோரா விஷநோய்க் கூறை அடக்கும் சக்தி இல்லாத மருந்துகளைக் கொடுத்து நோய் நீங்கிவிட்டால் நோயாளி முற்றிலும் குணமடைந்து விட்டதாக நினைப்பது கூடாது. உண்மையைக் கூறுமிடத்து, ஒரு கணமும் தாமதியாமல் ஸோரா விஷநோய்க் கூறை அடக்கும் மருந்தைக் கொண்டு பலகாலம் சிகிச்சை செய்தால்தான் நீடிக்கும் குணமுள்ள ஸோரா விஷ நோய்க் கூறிலிருந்து நோயாளி விடுதலை பெறலாம். அவ்வாறு சிகிச்சை செய்யாவிட்டால் உறங்கச் சென்ற ஸோரா விஷநோய்க்கூறு மறுபடியும் விழித்துக்கொள்ள இடமுண்டு. சிகிச்சை செய்வதுடன் உணவிலும், பழக்க வழக்கங்களிலும் ஒழுங்கு விதிகளை அனுசரித்து வந்தால் நோய் மீண்டும் திரும்பி வருமென்ற பயமே இல்லை.

மனநோய்களில் ஸோரா விஷத்தை அடக்கும் மருந்துகளைக்கொண்டு சிகிச்சை செய்யாவிட்டால் என்ன நடக்கும் என்பதைப் பார்ப்போம். முதல் தடவையாகப் பைத்தியத்தைத் தோற்றுவித்த காரணத்தை விட மிகவும் அல்பமாயுள்ள மற்றொரு காரணம் மிக விரைவிலேயே புதியதோர் நோயை, அதாவது கடுமையான வலிப்பை, உண்டாக்கும். அவ் வலிப்பு பல காலம் நீடித்திருக்குமாதலால் அவ் விடைக்காலத்தில் ஸோரா விஷம் அதன் முழு வளர்ச்சியையும் பெற்று விடுவது வழக்கம். அத்துடன் விட்டுவிட்டுத் தோன்றுகிற அல்லது விடாமல் நீடித்திருக்கிற ஒரு மன நோயாய் உருமாறும். அச்சமயத்தில் அந்நோயை நீக்குவது முன்னைவிடக் கடினமாகும்.

மனநோய் அவ்வளவாக வளர்ச்சியடைந்திராத நேரங்களில், அது உடலைப் பற்றியதோர் நோயினுல் தோன்றியதா அல்லது சீர்கேடான கல்வி, கெட்ட பழக்க வழக்கங்கள், மனதை நல்வழியில் செலுத்தாமை, மூடநம்பிக்கை, அறியாமை முதலிய காரணங்களில் ஏதோ ஒன்றினுல் தோன்றியதா என்ற சந்தேகம் ஏற்படுவது இயல்பு. இச் சந்தேகத்தை நீக்கும் வழி இதுவே. நோயாளியின் மனதில் படும்படியாகவும் அன்புடனும் உபதேசித்தல், புத்திமதி கூறுதல், மனதுக்கு ஆறுதலை அளிக்கக் கூடிய வகையில் வாதம் செய்தல் ஆகியவைகளால் நோய் குறைந்து நிலைமையில் அபிவிருத்தி கண்டால் மேலே இரண்டாவதாக விவரிக்கப்பட்டுள்ளவைகளில் ஏதோ ஒன்று மன நோய்க்குக் காரணமென்று முடிவு செய்யலாம். ஆனுல் உடல் நோயின் விளைவாய் ஏற்படும் மன

நோயில் மேலுள்ள வழியைப் பின்பற்றினல் நோய் மிக விரைவில் அதிகமாகத்தான் செய்யும். அதாவது ஏக்கம் பிடித்தவருக்கு அவ்வேக்கம் மேலும் அதிகமாகிச் சண்டை போடுதல், எவ்வளவு சொன்னலும் ஆறுதலடையாமை, யாருடனும் அதிகப் பேச்சுவார்த்தை வைத்துக் கொள்ளாமல் உம்மணு மூஞ்சியாய் இருத்தல் ஆகியவை தோன்றும். பிதற்றுவதும் கோபவெறியுடன் பிறரை அடிப்பதுமாக இருக்கும் ஒரு பைத்தியத்துக்குப் பிதற்றலும் கோப வெறியும் மேலும் அதிகரிக்கும். வாய் ஓயாமலும் முட்டாள்தனமாகவும் சளசளவென்று பேசும் பைத்தியத்துக்கும் இதே போல் நோய் மும்முரமாகும்.

மேலே கூறியபடி உடலைப் பற்றிய நோயையே முழுக் காரணமாகக் கருதமுடியாத மன நோய்களும் சில இருக்கின்றன. இவைகளில் உடல் நோய் கடுமையாய் இருப்பதில்லை. ஓயாத கவலை, நீங்காத ஏக்கம், வெறுப்பு, அநீதிக்குள்ளாகுதல், அடிக்கடி பயம், பீதி முதலிய காரணங்களே மன நோய்களைத் தோற்றுவித்து நீடித்திருக்க உதவுகின்றன. நாளடைவில் உடல் நலமும் பெருமளவுக்குக் கெட்டுவிடுகிறது.

மனதினலேயே தோன்றிக் காப்பாற்றப்பட்டும் வருகிற இத்தகைய மன நோய்களில்தான் நோயாளியை முற்றிலும் நம்புவதாகக் காட்டிக் கொள்ளுதல், சிறிதளவு சந்தேகப்படவும் இடம் அளிக்காமல் பொய்களைச் சோதித்தல், அன்பு கலந்த அறிவுரைகள் போன்ற மனேதத்துவ முறையை ஒட்டிய சிகிச்சை பயன் தரும். அதுவும் அந்நோய்களின் ஆரம்பக் காலத்தில், உடல் நலம்

கெடுவதற்கு முன்பாக இச்சிகிச்சை கையாளப்பட வேண்டும். அத்துடன் நோயாளியின் உணவும் மற்ற பழக்க வழக்கங்களும் ஏற்ற முறையில் சீர் படுத்தப்படவேண்டும். அவ்வாறு செய்தால் மன நோய் விரைவில் நீங்கி உடல் நலமும் சீர்ப்படும்.

மேலே கூறப்பட்ட மன நோய்களிலும் அவைகளின் அடிப்படைக் காரணம் ஸோரா விஷநோய்க் கூறு தான். ஆனால் அது இன்னும் முழு வளர்ச்சியைப் பெறவில்லை. கூடிய விரைவில் பெற்றுவிடலாம். ஆதலால் முன்னெச்சரிக்கையாக, மன நோயி லிருந்து விடுபட்டதுபோல் தோன்றும் அந்நோயாளி களுக்கு ஸோரா விஷத்தை அடக்கும் மருந்துகளைக் கொண்டு சிகிச்சை செய்ய வேண்டும். இல்லா விட்டால் மனநோய் மீண்டும் தோன்றலாம்.

உடல் நோய்களால் தோன்றும் மனநோய்களை ஸோரா விஷமடக்கி ஹோமியோபதி மருந்துகளால்தான் நீக்க முடியும். நோயாளியின் வாழ்க்கை முறையும் ஒழுங்கான வழியில் மாற்றியமைக்கப்பட வேண்டும். நோயாளியைச் சுற்றி இருப்போரும் வைத்தியரும் அவரிடம் மனோதத்துவ முறையை அனுசரித்துப் பழக வேண்டும். நோயாளியின் கோபவெறியைப் பொறுமையாலும் மன உறுதியினாலும் எதிர்க்க வேண்டும்; வருத்தமாகவும் புலம்பிக் கொண்டும் இருந்தால் நாம் ஊமைகளைப்போல் வாய் திறவாமல் நம் பார்வையினாலும் சைகைகளாலும் அனுதாபம் காட்டவேண்டும். அர்த்தம் இல்லாத பிதற்றல், அருவருக்கத்தக்க நடத்தை, பேச்சு வார்த்தை, ஆகியவைகளைக் கவனிப்பதாகவே காட்டிக் கொள்ளக் கூடாது. நோயாளியால் அருகிலுள்ள சாமான்களுக்குச் சேதம் ஏற்படாமல் பார்த்துக்

கொள்வது ஒன்றே நாம் செய்ய வேண்டியது. சேதம் ஏற்பட்டால் அதற்காக நோயாளியைக் கடிந்து கொள்வதோ, அடிப்பதோ, துன்புறுத்துவதோ கூடாது. இதற்கெல்லாம் அவசியம் நேராத வண்ணம் எல்லா விஷயங்களிலும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வது அவசியம். மருந்து சாப்பிட மறுக்கும்போதுதான் நோயாளியிடம் பலவந்தத்தைக் காண்பிக்க நேரும். ஆனால் ஹோமியோபதிச் சிகிச்சையில் அதற்கும் அவசியமில்லை. ஏனெனில் மருந்துகளின் அளவு மிகச் சிறியது. நாக்கின் சுவையைக் கெடுக்கும் குணம் அவைகளுக்குக் கிடையாது. ஆதலால் நோயாளிக்குத் தெரியாமல் அவர் குடிக்கும் பானத்தில் மருந்தைக் கலந்து கொடுத்துவிடலாம்.

நோயாளியை மறுத்துப் பேசுதல், அவர் பேச்சில் காணப்படும் குற்றம் குறைகளை அநாகரிகமான முறையில் திருத்துதல், நிந்தனை செய்தல், நம் பலவீனத்தையும் கோழைத்தனத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அவர் சொல்லுக்கு இணங்குதல், ஆகிய எதற்கும் இங்கு அவசியமில்லை. மன நோய்களில் நோயாளிக்குத் தீங்கு செய்யக் கூடிய பல சிகிச்சை முறைகளில் இதுவுமொன்று என்பதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். தன்னைப் பிறர் ஏமாற்றுவதையும் அவமதிப்பதையும் நிந்திப்பதையும் நோயாளி கண்டுபிடித்து விட்டால் அவருக்கு அளவு கடந்த ஆத்திரம் தோன்றுவதுடன் நோயும் அதிகரித்துவிடும். ஆதலால் அவரைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கும் நபரும் வைத்தியரும் நோயாளியின் அறிவு ஒழுங்கான நிலையிலேயே இருக்கிறதென்று தாங்கள்

பூரணமாய் நம்புவதாகக் காட்டிக் கொள்ள வேண்டும்.

நோயாளியின் புலன் உணர்ச்சிகளிலும் மனதிலும் சலனத்தை (ஆசை, கோபம், வருத்தம், பயம், கவலை முதலிய உணர்ச்சிகளை) ஏற்படுத்தக் கூடிய எல்லாவகையான வெளிக்காரணங்களையும் கூடிய அளவு அகற்ற வேண்டும். இருள் படிந்துள்ள அவர் உள்ளத்தை மகிழ்விக்கக் கூடியது எதுவும் இல்லை. உடலையுற்ற நோயின் பிடிகளில் சிக்கி வாடும் அல்லது வேதனைப்படும் அவருடைய மனதுக்கு ஆறுதலைத் தரக்கூடிய வகையில் நினைவை வேறு வழிகளில் திருப்பவோ, மற்றவர்களுடன் மனம்விட்டுப் பேசவோ, புத்தகங்களைப் படிக்கவோ அவரால் முடியாது. நோயை நீக்குவதொன்றைத் தவிர அவருக்குத் தெம்பூட்டக் கூடியது எதுவுமே இல்லை. உடல் நலம் பழையபடி சீர்ப்படும் போதுதான் அவருடைய மனதில் அமைதியும் சுகமாய் இருக்கிறோம் என்ற எண்ணமும் தோன்றும்.

ஸோரா விஷநோய்க் கூறை அடக்கும் வல்லமையுள்ள பலவகைப்பட்ட மருந்துகள் ஹோமியோபதியில் ஏராளமாய் இருக்கின்றன. நோயாளியின் மனக்குறிகளே மிக முக்கியமானவை. அவை எவ்விதச் சந்தேகத்துக்கும் இடமில்லாமல் தெள்ளத் தெளிவாய் இருக்கின்றன. மருந்துச் சோதனைக் காலத்தில் எந்த மருந்தினுல் இத்தகைய மனக் குறிகள் தோற்றுவிக்கப்பட்டன என்ற விவரம் நமக்குத் தெரிந்ததே. ஆதலால் மனநோய்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாய் ஆராய்ந்து, நோய்க் குறிகளைக் குற்றங்குறை இல்லாமல் கண்டு

பிடித்து அக்குறிகளுக் கேற்றதாயுள்ள ஸோரா விஷமடக்கி மருந்தைக் கொடுத்தால் மிக விரைவில் வியக்கத்தக்க அளவுக்கு நோய் படிந்துவிடும். நோயாளியின் உயிரைக் குடிக்கும் குணமுள்ள தகுதியற்ற (அலோபதி) மருந்துகளை ஏராளமாகவும் அடிக்கடியும் கொடுப்பதால் இதுபோல் நன்மை விளையாது. உடல் நோயின் காரணமாகவோ அல்லது உடல் நோயுடன் சேர்ந்தோ ஏற்பட்டுப் பல காலமாய் நீடித்திருக்கும் மனநோய்களில் ஹோமியோபதி உலகிலுள்ள மற்ற எல்லா வைத்திய முறைகளையும்விடப் பன்மடங்கு உயர்வானதென்பதை என் அனுபவத்திலிருந்து தைரியமாய்க் கூறமுடியும்.

விட்டு விட்டுத் தோன்றும் முறைக்குண நோய்களைப் பற்றிச் சிறிது விரிவாய் எழுதுவது நலமென்று நினைக்கிறேன். மலேரியாவைப் போல் சுரத்துடன் கூடிய முறைக்குண நோய்கள், தலைவலியைப் போல் சுரத்துடன் சேர்ந்திராத முறைக்குண நோய்கள் ஆகியவை விட்டு விட்டு முறை வைத்துத் தோன்றுகின்றன. இவைகளை மட்டும் கவனிப்பது போதாது. நோய் தோன்றும் காலம் எது என்று நிச்சயமாய் மதிப்பிட முடியாமல், ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு விதமாய் மாறுபடும் நோய்க் குறிகளைத் தோன்றச் செய்யும் நோய்களையும் கவனிக்க வேண்டியது அவசியம்.

மாற்று உருவமெடுக்கும் நோய்களின் எண்ணிக்கை ஏராளமாய் இருக்கிறது.* ஆயினும் அவை யாவும்

*நோய்கள் இரண்டு அல்லது மூன்று உருவங்களில் மாறி மாறித் தோன்றலாம். உதாரணமாக, ஈருருவம் எடுக்கும் நோய்களில் நோயாளியின் கண்களில் இருந்த ஒரு வகை வேக்

நீடிக்கும் வகையைச் சேர்ந்தவை, முழு வளர்ச்சி பெற்றுவிட்ட ஸோரா விஷத்தின் வெளிப்படை யாய்த் தெரியும் விளைவுகள். மிக அபூர்வமாக ஸிபிலிஸ் விஷமும் சம்பந்தப் பட்டிருக்கலாம். எந்த விஷம் இருக்கிறதோ அவ்விஷத்தை அடக்கும் மருந்துகளை உபயோகிக்கவேண்டும்.

நோயாளி ஏறக்குறைய ஆரோக்கியமாகவே இருக்கிறார் என்று தோன்றும் சமயங்களில், நோய்க் குறிகளில் மாறுதல் இல்லாமல் குறிப்பிட்டதோர் கால அளவு ஆனவுடன் தவருமல் தோன்றி அதேபோல் குறிப்பிட்ட காலம் கழிந்தவுடன் மறையும் குண முள்ள நோய்களையே உண்மையான முறைக்குண

காடு மறைந்தவுடன் கால்களிலும் மற்ற இடங்களிலும் இடைவிடாத வலிகள் தோன்றும். அவ்வலிகள் மறைந்த மறுகணமே மீண்டும் கண் வேக்காடு தோன்றும். உடலைப் பற்றிய பல நோய்களில் அவை மறைந்தவுடன் வலிப்புகள் ஏற்படலாம். மூன்று உருவங்களைக் கொண்ட சாதாரண நோய் ஒன்றில் ஒரு சமயம் நோயாளியின் உடலும் உள்ளமும் வழக்கத்தை விடச் சுறு சுறுப்பாய்க் காணப்படும். அச்சமயத்தில் அவர் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்துவிடுவார். சோர்வோ, சோம்பலோ இல்லாமல் வேலை செய்வார்; அதிக அளவு உணவை உட்கொள்வார். இதை நோயின் இரண்டாவது உருவமென்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் சற்றும் எதிர் பாராமல் மூன்ரும் உருவம் தோன்றலாம்; அப்போது நோயாளிக்குத் தாங்க முடியாத ஆத்திரம், வருத்தம், சீரணக் கோளாறு, தூக்கமில்லாமை ஆகிய குறிகள் காணப்படும். மூன்ருவது உருவமும் திடீரென்று மறைந்து நோயின் முதல் உருவம், அதாவது நோயாளிக்குப் பழக்கமாகிவிட்ட, அதிக உபத்திரவத்தை அளிக்காத உடல் கேடு பழயபடி ஏற்படும். புதிய தோர் உருவம் வெளிவந்தவுடன் அதற்கு முன்பிருந்த உருவத்தின் சுவடு எதுவும் காணப்படுவதில்லை; அப்படியே காணப்பட்டாலும் அது மிக அல்பமாய்த்தான் இருக்கும்.

நோய்கள் என்று கூறலாம். இம் முறைக்குண நோய்களில் சில சுரத்துடனும் சில சுரம் இல்லாமலும் தோன்றுகின்றன.

சுரம் இல்லாமல், விட்டு விட்டுத் தோன்றுகிற உண்மையான முறைக்குண நோய்களின் இலட்சணம் என்ன? பெருவாரி நோய்களைப் போல் ஒரே சமயத்தில் பெரும்பாலான மக்களைத் தாக்குவதோ அல்லது அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலரை மட்டும் பீடிப்பதோ கிடையாது. ஒரு சமயத்தில் ஒரே ஒரு மனிதனிடம் மட்டுமே காணப்படும். பெரும்பாலும் ஸோரா விஷத்துடன் சம்பந்தப்பட்ட, நீடிக்கும் வகையைச் சேர்ந்ததாய் இருக்கும். ஸிபிலிஸ் விஷத்தொடர்பு இருக்காது. ஆதலால் ஸோரா விஷமடக்கி மருந்துகளைக் கொண்டே சிகிச்சை செய்யலாம். ஆயினும் அவைகளின் விட்டு விட்டுத் தோன்றும் குணத்தை நீக்க இடையிடையே ஸிங்கோனா மரப்பட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மருந்தை வீரியப் படுத்திக் கொடுத்து வருவது நலம்; அவசியமுமாகும். அவ்வாறு செய்தால் நோய்களின் முறைக் குணம் முற்றிலும் அழிந்து போகும்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலரை மட்டுமோ அல்லது பெருவாரியாகப் பலரையோ ஒரே சமயத்தில் தாக்குகிற முறைச் சுரங்களில்*

---

*முறைச் சுரம் என்பது ஒரே ஒரு வகை நோய்தான் என்றும் அந்நோய் ஒவ்வொரு நாளும் அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு தடவை, நான்கு நாட்களுக்கு ஒரு தடவை என்று பலவிதமாய் முறை வைத்துத் தோன்றுகிறது என்றும் நோய்க்கூறு நிபுணர்கள் இதுவரை கருதி வந்திருக்கின்றனர். ஆகவே அதற்குக் குளிர்ய்ச்சல் (Ague—ஏக்யு) என்ற மறு பெயரையும் சூட்டினர்.

(சதுப்பு நிலப் பிரதேசங்களில் வாழ்வோருக்குத் தோன்றும் முறைச் சுரங்களை இதில் சேர்க்க முடியாது) சுரம் தோன்றும் ஒவ்வொரு தடவையிலும் ஒன்றுக்கொன்று மாறுபாடான குறிகளையுடைய, இரு நிலைமைகள் (முதலில் குளிர், பிறகு சூடு, அல்லது முதலில் சூடு, பிறகு குளிர்) தோன்றும். பல சமயங்களில் குளிர், சூடு, வியர்வை ஆகிய மூன்று நிலைமைகள் தோன்றுகின்றன. ஆதலால் அந் நோய்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மருந்துகள் கீழுள்ளபடி இருக்கவேண்டும். ஸோரா விஷத்தை அடக்கும் மருந்துகளின் இனத்தைச் சேர்ந்ததாக இருக்கக் கூடாது. நோயற்ற உடலில் கொடுத்துச் சோதிக்கப்பட்டபோது சிகிச்சைக்கு வந்துள்ள இயற்கை நோயில் காணப்படும் மாற்று நிலைமை களில் இரண்டையோ அல்லது மூன்றையுமோ உண்டாக்கியிருக்க வேண்டும். அல்லது, இயற்கை நோயில் காணப்படும் மாற்று நிலைமைகளில் எது எல்லாவற்றையும் விடத் தெளிவாகவும் பலமாகவும் இருக்கிறதோ அம்மாற்று நிலைமையை நோயற்ற உடலில் தோற்றுவித்த மருந்தாய் இருக்கவேண்டும். ஆயினும் சுரம் மறைந்துபோயிருக்கும் சமயங்களில் அதாவது நோயாளியின் உடல் நிலை ஆரோக்கியமாய்க் காணப்படும்போது, அவரிடம் தென்படும் குறிகளைக் கவனித்து ஏற்ற ஹோமியோபதி மருந்தைக் கொடுத்துச் சிகிச்சை செய்வதே மிகச் சிறந்தது.

ஆனால் முறைச் சுரத்தில் பலவகை காணப்படுகின்றன. குளிர் காய்ச்சல் என்று பெயரிடத் தகுதியற்று முழுக்க முழுக்க உடல் சூடு மட்டுமே ஒரு வகையில் காணப்படும். குளிர் மட்டுமோ அல்லது முதலில் குளிரும் பிறகு வியர்வையும் காணப்படுவது

மற்றொரு வகை. இன்னும் ஒரு வகையில் நோயாளியின் உடலைத் தொட்டால் நெருப்பைப்போல் சுடும்; ஆனால் அவர் தனக்குக் கடுமையான குளிர் இருப்பதாய்க் கூறுவார்; அல்லது உடலின் வெளிப்புறம் பனிக்கட்டியைப்போல் சில்லிப்பாய் இருக்கும் போது தன்னுடல் தீப்பிடித்திருப்பது போல் எரிப்பதாய் நோயாளி ஓலமிடுவார்; வேறொரு வகையில் ஒரு தடவை வெடவெடவென்ற உடல் நடுக்கமோ அல்லது இலேசான சில்லிப்போ தோன்றும்; நோய் மறுதடவை வரும்போது சூடு மட்டுமே இருக்கும். சூடு அடங்கிய பிறகு வியர்வை காணலாம். காணாமலும் இருக்கலாம். முதலில் சூடு தோன்றி அது முற்றிலும் மறைந்த பிறகே குளிர் வருவது வேறோர் வகை. மற்றொரு வகையில் குளிர் அல்லது சூடு தோன்றி மறைந்தவுடன் பல மணி நேரம் சென்ற பிறகு வியர்வை உண்டாகும். சில வகைகளில் வியர்வை என்ற பேச்சே இருக்காது: நேர்மாறாக, குளிரோ சூடோ இல்லாமல் வியர்வை மட்டுமே உள்ள வகையும் இருக்கிறது. சூடுள்ளபோதே வியர்வை யும் தோன்றலாம். குளிர், சூடு, வியர்வை ஆகிய நிலைமைகளைத் தவிர நோயில் காணப்படும் தலைவலி, வாயில் கெட்ட சுவை, குமட்டல், வாந்தியெடுத்தல், வயிற்றுப் போக்கு. தாகம் இல்லாமை அல்லது அளவு கடந்திருத்தல், உடலிலோ, கைகால் களிலோ குடைச்சல், கடுப்பு அல்லது வலி, சரியானபடி தூக்கம் வராமை, பிதற்றல் குணம் மாறுதல், வலிப்புகள் முதலிய பல துணைக் குறிகள் கூட காலத்தில் மாறுபட்டுத் தோன்றலாம். அதாவது குளிர், சூடு. வியர்வை ஆகிய மூன்று நிலைமைகளில் ஏதோ ஒரு நிலைமையுடன் தொடர்பு கொண்டுள்ள துணைக் குறிகள் ஒரு சமயம் அந் நிலைமை தோன்றுவதற்கு முன்னதாகவும் மறு சமயம் அந்நிலைமை தோன்றி மறைந்த பிறகும் மற்றொரு சமயம் சேர்ந்தேயும் காணப்படும்.

மேலுள்ள விவரத்தைக் கூர்ந்து கவனித்தால், முறைச் சுரங் களில் பல வகைகள் இருக்கின்றன என்பது தெள்ளெனத் தெரியும். ஆதலால் ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறு (ஹோமியோபதி) மருந்துகள் தேவைப்படுமென்று கூற வேண்டிய தில்லை. எவ்வகையைச் சேர்ந்த முறைச் சுரமாய் இருந்தாலும் சிங்கோனா மரப்பட்டையாலும் அதிலிருந்து தயாரிக்கப்படும்

நோய் ஒரு முறை தோன்றி மறைந்து அதன் விளைவு களிலிருந்து நோயாளி ஓரளவு விடுதலை பெற்ற உடனேயோ அல்லது சிறிது நேரம் ஆன வுடனேயோ மருந்தைக் கொடுப்பது மிக மிகச் சிறந்தது. நோயாளிக்கு எவ்விதத்திலும் தீங்கிழைக் காமல் ஆரோக்கிய நிலைமை பழயபடி தோன்ற உடலில் செய்யப்படவேண்டிய எல்லா மாற்றங்களை யும் செய்து முடிப்பதற்குத் தேவையான அவகாசம் மருந்துக்கு அச்சமயத்தில்தான் கிடைக்கிறது. மிகவும் தகுதி வாய்ந்த மருந்தாய் இருந்தாலும் நோய் தோன்றுவதற்குச் சற்று முன்பாக அதைக் கொடுத்தால் நோயும் மருந்தும் ஒரே சமயத்தில் உடலைத் தாக்குவதால் பல சமயங்களில் உயிருக்கு உலை வைத்துவிடும். (குளிர் நிலைமையில் ஓபியம்என் னும் மருந்தைக் கொடுத்ததால் பல சமயங்களில் மரணம் நேர்ந்திருக்கிறது) அல்லது நோயாளியின் உடல் வலிமையை அறவே அழித்துவிடும். நோய் மறைந்த பிறகு மருந்தைக் கொடுத்தால் உடலி லுள்ள உயிர்ப்புச் சக்தி எவ்விதத் துன்பமுமின்றி மருந்தை ஏற்றுக்கொண்டு நோயற்ற நிலையை மீண்டும் பெறுகிறது.

க்வினைன் ஸல்பேட் என்ற மருந்தினாலும் அச்சுரத்தை அடக்கி விடலாம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அம்மருந்துகளை அதிக அளவில் அடிக்கடி கொடுக்கவேண்டிய அவசியம் நேரும். சிங்கோனா மரப்பட்டையும், க்வினைன் ஸல்பேட்டும் நோய்க்கு ஏற்றவையாக இல்லாத சமயங்களிலும், முறைச் சுரம் பெருவாரி நோய்களைப் போல ஒரே சமயத்தில் பலரைப் பீடிக்கும் குணமுள்ள தாய் இருந்தாலும் இவ்விதச் சிகிச்சையினால் சுரம் அடக்கப்பட்டு விட்ட போதிலும் அதைவிடக் கொடுமை வாய்ந்த வேறொரு நோய் தோன்றுகிறது.

மோசமான சில சுரங்களில் சூடு இல்லாத நேரம் மிகக் குறைவாய் இருக்கும்; அல்லது சூடு நிலைமைக் குப் பிறகு ஏற்படும் ஏதோ ஒரு துணைக் குறி மறை யாமல் தொடர்ந்திருக்கலாம். இச் சமயங்களில் வியர்வை கண்டு அடங்கிய பிறகு மருந்தைக் கொடுக்கவேண்டும்; அல்லது நோய் தணிவதைக் குறிக்கக்கூடிய வேறு எந்த அறிகுறி காணப் பட்டாலும் அவ்வறிகுறியின் வேகம் குறைய ஆரம் பித்தவுடன் மருந்தைக் கொடுக்கலாம்.

கொடுக்கப்பட்ட ஒரே ஒரு வேளை மருந்தினுல் நோய் அதன் வழக்கப்படி தோன்றவேண்டிய காலகங்ளில் பல தடவைகள் தோன்ருமலிருந்து நோயாளியின் உடலிலும் நல்ல ஆரோக்கியம் கண்ட பிறகு, மீண்டும் நோய் தோன்றுவதற்கான அறிகுறிகள் தென்பட்டால் அப்போதுதான் அம்மருந்தை இரண் டாவது வேளையாகக் கொடுக்கலாம். ஆயினும் நோயின் மொத்தக் குறிகளில் மாற்ற மெதுவும் இல்லாமல் முன்போலவே இருக்கவேண்டியது மிக மிக அவசியம். அப்போதுதான் அதே மருந்து உபயோகமாகும். ஆரோக்கிய நிலைமை சில காலம் தொடர்ச்சியாய் இருந்து அதன் பிறகு பழய நோயே மீண்டும் தோன்றினுல் நோயை முதன் முதலில் தூண்டிய விஷப் பொருள் உடலை விட்டு நீங்கவில்லை யென்பதையே குறிக்கிறது. சதுப்பு நிலப் பிரதேசங் களில் இது போன்ற நிகழ்ச்சிகள் சகஜமாய் நேருகின்றன. அவ்விடங்களில் குடியிருப்பதால் தோன்றும் முறைச் சுரத்தை நோயாளியின் குடி யிருப்பை மலைப்பாங்கான இடத்துக்கு மாற்றினுல் தான் நிரந்தரமாய் நீக்கமுடியும்.

மருந்துச் சோதனையில் ஒவ்வொரு மருந்தும் வெவ்வேறு விதமான சுரங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. மாற்று நிலைமைகளை உடைய முறைச் சுரங்களைக்கூட உண்டாக்கியுள்ளன. ஆதலால் இயற்கையாய் ஏற்படும் எல்லா வகை முறைச் சுரங்களிலும் ஒவ்வொன்றுக்கும் ஏற்றதான ஹோமியோபதி மருந்தைத் தேர்ந்தெடுக்க முடியும்.

பெருவாரி நோயாய்ப் பரவியுள்ள ஒரு முறைச் சுரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹோமியோபதி மருந்தினால் ஒரு சிலருக்கு மட்டும் பூரண குணம் கிடைக்கவில்லை என்றால் அதற்கு இரண்டு காரணங்கள் மட்டுமே இருக்க முடியும். ஒன்று சதுப்பு நிலப் பிரதேசங்களில் குடியிருத்தல். மற்றொன்று ஸோரா விஷம் பின்னணியில் காணப்படுவது. இரண்டாவதே காரணமாயிருந்தால் ஸோரா விஷமடக்கி மருந்துகளை நோய் முற்றிலும் நீங்கும்வரை உபயோகிக்க வேண்டும்.

முறைச் சுரங்கள் சதுப்பு நிலப் பிரதேசங்களில் நிலையாகக் குடிகொண்டிருக்கும் தன்மை உள்ளவை. ஆகவே மற்ற பிரதேசங்களில் பெருவாரி நோய் போல் தோன்றும் முறைச்சுரங்கள் நீடிக்கும் வகையைச் சேர்ந்த நோய்களின் குணங்களைப் பெற்றிருக்கின்றன. பெருவாரியாய்த் தோன்றும் ஒரு முறைச் சுரத்தால் தாக்கப்படும் எல்லோரிடமும் நோய்க் குறிகள் ஒன்றுபோல் காணப்படுகின்றன. நோயின் மொத்தக் குறிகளும் இதே போல் எல்லோரிடமும் ஒன்றுபோல் இருக்கும்போது அதற்கு ஏற்ற ஒரு ஹோமியோபதி மருந்தைத் தேர்ந்தெடுப்பது எளிதாகிறது. அம்மருந்தைக் கொண்டு அம் முறைச் சுரமுள்ள எல்லோரையும் குணம் செய்ய

லாம். முறைச் சுரம் வருவதற்கு முன் முழு வளர்ச்சியுற்ற ஸோரா விஷத்தால் தாக்கப்படாமல் கூடிய வரையில் ஆரோக்கியமாய் இருந்துவந்த நபர்களுக்கே இச்சிகிச்சையினுல் நன்மை விளையும்.

பெருவாரி முறைச் சுரமொன்றில், முதல் தடவையாகத் தோன்றும்போதே அதைக் குணம் செய்யாமல் விட்டுவிட்டால் அல்லது தகுதியற்ற அலோபதிச் சிகிச்சை செய்யப்பட்டு அதனுல் நோயாளிகளின் உடல் வலிமை குன்றிவிட்டால், உடலினுள்ளே உறங்கிக் கிடந்த ஸோரா விஷம் விழித்தெழுந்து முழு வளர்ச்சியைப் பெற்று முறைச் சுரத்தைப் போலவே வேடம்பூண்டு நோயாளிகளைத் துன்புறுத்துகிறது. நோயின் ஆரம்பக் காலத்தில் அதற்கேற்றதாய்க் காணப்பட்ட மருந்து இச்சமயத்தில் பயன்படாது. ஸோரா விஷத்தால் ஆக்கப்பட்ட முறைச் சுரமே தற்போது ஏற்பட்டிருப்பதால் **ஸல்பர்** அல்லது **ஹிப்பார் ஸல்பர்** ஆகிய மருந்துகளில் ஏதோ ஒன்றை உயர்ந்த வீரியத்தில் ஒரே ஒரு வேளை கொடுத்தால் குணம் ஏற்படும். இம் மருந்துகளை இரண்டாவது வேளையாகக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுவது மிக அபூர்வம்.

சதுப்பு நிலப் பிரதேசத்தில் குடி இல்லாத, ஒரு சமயத்தில் ஒரே ஒரு நபரை மட்டுமே தாக்கும் விஷத் தன்மை வாய்ந்த முறைச் சுரங்களில், திடீர் வகையைச் சேர்ந்த நோய்களில் செய்வதைப் போலவே, குறிகளுக்கு ஏற்றபடி தேர்ந்தெடுக்கப்படும் ஹோமியோபதி மருந்து சாதாரண வகையைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும். ஸோரா விஷமடக்கி மருந்துகளின் இனத்தைச் சேர்ந்ததாக இருக்கக்

கூடாது. இவ்வழியினுல் நோய் தணியாவிட்டால் ஸோரா விஷம் வளர்ச்சி பெற்றுவிட்டதென்று உறுதியாய் எண்ணலாம். அப்போது ஸோரா விஷமடக்கி மருந்துகளைக் கொண்டே நிரந்தரமான குணத்தைக் காணமுடியும்.

சதுப்பு நிலப் பிரதேசங்களிலும் அடிக்கடி வெள்ளப் பெருக்கில் ஆழ்ந்துவிடும் பிரதேசங்களிலும் முறைச் சுரங்கள் நிலையாய்க் குடிகொண்டுவிடுகின்றன. இதனுல் அங்குள்ள அலோபதி வைத்தியர்களுக்கு ஏராளமான வேலை கிடைக்கிறது. ஆயினும் இளமையிலிருந்தே உணவிலும் பழக்க வழக்கங் களிலும் ஒழுங்காய் இருந்துவரும் நபர்களை அம் முறைச் சுரம் தாக்குவது அபூர்வம். முதன் முதலாக அப்பிரதேசங்களில் காலடி எடுத்து வைக்கும்போது ஒரு வேளை தாக்கலாம். அச் சமயத்தில் ஸிங்கோனு மரப்பட்டை மருந்தை உயர்ந்த வீரியத்தில் ஒன்றிரண்டு வேளைகள் கொடுத்து வாழ்க்கை முறையையும் ஒழுங்காக வகுத்துக்கொண்டால் மிக விரைவில் நோய் நீங்கி விடுகிறது. அப்படியும் நோய் சிலருக்கு நீங்காமல் இருக்கலாம். அச்சமயங்களில் ஸோரா விஷம் வளர்ச்சி பெற்றுவருகிறதென்பது நிச்சயம். ஆத லால் ஸோரா விஷமடக்கி மருந்துகள் இல்லாமல் குணம் செய்ய முடியாது. நோய் தோன்றியவுடன் சதுப்பு நிலப் பிரதேசங்களிலிருந்து வெளியேறி மலைப்பாங்கான இடங்களில் குடிபுகுவோருக்குச் சில சமயங்களில் நோயிலிருந்து விடுதலை கிடைக்கும். அதாவது சுரம் வருவது நின்றுவிடும். ஸோரா விஷம் அதன் முழு வளர்ச்சியைப் பெறுவதற்கு முன் அவர்கள் குடியிருப்பை மாற்றிவிட்டதால்

அது பழயபடி உறங்கச் சென்றுவிட்டதென்று நாம் கருதவேண்டும். ஆனால் ஸோரா விஷமடக்கி மருந்துகளை உபயோகிக்காமல் நோயிலிருந்து பூரணமாய் விடுதலைபெற முடியாதென்பது உறுதி.

நோய்களின் முக்கிய வகைகளையும் அவைகளுடன் தொடர்பு கொண்டுள்ள நிலைமைகளையும் ஹோமியோபதி முறைப்படி சிகிச்சை செய்யும்போது நாம் கவனிக்க வேண்டிய விஷயங்களைப்பற்றி இது வரை பார்த்தோம். மருந்துகள், அவைகளைக் கொடுக்கும் விதம், மருந்துகளைக் கொடுக்கும்போது அனுசரிக்கப்படவேண்டிய பத்தியங்கள் ஆகியவைகளைப் பற்றி இனி கவனிப்போம்.

நோய் திடீர் வகையைச் சேர்ந்ததாயினும் சரி. அல்லது நீடித்த வகையைச் சேர்ந்ததாயினும் சரி, ஒரு வேளை மருந்து கொடுக்கப்பட்ட பிறகு அது படிப்படியாகக் குறைந்து வருவது தெளிவாய்த் தெரிந்தால் வேறு மருந்தையோ அல்லது அதே மருந்தை இரண்டாவது வேளையாகவோ கொடுக்கவேண்டிய அவசியமில்லை. முதல் வேளை மருந்து நல்ல விதமாய் வேலை செய்துவருவதால் கூடிய விரைவில் அது தன் வேலையைப் பூர்த்தி செய்துவிடுவது நிச்சயம். ஆதலால் அச்சமயத்தில் முதல் மருந்தையே இரண்டாவது தடவையாகவோ, அல்லது வேறு மருந்தையோ கொடுத்தால் நோய் குணமாகும் வேலையில் குந்தகம் விளையும்.

ஹோமியோபதிச் சட்டத்தை முற்றிலும் அனுசரித்துத் தேர்ந்தெடுத்து மிக நுண்ணிய அளவிலே கொடுக்கப்பட்ட ஒரு வேளை மருந்தினால் (அதன் வேலைக்கு இடையூறுகள் நேராதிருந்தால்) சில சமயங்களில் நோய் மிக மெதுவாகக் குறைய

ஆரம்பிக்கும். முழு நோயும் நீங்கச் சுமார் 40, 50 அல்லது 100 நாட்கள் கூட ஆகும். இது மிக அபூர்வமாகவே நிகழ்கிறதாயினும் இச்சமயத்தில் நோய் நீங்கும் கால அளவைக் குறைத்து விரைவில் பூரண குணத்தை ஏற்படுத்துவது வைத்தியருக்கும் நோயாளிக்கும் மிக மிக அவசியம். பின்வரும் மூன்று விஷயங்களில் நாம் விழிப்புடன் இருந்தால் இக் காரியம் மிக எளிதாய்க் கைகூடும் என்பதைச் சமீப காலத்தில் பல முறை நான் கவனித்திருக்கிறேன். 1. ஹோமியோபதிச் சட்டத்தை முற்றிலும் அனுசரித்து மிகக் கவனமாய் மருந்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். 2. இயற்கை நோயை நீக்குவதற்கு எந்த அளவில் உயிர்ப்புச் சக்திக்கு ஊக்கம் தேவையோ அந்த அளவு ஊக்கத்தையே அளிக்கக்கூடிய வகையில் மருந்தின் அளவு மிக மிக நுண்ணியதாய் இருக்கவேண்டும். 3. அளவில் மிகக் குறைந்திருந்த போதிலும் மருந்தின் சக்தி அபரிமிதமாய் இருப்பதால் அதைக் கண் மூடித்தனமாய் அடிக்கடி கொடுத்துவந்தால் உயிர்ப்புச் சக்திக்கு அளவு மீறிய ஊக்கம் பிறந்து கெடுதலாக வேலை செய்ய ஆரம்பிக்கும். ஆதலால் அனுபவத்தைத் துணைகொண்டு ஒரு வேளை மருந்துக்கும் மறு வேளை மருந்துக்கும் எவ்வளவு இடைவெளி இருக்கவேண்டுமென்பதை நிர்ணயித்து அவ்வாறே தகுந்த இடைவெளி விட்டு மருந்தை மீண்டும் உபயோகிக்க வேண்டும்.

மிகக் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஹோமியோபதி மருந்தை ஒரு வேளை கொடுக்கிறோம். அவ்வொரு வேளை மருந்து அதன் முழு வேலையையும் செய்யும்படி விட்டுவிட வேண்டும்

அதே மருந்தை இரண்டாவது வேளையோ அல்லது வேறொரு மருந்தையோ கொடுக்கக்கூடாது. இவ் விஷயத்தை ஆர்கனனின் முந்திய பதிப்புகளில் எழுதியிருக்கிறேன். உண்மையான அனுபவத்தின் மூலமே இக் கொள்கையை நான் பின்பற்றுகிறேன். முதலில் கொடுக்கப்பட்ட மருந்தைவிட நோய்க்கு மிகவும் ஏற்றது என்று மீண்டும் தேர்ந்தெடுத்த வேறொரு மருந்தையோ அல்லது முதல் மருந்தையே அடிக்கடி பல வேளைகளிலோ கொடுப்பதால் அதிக நன்மை விளைய இடமில்லை. எல்லா நோய்களிலும் இவ்விஷயம் பொருந்துமென்றாலும் நீடிக்கும் வகை நோய்களில் மிக மிகப் பொருத்தமாகும். இதற்குக் காரணம் என்ன? மாற்று மருந்தையோ அல்லது அதே மருந்தை அடிக்கடியோ கொடுப்பதால் உயிர்ப்புச் சக்திக்குத் தேவையான அளவுக்குமேல் ஊக்கம் பிறந்துவிடுகிறது. அதனால் இயற்கை நோயை உதறிவிட்டுச் செயற்கை (மருந்து) நோயை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக அது திட்ட வட்டமான கெடுதல்களைச் செய்ய ஆரம்பிக்கிறது. ஆகவே பொதுவாக எல்லா நோய்களிலும் ஒவ்வொன்றுக்கும் ஏற்றதாய்க் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்படும் மருந்தை மிகக் குறைந்த அளவில் ஒரே ஒரு வேளை கொடுக்க வேண்டும். அவ்வொரு வேளை மருந்தின் வேலை பூர்த்தியாகும் வரை அம்மருந்தையே இரண்டாம் வேளையோ அல்லது வேறு ஒரு மருந்தையோ கொடுப்பது கூடாது. வீரியப்படுத்தப்பட்டுள்ள மருந்துகளில் தான் மருந்தின் ஸ்தூல அளவு மிகக் குறைவாய் இருக்கிறது. ஆகவே நோய் திடீர் வகையைச் சேர்ந்ததாய் இருந்தாலும் சரி, நீடிக்கும் வகையைச்

சேர்ந்ததாய் இருந்தாலும் சரி, எல்லா மருந்துகளை யும் வீரியப்படுத்தியே உபயோகிக்க வேண்டும். உண்மையான ஹோமியோபதியின் விலை மதிக்க முடியாத சிறப்பு இதுவே. ஆகவே மருந்துகளின் அளவை நாளுக்கு நாள் அதிகமாக்கிக் கொடுத்து வரும் அலோபதிக்கும் (அலோபதி, ஹோமியோபதி ஆகிய இரண்டையும் ஒன்று கலந்து கையாளப் படும் கலப்பு வைத்திய முறை அலோபதியைவிட உயர்வானதில்லை) ஹோமியோபதிக்கும் உள்ள வித்தியாசம் நாளுக்கு நாள் பெருகியே வருகிறது.

ஒரு வேளை மருந்தே அம்மருந்தினால் ஏற்படக்கூடிய எல்லா நன்மைகளையும் செய்துவிடுகிறது என்று சொன்னேன். ஆயினும் குழந்தைகளுக்கும், பூஞ்சை உடலும் மிக எளிதில் உணர்ச்சி வயப்படும் தன்மையுமுள்ள பெரியவர்களுக்கும் தோன்றும் அல்பமான நோய்கள், பல காலமாய் நீடித்து அதிக வளர்ச்சி பெற்றுவிட்ட நீடிக்கும் வகை நோய்கள், கடுமைக் குணமுள்ள திடீர்வகை நோய்கள் ஆகியவைகளில் ஒரே ஒரு வேளை மருந்தினால் அம் மருந்தினால் ஏற்படக் கூடிய முழு அனுகூலமும் கிடைப்பதில்லை. ஆகவே அச்சமயங்களில் அம் மருந்தைப் பல வேளைகள் கொடுக்க நேரிடுகிறது. அப்போதுதான் உயிர்ப்புச் சக்தி தேவையான அளவு தூண்டப்பட்டு நோய் குணமாகிறது.

மேலே நான் குறிப்பிட்டிருப்பதை வைத்துக்கொண்டு ஒரே மருந்தைக் கண்மூடித்தனமாக அடிக்கடி கொடுப்பது கூடாது. அதனால் தீமையே விளையும். ஊன்றிக் கவனித்தால் இது தெரியவரும். முதல் நாள் கொடுத்த மருந்தை மறுநாளும் அதற்கடுத்த

நாளும் மிகக் குறைந்த அளவிலேயே கொடுத்தாலும் நோய் அதிகரிப்பதைக் காணலாம்.

நோய்க்கு முற்றிலும் ஏற்றதாய், சிறிதளவு தவறும் இல்லாமல் தேர்ந்தெடுத்த மருந்தை ஒரு வேளை கொடுத்த பிறகு அதனால் ஏற்பட வேண்டிய முழுப் பயனும் கிடைக்கவில்லை. மருந்தை ஒரே வேளையில் அதிகமாய்க் கொடுத்தால் (அதாவது ஒரு மாத்திரைக்குப் பதிலாக 7 அல்லது 8 மாத்திரைகளைக் கொடுத்தல், ஒரு சொட்டுக்குப் பதிலாகப் பல சொட்டுகளைக் கொடுத்தல்) முழுப் பயனும் ஏற்படுமென்று ஹோமியோபதியர் நினைப்பது இயற்கை. ஆனால் அவ்வாறு செய்தால் நன்மை ஏற்படுவதில்லை என்பதைத் தவிர தீமையும் ஏற்படுகிறது. குறைந்த வீரியத்தில் அதிக அளவில் கொடுப்பதாலும் விரும்பிய பலன் வராது. இவ்வழிகளால் உயிர்ப்புச் சக்தி திடீரென்றும் கடுமையாகவும் தாக்கப்படுவதால் கொடுக்கப்படும் மருந்தைத் தன் பகைவனாய் மதித்து வாந்தியெடுத்தல், வயிற்றுப் போக்கு, சுரம், வியர்வை முதலிய பல வழிகளால் அதை வெளியேற்றப் பாடுபடுகிறது. இயற்கை நோயை நீக்க முயற்சிப்பதில்லை. நோயாளியின் உடல் வலிமை மிகக் குறைந்துபோய் பழையபடி மாறப் பல காலம் பிடிக்கும்.

மேலும், அடிக்கடி பல வேளைகளில் கொடுக்கப்படும் மருந்து உடலில் ஒன்று சேர்ந்து உயிர்ப்புச் சக்தியை அடக்கி ஒடுக்கி வைத்துவிடுகிறது. அதனால் உயிர்ப்புச் சக்தி தன் வேலையைச் செய்ய முடியாமல் நாளுக்கு நாள் அளவில் அதிகமாகிக் கொண்டே வரும் மருந்தைப் பேசாமல் ஏற்றுக்

கொள்ள நேருகிறது. நோயாளியின் உடலும் நீக்க முடியாத அளவில் பாழாகிறது.

தேர்ந்தெடுக்கப்படும் மருந்தைக் கொண்டு நோயாளிக்குத் தீங்கு செய்யாமல் நோயை முற்றிலும் நீக்க மேலுள்ள தவருன வழிகளை நாம் விலக்க வேண்டும். அம்மருந்தினுல் ஏற்படக் கூடிய நன்மைகளைப் பூரணமாய்ப் பெறுவதற்கு விசேஷமான ஒரு வழியை நான் சமீபத்தில் கையாண்டு வருகிறேன்.

ஒவ்வொரு மருந்துக்கும் உள்ள இயற்கைக் குணம், நோயாளியின் உடல் வாகு, நோயின் தன்மை ஆகிய இம் மூன்று விஷயங்களுமே சரியான வழியைக் காட்டும் கருவிகளென்பதை நான் உணர்ந்தேன். உதாரணமாக ஸல்பர் என்னும் மருந்தை எடுத்துக் கொள்வோம். நீடிக்கும் வகை நோய்களில் (ஸோரா விஷக் கலப்பு உள்ளவை) உயர்ந்த வீரியத்தில் ஸல்பரை ஒரு வேளை கொடுத்தால் நல்ல உடல் வலிமை உள்ளவர்களுக்குக்கூட ஏழு நாட்கள் கழித்த பிறகுதான் மறுவேளை கொடுக்க முடியும். உடல் வலிமை குறைவாய் இருப்பவர்களுக்கும் எளிதில் உணர்ச்சி வயப்படும் குணம் உள்ளவர்களுக்கும் 9, 12 அல்லது 15 நாட்கள் சென்ற பிறகே மறு வேளை மருந்து கொடுக்க முடியும். அம்மருந்தினுல் இனி நன்மை எதுவும் ஏற்படாது என்ற நிலைமை தோன்றும் வரையில் மேலுள்ளபடி இடைவெளி விட்டு அதைப் பல தடவைகள் கொடுத்துவரலாம். அவ்வாறு 6, 8 அல்லது 10 தடவைகள் கொடுத்து வந்தால் அந்நோயில் ஸல்பரால் ஏற்படக் கூடிய எல்லா நன்மைகளும் ஏற்பட்டுவிடும். அதாவது அந்

நோயில் ஸல்பரால் நீக்கப்படக் கூடிய எல்லா நோய்க் குறிகளும் அடியோடு அழிந்து போகும். ஆனால் ஏற்கனவே அலோபதிச் சிகிச்சை செய்து ஸல்பரைக் கண் மூடித்தனமாய் உபயோகித்திருந்தால் இச்சிகிச்சையால் பயன் இல்லை. உடம்பு முழுவதும் பரவியுள்ள ஸ்கேபீஸ் (Scabies) என்று அழைக்கப்படும் ஒரு வகை அழுகுணிச் சிரங்கு ஸல்பரை உயர்ந்த வீரியத்தில் வாரமொரு முறையாகக் கொடுத்து வந்தால் 10 அல்லது 12 வாரங்களில் முழுவதும் குணமாகி விடும். உடலையும் உடைகளையும் சுத்தமாய் வைத்துக் கொள்வதைத் தவிர சிரங்கின் மேலே எந்த வித மருந்தையும் தடவ வேண்டியதில்லை. ஸல்பருக்கு உதவியாய் இருக்கும் பொருட்டு **கார்போ வெஜிடாபிலிஸை** உயர்ந்த வீரியத்தில் வாரமொரு முறையாய்ச் சில வேளைகள் கொடுப்பது வழக்கம். அவ்வழக்கத்துக்கும் இங்கு அவசியம் இல்லை.

கடுமையான, நீடிக்கும் வகையைச் சேர்ந்த மற்ற பல நோய்களில் ஸல்பர் தேவைப்படுமென்று நாம் கருதினால் அப்போதும் ஸல்பரை உயர்ந்த வீரியத்தில் வாரமொரு முறையாக 8, 9 அல்லது 10 வேளைகள் கொடுக்கலாம். ஸல்பரையே ஒவ்வொரு வாரமும் தொடர்ச்சியாய்க் கொடுப்பதைவிட, இரண்டு அல்லது மூன்று தடவை அதைக் கொடுத்த பிறகு வேறொரு மருந்தை (ஸல்பருக்கு அடுத்தபடியாய் அந்நோய்க்கு ஏற்றதெனத் தேர்ந்தெடுக்கப்படும் மருந்து - அது அனேகமாக ஹிப்பார் ஸல்பராக இருக்கும்) இடையில் ஒருவேளை கொடுத்து அதன் பிறகு 8, 10 அல்லது 12 நாட்கள் பொறுத்து

மீண்டும் ஸல்பரை இரண்டு மூன்று தடவைகள் கொடுக்கலாம்.

நீடிக்கும் வகையைச் சேர்ந்த நோய் ஒன்றில் அதை நீக்க ஸல்பர் இன்றியமையாததாய் இருக்கிறது. அம் மருந்தை மேலே எழுதியுள்ளபடி இடைவெளி விட்டுத்தான் உபயோகிக்கிறோம். ஆயினும் அம் மருந்தை ஏற்க உயிர்ப்புச் சக்தி மறுக்கிறது. அதாவது சிகிச்சைக் காலத்தில் ஸல்பரின் நோய்க் குறிகள் நோயாளியிடம் தோன்றுகின்றன. இச் சமயங்களில் **நக்ஸ் வாமிகாவை** உயர்ந்த வீரியத்தில் ஒரு வேளை கொடுத்து எட்டு அல்லது பத்து நாட்கள் சென்ற பிறகு ஸல்பரை மீண்டும் கொடுத்தால் உயிர்ப்புச் சக்தி அதைப் பணிவுடன் ஏற்றுக் குணத்தை உண்டாக்கும். ஒரு சில நோயாளிக்குப் **பல்ஸடில்லாவே** (உயர்ந்த வீரியத்தில்) பயன்படும்.

அலோபதி முறைப்படி ஸல்பரைக் கண் மூடித்தனமாய் உபயோகிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஸல்பரை மிக உயர்ந்த வீரியத்தில் கொடுத்தாலும், அம் மருந்தினுல் நனைக்கப்பட்ட ஒரே மாத்திரையை முகர்ந்தால் கூட உயிர்ப்புச் சக்தி அதிக எதிர்ப்பை வெளிப்படுத்தும். நீடிக்கும் வகை நோய்களில் அலோபதிச் சிகிச்சையினுல் விளையும் இப்பரிதாப நிலைமையைப் போக்க ஏதோ ஒரு வழி இல்லாமல் இருந்தால் நோயாளிக்காக ஒரு குரல் அழுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

மேலுள்ளதைப் போன்ற சமயங்களில் **மெர்கூரியஸ் விவஸ்** (உயர் வீரியம்) என்னும் மருந்தில் நனைக்கப்பட்ட ஒரு மாத்திரையை ஒரே ஒரு தடவைப் பலமாய் முகரும்படிச் செய்து அதன் பிறகு 9 நாட்கள் கழித்து ஸல்பரைக் கொடுத்தால் நன்மை ஏற்படும்.

ஸோரா விஷத்தை அடக்கும் மற்ற மருந்துகளையும் (பாஸ்பரஸைத் தவிர) மேல் கூறியபடி இடைவெளி விட்டுக் கொடுக்கலாம். அவ்வாறு கொடுத்தால் நோய்க்கு ஏற்றதென்று தேர்ந்தெடுக்கப்படும் மருந்து நன்றாக வேலை செய்யும். **ஹிப்பார் ஸல்பர், ஸெபியா, ஸைலீஷியா** ஆகியவைகளை 14 அல்லது 15 நாட்களுக்கொருமுறைதான் உபயோகிக்கலாம்.

இரண்டாவது வேளையாக ஒரு மருந்தைக் கொடுப்பதற்கு முன் அம்மருந்து ஹோமியோபதிச் சட்டப்படி நோய்க்கு முற்றிலும் ஏற்றதுதான் என்பதை வைத்தியர் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

திடீர் நோய்களில், நாம் சிகிச்சை செய்யும் நோயின் வளர்ச்சி வேகத்தை அனுசரித்தே எவ்வளவு நேரத்துக்கு ஒரு முறை மருந்தைக் கொடுக்கலாம் என்று தீர்மானிக்க முடியும். கொடுக்கப்படும் மருந்தினால் நோயாளியின் நிலைமையில் தங்கு தடையின்றி அபிவிருத்தி ஏற்பட்டுக் கொண்டு இருந்தாலும் (புதிய நோய்க் குறிகள் தோன்றாமல்) அவ்வபிவிருத்தி நோயின் வேகத்துக்கு ஏற்றபடி இல்லாத சமயங்களில் 24, 16, 12, 8, 4 அல்லது 2 மணிக்கு ஒரு முறையாகவும் மருந்தைக் கொடுக்கலாம். மிக விரைவில் மரணத்தை ஏற்படுத்தும் நோய்களில் விஷபேதி, வாந்திபேதி (Cholera - காலரா) முதன்மையாய் இருந்து வருகிறது. இந்நோயின் ஆரம்பத்தில் **காம்போராவை** (குறைந்த வீரியத்தில்) வேளைக்கு ஒன்றிரண்டு சொட்டுகள் வீதம் ஐந்து நிமிஷங்களுக்கு ஒரு வேளையாகக் கொடுத்து வந்தால் மிக விரைவில் நோயின் கொடுமை குறைந்துவிடும். நோய் சிறிது

முன்னேறிவிட்டால் **குப்ரம், வெராட்ரம், பாஸ்பரஸ், ஆர்ஸனிக், கார்போ வெஜ்** ஆகியவைகளேயும் உயர்ந்த வீரியத்தில் இரண்டு அல்லது மூன்று மணிக்கொரு தடவையாகக் கொடுத்து வரலாம். பெருவாரிக் காய்ச்சலிலும் விடாமல் அடிக்கும் சுரங்களிலும் ஏற்ற மருந்தை இவ்விதமே கொடுத்து வரலாம்.

மேகக்கிரந்தி மட்டுமே உள்ள நோயாளிகளுக்கு **மெர்கூரியஸ் விவஸ்** என்னும் மருந்தை உயர் வீரியத்தில் ஒரே ஒரு வேளை கொடுத்தால் போது மென்பதை நான் கண்டிருக்கிறேன். ஸோரா விஷமும் சேர்ந்திருப்பதாகத் தோன்றும் போது அல்லது சந்தேகத்துக்கு இடமிருக்கும் போது இரண்டு அல்லது மூன்று வேளைகள், ஆறு அல்லது எட்டுநாட்கள் இடைவெளிவிட்டு உபயோகிக்கலாம்.

ஏதோ ஒரு மருந்து மிக அவசரமாக நோயாளிக்குக் கொடுக்க வேண்டி இருக்கிறது. ஆனல் அவர் மிகவும் பலவீனமாகவும் படபடப்புடனும் இருப்பதால் அம்மருந்தை உட்கொள்ள முடியாது. இச்சமயத்தில் கொடுக்கப்பட வேண்டிய மருந்தில் நனைத்துக் காய்ந்துவிட்ட ஒரு மாத்திரையை நோயாளியின் மூக்கினருகே கொண்டுபோய் அதை ஒரே ஒரு தடவை மூச்சை உள்ளிழுத்து முகர்ந்தால் போதும். இதனல் வாய் மூலம் அம்மருந்தை உட்கொண்டால் விளையக்கூடிய நன்மை ஏற்படுவதில் ஐயம் இல்லை.

ஆதலால் நோய்க்கு மிகவும் ஏற்றதென்று தேர்ந்தெடுக்கப்படும் ஹோமியோபதி மருந்தை மிக நுண்ணிய அளவில் கீழ் உள்ளபடி உபயோகிக்க வேண்டும். நீடிக்கும் வகை நோய்களில் 7, 8, 10

12 அல்லது 14 நாட்களுக்கு ஒருவேளை வீதமும் திடீர்வகை நோய்களைப் போல் கடுமையாய் இருக்கும் நீடிக்கும்வகை நோய்களில் 5, 3 அல்லது 2 நாட்களுக்கு ஒரு வேளை வீதமும் திடீர்வகை நோய்களில் 24, 12, 8 அல்லது 4 மணிக்கு ஒரு வேளை வீதமும் பயங்கரமான குறிகளை உடைய திடீர்வகை நோய்களில் 5 நிமிஷங்களுக்கு ஒரு வேளை வீதமும் அம்மருந்தைக் கொடுக்கலாம். நோயின் வேகத்தையும் மருந்தினுல் தோன்றும் குணத்தையும் அனுசரித்தே இவ்விஷயம் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு மருந்தினுல் நோய் முழுவதும் நீங்கிவிட்டாலும் அல்லது ஓரளவுக்கே குணம் ஏற்பட்டுப் பிறகு நன்மை ஏற்படவில்லை என்று தெரியும் போதும் அம்மருந்தை நிறுத்தி விடவேண்டும். முழு நோயும் நீங்காமல் இருந்தால் அப்போது நோயாளியிடம் காணப்படும் மொத்தக் குறிகளைக் கவனித்து ஏற்ற வேறு மருந்தைத் தேடிக் கொடுக்க வேண்டும்.

நோயாளிக்குக் கொடுக்கப்பட்ட மருந்து, அவருடைய நோயுடன் சம்பந்தமில்லாத, புதிய, தொல்லை தருகின்ற நோய்க் குறிகளை உண்டாக்கினுல் அம்மருந்து ஹோமியோபதிச் சட்டத்தை முற்றிலும் அனுசரித்துத் தேர்ந்தெடுக்கப்பட வில்லையென்றும் அதனுல் உண்மையான குணம் *ஏற்படாதென்றும் சொல்லலாம். இவ்விதம் சரியானபடி தேர்ந்தெடுக்கப்படாத ஒரு மருந்தினுல் தோன்றும் நோய்க் குறிகள் கடுமையாய் இருந்தால் அம்மருந்தை முறிக்

*ஹோமியோபதி மருந்துகளின் அளவை எவ்வளவு குறைத்தாலும் அவைகளின் நோய்தீர்க்கும் சக்தியை அகற்ற முடியாது. ஆதலால் நோயில் இறக்கம் காணவில்லை, புதிய நோய்க் குறிகள்

கக்கூடிய மருந்தைக்கொடுத்து அதன் பிறகுநோயில் காணப்படும் மொத்தக் குறிகளுக்கு ஏற்ற வேருெரு மருந்தை உபயோகிக்க வேண்டும். கடுமையாய் இல்லாவிட்டால் முறிவு மருந்து தேவை இல்லை.

மருந்துச் சோதனையில் **இக்னேஷியா, ப்ரயோனியா, ரஸ் டாக்ஸ், பெல்லடொன்னு** போன்ற சில மருந்துகள் நோயற்ற உடலில் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான இருவகைக் குறிகளையே (மாற்று வேலை) பெரும்பாலும் உண்டாக்கியுள்ளன. இம் மருந்துகளில் ஒன்றை தேர்ந்தெடுத்துக் கொடுக்கும் போது சில சமயங்களில் அம்மருந்தினுல் நோயில் இறக்கம் ஏற்படுவதில்லை. அச்சமயங்களில் அம் மருந்தை முன் கொடுத்த குறைந்த அளவிலே (நோய் திடீர் வகையைச் சேர்ந்ததானுல் ஒரு சில மணி நேரம் கழிந்தவுடனேயே) மீண்டுமொரு முறை கொடுக்கலாம்.

மாற்றுக் குறிகளை ஏற்படுத்தாத மற்ற மருந்துகளில் (ஸோரா விஷத்தையடக்கும் குணமுள்ள) ஒன்றை நீடிக்கும் வகையைச் சேர்ந்த (ஸோரா விஷமுள்ள) ஒரு நோயில் ஹோமியோபதிச் சட்டப்படி முற்றிலும் ஏற்றதென்று கருதி உபயோகித்து நோயில் இறக்கம் காணுவிட்டால், நோயை வளர்த்து வருகிற ஏதோ ஒரு காரணம் இருக்கிறதென்று நிச்சயமாய்க் கூறலாம். அத்துடன் நோயாளியின் வாழ்க்கை முறையிலோ அல்லது அவர் நிலைமை

தோன்றுகின்றன என்ருல் கொடுக்கப்பட்ட மருந்து நோய்க்கு ஏற்றதல்ல என்று முடிவு செய்ய வேண்டும். அளவு குறைந்ததினுல்தான் இப்படி நேருகிறதென்று நினைத்து அம் மருந்தையே மீண்டும் அதிக அளவில் கொடுப்பது அறிவீனத்தையே விளம்பரம் செய்கிறது; நோயாளிக்குத் துன்பத்தையும் விளைவிக்கிறது.

யிலோ விலக்கப்பட வேண்டிய ஏதோ ஒன்று இருக்கிறது; அதை விலக்கினால் நோய் முற்றிலும் நீங்கும் என்பது உறுதி.

எல்லா நோய்களிலும், முக்கியமாகத் திடீர்வகையைச் சேர்ந்த நோய்களில், நோயின் ஏற்ற இறக்கங்களை, அவை எவ்வளவு கொஞ்சமாய் இருந்தாதாலும், நோயாளியின் மனம், முகத் தோற்றம், நடையுடைபாவனை ஆகியவை நிச்சயமாய் நமக்கு அறிவிக்கின்றன. நோய் இறக்கம் கண்டால், அது சிறிதளவே ஆயினும், நோயாளி முன்னைவிட அமைதியாய், உற்சாகமாய் இருப்பார். நோயில் சிறிதளவு ஏற்றம் ஏற்பட்டாலும் இதற்கு மாறான குறிகள் தோன்றும்.

நோயாளியின் மனம், நடை, உடை, பாவனை ஆகிய எல்லாம் "நோய் என்னை இப்படி நெருக்குகிறதே, செய்வதொன்றும் புரியவில்லையே, இப்படியும் எனக்கு வரவேண்டுமா" என்று கேட்பதைப் போலத் தோன்றும். இவைகளை வெறும் வார்த்தைகளால் வருணிப்பது கடினம். கூர்ந்து கவனித்தால் தான் அறியமுடியும்.*

நோயில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை எடுத்துச் சொல்ல சிலருக்குத் தெரியாது; சிலருக்கு

---

*குறைந்த அளவில் மருந்தைக் கொடுத்தால்தான் நோயாளியின் மனதிலும் குணத்திலும் ஏற்படக்கூடிய முன்னேற்றக் குறிகளை நாம் உடனடியாகக் காணமுடியும். அளவு அதிகமாய் இருந்தால் முதன் முதலில் நோயாளியின் மனமும் குணமும் பாதிக்கப்படும். ஆகையால் அவைகளில் ஏற்படக்கூடிய முன்னேற்றக் குறிகளை உடனடியாகக் காணமுடியாமல் போகிறது. ஹோமியோபதியில் அனுபவம் இல்லாத கற்றுக் குட்டிகளும் அலோபதியிலிருந்து ஹோமியோபதிக்குத் தாவியவர்களும்

விருப்பம் இருக்காது. ஆயினும் புதிய குறிகளின் தோற்றம் அல்லது பழய குறிகளின் ஏற்றம் அல்லது புதிய குறிகள் எதுவும் தோன்ருமல் பழய குறிகளில் இறக்கம் ஆகியவைகளிலிருந்து நோயின் ஏற்ற இறக்கங்களைப்பற்றி ஏற்படும் எல்லாச் சந்தேகங்களையும் வைத்தியர் கூர்ந்து கவனித்தால் நீக்கிக் கொள்ளலாம்.

மேல் குறிப்பிட்ட இருவகை நோயாளிகள் விஷயத்தில் நோயின் ஏற்ற இறக்கங்களைத் திட்டமாய்த் தெரிந்துகொள்ள நாம் செய்யவேண்டியது இது தான். நோயாளியின் குறிகளைப்பற்றி நாம் எழுதி வைத்திருக்கும் பட்டியலை எடுத்து வைத்துக் கொண்டு அதில் கண்டுள்ள ஒவ்வொரு குறியும் தற்சமயம் எப்படி இருக்கிறதென்று கவனிக்க வேண்டும். புதுக் குறிகள் எதுவும் தோன்ருமலும் பழைய குறிகளில் ஏற்றம் இல்லாமலும் இருந்தால் நோயில் இறக்கம் கண்டிருக்கிறதென்று முடிவு செய்யலாம். இவ்விதம் இருந்தால், அத்துடன் நோயாளியின் மனதிலும் நடையுடை பாவனைகளிலும் முன்னமேயே அபிவிருத்தி ஏற்பட்டிருந்தால், கொடுக்கப்பட்ட மருந்து நோயை நிச்சயமாய்க் குறைத்திருக்கிறதென்று மதிக்கலாம். கொடுக்கப்பட்ட மருந்து நோய்க்கு முற்றிலும் ஏற்றதாய் இருந்தபோதிலும் நோயில் இறக்கம் தோன்றவில்லை

அவசியமான இந்த ஹோமியோபதிச் சட்டத்தை மீறுகின்றனர். பழைய மூட நம்பிக்கை காரணமாக, இந்த அலோபதி-ஹோமியோபதி வைத்தியருக்கு குறைந்த அளவு மருந்துகளில் வெறுப்புத் தோன்றி அதனுல் ஏற்படும் நன்மைகளை அடையமுடியாமற் போய் விடுகிறது. ஹோமியோபதியர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ள இவர்களுக்கு உரிமை இல்லை.

என்ருல் ஒன்று நோயாளி ஏதாவது தவறு செய்திருப்பார் அல்லது மருந்தின் அளவு சற்று அதிகமாய்ப் போய் விட்டதால் அதன் நோயை அதிகரிக்கும் சக்தி அதிக நேரம் நீடித்திருக்கிறது. இவ்விரண்டைத் தவிர வேறு காரணம் எதுவும் இருக்க முடியாது.

தேர்ந்தெடுத்த மருந்து நோய்க்கு முற்றிலும் ஏற்றதல்ல என்பதைக் காட்டும் வகையில் நோயாளிகள் தமக்கு ஏற்பட்டுள்ள புதிய குறிகளை எடுத்துரைப்பார்கள். நல்ல பண்பு காரணமாகத் தங்கள் நோய் சௌகரியமாய் இருக்கிறதென்று அவர்கள் கூறினுலும் அதை நாம் நம்பக்கூடாது. நோயில் ஏற்றம் கண்டிருக்கிறதென்றே கருதவேண்டும். நங் கருத்து உண்மையென்று விரைவிலேயே தெரிய வரும்.

பல சமயங்களில் பயன்பட்டிருக்கிறது, நல்ல விதமாய் வேலை செய்திருக்கிறது என்ற காரணத்தை முன்னிட்டுச் சில மருந்துகளை மட்டும் போற்றிப் புகழும் பழக்கத்தை உண்மை வைத்தியர் விட்டுவிட வேண்டும். அப் பழக்கத்தால் அம் மருந்துகளை விடச் சிறப்பாய்ப் பயன்படும் மற்ற மருந்துகளை உபயோகிக்க முடியாமல் போய்விடும்.

ஒழுங்காகத் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால் சில மருந்துகள் ஒவ்வொரு சமயத்தில் நோய்களை நீக்குவதில் பயன் இல்லாமல் போய் இருக்கும். இது வைத்தியரின் குற்றமே யாதலால் அம் மருந்துகளின் மீதில் நம்பிக்கை இழந்து அவைகளைக் கொடுக்காமல் இருப்பது உண்மையான வைத்தியருக்கு அழகல்ல. ஒவ்வொரு நோயிலும் அதன் மொத்தக் குறிகளுக்கு முற்றிலும் ஏற்றதாய் உள்ள மருந்தே அந்நோய்க்குச் சஞ்சீவி. ஆதலால் மருந்து

களைத் தேர்தெடுக்கும் பெரிய விஷயத்தில் எவ்விதமான அபிப்பிராயங்களுக்கும் இடமில்லை.

பத்தியம்

ஹோமியோபதிச் சிகிச்சையில் மருந்துகளின் அளவு மிகக் குறைவாய் இருப்பது அவசியமாகிறது. இதனால் அம் மருந்தைக் கொடுக்கக்கூடிய வேற்று மருந்துப் பொருள்கள் எதுவும் நோயாளியின் உணவிலும் பானங்களிலும் இருக்கக் கூடாது.

நோய் குணமாவதைத் தடைசெய்யக்கூடிய மேலே குறிப்பிட்ட காரணங்களைக் கவனமாய் ஆராய்ந்து விலக்கவேண்டும். நீடிக்கும் வகை நோய்களில் இது மிகவும் முக்கியம். உணவிலும் பானங்களிலும் காணப்படும் நச்சுப் பொருள்களாலும் பிழைகளாலும்* நோய் பல சமயங்களில் அதிகமாகிறது.

---

*காப்பி, தேயிலைப்பானம், நோயாளியின் நிலைக்கு ஏற்றதல்லாத தாவரப் பொருள்களைச் சேர்த்துத் தயாரிக்கப்படும் புளிப்புச்சாராயம், வாசனையுள்ள மருந்துச் சரக்குகளால் தயாரிக்கப்படும் சாராயம், ஷர்பத்து எனப்படும் பானங்கள், வாசனையுள்ள சாக்கலேட்டு, வாசனையுள்ள அத்தர், செண்டு முதலியவை, அதிக மணமுள்ள பூக்கள், வாசனைப் பற்பொடி, ஏலம், கிராம்பு, மிளகு முதலிய வாசனைப் பொருள்களைச் சேர்த்துத் தயாரிக்கப்படும் உணவு, பானம்; தரம் குன்றிய வெண்ணெய், பாலேடைக்கட்டி, மாமிசம், மருந்தின் குணங்களைப் பெற்றுள்ள (பன்றி, பெண் வாத்து, நீர்வாத்து ஆகிய பிராணிகளின்) மாமிசங்கள், இளங் கன்றின் மாமிசம், புளித்துப்போன உணவு, மருந்துச் செடி, கொடி மரங்களின் காய், கனி, கிழங்கு, வேர் ஆகியவைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவு வகைகள், இவைகளை நோயாளியின் அருகில் கூட கொண்டுவரக்கூடாது. உணவு, சர்க்கரை, உப்பு, ஆகியவைகளை மிதமாய் உபயோகிக்கவேண்டும். போதை தரும் பானங்களைக் குடிப்பதும் வெப்பம் வீசும் அறைகளில்

நீடிக்கும் வகை நோய்களில் மருந்து கொடுத்துவரும் போது, குணமேற்படுவதைத் தடை செய்யக் கூடிய காரணங்களை விலக்குவதும் தேவையானல் நல்லொழுக்கத்தையும் அறிவையும் வளர்க்கக்கூடிய வேலைகளில் ஈடுபடுதல், எல்லாப் பருவநிலைகளிலும் (தினந்தோறும் சிறிது தூரம் நடத்தல், உடல் உழைப்பு முதலியவை) திறந்த வெளியில் சரியான உடல் பயிற்சி செய்தல், உடலுக்கேற்ற ஊட்டத்தை அளிக்கக்கூடிய உணவு ஆகியவைகளைப் பின்பற்று வதும் நோய்க்கு மிகவும் ஏற்றதான பத்தியமாகும்.

திடீர்வகை நோய்களில் (பைத்தியம் நீங்கலாக) மருந்தினல் விழித்துக்கொண்ட உயிர்ப்புச்சக்தி தெளிவாகவும் தவறு இல்லாமலும் உடலுக்குத் தேவை

இருப்பதும், உள் சட்டை இல்லாமல் உடம்பின்மேலே நேராய்ப் படும்படியாகக் கம்பளி உடைகளை அணிவதும் கூடாது. அறையை மூடிவிட்டு சோம்பேறித் தனமாய் உட்கார்ந்துகொண்டே இருத்தல், சவாரி செய்தல், வண்டி ஓட்டுதல், ஊஞ்சலாடுதல் முதலிய உடலுக்குச் சிறிதளவே வேலை கொடுக்கும் காரியங்களில் அடிக்கடி ஈடுபடுதல், இடைவிடாமல் குழந்தைக்கு முலைப்பாலைக் கொடுத்தல் அல்லது குழந்தை முலைப்பாலைக் குடித்தல், படுக்கையில் சாய்மானமாய்ப் படுத்து நீண்ட நேரம் தூங்குவதுபோல் இருத்தல், இரவு முழுவதும் உட்கார்ந்தே இருத்தல், சுத்தமாய் இல்லாமை, அளவுகடந்த கெட்ட பழக்கங்கள், காமத்தைத் தூண்டும் நூல்களைப் படித்து உடல் பலவீனம் ஆகுதல், கோபம், வருத்தம், நொந்து கொள்ளுதல், விளையாட்டிலேயே எப்பொழுதும் குறியாய் இருத்தல், உடல் மனம் இரண்டையும் அளவுமீறி உபயோகித்தல், சதுப்பு நிலப் பிரதேசங்களில் குடியிருத்தல், ஈரக் கசிவுள்ள அறைகள், வறுமையான வாழ்வு ஆகிய மேலுள்ள பல்வேறு காரணங்களைக் கூடியவரை விலக்கினல் போதும். எல்லாவற்றையுமே விலக்கி நோயாளிக்கு அனுவசியமான தொந்திரவுகளை அளிப்பது கூடாது.

யானதை நோயாளிக்கு அறிவித்து விடுகிறது. ஆதலால் அவர் மிகுந்த அவசரத்துடன் வேண்டுமென்று கேட்கும் உணவுப் பொருள்களைத் தடை செய்யாமல் கொடுக்கவும் உடலுக்குத் தீங்கை விளைவிக்கக் கூடியவைகளைப் பலவந்தப்படுத்திக் கொடுக்காமலும் இருக்கும்படி நோயாளியைக் கவனிப்போருக்கும் நண்பர்களுக்கும் வைத்தியர் ஆலோசனை கூறவேண்டும்.

திடீர்வகை நோயினால் தாக்கப்படும் ஒரு நோயாளி தனது துன்பங்களைச் சிறிதுநேரம் (தற்கால சாந்தி) அடக்கி வைக்கக்கூடிய உணவையும் பானத்தையுமே விரும்புவார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அப் பொருள்களை மருந்துக்குணம் கொண்டவை என்று சொல்லமுடியாது. உடலின் ஏதோ ஒரு வகைத் தேவையை அவை பூர்த்தி செய்கின்றன. நோயாளியின் இவ்விருப்பத்தை நாம் நிறைவேற்றினால் நோய் குணமாவதில் தடை ஏற்படுமென்று நினைக்க வேண்டாம். ஹோமியோபதிச் சட்டத்துக்கு முற்றிலும் இணங்கத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்ட மருந்து, அம்மருந்தினால் இயற்கை நோயிலிருந்து விடுதலை பெற்றுள்ள உயிர்ப்புச்சக்தி, விருப்பத்தை நிறைவேற்றியதால் நோயாளிக்கு ஏற்படும் மனத்திருப்தி ஆகிய இம்மூன்றும் சேர்ந்து தடைகளைத் தகர்த்துவிடும். இதைப்போலவே, திடீர்வகை நோய்களில், படுத்திருக்கும் அறையின் தட்ப வெப்பநிலை, படுக்கை விரிப்புகள் கதகதப்பாக அல்லது குளிர்ச்சியாக இருத்தல் ஆகிய விஷயங்களிலும் நோயாளியின் விருப்பப்படியே நடக்க வேண்டும். *நோயாளி தன் மனதை அளவுமீறி அலைபாய விடக்கூடாது; உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

தூய்மையான மருந்துகள்

அப்பழுக்கற்ற, சக்தி குறையாத மருந்துகளை வைத்திருக்க வேண்டும். அவைகளின் நோய் தீர்க்கும் சக்தியில் முழு நம்பிக்கையும் வைக்கக் கூடியதாய் இருக்கவேண்டும். மருந்துகளின் தரம் உயர்ந்ததா இல்லையா என்பதைத் தானாகவே கண்டு பிடிக்கும் திறமை இருக்கவேண்டும். அப்போது தான் அவர் உண்மையான வைத்தியராவார்.

நோயாளிக்கு ஒவ்வொரு தடவையும் சரியான மருந்தையே கொடுக்கிறேமென்று தன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் வைத்தியருக்கு உறுதி ஏற்பட வேண்டும்.

தாவரவர்க்கத்திலிருந்தும் பிராணிவர்க்கத்திலிருந்தும் கிடைக்கக் கூடிய பொருள்களில் அவை பச்சையாய் (சமைக்கப் படாமல், பக்குவப்படுத்தப் படாமல்) இருக்கும்போது மருந்துத் தன்மை காணப்படுகிறது. அதில் ஐயமெதுவுமில்லை.

பசுமை மாருத நிலைமையில் கிடைக்கக் கூடிய தாவரங்களிலிருந்து அவைகளிலுள்ள மருந்துச் சக்தி அனைத்தையும் குன்ருமல் குறையாமல் நாம் பெறலாம். அத்தாவரங்களை நசுக்கிச் சாறு பிழிந்தெடுத்து மருந்துச் சாற்றுடன் சம அளவில் மது சாரத்தைக் கூட்டி அச்சேர்க்கையை மூடி உள்ள ஒரு கண்ணுடிப் பாட்டிலில் ஊற்றி 24 மணி நேரம் அப்படியே வைத்திருக்க வேண்டும். தாவரச் சாற்றிலிருந்த நார்கள், குழகுழப்புப் பொருள்கள் ஆகியவை பாட்டிலின் அடியில் தேங்கிவிடும். தெளிந்து நிற்கும் திரவத்தை வடிக்கட்டி வேறு பாட்டிலில் வைத்துக் கொள்ளலாம். மதுசாரம்

சேர்ந்திருப்பதால் மருந்துச்சாறு புளித்துப் போகாமல் என்றென்றும் காப்பாற்றப்படுகிறது. ஆகவே மதுசாரம் சேர்ந்த இம் மருந்துச்சாறு சூரியனின் ஒளிக் கதிர்கள் படாமல் நன்ருய் மூடியுள்ள பாட்டில்களில் வைக்கப்பட்டால் அவைகளிலுள்ள மருந்துச் சக்தி என்றென்றும் கெடாமல் இருக்கும்.

வெளிநாடுகளிலுள்ள தாவரங்களைப் பசுமை மாருத நிலையில் பெறுவது கடினமாதலால் அவைகளின் பட்டை, விதை, வேர் ஆகியவை தூளாகக் கிடைக்கலாம். நம்பிக்கையின் பேரில் அவைகளை ஏற்றுக் கொள்வதோ அவைகளின் தூய தன்மையைப் பற்றிய சந்தேகம் தீருவதற்கு முன்பாக நோய் தீர்க்க உபயோகிப்பதோ கூடாது.

ஹோமியோபதி வைத்திய முறையில், அதற்கே உரியதான, இதுவரை கையாளப்படாத ஓர் வழியில், பக்குவப்படுத்தப்படாத மருந்துகளிலிருந்து சூட்சுமச் சக்தியொன்று உருவாக்கப்படுகிறது. அதனுல் மருந்துகளின் நோய் தீர்க்கும் சக்தி அதிகமாய்விட்டது. மருந்துப் பொருள் சிறிதுகூட இல்லையென்று கருதப்பட்ட பல பொருள்கள் இவ்வழியினுல் நோய் தீர்க்கும் சிறந்த கருவிகளாய் மாறிவிட்டன.

மருந்து தயாரிக்கும் முறை

மருந்துச் சாற்றையும் மதுசாரத்தையும் சம அளவில் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட கூட்டுத் திரவத்திலிருந்து இரண்டு சொட்டுகள் எடுத்து அதை 98 சொட்டு மதுசாரத்துடன் கலந்து பாட்டிலை மேலும் கீழுமாய் இரண்டு தடவை குலுக்கினுல் மருந்தின் முதல் வீரியம் தயாராகும். இதேபோல் மேலும் 29 பாட்டில்களில் ஒவ்வொன்றிலும் 99 சொட்டு

மதுசாரமும் அதற்கு முன்னுள்ள பாட்டிலில் தயாராக்கப்பட்டிருக்கும் வீரியப்படுத்திய மருந்து ஒரு சொட்டும் சேர்த்துக் குலுக்கி வந்தால் 29-வீது பாட்டிலில் உள்ள மருந்தின் வீரியம் 30 ஆகும். முப்பதாவது வீரியத்திலேயே அனேகமாய் எல்லா மருந்துகளும் உபயோகப்படுத்தப் படுகின்றன.

உலோகங்கள், கனிப் பொருள்கள், பெட்ரோலியம், பாஸ்வரம், உலர்ந்த நிலையிலேயே கிடைக்கும் செடி கொடி மரங்கள் முதலிய மற்ற எல்லாப் பொருள்களையும் மூன்ருவது வீரியம் வரை (பால் சர்க்கரை மாவுடன் சேர்த்து) மூன்று மணி நேரம் அறைக்க வேண்டும். பிறகு மூன்ருவது வீரியத்தி லுள்ள மருந்திலிருந்து ஒரு குண்டுமணி அளவு எடுத்து அதை 99 பங்கு மதுசாரத்துடன் சேர்த்துக் குலுக்கினுல் 4-வது வீரியம் தயாராகிறது. மேலும் 26 பாட்டில்கள் எடுத்து தாவரச் சாற்றை வீரியப் படுத்தியதைப் போல் செய்தால் 26-வது பாட்டிலில் 30-வது வீரியம் இருக்கும்.

எந்தச்சமயத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட மருந்துகளைக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஒரு நோய்க்கு ஒரு சமயத்தில் நன்கு தெரிந்த ஒரே ஒரு மருந்தைக் கொடுப்பதே இயற்கையுடன் ஒட்டியது; விவேகமானது; ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாய் வேலை செய்யும் பல மருந்துகள் சேர்ந்த கூட்டு மருந்தல்ல. இவ்விஷயத்தில் சிறிதளவு குழப்பத் துக்கும் இடமில்லை.

செயற்கை நோய்களை உண்டாக்கும் குணமுள்ள பொருள்கள் (மருந்துகள்). அவைகளிலுள்ள ஹோமியோபதிச் சக்தியினுல் இயற்கை நோய்களை வென்று கொன்று அடியோடு அழித்து விடு

கின்றன. தனியாய், வேறு மருந்துகளுடன் சேர்க்கப் படாமல் இருக்கும் ஒரு மருந்தினுல் எதிர்பார்த்த அளவில் பயன் கிடைக்கும்போது பல மருந்துகளைச் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று உண்மை யான வைத்தியர் எவரும் கருதமாட்டார். நோயற்ற உடலில் ஒவ்வொரு மருந்தும் தத்தமக்கே உரிய தான நோய்க்குறிகளைத் தோற்றுவித்திருக்கின்றன என்பது உண்மையே. ஆயினும் அவைகளை ஒன்று சேர்த்துக் கொடுத்தால் ஒன்று மற்ருென்றின் வேலையை மாற்ருது அல்லது தடை செய்யாது என்று எப்படிச் சொல்ல முடியும்? நோயின் மொத்தக் குறிகளையும் தவறில்லாமல் தெரிந்து கொண்டு ஹோமியோபதிச் சட்டப்படி முற்றிலும் ஏற்றதோர் மருந்தைக் கொடுத்தால் அத்தனியொரு மருந்தால் முழுநோயும் நீங்கிக் குணம் ஏற்படுகிறது. கொடுக்கப்பட்ட மருந்து நோய்க்கு முற்றிலும் ஏற்றதாக இல்லையென்று வைத்துக்கொண்டால் அதனுல் நோயாளிக்கு எவ்வித நன்மையும் ஏற்படாது என்பது உண்மையே. ஆனுல் அம் மருந்தினுல் நோயாளியின் உடலில் தோன்றும் புதுக் குறிகளைக் கொண்டு மருந்துச் சோதனைக் காலத்தில் அம்மருந்தினுல் நோயற்ற உடலில் அதைப் போன்ற குறிகள் ஏற்பட்டனவா என் பதைச் சரிபார்க்கலாம். கூட்டு மருந்துகளைக் கொடுக்கும்போது இந்த அனுகூலமும் ஏற்படுவ தில்லை.

மருந்தின் அளவு

தேர்ந்தெடுக்கப்படும் ஒரு மருந்து ஹோமியோ பதிச் சட்டத்துக்கு முற்றிலும் உட்பட்டது

என்பதனுல் மட்டும் நோய்க்குத் தகுந்தது என்று அதைக் கருதமுடியாது. அம் மருந்தைக் கொடுக்க வேண்டிய அளவும் தகுந்ததாய் இருப்பது அவசியம். அதாவது குறைந்த அளவில் இருக்க வேண்டும். அளவு அதிகமாய் இருந்தால் நோய்க்கு உண்மையில் ஏற்றதாய் இருக்கும் மருந்துகூட உயிர்ப்புச் சக்தியைத் தேவைக்கு அதிகமாய்த் தாக்கி அதன் மூலம் இயற்கை நோயினுல் வேதனைப்படும் உடலுறுப்புகளை மேலும் வேதனைக்கு உள்ளாக்குகிறது.

மேலுள்ள காரணத்தினுல், மருந்து நோய்க்கு ஏற்றதாய் இருந்தாலும் அதிக அளவிலே கொடுக்கப்பட்டால் கெடுதலையே விளைவிக்கிறது. அளவு அதிகரிக்க அதிகரிக்க அக் கெடுதலின் அளவும் அதிகரிக்கும். ஹோமியோபதிச் சட்டத்துக்கு இணங்க மருந்துக்குள்ள தகுதி, வீரிய உயர்வு ஆகியவைகளை அனுசரித்தும் கெடுதல்கள் தோன்றும். நோய்க்கு எவ்விதத்திலும் பொருத்தமில்லாத அலோபதி மருந்தொன்றைக் கொடுத்தால் எவ்வளவு தீமை தோன்றுமோ அதைவிடக் கடுமையான தீமை தகுதி வாய்ந்த ஹோமியோபதி மருந்தை அதிக அளவில் கொடுப்பதால் தோன்றும். அதிக அளவு மருந்தினுல் எல்லை மீறித் தூண்டப்பட்ட உயிர்ப்புச் சக்தி இயற்கை நோயினுல் மிகுந்த துன்பத்தை அனுபவித்த உடல் உறுப்புக்களையே மிகக் கடுமையாய்த் தாக்கிவிடுகிறது. நோயாளி தற்சமயம் இயற்கை நோயிலிருந்து விடுபட்டு அளவு மீறிய மருந்தினுல் தோன்றிய செயற்கை நோயின் பிடியில் சிக்கி இருக்கிருர். மருந்தின் அளவு ஏற்றதாய் இருந்திருப்பின் இத்தீமை நேரிட்டிராது.

தேர்ந்தெடுக்கப்படும் மருந்து ஹோமியோபதிச் சட்டத்தை அனுசரித்திருக்கும் அளவை ஒட்டி அதனுல் தோன்றும் நன்மைகளும் அமைகின்றன. அதேபோல அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்தை ஏற்றபடி குறைந்த அளவில் கொடுத்தால் மிருதுவாக நோயை நீக்கிக் குணம் செய்யும்.

நிச்சயமாகவும் மிருதுவாகவும் நோயை நீக்கிக் குணம் செய்ய மருந்தின் குறைந்த அளவு எது என்ற கேள்வி இப்பொழுது பிறக்கிறது. அதாவது ஹோமியோபதிச் சட்டத்துக்கு இணங்கத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு மருந்தும் எந்த குறைந்த அளவில் உபயோகப்பட வேண்டுமென்பது தெரிய வேண்டும். வெறும் கற்பனை, ஊகம் ஆகியவைகளாலோ, சாதுர்யமான வாதங்களாலோ, பகட்டான பேச்சுக்களாலோ இக்கேள்விக்கு விடை காண முடியாது. உண்மையான பரிசோதனை, கூர்ந்து கவனித்தல், சரியான அனுபவம் ஆகியவைகளைக் கொண்டே விடையைத் தீர்மானிக்க முடியும். ஹோமியோபதிச் சட்டப்படி நோய் நீங்க மருந்து எவ்வளவு குறைவாய் இருக்க வேண்டும் என்பதை உண்மையான அனுபவம் நமக்கு அறிவிக்கிறது. அலோபதி முறையில் தகுதியற்ற மருந்துகளை ஏராளமாய்க் கொடுப்பது இதற்கு நேர்விரோதமான உதாரணம் என்று நினைக்கலாம். ஆனுல் அது தவறு. அலோபதி மருந்து உடலின் நோயுற்ற பகுதிகளைத் தொடுவது கிடையாது. நோயற்ற பகுதிகளையே அது தாக்குகிறது.

நோயினுல் உடலின் முக்கிய உறுப்புக்களில் அழிவு ஏற்படாமல் இருக்கும் சமயங்களிலும் (நீடிக்கும்

வகை நோயாய் இருந்தாலும் சரி, மிகச் சிக்கல் வாய்ந்த நோயாய் இருந்தாலும் சரி) சிகிச்சைக் காலத்தில் அன்னிய மருந்துகளை உபயோகியாமல் இருக்கும் போதும், ஏற்றதோர் ஹோமியோபதி மருந்தை எவ்வளவு குறைவாய் உபயோகித்தாலும், அது இயற்கை நோயை விடப் பலம் குறைந்ததாய் மாறுவதில்லை. அதனால் இயற்கை நோயை வென்று கொன்று விடுகிறது. மருந்து உடலினுள் புகுந்தவுடனேயே தன் குறிகளுடன் ஒற்றுமை வாய்ந்த இயற்கை நோயின் குறிகளை அதிகரிக்கிறது. அதாவது இயற்கை நோயின் குறிகளை அடக்கித் தன்னுடைய செயற்கை நோய்க் குறிகளை வெளிப்படுத்துகிறது. இயற்கை செயற்கை இவ்விரு வகை நோய்க் குறிகளும் ஒன்று போல் இருப்பதால் இயற்கை நோய்க் குறிகள் அதிகரித்துவிட்டது போல் தோன்றும். இதற்கு "**ஹோமியோபதி நோயேற்றம்**" (Homoeopathic aggravation) என்று பெயர்.

மறுக்க முடியாத, அனுபவத்தின் மூலம் வகுக்கப்பட்ட இந்தத் திட்டமான அளவுப்படியே ஹோமியோபதி மருந்துகளின் அளவுகளும் வரையறுக்கப்படுகின்றன. விதிவிலக்கு என்ற சொல்லுக்கு இங்கு இடமில்லை. மருந்தை உட்கொண்ட பிறகு ஹோமியோபதி நோயேற்றம் சிறிதுகூடத் தோன்ற முடியாத அளவுக்கு மருந்து குறைவாக இருக்க வேண்டும். மருந்தின் ஸ்தூலப் பொருள் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாய் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லதாகையால் அதில் நம்பிக்கையற்றவர்களின் அபிப்பிராயங்களுக்கு நாம் செவி சாய்க்க வேண்டியதில்லை.

இயற்கை நோய்களுடன் ஒற்றுமை கொண்டுள்ள மருந்துகளின் ஆட்சிக்கு உட்படாத நோயாளி ஒருவர்கூட இல்லை. அதிலும் நோயின் தாக்குதலுக்கு இலக்காகிவிட்ட உடலுறுப்பு நிச்சயமாய் மருந்தின் ஆட்சிக்குப் பணிகிறது. ஒருவர் எவ்வளவு திடகாத்திரம் உடையவராயினும் சரி, நீடிக்கும் வகைநோய் அல்லது வெளிப்புற நோய் அவருக்கு இருக்கிறது என்றாலும் சரி, ஏற்றதோர் ஹோமியோபதி மருந்தை மிக மிக நுண்ணிய அளவில் கொடுத்தாலும் நோயுற்ற உறுப்பிலே விரும்பிய மாற்றம் விரைவிலே ஏற்படத்தான் செய்கிறது. பிறந்து 24 மணி நேரமே ஆகிய ஒரு பச்சிளங்குழந்தையின் உடலில் அம்மருந்தினால் தோன்றக்கூடிய நோய்க் குறிகள் எல்லார் உடலிலும் தோன்றத் தவறுவதில்லை. பிழையற்ற, மாறாத, இந்த அத்தாட்சிக்கு எதிராய்க் கூறப்படும் கற்பனையான சந்தேகங்களைக் கண்டு நாம் நகைக்கத்தான் வேண்டும்.

மருந்து மிக மிகக் குறைந்த அளவில் இருந்தால் அதனால் தோன்றும் ஹோமியோபதி—நோயேற்றம் அல்பமாய் இருக்க முடியும். அளவில் குறைவாய் இருந்தபோதிலும் இயற்கை நோய்க் குறிகளைக் பெரும்பாலும் ஒத்துள்ள செயற்கை நோய்க் குறிகளை உண்டாக்கும் வல்லமை மருந்துக்கு இருக்கிறது. இயற்கை நோயினால் ஏற்கனவே தாக்கப்பட்டுள்ள வேதனைக்கு உள்ளாகியுள்ள உடலுறுப்புக்களையே மருந்தும் தாக்குகிறது. அதனால் அவ்வுறுப்புக்களை ஆண்டுவரும் உயிர்ப்புச்சக்தியும் முன்பிருந்த இயற்கை நோயைவிடப் பலம் பொருந்திய செயற்கை நோயினால் மாற்றப் படுகிறது. இதனால் உடலில் முதலிலிருந்த இயற்கை

நோய் அகன்று புதிய செயற்கை நோய் முளைக்கிறது. கொடுக்கப்படும் மருந்தின் அளவு மிகக் குறைவாய் இருப்பதால் நோயற்ற இயற்கை நிலையை அடையப்பாடுபடும் உயிர்ப்புச் சக்தியினுல் அது மிக விரைவில் அழிக்கப்படுகிறது. ஆகவே (நோய் திடீர் வகையைச் சேர்ந்ததானுல்) மிக விரைவில் நோய் நீங்கிப் பூரண ஆரோக்கியம் தோன்றுகிறது.

ஏற்றதெனத் தேர்ந்தெடுத்த மருந்தை, தன்னிடம் சிகிச்சைக்கு வந்துள்ள இயற்கை நோயை அழிப்பதற்கு மட்டும் வேண்டிய குறைந்த அளவில் கொடுப்பதுதான் இயற்கையை ஒட்டியது. ஒரு வேளை அம்மருந்து நோய்க்கு ஏற்றதாய் இல்லாவிட்டால், அப்போது அதன் அளவு குறைவாய் இருந்தால் ஏற்படக்கூடிய கேடுகள் கடுமையாக இருக்கமாட்டா. அவைகளை உடலின் தற்காப்புச் சக்திகள் அழித்துவிடும். நாமும் தகுதி வாய்ந்த வேறு மருந்தைத் தேடிக்கொடுத்து அவைகளை நீக்கலாம். இம்மருந்தின் அளவும் குறைவாய்த்தான் இருக்கவேண்டுமென்று கூறவேண்டுமா?

ஹோமியோபதியில் மருந்துகளுடன் தண்ணீர் அல்லது மதுசாரம் சேர்த்துப் பெருக்கப்படுகிறது. இவ்வாருன ஒரு சேர்க்கையில் காணப்படும் மருந்தின் ஸ்தூல அளவுக்குத் தக்கபடி அதன் வேலையில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவது கிடையாது. உதாரணம் கூறினுல் இது நன்கு விளங்கும். ஒரு மருந்தை இரண்டு சொட்டுகள் கொடுத்தால் எவ்வளவு பயன் ஏற்படுமோ அதைவிட இரண்டு மடங்குப்பயனே எட்டு சொட்டு மருந்தால் ஏற்படும். நான்கு மடங்கல்ல. மற்ருேர் உதாரணமும் சொல்

கிறேன். ஒரு சொட்டு மருந்தைப் பத்து சொட்டுத் தண்ணீருடன் கலந்து பிறகு அக்கலவையிலிருந்து ஒரு சொட்டு எடுத்து மீண்டும் பத்து சொட்டுத் தண்ணீருடன் கலக்கிறோம். முதல் கலவையை விடப் பத்து மடங்கு பலம் வாய்ந்தது என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் சரியாய் இருக்கும். ஆனால் உண்மையில் அது இரண்டு மடங்கே வலிமை உள்ளதாக இருக்கும். ஆகவே மருந்தின் அளவை எவ்வளவு குறைத்தாலும் அதன் வலிமை அடியோடு அழிவதில்லை.

பரிமாணத்தைக் குறைப்பதனாலும் மருந்தின் அளவைக் குறைக்க முடியும். ஒரு வேளைக்கு ஒரு சொட்டு வீதம் மருந்தைக் கொடுப்பதற்குப் பதிலாக ஒரு சொட்டு மருந்தைப் பலவாகப் பிரித்துக் கொடுக்கலாம். இப்படிப் பிரித்துக் கொடுப்பதால் மருந்தின் சக்தி உடலிலுள்ள பெரும்பாலான நரம்பு களினுள் நுழைந்து உடல் முழுவதும் பரவுகிறது.

மருந்து சேர்ந்துள்ள திரவப்பொருளின் (தண்ணீர் அல்லது மது சாரம்) அளவு அதிகமாக ஆக அதிலுள்ள மருந்தின் அளவில் மாறுதல் ஏற்படாத போதிலும் அதனால் ஏற்படக்கூடிய நல்விளைவுகள் அதிகமாகின்றன. ஏனென்றால் அச்சமயத்தில் மருந்து ஏராளமான உணர்ச்சி நரம்புகளினுள்ளே நுழைய முடிகிறது. அந் நரம்புகள் மருந்தை உடனடியாக ஏற்றுக் கொள்கின்றன. ஏராளமான திரவத்துடன் மருந்தைக் கலந்தால் அதன் ஸ்தூல அளவு குறைகிறது; அதனால் அதன் நன்மையும் குறையும் என்று அறியாதோர் கருதுகின்றனர். இக் கருத்து மிகத் தவறானது; உண்மைக்கு நேர் எதிராக உள்ளது. ஹோமியோபதி முறைப்படி மருந்துகளைக்

கொடுக்கும் விஷயத்திலாவது இக் கருத்து முற்றி லும் பிழை வாய்ந்தது.

அதிக அளவு தண்ணீர் அல்லது மது சாரத்துடன் கலக்கப்படும் மருந்தின் சக்தி அது கலக்கப்படும் விதத்தை அனுசரித்து மிகவும் மாறுபடும். சாதாரண மாய்ச் செய்யப்படும் கலவையைவிட தண்ணீர் அல்லது மது சாரத்தின் எல்லா அணுக்களிலும் மருந்தின் சக்தி ஊடுருவிச் செல்லும் படியாய்ச் செய்யப்படும் விசேஷக்கலவை அதிகச் சக்தியைப் பெறுகிறது. மருந்தைச் சேர்த்தவுடன் ஒவ்வொரு தடவையும் பாட்டிலேச் சில தடவை மேலும் கீழு மாய்க் குலுக்கினல் மருந்து தண்ணீர் அல்லது மது சாரத்துடன் நெருக்கமாய்ச் சேர்ந்துவிடுகிறது. இதையே விசேஷக் கலவை என்கிறேன்.

திரவ உருவிலுள்ள மருந்து உயிருள்ள மனித உடலி னுள் ஊடுருவிச் செல்கிறது. உணர்ச்சியைக் கிர கிக்கும் நரம்புகளின் மீது மருந்து பட்டவுடன் நினைக்க முடியாத அளவு வேகத்தில் உடலுறுப்புகள் எல்லாவற்றிலும் பரவி விடுகிறது. மருந்தின் இவ் வேலையைச் சூட்சுமச் சக்தி என்றே மதிக்க வேண்டும்.

தொடு உணர்ச்சியுள்ள ஒவ்வொரு உடலுறுப்புக்கும் மருந்தை ஏற்றுக்கொண்டு அதன் சக்தியை மற்ற உறுப்புக்களுக்குப் பரவச்செய்யும் வல்லமை உண்டு.

வயிற்றுடன் (உணவுப்பை) நாக்கு, வாய் ஆகிய உறுப்புக்கள் மருந்தின் சக்தியை மிக விரைவில் ஏற்றுக் கொள்கின்றன. இவைகளைப் போலவே, மூக்கின் உட்புறம், மலப்பை, பிறப்பு உறுப்புக்கள்

ஆகியவைகளும் உணர்ச்சியுள்ள மற்ற எல்லா உடல் பகுதிகளும் மருந்தின் சக்தியை விரைவில் ஏற்றுக் கொள்கின்றன. மேல்தோல் உறிந்துபோய்ப் புண்ணுகவுள்ள இடங்களும் மருந்தின் சக்தியை நன்ருக ஏற்றுக் கொள்கின்றன.

புலன் உணர்ச்சிகளை இழந்துவிட்ட உறுப்புக்கள் கூட, (உதாரணமாக சுவையறியும் சக்தியை இழந்த நாக்கு; முகரும் சக்தியை இழந்த மூக்கு) மருந்தின் சக்தி முதலில் அவ்வுறுப்புக்களைத் தொடுமானல் உடலின் மற்ற எந்த உறுப்புக்கும் தாழ்ந்துவிடாமல் மருந்தின் சக்தியை உடல் முழுவதும் பரவச் செய்கின்றன.

உடலின் வெளிப்புறம் இரு வகைத் தோல்களால் மூடப் பட்டுள்ளது; ஆயினும் மருந்தின் சக்திக்கு, (விசேஷமாகத் திரவ உருவிலுள்ள மருந்து) அதுவும் உட்படத்தான் செய்கிறது. வெளிப்புறத்தில் அதிக உணர்ச்சியுள்ள பகுதிகள் அதிகமாகவும் உணர்ச்சி குறைவாயுள்ளவை குறைவாகவும் மருந்தின் சக்திக்கு உட்படுகின்றன.

மனோவசியக் கலை

உயிர்களை வசியம் செய்யும் கலைக்கும் (மெஸ்மெர் என்பவர் முதன் முதலில் இக்கலையைக் கண்டு பிடித்தார். ஆகவே அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் இதை மெஸ்மெரிஸம் என்றும் அழைக்கலாம்) மற்ற எல்லா வைத்திய முறைகளுக்கும் சிகிச்சை செய்யும் விஷயத்தில் அதிக வேறுபாடுகள் இருக்கின்றன. நல்லெண்ணமுள்ள ஒருவர் தன் மனோசக்தியை ஒன்று திரட்டும்போது அவரை நெருங்கி நிற்கும் நோயாளியின்மீது அவருடைய

மனோ சக்தி பரவி நோய் நீங்குகிறது. மனோ சக்தி எவ்வாறு வேலை செய்கிறது என்ற கேள்வியைக் கேட்டு விடையும் கூறுகிறேன். ஹோமியோபதியில் உள்ளது போல, நீக்கப்பட வேண்டிய இயற்கை நோய்க் குறிகளை ஒத்த செயற்கை நோய்க் குறிகளை ஏற்படுத்தும் வல்லமை மனோ சக்திக்கு இருக்கிறது. உள்ளங்கைகளைக் கீழ்ப்புறமாகத் திருப்பி நோயாளியின் உச்சந் தலையிலிருந்து கால் கட்டைவிரல்கள் வரை ஒரே ஒரு தடவை மட்டும் மெதுவாய்க் கொண்டு செல்ல வேண்டும். மனோ சக்தியை அதிகமாய்த் திரட்டக்கூடாது. 1. கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்படும்போதும் சாவு நெருங்கிவிட்ட தென்று தோன்றும் சமயங்களிலும் இம்முறை பயனளிக்கும். 2. தலைப் பகுதியில் இரத்தம் அதிக மாய்க் கூடுதல், தூக்கம் வராமை, கவலையுடன் நிலைகொள்ளாமல் இருத்தல் முதலிய பல கோளாறு களில் உயிர்ப்புச் சக்தி உடலெங்கும் ஒரே விதமாய்ப் பரவி நில்லாமல் ஒரு பகுதியில் கூடுதலா கவும் மற்றொரு பகுதியில் குறைவாகவும் இருக்கும் போது மனோ சக்தியை உபயோகித்தால் உயிர்ப்புச் சக்தி உடல் முழுவதும் ஒரே சீராய் ஆகும். இச் சமயத்தில் கைகளைச் சற்று வேகமாய்க் கொண்டு செல்ல வேண்டும். ஒரே ஒரு முறைதான். ஏற் கனவே கொடுக்கப்பட்ட மருந்தின் வேலையில் தலை யிடாமல் இதுபோன்ற காரியங்களைச் செய்வதற்கு மெஸ்மெரிஸத்தைத் தவிர வேறு எந்த மருந்தாலும் முடியாது. உடலில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் உயிர்ப்புச் சக்தியைக் கொண்டு போகவேண்டு மானால் மனோ சக்தியைப் பலமாய் ஒன்று திரட்டி,

நம் கைகளை அல்லது விரல் நுனிகளை பலவீனமான உடல் பகுதியில் வைத்திருக்க வேண்டும். உடலினுட் புறத்தே உள்ள நோய் வெளிப்புறத்தே தோற்றுவிக்கும் குறிகள் உள்ள இடமே (உதாரணமாக நாட்பட்ட ஆருத இரணங்கள், கைகால்களில் பாரிச வாதம், குருட்டுத் தன்மை முதலியவைகளைக் கூறலாம்) பலவீனமான பகுதியாகும். மெஸ்மெரிஸத்தின் துணைகொண்டு நோய்களைக் குணம் செய்த வரலாறுகள் எல்லாக் காலங்களிலும் நிகழ்ந்திருக்கின்றன. இறந்தவர்களைப்போல் கிடந்தவர்களை அனுதாபமும் நல்லெண்ணமும் வீரியம் மிகுந்த உயிர்ப்புச் சக்தியும் உள்ளவர்கள் தங்கள் பூனிதச் சக்தியை நோயாளிகளின் உடலில் ஊடுருவச் செய்து உயிரூட்டி இருக்கின்றனர். இது போன்ற பல உண்மையான சம்பவங்கள் நடந்ததைச் சரித்திர வாயிலாய் அறிகிறோம்.

மெஸ்மெரிஸத்தைக் கையாளும் விஷயமாக மேலே விவரிக்கப்பட்டுள்ள வழிகளால் நோயாளியின் உடலினுள்ளே உயிர்ப்புச் சக்தி பெருகுகிறது. ஆதலால் இதைப் பாஸிடிவ் மெஸ்மெரிஸம் (Positive Mesmerism) என்று அழைக்கின்றனர். நெகடிவ் மெஸ்மெரிஸம் (Negative Mesmerism) என்ற மற்றொருவகை மெஸ்மெரிஸமும் இருக்கிறது. தூங்கிக் கொண்டே நடக்கும் நோயுள்ளவர்களை அத்தூக்கத்திலிருந்து விடுபடச் செய்ய உதவும் கை அசைவுகளும் உடல் அசைவுகளும் இவ்வகையில் சேர்ந்தவை. நல்ல உடல் வலிமை வாய்ந்தவர்களுக்கு உடலில் ஒரு சில இடங்களில் அதிக அளவில் சேர்ந்துவிட்ட உயிர்ப்புச் சக்தியை நெகடிவ் மெஸ்மெரிஸத்தின் மூலம் உடல் முழுவ

தும் ஒழுங்காய்ப் பரவும்படிச் செய்யலாம். விரல்களை நீட்டி கையை விரித்து நோயாளியின் உடலைத் தொடாமல் உடலுக்கும் கைக்கும் ஒரு அங்குல இடைவெளி இருக்கும்படிச் செய்து அவருடைய உச்சந்தலையிலிருந்து கால் கட்டை விரல்கள் வரை வேகமாய்க் கொண்டு போகவேண்டும். எவ்வளவு வேகமாய்க் கை கொண்டு போகப் படுகிறதோ அந்த அளவுக்கு உயிர்ப்புச் சக்தி பயன்தரும் வகையில் பரவும். உதாரணமாக ஒரு வித நோயும் இல்லாதிருந்த ஒரு பெண்மணிக்குக் கடுமையான மன அதிர்ச்சியின் விளைவாய் மாத விடாய்ப் போக்கு தடைப்பட்டுவிட்டது. இறந்தவர் போலவே காணப்பட்டார். உயிர்ப்புச் சக்தி முழுவதும் இருதயப் பகுதியில் ஒன்று திரண்டு இருந்திருக்கலாம். வேகமாகச் செய்யப்படும் நெகடிவ் கை அசைவுகளால் உயிர்ப்புச் சக்தியை உடலெங்கும் பரவச் செய்யலாம். அதன் மறு கணமே நோயாளி பிழைத் தெழுந்து விடுவார். பாஸிடிவ் கை அசைவுகளைப் பலமாகச் செய்ததால் சிலருக்குச் சில சமயங்களில் மன ஏக்கத்துடன் தூக்கமில்லாமை, அமைதியில்லாமை முதலிய கோளாறுகள் உண்டாகலாம். அச்சமயங்களில் நெகடிவ் கை அசைவுகளை மிருதுவாகவும் மெதுவாகவும் செய்தால் அக்கோளாறுகள் குறைந்து குணமுண்டாகும்.

முற்றிற்று.

101594